

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ காதலின் பொன் வீதியில்... ★ முத்துலட்சுமி ராகவன்



முத்துலட்சுமி ராகவன்

# காதலின் பொன் வீதியில்...


லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ காதலின் பொன் வீதியில்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
காதலின் பொன்
வீதியில்...

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய காதலின் பொன் வீதியிலே...

## ஆசிரியர் கடிதம்...

## மனம் விட்டுப் பேசலாமா..?

என் பிரியத்துக்குரிய வாசக.. வாசகிகளே..!

எழுத்தாளர் பாலகுமாரன் இறந்து விட்டார்.. எதிர்பாராத மறைவு.. இதைக் கேள்விப்பட்டவுடன் அதிர்ச்சியுடன் நான் கேட்ட கேள்வி 'உண்மையாகவா..?' என்பதுதான்.. ஆச்சரியத்துக்குரிய மனிதர் அவர்.. உயிர்ப்புள்ள இலக்கியத்துக்கு கதையுலகை திருப்பி விட்டவர் அவர்தான்.. ஒரு காலகட்டத்திற்கு பின்பு உயிர்ப்பில்லாத அலுப்புடன் கூடிய கதைகளைத் தந்ததும் அவர்தான்..

அவர் எனது ஆதர்ச எழுத்தாளர் அல்ல.. அதே சமயத்தில் அவர் ஒரு சகாப்தம் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை.. மாலன், சுப்ரமண்ய ராஜீ, பாலகுமாரன் என்று அழகழகான கதைப் பொழுதுகளை வாசித்ததெல்லாம் ஒரு காலம்.. அது அழகிய நிலாக்காலம்.. பின்னொரு பொழுதில் அந்த நிலாக் காலத்திலிருந்து வெளி வந்து யோகி, தியானம் என்று தனக்கென வகுத்துக் கொண்ட ஆன்மிகப் பாதையில் பயணித்து விட்டார் பாலகுமாரன்.. அதை அவரது எழுத்துக்களிலும் கொண்டு வந்தார்.

எழுத்தாளர்கள் 'கதை சொல்லி' களாக மட்டுமே இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.. எனது கருத்தை மற்றவர்களும் ஏற்க வேண்டும் என்ற அவசியம் ஏதுமில்லையே.. என்னைப் பொறுத்தவரை எனது சொந்த

வாழ்வின் இன்ப, துன்பங்களையும், அனுபவங்களையும், ஆன்மிகத் தேடல்களையும் என் கதைகளில் திணிக்க மாட்டேன்.. அப்படிச் செய்தால் என் கதைகளைப் படிக்க விழையும் வாசகர்களுக்கு நான் அநியாயம் செய்தவளாகி விடுவேன்.

பாலகுமாரனின் பல கதைகள் என் வாழ்வின் வசந்தகாலப் பதின்மன் வயதுகளில் நான் படித்து ரசித்தவை.

'அந்த ஒரு நட்சத்திரம்..

யாருக்கதன் நிறம் தெரியும்..?

நான் நடக்கக் கூட வரும்..

கூட வந்து கண் சிமிட்டும்..

கண் கிறங்க மாலை வர..

நெஞ்சுக்குள்ளே காதல் வரும்..

தென் கோடி மூலையிலே..

நான் விரும்பும் நட்சத்திரம்..'

குமுதத்தில் வந்த பாலகுமாரனின் சிறுகதையொன்றின் ஊடே அவர் எழுதியிருந்த கவிதை வரிகள் இவை.. இசையின் தாள லயத்தோடு வெளிப்பட்டிருக்கும் இந்த கவிதை வரிகள் ரசனை மிக்க பொழுதொன்றில் அவரால் எழுதப் பட்டிருக்கக் கூடும்.. பின்னாளில் இந்த ரசனை எங்கோ தொலைந்து போனது.. அவரது ரசிக, ரசிகைகள் அதைத் தேடிக் களைத்து சோர்ந்து போனார்கள்..

இருபதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் கதை-வசனம் எழுதியர்.. பல விருதுகளைப் பெற்றவர்.. 'உடையார்' படைத்தவர்.. இன்னும் எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம்.. இந்த சித்தர், புத்தர் என்று சொல்வதில் மட்டும் எனக்கு உடன்பாடில்லை.. அவர் மனிதர்.. கணவன், மனைவிக்கிடையே உள்ள காதலை அவரது எழுத்துக்கள் அழகாக விளக்கின.. மனிதர்களின் மனங்களில் மிதக்கும் உணர்வலைகளை எளிதாக இனம் கண்டு சொன்ன மனிதர் அவர்.

எல்லோரும் நினைக்கிறார்கள்.. கதைகளில் திரைப்படப் பாடல்களை புகுத்தி எழுத ஆரம்பித்தது நான்தான் என்று.. இல்லை.. எனக்கு முன்னாடியே என் சிறுமிப் பருவத்திலேயே தன் கதைகளில் கவிநயம் மிகுந்த திரைப்பாடல்களின் வரிகளை எழுத்தில் கொண்டு வந்தவர் பாலகுமாரன் அவர்கள்.

அவர் ஒரு சாதனையாளர்.. அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கலாம்..

மற்றவை அடுத்த ஆசிரியர் கடிதத்தில்.. பை..

## கவிதை சொல்லவா..?

# இனிது இனிது காதல் இனிது...

உன் மீதான எனது காதல்
எத்துனை மாயங்களை என்னுள் செய்கிறது..!
உச்சி வெயில்.. குளிர் மழையாகிறது..
நட்டநடுநிசி, நண்பகல் நேரமாகிறது..
உண்ண மனம் மறுக்கிறது.. உணவை விலக்குகிறது..
மெத்தையிலே படுத்தால் நித்திரை பகையாகிறது..
இதை விடவும் துன்பம் வேறேதுமில்லை..
இது போதும் அன்பே..!
என் காதலை ஏற்றுக்கொள்..

- நட்புடன் -
முத்துலட்சுமி ராகவன்

'கௌசல்யா சுப்ரபாதம்..'

டேப்பிகார்டரில் பாடிக் கொண்டிருக்கும் பாடல் வரிகளில் மனம் செலுத்தியவளாய் கரம் குவித்து விழிகள் கசிய பாரளந்த மகாவிஷ்ணுவை மனதில் அழைத்து வேண்டுதல்களைச் சொல்லிக் கொண்டிருந்த மைதிலி,

"விசாலாட்சி.. ஏய் விசாலாட்சி.." என்ற கத்தல் கேட்டுக் கண் திறந்தாள்.. பூஜை அறையிலிருந்து திரும்பி உள்ளே பார்த்தாள்..

"இதோ வந்திட்டேங்க.." என்று பதறியபடி அம்மா விசாலாட்சி ஓடி வருவது தெரிந்தது.. தனக்குள் சிரித்துக் கொண்டவள் மீண்டும் நாராயணனை தஞ்சம்புகுந்தாள்..

"ஏண்டி.. மனுசன் மாடாட்டம் கத்திக்கிட்டு இருக்கேன்.. இப்படி ஆடி அசைந்து திருவாரூர் தேர் போல வர்றியே.. உன் மனசில என்ன நினைச்சுக்கிட்டிருக்கே..?"

'ஏன் பகவானே இந்த மனுசன் கிட்ட என்னை மாட்ட வைத்தேன்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்..' என்று மனதில் ஓடிய எண்ணங்களை மறைத்தவளாய்,

"அடுப்படியில் வேலையாய் இருந்தேங்க.. இப்பச் சொல்லுங்க.. எதுக்கு இப்படிக் கத்தினீங்க.." என்று கேட்டாள் விசாலாட்சி..

"கத்தறேனா..? ஏண்டி சொல்ல மாட்டே.. புருசன் கூப்பிட்டால் என்னன்னு உடனே வந்து கேட்கிற காலமெல்லாம் வள்ளுவன், வாசுகி காலத்தோட மலையேறிப் போச்சுடி.. இது கலிகாலம் அதான் நான் பேசினால் உனக்கு கத்தலாயிருக்கு.."

"அடடா.. குக்கர் விசில் வந்திருச்சு.. இறக்கி வைச்சுட்டு அடுப்பை அணைச்சிட்டு வந்தேங்க.. காஸ் விற்கும் விலையில் அடுப்பை வீணாய் எரிக்கலாமா..? அதுதான் வந்து விட்டேனில்ல.. என்னன்னு சொல்லுங்க..?"

அலுப்பாய் கூறினாள் விசாலாட்சி..

"ஏண்டி.. சொல்லாட்டி கோதண்டத்தில் போட்டு விடுவாயா..?"

'ராமா..' என்று மானசீகமாய் தலையில் அடித்துக் கொண்டாள் விசாலாட்சி..

"ஏங்க காலங்கார்த்தாலேயே அபசகுனமாய் பேசறீங்க..?"

"உன்னை மாதிரி ஒருத்தி பெண்டாட்டியா வாய்த்தால் எப்படிடீ சுப சகுனமாய் பேச வரும்..?"

'நானா ஆசைப்பட்டேன்..' என்று மீண்டும் மனதிற்குள் கேள்வி கேட்டவள் வெளியே, "சரி சரி.. எனக்கென்ன பேசத் தெரியும்..? நீங்கள் சொன்னால் சரிதான்.. நான் என்னவோ தெரியாமல் பேசிட்டேன்.. விட்டுத் தள்ளுங்க.. இப்போ எதுக்குக் கூப்பிட்டிங்கன்னு சொல்லுங்க.." என்றாள் தன்மையாய்...

வேறுவழி? வைத்தீஸ்வரன் பேச்சை ஆரம்பித்து விட்டால் அவராக மனது வைத்து நிறுத்தினால்தான் உண்டு.. வேறு யாராலும் நிறுத்த முடியாது.. 'ஊம்' போடாமல் நகரவும் முடியாது..

"காலையில் போன் அடித்ததே யாருடி பேசினது..?"

"நம்ம பெரிய பொண்ணு சாவித்திரி.."

"என்னத்துக்குப் போன் பண்ணினா..?"

"இது என்னங்க அர்த்தமில்லாத கேள்வி கேட்கறீங்க..? பிறந்த வீட்டுக்குப் போன் பண்ண நேரம் காலம் பார்க்கணுமா..? நல்லாயிருக்கு நீங்க கேள்வி கேட்கிற லட்சணம்.."

"லட்சணத்தைப் பத்தி நீ பேசாதே.. அதை நினைத்துப் பார்த்திருந்தால் உன் கழுத்தில் மூன்று முடிச்சு போட்டிருக்க மாட்டேன்.."

'நானும் தப்பித்து இருப்பேன்' என்று மனதிற்குள் நிறுத்திக் கொண்ட விசாலாட்சிக்கு ஆற்றாமையாய் இருந்தது.. மனதில் நினைப்பதை கணவரைப் போல் அவள் சொல்லிவிட முடியுமா என்ன..? எனவே,

"உங்க தலைவிதி என்னைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதாப் போச்சு.. இப்ப அதுவா பிரச்சனை..? சாவித்திரி எதுக்குப் போன் பண்ணினான்னு சொல்லவா வேண்டாமா..? நான் சமையல் பண்ணப் போகணும்.

எனக்கு வேலையிருக்கு.." என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூறினாள்..

"அப்போ.. உனக்குத்தான் வேலையிருக்கு.. எனக்கு இல்லை..?"

"ஈஸ்வரா.. உங்களுக்கு ஏங்க புத்தி இப்படி குயுக்தி யாவே யோசிக்குது.. சரி.. நீங்க இப்போதைக்கு பேச்சை முடிக்க மாட்டீங்க.. நானே சொல்றேன்.. போன தீபாவளிக்கே நாம சரியா சீர் அனுப்பலியாம்.. இந்த தீபாவளிக்காவது ஒழுங்கா உங்க அப்பா வீட்டில் சீர் செய்வாங்களான்னு அவ மாமியார் குத்திக் காட்டறாங்களாம்.. 'ஓ'ன்னு அழுதாள்..."

"வேற என்ன செய்வா..? நாமதான் பேரு வச்சிருக்கோமே.. 'சாவித்திரி'ன்னு.. அடிக்கடி அழுது புலம்பினாத்தானே அந்தப் பேருக்கு மதிப்பு..?"

"ஆமாங்க.. அவதான் பிறந்து மண்ணில் விழுந்ததுமே 'இந்தப் பெயரை வையுங்க'ன்னு கேட்டா.. நல்லாத்தான் வந்திரும் வாயில்.. 'நடிகையர் திலகம்' சாவித்திரின்னா எனக்கு உயிர்.. அவ பேரைத்தான் வைப்பேன்னு பிடிவாதம் பிடிச்சு வச்சது நீங்க.. பேச வேணாம்ன்னு பார்க்கிறேன்.."

"பேச வேணாம்ன்னு நினைக்கும்போதே இவ்வளவு பேசுறயே.. இன்னும் பேசணும்ன்னு நினைத்தால் எவ்வளவு பேசுவ..? புருசன்கிற பயம் கொஞ்சம் கூட இல்லாமப் போச்சு.."

'புருசன்னா பயம் மட்டும்தான் இருக்கணுமா..? அன்பு இருக்கக் கூடாதா..?' என்று இதையும் மனதிற்குள் நினைத்தவள்,

"உங்ககிட்ட பயப்படாமல் இந்த உலகத்தில் யாருகிட்ட பயப்படப் போறேங்க.." என்றாள் உண்மையாக..

அவள் பேச்சில் இருந்த எள்ளலைப் புரிந்து கொள்ளாத வைத்தீஸ்வரன்,

"ஏண்டி.. இந்த சாவித்திரி என்ன நேற்று இந்நேரம் கல்யாணம் பண்ணிப் போன மாதிரி சீர் செனத்தின்னு இன்னும் கறக்கிறா.. கல்யாணம் பண்ணிக்கொடுத்து ஆறு வருசமாச்சு.. இரண்டு பிள்ளைகள் பெற பிரசவம் பார்த்து

அதற்கும் சீர்வரிசை செஞ்சு அனுப்பியாச்சு.. இன்னும் அவ மாமியார்காரி கறக்க நாம் என்ன கறவை மாடுகளா..? மாட்டுக்கே ஒரு ஸ்டேஜுக்கு மேல் பால் வற்றிப் போகும்.. மனுசப் பயல் என்ன பண்ணுவான்னு நினைப்பு வேணாம்..? எல்லாம் நீ பெத்த பெண் திலகத்தைச் சொல்லணும்.. இந்த மாப்பிள்ளையைப் போய் கட்டிக்கிட்டாளே.."

"அபாண்டமா பேசாதீங்க.. ஏதோ அவள் ஆசைப்பட்டு கல்யாணம் பண்ணிக்கிட்டது மாதிரியில்ல பேசுகிறீங்க.. 'பத்து மாப்பிள்ளை பெண் பார்க்க வந்து வேண்டாம்ன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க.. இது பதினொன்னாவது மாப்பிள்ளை.. இந்த மாப்பிள்ளை உலக அதிசயமா பொண்ணு பிடிச்சிருக்குன்னு சொல்லியிருக்கார்.. ஒழுங்காய் உன் பெண்ணை சம்மதம்ன்னு தலையாட்டச் சொல்லு.. இல்லைன்னா நடக்கிறது வேறன்னு நீங்க மிரட்டி அவளை சம்மதிக்க வைச்சுட்டு.. இப்ப அவளைச் சொல்றீங்களா.. அப்பவே அவ மாட்டேன்னு கெஞ்சினாள்.. இரக்கப்பட்டிங்களா..? 'எதிர்த்தா பேசுற...'ன்னு எகிறின்னீங்க... இப்ப அனுபவியுங்க.." ஆத்திரத்தில் மூச்சு இறைத்தது விசாலாட்சிக்கு..

"சரிடி.. நான்தான் கல்யாணம் பண்ணி வச்சேன்.. சும்மாவா கல்யாணம் பண்ணி வச்சேன்.. பணம், நகைன்னு என் கிராஜுவிட்டி பணம் பூராவும் செலவு பண்ணித்தானே கட்டி வைத்தேன்.. அதுக்கப்புறமும் சாகும்வரை நான் படியளக்கணும்னு எதிர்பார்த்தால் எப்படி..?"

"இவளா எதிர்பார்க்கிறாள்..? மாமியார் பிடுங்கினால் இவள் என்ன செய்வாள்..?"

"இவளுக்கு சாமர்த்தியம் பத்தாதுடி.."

"என் வயித்திலே வந்து பொறந்திருக்கே..! அப்படித்தான் இருக்கும்.."

"சரி இவதான் இப்படின்னா தல நாளையிலே பெத்தயே ஒரு தவப்புதல்வன்.. அவன் கதை இருக்கே.. இன்னைக்கு பூராவும் சொன்னாலும் தீராதுடி.."

"அவன் என்னங்க செய்தான்..?" ஏக்கத்துடன் சமையலறையைப் பார்த்தபடி கேட்டாள் விசாலாட்சி.. போட்டது போட்டபடி சமையல் பாதியில் கிடந்தது.. வைத்தீஸ்வரன் அவளை விடுவதாக இல்லை..

"ஒண்ணுமே செய்யலைனுதாண்டி சொல்றேன்.."

"இது ஆண்டவனுக்கே அடுக்காதுங்க.. அவன் ஒண்ணுமே செய்யலையா.. மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க.. சாவித்திரி கல்யாணத்துக்கு உங்க கிராஜுவிட்டி பணம் மட்டும் போதுமானதா இருந்துச்சா.. சும்மா இருக்காம மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கேட்டதை யெல்லாம் செய்யறோம்னு ஜம்பமா வாக்குக் கொடுத்திங்க.. தேவையான பணத்தில் கால்வாசி கூட உங்களால் சமாளிக்க முடியலை.. முக்கால்வாசிச் செலவு என் மகன் தலையில் விழுந்தது.. இன்னும் அந்தக் கடனைக் கட்டியே ஓயறான் என் பிள்ளை.. மகன் ஒண்ணுமே செய்யலைன்னு நீங்க மனச்சாட்சி இல்லாமப் போறீங்க.."

"ஆமாடி.. அவன் எல்லாம் செஞ்சான் செஞ்சான்னு சொல்றயே.. கல்யாணம் செய்துகிட்டதை சொல்ல மாட்டேங்கற..?"

"ராமா.. ஏங்க நீங்க பேசறதை நாலு பேர் கேட்டா என்ன நினைப்பாங்க தெரியுமா..? நம்ம பிள்ளை தானா காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்திட்டான்னு அசிங்கமா நினைப்பாங்க.."

"ராமான்னு ராமனைக் கூப்பிட்டுட்டு ஏண்டி 'காதல் கருமாந்திரம்'ன்னு கண்ட கழிசடை வார்த்தைகளை யெல்லாம் சொல்றே.. அவனுக்கு நாமதான் பொண்ணு பாத்துக் கல்யாணம் பண்ணி வச்சோம்.. இல்லேங்கலை.. அதனால் 'பொண்டாட்டி பின்னாடியே தனிக்குடித்தனம் போடா'ன்னா சொன்னோம்..?"

பூஜையறையில் விஷ்ணுவுடன் மானசீகமாய் பேச விடாமல் மைதிலியின் காதில் வந்து விழுந்தன இத்தனை வார்த்தைகளும், இனி வேண்ட முடியாது என்று உணர்ந்தவள் கடவுளைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டாள்..

லட்சம் லட்சமாய் கொட்டி மாப்பிள்ளையை விலைக்கு வாங்கினாலும் வாங்குவார்களே தவிர காதல் கல்யாணத்திற்கு அனுமதிக்க மாட்டார்கள்.. ஜாதி, மதம், அந்தஸ்து என்ற ஆயிரம் மேடு பள்ளங்கள் சொல்லப்பட்டாலும் உண்மையில் தானாய் தன் வாழ்க்கைத் துணையை பெண்ணோ, ஆணோ தேர்வு செய்யக்கூடாது என்ற பிடிவாதம் தான் மேலோங்கி நிற்கிறது.

மைதிலியின் மனக்கண்ணில் நந்தகுமாரன் வந்து நின்றான்.. ஒல்லியான அப்பா, அண்ணனிற்கு எதிர் மாறான ஆஜானுபாகுவான தோற்றம்.. மைதிலியின் பரம்பரையே சிவந்த நிறமுடையவர்கள்.. நந்தகுமாரனின் பரம்பரை கண்ணனின் கருமை நிறமுடையது.. மைதிலியின் பக்கமுள்ள ஆண் மகன்கள் சிறிய மீசை வைத்தவர்கள்.. நந்தகுமாரனின் பக்கமுள்ள ஆண் குலம் 'கடா மீசை' வைத்தது.. நந்தகுமாரனே பெரிய மீசை கொண்டவன்.. மீசைக்கார பரம்பரையான நந்தகுமார் மைதிலியின் மைவிழியில் சிக்கித் தவிப்பதை வைத்தீஸ்வரன் அறிந்தால் என்ன சொல்லுவார்..?

வெட்டிக் கொல்லுவார் என்பதில் ஐயம் சிறிதளவு கூட இல்லை மைதிலிக்கு... ஆனால் அதற்காக நந்தகுமாரனை மறக்க முடியவில்லை.. 'அதற்குப் பதில் இறந்து விடலாமே..' என்று எண்ணியவள் மௌனமாகக் கடவுளை சேவித்து பூஜையறையை விட்டு வெளியே வந்தாள்..

வைத்தீஸ்வரனுக்கும், விசாலாட்சிக்கும் இடையே மூண்டிருந்த பஞ்சாயத்து இன்னும் முற்றுப் பெற வில்லை..

"அவன் என்ன உள்ளூரிலயா தனிக்குடித்தனம் போனான்.. சென்னைக்கு மாற்றல் வந்தால் பெண்டாட்டி புள்ளையை விட்டு விட்டா போக முடியும்..?"

"அதுதானே..! தாய், தகப்பன், தங்கையை விட்டு விட்டுப் போகலாம்.. பொண்டாட்டி, புள்ளையை விட்டு விட்டுப் போக முடியுமா..? வந்திட்டாள் மகனுக்கு வக்காலத்து வாங்க.."

மைதிலியின் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி மத்திய சுங்கவரி இலாகாவில் வேலை பார்க்கிறான்.. தாய், தந்தை,

தங்கைகள் எல்லோரிடமும் பாசமானவன்.. இத்துடன் மனைவி தனலட்சுமி மீதும் மகன் ஹரீஷின் மீதும் பாசம் வைத்திருந்ததுதான் வைத்தீஸ்வரனுக்கு மிகப் பெரிய குற்றமாகத் தோன்றியது.. சென்னைக்கு மாற்றலானபோது கிருஷ்ணமூர்த்தியை மட்டும் போகச் சொல்லிவிட்டு மருமகளையும், பேரனையும் திருச்சியில் தன் வீட்டிலேயே நிறுத்தப் பார்த்தார் வைத்தீஸ்வரன்.. தனலட்சுமியின் மௌனமான கண்ணீர்.. இரவானால் தகப்பன் மேல் காலைத் தூக்கிப் போட்டுத் தூங்கும் மகனின் பிரிவாற்றாமை.. இதைக் கனவில் கூட நினைத்துப் பார்க்க விரும்பாத கிருஷ்ணமூர்த்தி மனைவியையும், மகனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்னைக்குக் குடிபோய் விட்டான்..

"என் மகன் என்ன தப்புப் பண்ணினான்..? நான் வக்காலத்து வாங்காமல் ஒதுங்கிப் போக..?"

"பெண்டாட்டி முந்தானையைப் பிடிச்சுகிட்டு போனது தப்பேயில்லையா..?"

'ம்ஹூம்.. போகாமல் உங்களோடு இருந்திருந்தால் வாழ வந்த மருமகளுக்கு வாழ்வே வெறுத்துப் போயிருக்கும்..' என்று தன் வழக்கமாய் மனதிற்குள் கூறிக் கொண்டே விசாலாட்சி பூஜையறையில் இருந்து வெளியே வந்த மகளைக் கண்டதும்,

"மைதிலி.. என்னம்மா.. கிளம்பிட்டியா..?" என்றபடி 'தப்பித்தேன் பிழைத்தேன்..' என்று சமையலறைக்குள் பாய்ந்தாள் விசாலாட்சி..

சமையலறைக்குள் தட்டில் இட்லியை எடுத்து வைத்துச் சாப்பிட ஆரம்பித்த மைதிலி.. "என்னம்மா ஒரு வழியா தப்பிச்சுட்டு வந்திட்டிங்க போல.." என்றாள்..

"ஆமாம்டி.. காலையில் பேச ஆரம்பித்தால் ராத்திரி பனிரெண்டு மணிக்குத் தான் நிறுத்துகிறார்.. எவ்வளவு நேரம் 'ஊம்' போட முடியும் சொல்லு.."

"பேசாமல் ஒரு 'ஊம்' போட்டு பதிவு பண்ணி டேப்ரிகார்டரை அப்பா பக்கத்தில் வைத்து விட்டால் அது பாட்டுக்கு 'ஊம்'

போடும்.. அப்பாவும் உங்களை தொந்தரவு பண்ண மாட்டார்.." என்று கலகலவென்று சிரித்தாள் மைதிலி..

மகளின் சிரிப்பை ரசித்த விசாலாட்சி..

"என்னவோ போ மைதிலி.. உன் அழகுக்கும், குணத்துக்கும் நல்ல இடத்தில் மாப்பிள்ளை அமைந்து விட்டால்.. எனக்கு நிம்மதியா இருக்கும்.."

"ஏம்மா கவலைப்படறீங்க.. நானும் சாவித்திரியைப் போல் கழுத்தில் தாலி ஏறியவுடன் மறு வீடு வரக்கூட யோசிச்சுக்கிட்டு மாமியார் வீட்டில் செட்டிலாகலைன்னா.. இத்தனை கவலை..?"

கிருஷ்ணமூர்த்திக்கு நேர் இளையவளான சாவித்திரி, மைதிலிக்கு அக்கா.. திருமணமானவுடன் மறு வீட்டிற்கு மாப்பிள்ளையும் பொண்ணும் வந்தபோது வழக்கம் போல் வைத்தீஸ்வரன் வாயைத் திறக்க அன்றே ஊர் திரும்பி விட்ட சாவித்திரியின் கணவன் விநாயகமூர்த்தி அதன் பின்னால் மாமனார் வீடு வருவதையே தவிர்த்து விட்டான்.. கணவன் இல்லாமல் வரவிருப்பமில்லாத சாவித்திரி பிறந்த வீடே வருவதில்லை.. ஆனால் சீர்வரிசையை மட்டும் மறக்காமல் போனில் அழுது வாங்கி விடுவாள்..

"அதைச் சொல்லு.. உன் அப்பா மாதிரி மாமனார் அமைந்தால் மாப்பிள்ளை மறுவீடு வரவே பயப்படத்தான் செய்வார்.." என்று அலுத்துக் கொண்டாள் விசாலாட்சி..

'என் நந்தகுமாரனைப் பார்த்தால் அப்பாதான் பயப்படுவார்.. அதுவும் என் நந்துவின் பெரிய மீசையைப் பார்த்தால் மொழு மொழுவென்ற முகத்தையுடைய அப்பா அலறப் போகிறார்..' என்று எண்ணியவள் மனதிற்குள் அந்தக் காட்சியை கற்பனை செய்து பார்த்து ரசித்துச் சிரித்தாள்..

'நந்து.. என் நந்தகுமாரா.. இதுதான் என் குடும்பம்.. காதல் என்றால் பிடிக்காத அப்பா.. அம்மா.. தன் குடும்பத்தை நேசிக்கும் அண்ணன்.. மாமியார் பெயரைச் சொல்லி பணம் கறக்கும் அக்கா.. இங்கேதான் நான் பிறந்து வளர்ந்திருக்கிறேன்.. உன் மைதிலியின் பிறந்த வீடு இதுதான்.. நீ பெண் கேட்டு வந்தால்.. தங்கத் தாம்பாளம்

கொண்டு இங்கு வரவேற்க மாட்டார்கள்.. நீ தான் பிருத்விராஜன், சம்யுக்தையை தூக்கிப் போனது போல்.. என்னைக் கவர்ந்து செல்ல வேண்டும்.. கவர்ந்து செல்வாயா..? நீதான் என் உள்ளத்தையே கவர்ந்து சென்ற கள்வன் ஆயிற்றே..'

"மைதிலீ.." என்று விசாலாட்சி உலுக்க, அவள் தன்னிலைக்கு வந்து,

"என்னம்மா..?" என்றாள்..

"எவ்வளவு நேரமாய் கூப்பிடுகிறேன்..? எங்கேடி ஞாபகம்..? மதியத்திற்கு தக்காளி சாதம் போதுமா.. இல்லை தயிர்சாதம் கொஞ்சம் வைத்து விடவா..?"

"தக்காளி சாதமே போதும் அம்மா.."

வாசலுக்கு வந்து செருப்பை மாட்டியவள் அங்கே நின்று கொண்டிருந்த வைத்தீஸ்வரனைப் பார்த்து வேறு வழியின்றி,

"வருகிறேன்ப்பா.." என்றபடி,

"ஆபிசுக்கு போற நேரத்தைப் பார்.. இந்த நேரத்துக்குப் போனால் விளங்கினது மாதிரிதான், பஸ்ஸுக்கு லேட்டாகுதுன்னு அறிவு வேண்டாம்.." என்று ஆரம்பித்த வைத்தீஸ்வரனின் குரல் காதில் விழுகாதது போல் அலுவலகத்திற்கு விரைந்தாள்..

## 2

கொள்ளிடக் கரையோர கிராமம் அது.. 'வேம்பூர்' என்றால் மூன்று போகமும் பொன் விளையும் பூமி என்று பிறந்த குழந்தை கூடச் சொல்லும்.. தூக்கி மடித்துக் கட்டிய வேட்டியுடன், தலையில் துண்டை முண்டாசு கட்டிக் கொண்டு வரப்பில் வேப்பங்குச்சியை வைத்து பல் துலக்கியவாறு வந்து கொண்டிருந்தார் துரைசிங்கம்.. எதிர்த்தாற்போல் வந்த பலவேசம்..

"என்ன துரைசிங்கம்.. நான் சொன்னதை வீட்டில் பொஞ்சாதி காதில் போட்டாயா.. இல்லயா.." என்று

விசாரித்தார்..

வரப்பை விட்டு இறங்கி வாய்க்காலில் சுழித்தோடிய நீரில் வாய் கொப்புளித்து முகம் கழுவியவர், தலையில் முண்டாசு கட்டியிருந்த துண்டை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டவர், தன் முகத்தை மறைக்கும் கடாமீசையை முறுக்கியவாறு,

"எல்லாம் சொல்லியாச்சுய்யா.. மகன்கிட்ட கொஞ்சி, கெஞ்சி.. எல்லா வகையிலயும் பேசிப் பார்த்திட்டாள்.. பயல்தான் மசிய மாட்டேங்கிறானே.." என்றார்..

"என்னய்யா இது..? உனக்குப் பேருதான் பெத்த பேரு போல.. பெரிசா துரைசிங்கம்ன்னு.. வீட்டில் உன் ஜம்பம் இவ்வளவுதானா..?"

"யோவ்.. பலவேசம்.. சந்தடி சாக்கில் சிந்து பாடாதே.. என் வீட்டில் என் ஜம்பம் செல்லுமா, செல்லாதான்னு பரிட்சை பண்ணிப் பார்க்க அது விளையாடற மைதான மில்லய்யா.. குடும்பம்.. என் பொஞ்சாதி நான் கீறின கோட்டைத் தாண்ட மாட்டாள்.. பயல்.. தோளுக்கு மேல் வளர்ந்தா தோழன்ய்யா.. இவன் பனை மரத்தில பாதி உயரத்துக்கு வளர்ந்து நிற்கிறான்.. அவன் கிட்டப் போய் ஜம்பம் பேசச் சொல்றயா.. அதுக்கு வேற ஆளைப்பாரு.."

"அட என்னய்யா நீ வேற சுத்த விவரம் கெட்ட மனுசனா இருக்க.. இந்த வேம்பூரில் இருக்கிற முக்கால்வாசி வயலுக்கு சொந்தக்காரன் நீ.. ஊருக்குப் பெரிய தனக்காரன்.. உனக்கு இருக்கிற பணத்துக்கும் பவிசுக்கும் உன் மகன் ஒரு இடத்தில் கை கட்டி வேலை பார்க்கலாமா..?"

"ஏன்ய்யா.. நான் என்னவோ அவனை வேலைக்கு விரட்டினது போலப் பேசுற.. நாமதான் பெரிய படிப்பு படிக்கலை.. பிள்ளை படிக்கட்டுமேன்னு காலேஜுக்கு அனுப்பி வைச்சேன்.. படிச்சுப் பட்டம் வாங்கியவன் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தையும் சேர்த்து வாங்கிக் கொண்டு வந்து நிற்கிறான்.. நான் என்ன பண்ண முடியும்..?"

"அதைவிடு.. உன் பெண்டாட்டி பிள்ளை வரம் கேட்டு கோவில் கோவிலாய் சுற்றிப் பிறந்தவன் உன் பிள்ளை..

நீயோ கோவில் தர்மகர்த்தா.. உன் பிள்ளை நாத்திகம் பேசிக்கிட்டு அலைஞ்சா நல்லாவா இருக்கு..?"

"நல்லாத்தான் இல்லே.. நான் சொன்னா எங்கே அவன் கேட்கிறான்..?"

"சரி.. இதையெல்லாத்தையும் விடு.. ஜமீன் பரம்பரையில் ஒத்தப் பொண்ணு.. கங்கு கரையில்லாத சொத்து.. பொண்ணு கொடுக்கிறேன்னு என் மூலம் தூது மேல் தூது சொல்லியனுப்புறாங்க... ஒரு நல்ல பதிலைச் சொல்லாம நாள் கடத்தினா எப்படிப்பா...? நான் அவங்களுக்குப் பதில் சொல்ல வேணாமா..?"

"இன்னைக்கு பதில் சொல்லிடறேன் பலவேசம்.."

விரைவாய் நடையைக் கூட்டி மகன் அலுவலகம் செல்லும் முன்னர் அவனைப் பிடித்து விட எண்ணிச் சென்ற துரைசிங்கம் வழியில் வணங்கிய பண்ணை ஆள்களைக் கவனிக்காமல் வீடு சென்றடைந்தார்..

சுற்றுச் சுவர்கள் அரண்மனைப் பக்கச் சுவர்கள் போல் சுற்றி வளைத்திருக்க நடுவில் பிரம்மாண்டமாய் மூன்று கட்டாய், மூன்று அடுக்காய் கட்டப்பட்டிருந்தது அந்த வீடு.. வீட்டைச் சுற்றிலும் சிமிண்ட் தரையிருக்க அதில் நெல், மிளகாய், தானிய வகைகள் போன்றவை காய்ந்து கொண்டிருந்தது.. வீட்டின் பின் பகுதியில் தென்னை, மா, கொய்யா மரங்கள் இருந்தன.. வீட்டின் பின் கட்டு சமையல் பகுதியாகவும் நடுவில் முற்றமாகவும் முன்புறத்தில் பெரிய வரவேற்பறையும் அதற்கு முன்னால் நீண்ட தாழ்வாரமும் அதன் முனையில் பெரிய திண்ணைகளுமாக பழமையின் அடையாளமாய் அந்த வீடு இருந்தது.. மாடியில் பால்கனியில் ஊஞ்சல் கட்டப்பட்டிருக்க அதில் அமர்ந்தபடி பேப்பர் படித்துக் கொண்டு இருந்தான் நந்தகுமாரன்.. எதிரில் காபியை ஆற்றியபடி நின்று கொண்டிருந்தாள் சோலையம்மாள்.. புயலென மாடிக்குச் சென்ற துரைசிங்கம்,

"என்னதாண்டி நினைச்சுக்கிட்டு இருக்கான் உன் பிள்ளை.. எனக்கு ரெண்டில் ஒண்ணு தெரியணும்.. கேட்டுச்

சொல்லு.. அந்த ஜமீன்தார் வீட்டுப் பெண்ணை கட்டப் போகிறானா இல்லையா..?" என்று சப்தம் போட்டார்..

மகனின் கையில் காபியை கொடுத்து விட்டுக் கையைப் பிசைந்தவாறு மகனைப் பார்த்தாள் சோலையம்மாள். தகப்பனாரை நிமிர்ந்து பார்க்காமல் பேப்பரில் ஆழ்ந்திருந்தான் நந்தகுமாரன்..

"ஐயா நந்து..! அப்பா கேட்கிறாரில்ல.. பதில் சொல்லுய்யா.." என்று மகனிடம் இரைஞ்சினாள் சோலையம்மாள்..

"எதுக்கும்மா பதில் சொல்லணும்..?"

"நாளைக்குப் பொண்ணு பார்க்கப் போகணுமாம்.."

"யாருக்குப் பெண் பார்க்க..?"

"நக்கலா பேசறான் உன் பிள்ளை..?" என்று ஆவேசமானார் துரைசிங்கம்.. அவர் மீசை துடித்தது.. பதறினாள் சோலையம்மாள்..

"பொறுங்க.. பொறுங்க.. நான் கேட்கிறேன்.. நந்து.. என்னய்யா இது..? உனக்குத்தான் பொண்ணு பார்க்கப் போகிறோம்.."

"போகலாமான்னு என்கிட்ட கேட்டீங்களா.. போறோம்ன்னு சொன்னால்.. என்ன அர்த்தம்..? இல்லை.. நான் தெரியாமல்தான் கேட்கிறேன்.. கட்டிக்கப் போறது நானா இல்லை வேறு யாருமா..?"

"பேச்சைப் பார்த்தியாடி.." என்று பல்லைக் கடித்த தகப்பனாரைப் பார்க்காதது போல் தாயைப் பார்த்தவன்,

"அம்மா..! எனக்கு இப்பக் கல்யாணம் வேணாம்.. எனக்கு வேணும்னு தோணினப்போ பண்ணிக்கறேன்.. இப்ப என்னை பேப்பர் படிக்க விடுங்க.." என்றான்..

"அப்பன் பேச்சைக் கூடக் கேட்காமல் அப்படி என்னடி அந்தப் பேப்பரில் படிச்சுக் கிழிக்கறான்.. பெரிய ஹிண்டு, இந்தியன் எக்ஸ்பிரஸ் பேப்பரைப் படிச்சு உலக நடப்பைத் தெரிஞ்சுக்கப் போகிறது போல் விழுந்து விழுந்து படிக்கிறதைப் பாரு.. கருப்புச் சட்டைக்காரன் போடற பேப்பர்.. இவனுக்கு எதுக்குடி அந்தக் கருமாந்திரமெல்லாம்..? வருசா வருசம் அம்மன் கொடை

சுமக்கிற குடும்பத்தில் நாத்திகம் பேசறவன் பிள்ளையா பிறந்திருக்கான்.. ஒத்தப் பிள்ளையைப் பெத்தவனெல்லாம் என்னை மாதிரியாடி இந்தப் பாடு படறான்..? அவனவன் ஒத்தப் பொண்ணை வச்சுக்கிட்டு ஆள் மேல் ஆள் தூது அனுப்பிக்கிட்டிருக்கான்.. இவன் அசைஞ்சு கொடுக்கிறானா பாருடி.." என்று எண்ணையில் போட்ட அப்பமாய் குதித்தார் துரைசிங்கம்..

"அம்மா.. ஜமீன் பரம்பரை அந்தப் பரம்பரை.. இந்தப் பரம்பரைன்னு பரம்பரை பெயரைச் சொல்லிக்கிட்டு அலையாம மனுசனை மனுசனா பார்க்கச் சொல்லுங்க.. ஜமீன்ங்கிற பெயரெல்லாம் ஒழிந்து எவ்வளவு காலமாச்சு.."

"டேய்.. அதிகாரத்தை வேணும்னா பிடுங்கலாம்.. ஜமீன்ங்கிற மரியாதையை பிடுங்க முடியாது.."

"ஸ்ஸ்.. அப்பா.. எனக்குப் பிடிக்கலைன்னா விடுங்க.."

"அதுக்காக.. உனக்குப் பிடிச்ச மாதிரியே இஷ்டப்படி ஆடுவே நான் பார்த்துக்கிட்டு இருக்கணுமா..? இந்த துரைசிங்கத்திற்குன்னு ஊருக்குள்ள ஒரு பெயர் இருக்கு.. மானம் மரியாதை இருக்கு.. அதுக்கு தக்கபடி தான் நான் பெண் எடுப்பேன்.."

"தாராளமா எடுங்க.. என்னை தாலிகட்டுன்னு மட்டும் சொல்லாதீங்க.." கோபத்துடன் பேப்பரை மடித்து விட்டு உள்ளே சென்று விட்டான் நந்தகுமாரன்.. துரைசிங்கத்தின் மீசை துடித்தது..

"ஆகிற பேச்சாடி இது..? கிறுக்கன் மாதிரி பேசறான் பாரு.. பொழைக்கிறவன் இப்படிப் பேசுவானாடி..? பரம்பரையை மதிக்க மாட்டேன்னு பஞ்சப் பனாதி எதையாவது கூட்டிக்கிட்டு வந்து நின்னுருவானோன்னு பயமா இருக்குடி சோலையம்மா.." என்ற துரைசிங்கம் மாடி இறங்கிச் சென்று விட்டார்..

கோபத்துடன் மகன் ஒரு பக்கம் போக கணவர் ஒரு பக்கம் போக இருதலைக் கொள்ளி எறும்பாக தவித்த சோலையம்மாளுக்கு மனம் சங்கடப்பட்டது.. நந்தகுமாரன் தாயின் மேல் உயிரையை வைத்திருந்தான்.. தாயின் பாசத்துக்குக் கட்டுப்படுவான்.. ஆனால் பணக்கார ரத்தம்

உடலில் ஓடியும் ஏழைப் பங்காளனாக வாழ நினைப்பவன்.. ஆகாத வேலையென்று மற்றவர்கள் புறக்கணிப்பதை ஆர்வமாய் செய்வான்.. அனைவரும் விரும்புவதை 'ப்பூ' வென்று கணப் பொழுதில் அலட்சியப்படுத்திச் சென்று விடுவான்.. குணத்தில் தங்கம்.. சமீப காலமாக புத்தி வக்கரித்து தெய்வம் இல்லையென்று கூறி கோவிலுக்கு வருவதைத் தவிர்க்கிறான்.. யாரும் உதவியென்று கேட்டு விட்டால் கையில் இருப்பதை கொடுத்து விட்டு வந்து விடுவான்.. மதியாதார் தலைவாசல் மிதிக்க மாட்டான்.. அதே சமயம் வாசல் படியேறி வருபவர்கள் எதிரியாக இருந்தாலும் இன் முகம் காட்டி வரவேற்பான்..

'கடவுள் பக்தியை விட மனித நேயம் உயர்ந்தது..' என்பது அவன் கொள்கை.. இதில் சோலையம்மாளுக்கும் உடன்பாடு உண்டு.. கோவிலையே பிறப்பிடமாகக் கொள்ளாவிட்டாலும் பழைய சம்பிரதாயங்களை மதிக்கும் குடும்பம் அது.. அதில் கருப்புச் சட்டை போட்ட வெள்ளை மனத்தவன் பிறந்து விட்டான்.. பிறந்தவன் சும்மா இருக்காமல் கோவிலையே இருப்பிடமாய் கொண்ட தெய்வபக்தி மிகுந்த மைதிலியைக் காதலித்து விட்டான்..

அலுவலகத்துக்குத் தயாராகி தலை வாரிக் கொண்டிருந்த நந்தகுமாரன் ஆளுயுரக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான்.. 'ராஜகுமாரன்' என்கிறார் அப்பா.. கருப்பு நிற ராஜகுமாரன்.. இந்த ராஜகுமாரனுக்கு ஏற்ற ராஜகுமாரி ஜமீன் வம்சத்தில் இருந்துதான் வரவேண்டுமாம்..

'மைதிலி உன் அப்பா ஜமீன்தாரா..! என்று கேட்க வேண்டும்.. கேட்டால் என்ன சொல்லுவாள்..?'

அழகிய முகம் கோபத்தில் இன்னும் சிவக்க,

'ஒகோ.. இந்த மூஞ்சிக்கு.. எங்க மூஞ்சி பத்தாதோ.. ராஜகுமாரி கேட்குதா ஏன்.. ஜமீன்தார் மகளா இருந்தால் தான் கல்யாணம் பண்ணிக்குவீங்களோ..? இல்லைன்னா.. மாட்டீங்களோ..? மகனே.. என்னை விட்டு விட்டு இன்னொருத்தி கழுத்தில் தாலியை கட்டிருவியா நீ..? நான் விட்டுவிடுவேனா..?' என்று பொரிந்து தள்ளி விடுவாள்..

மைதிலியின் நினைவில் மனம் கிறங்க முதல் முதலில் அவளைச் சந்தித்த நாளை நினைவில் கொண்டு வந்தான்..

அன்று வேண்டுமென்றே தன் இரு சக்கர வாகனத்தைப் புறக்கணித்துப் பேருந்தில் ஏறிச் சென்றான்.. துரைசிங்கம் கூடக் கத்தினார்..

"ஏண்டி.. டாடா சுமோ வீட்டில் தூங்குது.. கண்டுக்க மாட்டேங்கிறான்.. சரி.. அவனுக்குப் பிடிச்ச மோட்டார் சைக்கிள்ல போகட்டும்ன்னு பார்த்தா இன்னைக்கு அதுவும் வேண்டாமுன்னு சொல்லிட்டு பஸ்ஸில் போறேன்னு என் மானத்தை வாங்கறான்.."

"ஏன்ம்மா பஸ்ஸில் ஒரு நாள் ஆபிஸ் போனால் அது அவ்வளவு பெரிய பாதகச் செயலா..?"

"எனக்கு அப்படித்தாண்டி.. என் மவன் சிங்கம் மாதிரி காரில் போகணும் வரணும்னு நினைக்கிறவன் நான்.."

வாக்குவாதம் முற்றுப் பெறுவதற்கு முன்னால் தலை மறைவாகி அந்தக் கிராமத்திற்கு வரும் திருச்சி செல்லும் நகரப் பேருந்தில் ஏறிச் சென்றவன் திருச்சி நகரில் இறங்கி அலுவலகம் செல்ல இன்னொரு பேருந்து மாறி ஏறினான்.. காலை நேர நெரிசல் அதிகமிருந்தது..

தினம் தினம் மக்கள் இப்படித்தான் அவதிப்படுகிறார் களோ என்று சித்தார்த்தர் புத்தராகப் போவதற்கு முன்பு நினைத்த மாதிரி நினைத்துக் கொண்டவன், அருகில் பேருந்தின் நெரிசலில் நொறுங்கிக் கொண்டிருந்த வயோதிகரைப் பார்த்து, பரிதாபப்பட்டு எழுந்து தன் இடத்தை அவருக்குக் கொடுத்தான்..

"ஐயா இங்கே உட்காருங்க.."

"நல்லாயிருப்ப தம்பி.." என்று வாழ்த்திய வயோதிகர் அவனது இடத்தில் அமர்ந்து கொள்ள அவன் எழுந்து நின்று கொண்டான்..

"முன்னால் நகருங்க.." என்று கண்டக்டர் கத்தவும் இவன் நகர்ந்து நின்றபோது அருகில் நின்ற பெண் மீது மோதிக் கொண்டான்..

"ஐ ஆம் சாரி.. தெரியாமல்.." என்று அவன் கூற ஆரம்பிக்கும் போதே 'ஷட் அப்' என்றாள் அந்தப் பெண்..

"இடிக்கிறதுக்கென்றே பஸ்ஸில் ஏறிவிட்டு.. விளக்கம் வேற.. சரியான இடிமன்னன்.."

"ஹலோ என் பெயர் நந்தகுமாரன்.."

"நான் கேட்டேனா..?"

"இல்லை.. என் பெயரை 'இடிமன்னன்' என்கிறீர்களே.. அதனால் விளக்கம் சொன்னேன்.."

முறைத்துப் பார்த்தவளின் பேரழகு அவனைத் திணற அடித்தது.. பார்த்த முதல் நொடியில் அவள் மீது மோகம் வர அவளுக்கோ அவன் மீது கோபம் வருகிறது.. அடுத்த ஸ்டாப்பில் இறங்கிய அந்தப் பெண் விறுவிறுவென நடக்க இவனும் அவனது அலுவலகத்திற்கான நிறுத்தம் அது என்பதால் இறங்கி அந்தப் பெண்ணைத் தொடர்ந்து நடந்தான்.. சற்று தூரம் நடந்த அந்தப் பெண் நின்று முறைத்தாள்..

"மிஸ்டர்.. ஏன் என் பின்னாலேயே வருகிறீர்கள்..?"

"இது என்னங்க வம்பாப் போச்சு.. நான் ஒன்றும் உங்கள் பின்னால் வரலைங்க.. நீங்கதான் என் முன்னால் நடக்கிறீர்கள்.."

"ஏங்க தனியாப் போகிற பெண்கிட்ட வம்பா பண்றீங்க..?"

"தனியாப் போறீங்களா..? என்னவோ ஒற்றையடிப் பாதையில் நீங்க ஒரு ஆள் மட்டும் ஒற்றையாய் போவது போல் பேசுகிறீர்களே.. பாருங்கள் உங்களைச் சுற்றி ஜனக்கூட்டத்தை.. தனியாகவா போகிறீர்கள்.."

அவள் வாயடைத்து நின்றது இன்றும் மனத்திரையில் நின்றது.. அதன் பின்னர் அவளைத் தாண்டி அவன் நடக்க அவன் பின்னாலேயே அவள் வந்தாள்.. இப்போது கேள்வி கேட்பது அவன் முறையாயிற்றே.. விட்டுக் கொடுத்தால் அவன் எப்படி துரைசிங்கத்தின் மகன் ஆவான்..?

"என்ன மேடம் என்னைச் சொல்லிட்டு என் பின்னால் நீங்கள் வருகிறீர்கள்..?" அவள் முகம் சிவந்து விட்டதை ரசனையாய் நோக்கினான் அவன்..

"நான் ஒன்றும் உங்கள் பின்னால் வரவில்லை.. என் ஆபிசிற்குப் போகிறேன்.. வழியை விடுங்கள்.."

"நான் என்ன பிடித்தா வைத்துக் கொண்டு இருக்கிறேன்.. எது உங்கள் ஆபிஸ்..?"

"இன்கம்டாக்ஸ் ஆபிஸ்.."

"அதுதானே பார்த்தேன்.. ஏன் மேடம் எப்போதிருந்து அது உங்கள் ஆபிஸ் ஆனது..?"

"இப்போதுதான் ஜாயின் பண்ணப் போகிறேன்.."

"ஓகே.. நியூ ஜாயினா..? இன்னும் ஜாயின் பண்ணுவ தற்குள்ளேயே அது உங்கள் ஆபிஸ்ன்னு உரிமை கொண்டாடுகிறீர்களே.. அதில் எட்டு வருடம் வேலை பார்த்து ஆபிசர் ஆகியிருக்கேனே நான் உங்களை விட எத்தனை மடங்கு உரிமை கொண்டாடனும்..?..ம்.."

அவள் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய் தெரிந்தது.. தயங்கிக் கொண்டே அவள் பின் தொடர அவளைக் கடைக் கண்ணால் பார்த்தபடி அலுவலகம் சென்ற நாள் இன்னும் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது..

அன்று அவள் அலுவலகத்தில் சேர்ந்ததும் அதன் பின்னர் அவள் பெயர் 'மைதிலி' என்பதை அறிந்ததும் நேற்றுப் போல் இருக்கிறது..

அதன் பின்னர் ஆறு மாதங்கள் கழித்து ஒரு நாள் அவன் அலுவலகத்தில் நுழைந்து கொண்டிருந்தபோது மைதிலி அவளது பிரிவு ஹெட் கிளார்க் முன்னால் கையைப் பிசைந்து கொண்டு நிற்பதைக் கண்டான்.. என்னவென்று அறிய நின்று பார்த்தபோது ஹெட்கிறார்க் மைதிலியைப் பார்த்து,

"ஏம்மா லேட்டுன்னா.. லேட்டாயிருச்சுன்னு சொல்றே.. இதுதான்பதில் சொல்கிற விதமா..?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்..

மைதிலி தர்ம சங்கடத்துடன், "பஸ்ஸை விட்டு விட்டேன் சார்.." என்றாள்..

"அதெப்படி விடலாம்.. கரெக்ட் டயத்துக்கு ஸ்டாப்புக்கு வந்திருந்தால் பஸ்ஸை மிஸ் பண்ணியிருப் பீங்களா..?

பொறுப்பில்லைன்னு சொல்லுங்க.."

ஹெட் கிளார்க் சந்தர்ப்பம் கிடைத்தது என்று தாளிக்க மைதிலி தவித்தாள்.. அவளின் மை விழியின் தவிப்பைக் கண்ட நந்தகுமாரன் இளகிப் போனான்..

"ஹலோ ஹெட் கிளார்க் சார்.. அவங்க தினமும் உங்களுக்கு பத்து நிமிடம் முன்னதாகவே ஆபிஸ் வந்தருவாங்க.. என்னைக்காவது நீங்கள் ஏன் என்னை விட பத்து நிமிஷம் லேட்டா வர்றீங்கன்னு கேட்டிருப்பாங்களா..? இல்லை நீங்கதான் தினமும் பத்து நிமிசம் முன்னாடி அவங்க வருவதற்கு பாராட்டு விழா எடுத்திருக்கீங்களா..? ஒரு நாள் லேட்டானா உடனே மாட்டிக்கிட்டாங்கன்னு பிடிச்சு வாட்டணுமா..? இதோ டேவிட்டும்தான் தினமும் லேட்டா வர்றான்.. அவனை ஒரு நாளாவது கேட்டிருக்கீங்களா..? லேடிஸ்ன்னாத்தான் மிரட்டு வீங்களா..?" என்று கேட் ஹெட்கிளார்க் பாக்கு வெட்டியில் மாட்டியது போலானார்..

டேவிட் முரடன்.. கோபம் வந்தால் எக்குத்தப்பாய் பேசி விடுவான்.. அவனிடம் மாட்டிவிடவும் அரண்டு போனவர் சமாளிக்க முயன்றவராய்,

"ஹா..! ஹா..! நம்ம ஆபிசர் சாருக்கு எல்லாமே தமாஷ்தான்.." என்றபடி முன்னாலிருந்த கம்ப்யூட்டரின் திரையை உற்றுப் பார்க்கலானார்..

மைதிலி நன்றிப் பார்வையுடன் நகர்ந்து செல்ல கிளார்க், ஆபிசர் என்ற பேதமின்றி நட்புடன் பழகும் நந்தகுமாரனிடம்,

"ம்ம்.. பெண்ணென்றால் பேயும் இரங்குமாம்.. நீங்களோ மகா மனிதர்.. இரக்கப்படுங்க பரவாயில்லை.. அதுக்காக உங்க கரிசனையைக் காட்ட என்னைப் போட்டுக் கொடுக்கணுமா..?" என்று வினவி சிரித்தான் டேவிட்..

"போட்டுக் கொடுத்ததினால் என்ன ஆகிவிட்டது..? ஹெட்கிளார்க் ஏதாவது கண்டிப்பாரா.." என்று நந்தகுமாரன் கேட்க,

"என்கிட்டே பேசினால் என்ன ஆகும்ன்னு தெரியும்.. என்கிட்டயெல்லாம் வைத்துக்க மாட்டார்.." என்று கூறினான் டேவிட்..

"அதனால்தான் உன்னைச் சொன்னேன்.." என்றான் நந்தகுமாரன்..

அதே நேரம் மைதிலியின் தோழி பாத்திமா,

"நல்ல வேளைடி மைதிலி.. ஆபிசர் தலையிட்டார்.. தப்பிச்சே.. இல்லைன்னா இன்னும் அரை மணி நேரம் திட்டு வாங்கியிருப்பே.." என்று கூற மைதிலி லேசாக விழிகளை உயர்த்திப் போய்க் கொண்டிருந்த நந்தகுமாரனைப் பார்த்தாள்.. அதே நேரம் யதேச்சையாக அவனும் திரும்பிப் பார்க்க துணுக்குற்ற மைதிலி அன்று நடுக்கத்துடன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டதை இன்று நினைத்தாலும் சிலிர்த்துப் போகும் நந்தகுமாரனுக்கு..

மழை எங்கோ பெய்யும்.. ஆனால் மண் வாசம் அதை உணர்த்தும், காதல் இருவருக்குள்ளும் ஒளிந்திருந்ததை அவர்கள் இருவரும் உணரும் நாள் ஒன்றும் வந்தது.

# 3

அன்று மைதிலியைப் பெண் பார்க்க வந்திருந்தார்கள்.. பூவாசம் கூடத்தை நிரப்பியிருந்தது.. விரிக்கப்பட்டிருந்த புது ஜமுக்காளத்தில் பெண்கள் அமர்ந்திருக்க போடப் பட்டிருந்த நாற்காலிகளில் ஆண்கள் வீற்றிருந்தனர்.. நடுவில் பரப்பப்பட்டிருந்த தட்டுக்களில் பழங்களும், பூவும் இருந்தன.. சளசளவென்று பேசிக் கொண்டிருந்தவர்களிடம் டிபன் தட்டுக்களைக் கொடுத்துக் கொண்டு வந்தாள் விசாலாட்சி.. பின்னாலேயே காபித் தட்டைக் கொண்டு வந்து அனைவருக்கும் காபி கொடுத்துக் கொண்டு வந்தாள் தனலட்சுமி.

வந்திருந்தவர்களில் ஒருவர்,

"நேரமாச்சுங்க.. பெண்ணைப் பார்த்து விடலாமே.." என்றார்..

"பொண்ணுப் பார்க்கத்தானே வந்திருக்கீங்க.. பொண்ணைக் கண்ணில் காட்டாமலா போய்விடுவோம்.."

என்று வைத்தீஸ்வரன் வாயைத் திறக்க விசாலாட்சி பயத்துடன் மகன் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து ஜாடை காட்டினாள்.. புரிந்து கொண்ட மகன் தகப்பனைப் பார்த்து, 'அமைதியாய் இருக்கும்படி ஜாடை காட்ட அவர் உஷ்ணமாய் மகனை முறைத்தார்.. அதைவிட உஷணமாய் மகன் திரும்பி முறைக்க அங்கே விழிப் போர் நடந்து கொண்டிருந்தது... உள்ளேயே விசாலாட்சிக்கும், மைதிலிக்கும் வார்த்தைப் போர் நடந்து கொண்டிருந்தது..

"அம்மா..! இந்தப் பெண் பார்க்கும் படலமே எனக்குப் பிடிக்கலைம்மா.. ஏன் என்னை அவமானப்படுத்தறீங்க..? இந்த இடத்தில்தான் எனக்குக் கல்யாணம் முடியப் போகுதுன்னு என்ன நிச்சயம்...? அதை நிச்சயம் பண்ணாம யாரோ ஒருத்தர் முன்னாடி போஸ் கொடுத்து உட்கார்ந்திருக்கிறது எனக்குப் பிடிக்கலைம்மா.."

"பிடிவாதம் பிடிக்காதே மைதிலி.. உன் அப்பா கிட்டயும் அண்ணன் கிட்டயும் நான் படும் பாடு போதும்.. நீயும் என்னைப் படுத்தாதே.." என்று மகளின் வாயை அடைக்க விசாலாட்சி கூறிய வார்த்தைகள் தனலட்சுமியின் கோபத்தைக் கிளறின..

"மாமாவைச் சொல்லுங்க.. மைதிலியோட அண்ணனை ஏன் தேவையில்லாமல் வம்புக்கு இழுக்கறீங்க.."

"தப்புத்தாம்மா.. அவன் என் பிள்ளைன்னு நினைச்சுச் சொல்லிட்டேன்.. உன் புருசன்கிறதை மறந்துட்டேன்.." என்று குத்தலாய் விசாலாட்சி மொழியவும் தனலட்சுமி முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினாள்..

மருமகள் வெளியேறியதும் மகளின் தாடையைப் பிடித்துக் கெஞ்சிய விசாலாட்சி, கூறினாள்..

"வந்திருக்கிறது நல்ல இடம் மைதிலி.. உன் அழகுக்கும், வேலைக்கும் இந்த இடம் கட்டாயம் அமையும்.. நீ வேணா பாரேன்.."

பார்த்திருக்கிறாள்.. இதற்கு முன் மூன்று பெண் பார்க்கும் படலங்களை மைதிலி பார்த்திருக்கிறாள்.. மைதிலியின் அழகிலும், மத்திய அரசு வேலையிலும் மயங்குபவர்கள்

அடுத்துப் பேசும் பேரங்கள் படியாமல் அவையெல்லாம் முறிந்து போயிருக்கின்றன..

அன்னையின் கண்ணீருக்குக் கட்டுப்பட்டு எழுந்தவள் முன்னறைக்கு வந்து காட்சி கொடுத்தாள்..

வழக்கம்போல் மைதிலியைப் பார்த்ததும் பிடித்து விட்டது.. மாப்பிள்ளை வீட்டாருக்கு அதன் பின்னால் நடந்த பேச்சு வார்த்தை பிடிக்காமல் போனது.

"மாப்பிள்ளை பேங்கில் உத்தியோகம் பார்க்கிறார்.. கைநிறைய சம்பாதிக்கிறார்.."

"எங்க பெண்ணும் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் வேலை பார்க்குது.. அதுக்கும் கை இருக்குது.. அது நிறைய அதுவும் சம்பளம் வாங்குது.."

இடக்கு பேசுவதில் கைதேர்ந்த வைத்தீஸ்வரன் பதிலளிக்க மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. பொதுவாக ஒருவர் கூறினார்..

"இல்லைன்னு யாருங்க சொன்னது..? ஆனால் கல்யாணம்ன்னு வந்தால் பெண்ணுக்கு நகை நட்டு போட்டுத்தானே ஆகணும்.."

"ஏங்க சம்பாதிக்கிற பெண்ணுக்கு நகை நட்டு எப்படிங்க போட முடியும்.." என்று வைத்தீஸ்வரன் பதில் கொடுத்தார்.. விசாலாட்சி மகனைப் பார்க்க அவன் மௌனம் சாதித்தான்..

"அது சரி நகை நட்டுக்கே வழியில்லைன்னா.. அதுக்கப்புறம் கல்யாணச் செலவு.. மாப்பிள்ளைக்கு பைக்.. வைர மோதிரம்.. வெள்ளிப் பாத்திரம்.. கையில் ரொக்கம்.. இதுக்கெல்லாம் என்ன செய்வீங்க..? யோவ் தரகரே..! நல்ல இடத்தில் பெண் காட்டுன்னா இங்கே கூட்டி வந்தாயே.."

சபை கலைய மைதிலி 'இது போதுமா' என்பது போல் விசாலாட்சியைப் பார்த்தாள்.. விசாலாட்சி மகனிடம் பாய்ந்தாள்..

"கிருஷ்ணா.. நீயும் உன் அப்பாவும் என்னதாண்டா மனசில் நினைச்சிருக்கீங்க..?"

"அம்மா.. என் மேல் கோபப்பட்டால் எப்படி..? சாவித்திரி கல்யாணத்தில் வாரி விட்டதற்கு வாங்கிய கடனுக்கு வட்டி கட்டியே இத்தனை நாள் ஓய்ந்து போய் நின்னுக்கிட்டு இருக்கேன்.. புதுசா ஒரு சுமைன்னா என்னால் சுமக்க முடியுமா..?"

அவன் கேள்வியில் நியாயம் புரிய விசாலாட்சி கையைப் பிசைந்தாள்.. மைதிலிக்கு தாயைப் பார்க்க பாவமாக இருந்தது..

"அம்மா.. நான் என்ன கூனா..? குருடா..? முடமா..? கைநிறைய சம்பாதிக்கிறேன் இல்ல.. நான் சம்பாதித்து சேர்த்து வைக்கிறேன்.. இரண்டு மூன்று வருடம் போகட்டும்.. அதற்குப் பின்னர் நான் சேர்த்து வைத்த காசை வேட்டு விட்டு கல்யாணம் நடத்துங்கள்.. இப்போது என் கல்யாணப் பேச்சு வேண்டாம்.."

மைதிலியின் முடிவிற்கு எதிராய்.. ஏன் அந்த வீட்டில் தன்னைத் தவிர யார் முடிவு எடுத்தாலும் அதற்கு எதிராய் வாதம் செய்யும் வைத்தீஸ்வரனே அன்று பேசாமல் இருக்க.. மைதிலி ஒரு வழியாய் பெண் பார்க்கும் படலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்..

அந்த நாளின் கசப்பு மறுநாளும் இருக்க வேலையில் மைதிலி தவறு செய்தாள்.. அவளைக் கண்டிக்க காலம் பார்த்துக் காத்திருந்த ஹெட் கிளார்க்கிடம் மாட்டினாள்..

உணவு இடைவேளையில் ஹெட்கிளார்க்..

"மைதிலி இங்கே வாம்மா.." என்று கூப்பிட்டார்..

"என்ன சார்.." என்றபடி அருகே சென்றவளின் முகத்தில் படுவது போல் ஒரு ஃபைலை தூக்கி வீசி எறிந்தாள்..

விக்கித்துப் போனாள் மைதிலி..

"என்ன சார்.. இப்படிச் செய்கிறீர்கள்..?"

"மன்த்லி ஸ்டேட்மெண்ட் பிரிப்பேர் பண்ணியிருக்கிற லட்சணமாம்மா இது..? தலையும் இல்லாமல், வாலும் இல்லாமல்.. இப்படியே ஹெட் ஆபிசுக்கு அனுப்பி வைத்தால் எனக்கு இல்ல மெமோ கொடுப்பார்கள்.." என்று கத்தினார்..

அவசரமாய் கம்ப்யூட்டரை உயிர்ப்பித்து திரையைப் பார்த்தாள் மைதிலி... அவள் தயாரித்திருந்த ஸ்டேட்மென்டின் முதல் வாரக் கணக்கும், கடைசி வாரக் கணக்கும் அழிக்கப்பட்டிருந்தன.. அதிர்ந்து போனவள்..

"ஐயோ..! யாரோ டெலிட் பண்ணியிருக்காங்க சார்.." என்றாள்..

"நான் டெலிட் பண்ணிட்டேன் என்கிறாயா..?"

"சார் நான் உங்களைச் சொல்லவில்லை.. நான் இந்த மாதம் பூராவும் கம்ப்யூட்டரில் கணக்கை ஏற்றி விட்டேன்.. எப்படி டெலிட் ஆனதுன்னு தெரியலை.."

"ஏதாவது பூதம் வந்து அழிச்சிருச்சா..? என்ன கதைம்மா சொல்றே..?"

"சார்.." என்று பல்லைக் கடித்த மைதிலி தன்னை நிலைப்படுத்திக் கொண்டாள்..

"நான் இப்போ என்ன செய்யணும் சார்..?"

"சாயந்திரம் இந்த ஸ்டேட்மென்ட் ஹெச்.ஓ.விற்குப் போக வேண்டும்.. ரெடி பண்ணுங்க.."

"சாயங்காலத்திற்குள்ளா..?" மைதிலி ஸ்தம்பித்து நிற்க அவர் தன் அதிகாரம் நிலை நாட்டப்பட்ட திருப்தியுடன் எழுந்து போய் விட்டார்..

எப்படி முடியும்..? மாதம் பூராவும் கம்ப்யூட்டரில் ஏற்றிய கணக்கை ஏற்றி முடிக்கவே நான்கு நாள்கள் ஆகும்.. இதில் டேலி பண்ணி.. எப்படி முடியும்..? மதிய உணவுக்கு கேண்டின் போக தன் அறையை விட்டு வெளியே வந்த நந்தகுமாரன் மைதிலி மட்டும் தனியே கம்ப்யூட்டரில் வேலை செய்து கொண்டிருப்பதைப் பார்த்து அருகில் வந்தான்..

"என்னங்க சாப்பிடப் போகவில்லையா..?"

'இல்லை' யென்பதாய் தலை ஆட்டினாள் மைதிலி.. 'ஏன்..?' என்பதாய் அவன் முகத்தில் கேள்வி தோன்ற கம்ப்யூட்டர் திரையைக் காட்டினாள்..

"மன்த்லி ஸ்டேட்மென்டைப் பாருங்க.."

"முதல் வாரமும், கடைசி வாரமும் போஸ்டிங்க போடலையா..? அந்த டேட் என்ட்ரி இல்லாம இருக்கே.."

"நான் போஸ்டிங் போட்டு விட்டேன்.. ஸ்டேட்மென்ட் டேலி பண்ணியும் விட்டேன்.. ஆனால் ஹெட் கிளார்க் பார்க்கும்போது இது டெலிட் ஆகி இருக்கு.."

"யார் செய்த வேலையா இருக்கும்..? ம்.. உங்கள் பாஸ் வெர்டு வேற யாருக்கும் தெரியுமா..?"

"தெரியாது.. ஆனால் ஹெட்கிளார்க்கின் பாஸ்வெர்டு எல்லோருக்கும் தெரியும்.."

"அப்போ அதில் போயிருப்பாங்க.."

"இப்போ ஈவினிங்குக்குள் நான் இந்த ஸ்டேட் மெண்டை முடிக்க வேண்டும்.. நான்கு நாள்கள் பிடிக்கும் வேலையை.. ஈவினிங்குக்குள்.. நான் எப்படி..?"

பேச முடியாமல் தொண்டை கட்டிற்று மைதிலிக்கு.. இமையோரம் விளிம்பு கட்டியிருந்த தண்ணீர் 'இப்போது விழவா, பிறகு விழவா' என்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து.. தன் முகத்தை அவன் பார்ப்பதை உணர்ந்த மைதிலி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

'அடுத்தது காட்டும் பளிங்கு போல்..' இவளது முகம் என்று எண்ணிக் கொண்டான் நந்தகுமாரன்.. அவனது பசியை விட அவளது மனநிம்மதி ஒன்று மட்டுமே இப்போது பிரதானமாகத் தோன்ற,

"இவ்வளவுதானே.. ஒருவர் வேலை செய்தால்தான் நாள் கணக்கில் வேலை இழுக்கும்.. அதையே இருவர் செய்தால் மணிக்கணக்குத்தான்.. இதுக்கா இவ்வளவு வருத்தம்..?" என்றவன் அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்து அந்தக் கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தான்..

"சார்.. நீங்கள்.. சாப்பிடப் போனீர்களே சார்.."

"சாப்பாடு எப்போது வேண்டுமானாலும் கிடைக்கும்.. கம்ப்யூட்டர் சீட்டில் ஆள் இல்லாதபோதுதான் கிடைக்கும்.. டேவிட் வீட்டுக்குச் சாப்பிடப் போயிருக்கிறான்.. வர எப்படியும் இரண்டு மணி நேரம் ஆகும்.. அதற்குள் வேலை முடித்து விடலாம்.. முதல் வார வவுச்சரை நீங்க ஏற்றுங்கள்..

கடைசி வாரத்தை என்னிடம் கொடுங்கள்.. க்விக்.." என்றவன் வேலையில் மூழ்க.. அவள் பிரமிப்புடன் அதி வேகமாய் செயல்பட.. ஆச்சரியமாய் டேவிட் வருவதற்குள் ஸ்டேட்மென்ட் தயாராகி விட்டது..

"இவ்வளவுதான்.. டோட்டல் டேலியாயிருச்சு.. போய் பூதத்தோட பிரண்ட் கிட்ட கொடுங்க.."

"பூதமா யார் அது..?"

"பாடுபட்டு செய்த வேலையை அழிப்பவன் மனிதனா..? பேய், பிசாசு, பூதம் தானே.. உங்க பாஸ்வெர்டில் உள்ளே நுழைய முடியாது.. ஹெட் கிளார்க் பாஸ்வெர்டில் தானே நுழைய முடியும்..? அப்போ அந்த வேலையைச் செஞ்ச பூதம் அவரோட பிரண்டு தானே..?"

மைதிலி சிரித்தாள்.. அவள் முகம் மலர்ந்திருந்தது..

"அப்பாடா ஒரு வழியாய் சிரிச்சீங்க.. பிரச்னை வந்து விட்டால் அதனுடன் மோதிப் பார்க்கணும்ங்க.. அதுதான் திரில்.. அழுதுகிட்டு உட்காரலாமா..?"

பெரிய மீசையுடன் கரிய நிறத்துடன் ஆஜானுபாகு வாய் அமர்ந்தவாறு அவன் கேட்ட விதம் கம்பீரமாய் இருந்தது.. எதிர்த்து நிற்கும் வலிமையுடைய ஆண் மகன் அவன் என்பதை அவனது தோரணை காட்டியது..

பிறந்ததில் இருந்து தெருவில் ஒரு சிறு சத்தம் வந்தால் கூடக் கதவை அடைத்துக் கொள்ளும் சுபாவம் உடைய குடும்பத்தில் பிறந்தவளுக்கு அவனது அஞ்சாமை ஆச்சரியத்தைக் கொடுத்தது..

இப்போது யோசித்துப் பார்கையில் அந்த முரட்டுத் தனமும், தைரியமும்தான் தன்னை அவனிடம் ஈர்த்துது என்று மைதிலிக்குப் புரிந்தது..

"போச்சா.. கணக்கெல்லாம் தப்பாப் போச்சு.. கவனமிருக்கணும்... அதுதான் உனக்கு சுட்டுப் போட்டாலும் வராதே.."

அப்பா இந்தச் சூழ்நிலையில் இருந்திருந்தால் இதைத் தான் கூறியிருப்பார்..

"ஆபிஸில் அனுசரித்துப் போகத் தெரியணும் மைதிலி.. இப்பப்பார்.. யாருன்னு முகம் தெரியாத எதிரி ஒருவரை உருவாக்கிக்கிட்டு இருக்கே.. இனி பயந்து பயந்துதான் நீ வேலை செய்யணும்.."

அண்ணா இதை அறிந்தால் இப்படித்தான் பேசியிருப்பான்..

யாருமே நந்தகுமாரனைப் போல் 'எதிர்த்து நில்' என்று கூறி - இருக்க மாட்டார்கள்.. கம்ப்யூட்டரின் கீ போர்டில் லாவகமாய் செயல்படும் அவனது வலிமை மிகுந்த விரல்களைப் பார்த்தவள் அவன் முகத்தைப் பார்க்கத் துடித்த மனதை அடக்கிக் கொண்டாள்.. அந்த நேரம்,

"இந்த ஸ்டேட்மெண்ட் பிரிண்ட்டைக் கிழித்தது யார்..?" என்று தவறான ஸ்டேட்மென்டின் கிழிபட்ட பேப்பரைக் காட்டி நந்தகுமாரன் பழைய நினைவில் துக்கம் தொண்டையை அடைக்க,

"ஹெட்கிளார்க் கிழிச்சார்.. சும்மா கிழிக்கவில்லை.. அதைக் கிழித்து என் முகத்தில் மோதாத குறையாக என் மீது வீசினார்.." என்றாள்..

நந்தகுமாரன் கோபத்தில் பல்லைக் கடித்தான்.. 'குடும்பவன்முறையைத் தடுக்க சட்டம் வந்து விட்டது.. அலுவலக வன்முறையை தடுக்கவும் சட்டம் உள்ளது.. எந்தச் சட்டம் எங்கே கொண்டு வந்தாலும்.. பெண்ணே..! உன் கதி இதுதானா..? எங்கும் மரியாதை இல்லாமல் நீ கடைநிலை ஆளாகவே இருக்க வேண்டுமா..?' அவள் முகம் வாடி விட்டதைப் பொறுக்காதவன்,

"ஹெட்கிளார்க் வேலையே செய்வதில்லைன்னு ஆபிசில் ஒரு பேச்சு இருக்கு.. இனிமேல் அவரை யாரும் அப்படிச் சொல்ல முடியாது.. ஏன் சொல்லுங்க..?" என்றான்.. மைதிலி விழித்தாள்.. "ஏன் சார்..?"

"அவர்தான் வேலை செய்து கிழித்து விட்டாரே.. அதுவும் மன்த்லி ஸ்டேட்மென்டைக் கிழித்து நிரூபித்து விட்டாரே.."

மைதிலி பொங்கிச் சிரித்தாள்.. சுழித்தோடும் காவிரியாய் பொங்கிச் சிரிக்கும் அவளது சிரிப்பு.. காவிரி நீர் கண்டு வாடிய பயிர்கள், செழித்து நிமிர்ந்ததைப் போல் நந்தகுமாரனின் மனமும் நிறைந்தது.

அவளது முகவாட்டம் ஏன் அவனை இந்த அளவு பாதிக்கிறது..? என்று மனம் கேட்ட கேள்வியுடன நிமிர்ந்தவன் டேவிட் அவர்கள் இருவரையும் பார்த்தபடி வருவதைக் கண்டு எழுந்தான்.. டேவிட்டின் கண்களிலும் கேள்வி இருந்தது..

# 4

தன் மனதிற்குள் தோன்றும் ரசாயன மாற்றங்களை உணர்ந்து இருந்தும் மௌனம் காத்தாள் மைதிலி..

அவள் வளர்ந்த விதம் அப்படி. மனதில் நினைப்பதை செயலாற்ற என்றுமே முடியாது என்பதை அறிந்தவள் அவள்.. அவன் வேறு இனம்.. வேறு பழக்க வழக்கங்கள் கொண்டவன்.. இனம் மாறித் திருமணம் செய்வது என்பது அவளது இல்லத்தில் பேசக்கூடாத ஒன்று.

கையில் திருமணம் செய்து வைக்கப் பணம் இல்லாவிட்டால் காலம் பூராவும் பெண் கன்னியாக இருந்தாலும் பரவாயில்லை.. வேற்று இன மாப்பிள்ளையை நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார் வைத்தீஸ்வரன்..

விசாலாட்சியோ மகள் ஒரு சொல் தேடித் தந்து விட்டால் நெஞ்சு துடிதுடித்துப் போய் விடுவாள்.. தங்கள் சமூகத்தின் அனைத்துப் பழக்க வழக்கங்களையும் ஏற்று வாழ்நாள் பூராவும் சம்பாதிக்கும் பணத்தைக் கப்பம் கட்ட அவள் தயார்.. ஆனால் மகள் காதல் திருமணம் செய்து கொள்வதை ஏற்றுக் கொள்ள என்றுமே அவள் தயாரில்லை..

கிருஷ்ணமூர்த்தி கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டில் ஊறியவன்.. 'கையில் பணம் இல்லையா.. கல்யாணத்தைத் தள்ளிப்போடு' என்று கூறினாலும் கூறுவானேயொழிய.. படித்து வேலைக்குச் செல்லும் அவன் கூட இனம் மாறித் திருமணம் செய்வதை வரவேற்க மாட்டான்.. வீட்டுக்கு அடங்கி பெற்றோர் பார்த்து வைத்த பெண்ணை மணம்

செய்து கொண்டவன்.. அவனது சிவந்த நிறத்திற்கும் அழகிய தோற்றத்திற்கும் அக்கம், பக்கத்திலும் அவன் பணிபுரிந்த அலுவலகத்திலும் அவனுக்கு ரசிகை கூட்டமே உண்டு.. நிமிர்ந்து பார்த்து அறியாதவன்..

இந்த 'பூ விலங்கை' எப்படி மைதிலியால் உடைக்க முடியும்..? தன் குடும்பத்தை மீறி அறியாதவள் அவள்.. பூவாசத்தை அடக்க முடியுமா..? அது போல் அவள் மனதில் அவள் பொத்தி வைத்திருந்த காதல் மலர்ந்து மணம் பரப்பா விட்டாலும் அதன் வாசனையை அவளை நித்தம் நுகர வைத்தது..

தினமும் உடை உடுத்தும்போது இந்த நிறம் அவனுக்குப் பிடிக்குமா..? என்ற நினைவு வருவதை தடுக்க முடியவில்லை.. அறியாப் பெண் போல் வேலை செய்தாலும் அவன் அலுவலகம் நுழையும் நேரம் பார்த்து வாசல் நோக்கித் தாவும் விழிகளை அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை. அதே போல் அவள் விழிகளைப் பார்த்த படி அவன் வரும்போது பார்வையைத் தழைத்துக் கொண்டு அவன் முகம் திருப்பி நடக்கும்போது அவனை விழியால் தொடர்வதைத் தவிர்க்க முடிவதில்லை.. சொல்லி வைத்தாற் போல் தன் அறைக் கதவைத் திறந்து உள்ளே போகும் அந்தக் கடைசி வினாடியில் சட்டென அவள் பார்வையை சந்தித்து விடுவான் நந்தகுமாரன்.. மாட்டிக் கொண்டு அவள் தவிக்கும்போது அவன் முகத்தில் இளநகை அரும்ப அறையுள் மறைந்து விடுவான்..

'இது போதும்' என்ற இதமான உணர்வுடன் அவள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கும்போது 'காதல்' அவள் மனக் கதவை நேரடியாய் தட்டும் நேரம் வந்தது..

அன்று கோவிலைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தாள் மைதிலி..

"சாமி கும்பிட வந்தீங்களா..?" என்ற குரல் கேட்ட நிமிர்ந்து பார்த்தாள்.. எதிரே அவள் உள்ளம் கவர்ந்த கள்வனான நந்தகுமாரன் நின்றிருந்தான்.. அவள் மனம் துள்ளியது.. சிறகடித்த உணர்வுகள் கட்டவிழ்க்க அவனோடு அலுவலகத்தில் பேசத் துடிக்கும் நாவைக் கட்டிப்

போட்டிருந்தவள், இன்று கட்டவிழ்த்தாள்.. அவள் நாவு சந்தோஷமாய் சதிராடியது..

"கடைசியில் நீங்களும் அந்த ஜாதிதானா..?" என்றாள் மைதிலி மர்மப் புன்னகை ஒன்றை வீசியபடி.. அவள் எதிர்பார்த்தபடி நந்தகுமாரனின் முகம் மாறியது..

"ஹலோ.. நான் கருப்புச் சட்டைக்காரன்.. ஜாதி மதமெல்லாம் என்னிடம் பேசக்கூடாது.." என்றான் கோபமாக..

"ம்ம்.. எவ்வளவு கோபம் வருகிறது ஆபிசர் சாருக்கு.. சார்.. நான் மனித ஜாதிகளைச் சொல்லவில்லை.. சில பேரின் பழக்கங்களைக் குறிப்பிட்டு 'நீ அந்த வகையா' என்பார்களே அது போல் கேட்டேன்.."

"ஓகோ.." என்றவனின் முகத்தில் புன்னகை அரும்பியது.. அவனது கோபத்தை ரசிக்க வேண்டுமென்றே 'ஜாதி' என்ற வார்த்தையைக் குறிப்பிட்டு இருக்கிறாள்.. என்றுமே 'பேசா மடந்தை' இன்று பேச நந்தகுமாரன் அதை இன்னும் அதிகப்படுத்த பேச்சை வளர்த்தான்..

"அது என்ன பழக்க, வழக்க ஜாதி..?"

"ம்ம்.. சினிமா தியேட்டரில் பார்ப்பார்கள்.. அபத்தமா 'சினிமா பார்க்க வந்தீங்களா..?'ன்னு கேட்பாங்க.. லைப்ரரியில் பார்ப்பார்கள்.. அதே போல 'படிக்க வந்தீங்களா'ன்னு கேட்பாங்க.. அப்புறம்.."

"போதும் போதும்.. அதேபோல் நானும் கோவிலுக்கு வந்த உங்களிடம் சாமி கும்பிட வந்தீங்களா'ன்னு கேட்டு விட்டேன்.. அப்படித்தானே.."

துளைக்கும் அவன் பார்வையை எதிர்கொள்ள மாட்டாதவளாய் சிரம் தாழ்த்திக் கொண்டவளின் செய்கை கண்டு ஆண்மையின் கம்பீரம் கொண்டவன் ஆர்வமாய் அவளைப் பார்த்தபடி,

"ஏங்க.. கோவிலுக்கு வந்தவங்ககிட்ட பேச்சை ஆரம்பிக்கணும்னா 'சாமி கும்பிட வந்தீங்களா'ன்னுதான் கேட்கணும்.. சினிமா தியேட்டரில் அப்படிக் கேட்டால்தான் தப்பு.. லைப்ரரிக்கு வந்தவங்க கிட்ட பேசணுமின்னா..

'சினிமா பார்க்க வந்தீங்களா'ன்னா கேட்க முடியும்..? 'படிக்க வந்தீங்களா'ன்னு தானே கேட்க முடியும்..?" அவன் முகத்தில் மடக்கிய புன்னகை அரும்ப விழிகள்.. 'இதற்கு என்ன சொல்லப் போகிறாய்..?' என்று கேட்டான்.

"அது சரி சார்.. உங்களிடம் பேசி ஜெயிக்க முடியுமா..?"

"பேசாமலே என்னை ஜெயித்து விட்டீர்களே.."

"என்ன..?" என்று மைதிலி அதிர்ந்து போய் பார்க்க,

"இல்லை.. நீங்கள் அமைதியான பெண்ணுன்னு நான் ஆபிசில் சொல்லி வைத்திருக்கிறேன்.. நீங்கள் அதை பொய்யாக்கிட்டீங்களேன்னு சொன்னேன்.."

உடைத்துப் பேச நேரம் பார்த்தவாறு பேச்சை மாற்றிப் பேசியவன்,

"உங்கள் சாமியிடம் தேவையானதை கேட்டு முடித்து விட்டீர்களா..?" என்று கேட்டான்..

"என்ன சொல்கிறீர்கள்..? எனக்குப் புரிய வில்லையே.."

"சாமி கும்பிட்டு முடித்து விட்டீர்களா என்று கேட்டேன்.."

"ம்ம்.. அப்போதே வணங்கி வந்து விட்டேன்.."

"இப்போ கோவில் வலமா..?"

"நீங்கள் என்னைக் கேலி செய்கிறீர்களா..? அதுசரி சார்.. நான் தான் கோவிலுக்கு சாமி கும்பிட வந்தேன்.. கருப்பு சட்டைக்காரர் நீங்கள் எதுக்கு வந்தீர்கள்..?"

"கோவில் சாமிக்கு மட்டும்தான் சொந்தமா..?"

"எங்களுக்கு அப்படித்தான்.."

"எனக்கு அப்படியில்லை.. நான் அர்ச்சகரைப் பார்க்க வந்தேன்.."

"அர்ச்சகரிடம் அப்படி என்ன வேலை..?"

"அதை நின்று கொண்டுதான் சொல்ல வேண்டுமா..? உட்கார்ந்து கொண்டு சொல்கிறேனே.. எனக்குக் கால் வலிக்கிறது.. கோவிலைச் சுற்றி வந்த உங்களுக்கும் கால் வலித்திருக்கும்.. அங்கே உட்காரலாம்.. வருகிறீர்களா..?" என்று சுற்றுப் பிரகாரத்தில் இருந்த மண்டபத்தைக் காட்டினான்..

பழைய சோறு கிடைக்காதவளுக்கு பாலும் சோறும் கிடைத்தால் மாட்டேன் என்று சொல்வாளா..? சில வினாடிகள் பார்ப்பதற்கே சிலிர்த்துப் போய் விடுபவள் அங்கே அமைதியான சூழ்நிலையில் அருகே உட்கார்ந்து உரையாட சந்தர்ப்பம் கிடைத்தால் மறுப்பாளா..?

நந்தகுமாரன் மண்டபத்துப் படியில் உட்கார அருகே இடைவெளிவிட்டு அமர்ந்தாள் மைதிலி.. மாலை நேரத்து காற்று மனம் வருடிச் செல்ல ஆசையுடன் கோவில் கோபுரத்தை அண்ணாந்து பார்த்தாள்.. புறாக்கள் சிறகடித்துக் கொண்டு இருந்தன.. நந்தகுமாரனும் அதை ரசித்தான்..

"எது எப்படியோ எனக்கு இந்த கோபுரத்தில் கூடு கட்டியிருக்கும் புறாக்களைப் பார்க்க மிகவும் பிடிக்கும்.."

"இது தெய்வத்தின் சந்நதி.. அமைதியான இடம்.."

"அது உங்கள் நம்பிக்கை.."

"சரி.. அர்ச்சகரை ஏன் பார்க்க வந்தீர்கள்.." பேச்சை மாற்றினாள் மைதிலி..

"அர்ச்சகர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்.. அவரின் குழந்தைக்கு ஒரு ஆபரேசன் செய்ய வேண்டியிருக்கிறது.. என்னிடம் பண உதவி கேட்டிருந்தார்.. கொடுக்க வந்தேன்.."

"வேம்பூர்தானே உங்கள் ஊர்..?"

"ஆமாம்.."

"அர்ச்சகரின் வீட்டில் போய் இதைக் கொடுத் திருக்கலாமே.."

"கிராமத்தில் அது தேவையில்லாமல் பெரிதாக பேசப்படும்.. எனக்கு அதில் விருப்பமில்லை.. உதவி செய்வதை மற்றவர் அறியாமல் செய்ய வேண்டும்.."

மைதிலி அயர்ந்து போனாள்.. ஒவ்வொரு நாளும் அறிய நேரும் அவனது புதுமுகம்.. விளம்பரமே உலகமான இந்த சமுதாயத்தில் வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்று நினைக்கும் இவன் எப்படிப்பட்ட நல்லவன்.. இவனது அறிமுகம் கிடைத்ததே பெரிய வரமல்லவா..?

"என்ன அப்படிப் பார்க்கறீங்க..?"

"எப்படி உங்களால் இப்படி இருக்க முடிகின்றது..?"

"இன்றைக்கு லீவு நாள்.. அதனால் இப்படி உட்கார்ந்து அரட்டை அடிக்க முடிகின்றது.."

"நான் இதைச் சொன்னேனா..?" என்று சிணுங்கினாள் மைதிலி..

"வேறு எதைச் சொன்னீர்கள் என்று தெரியும்.. அது பெரிய விஷயமல்ல.."

"நாத்திகம் பேசுபவரிடம் இப்படி ஒரு கருணை உள்ளமா..?"

"ஏங்க..? நாத்திகம் பேசினால் அவன் கெட்டவனா..? கடவுளைக் கும்பிடும் உங்களை விடக் கருணையில் குறைந்தவர்கள் இல்லை நாங்கள்.. நீங்கள் கோவில் உண்டியலில் போடும் பணத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கை அனாதை ஆசிரமங்களுக்குக் கொடுத்தால் எத்தனை உயிர்கள் ஜீவிக்கும்..? நாங்கள் மனிதர்களை நேசிக்கிறோம்.. உங்களைப் போல் கண்ணுக்குத் தெரியாத கடவுளை நேசிக்க வில்லை.. நாங்கள் யதார்த்தவாதி.. உங்களைப் போல் கற்பனை வாதியல்ல.." நந்தகுமாரன் நிறுத்தாமல் கோர்வையாகப் பேசினான்..

மைதிலி கோபமாய் நிமிர்ந்தாள்.. காதலன் அவள் முன்னாலிருந்து மறைந்து கடவுளை நிந்திக்கும் கருப்புச் சட்டைக் காரன் தோன்றினான்.. அவள் போருக்குத் தயாரானாள்..

# 5

மைதிலி பிறந்தது முதல் தெய்வக் கதைகளைக் கேட்டு வளர்ந்தவள்.. மகிழ்ச்சியோ, துக்கமோ அதை மனிதருக்கு சொல்வதற்கு முன் கடவுளிடம் சொல்லிப் பகிர்ந்து கொள்பவள்.. உலகம் இயங்குவது கடவுளால் என்பதை உளமார நம்புகிறவள்.. கடவுள் இல்லையென்று சொல்பவன் அவளது காதலன் என்பதை அவள் மறந்தாள்..

சொற்போருக்கு இழுக்கும் ஒரு நாத்திகன் என்பதை மட்டும் உணர்ந்தாள்.. அமைதியாய் ஆனால் தெளிவாய் பேச ஆரம்பித்தாள்..

"நன்றாகப் பேசுகிறீர்கள்.. உங்களைப் போன்றவர் களுக்குப் பேசச் சொல்லியா கொடுக்க வேண்டும்..? இது விழா மேடையாக இருந்திருந்தால் நிச்சயம் கைதட்டல் கிடைத்திருக்கும்.. நாத்திகன்தான் மனிதன் என்றால் ஆத்திகன் யார்..? மிருகமா..? நீங்கள் யதார்த்தவாதிகள் தான்.. நாங்கள் கற்பனாவாதிகள்தான்.. அன்பை, பாசத்தை, காதலை நேரில் காட்டுங்கள் பார்ப்போம்.. யதார்த்தவாதிகள் உங்களால் அதை உணரத்தானே முடியும்..? அப்போது நீங்களும் எங்களைப் போன்ற கற்பனைவாதிகள் ஆகி விடுகிறீர்கள்தானே.. தப்பிக்க முடியாத, தாங்க முடியாத துன்பங்களிலிருந்து விடுபட எளிய மக்கள் எங்கே போவார்கள்..?"

கண் முன் நடக்கும் கொடுமைகளிலிருந்து தப்பிக்க கடவுளைத்தானே நாங்கள் தஞ்சம்புக வேண்டியிருக்கிறது. கடவுள் கண்ணுக்குத் தெரியாதவர்தான்.. உங்கள் தாய் உங்களிடம் காட்டும் 'தாய்மை' என்ற பாசத்தைக் கண்ணால் பார்க்க முடியுமா..? உணரத்தானே முடியும்.. அதைப்போல் கடவுளையும் காண முடியாது.. அவரின் கருணையை உணரத்தான் முடியும்.. நாங்கள் கடவுளின் உருவப் படங்களை வணங்குகிறோம்.. நீங்கள் மனிதர்களின் உருவப் படங்களை வணங்குகிறீர்கள்.. நாங்கள் கடவுளை ஆராதிக்கிறோம்.. நீங்கள் மனிதர்களை ஆராதிக்கிறீர்கள்.. எங்களுடைய காலம் காலமாய் வரும் கடவுள் நம்பிக்கை.. உங்களுடையதுதான் மூடநம்பிக்கை.

மைதிலி முகம் ஆத்திரத்தில் சிவக்க கைகளை ஆட்டியபடி பேச சூழ்நிலையின் பேதத்தை உணர்ந்த நந்தகுமாரன் துணுக்குற்றான்.. என்ன இது..? காதல் சொல்ல அழைத்து விட்டு கருத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறானே.. தன் கொள்கைகளைப் பேச இதுவா நேரம்..? தன்னைத் தானே கடிந்து கொண்டவன், மெதுவாய் கை தட்டினான்..

"பலே, என்னைப் பேச்சாளர் என்று கூறிவிட்டு நீங்கள் தான் போட்டுத் தாக்குகிறீர்கள்.. அதுசரி.. நான் ஒன்று

கேட்கிறேன்.. தினந்தோறும் இந்தக் கடவுளுக்குத் தானே அர்ச்சனை செய்கிறார் அந்த அர்ச்சகர்.. அவரது குழந்தைக்கு மருத்துவம் செய்ய கடவுளா பணம் கொடுத்தார்..? இந்த நாத்திகன்தான் கொடுத்தான்.."

மைதிலி விட்டுக் கொடுக்கவில்லை..

"தெய்வம் மனித ரூபத்தில்தான் உதவி செய்யும்.. அவர் தினமும் கடவுளைக் கும்பிட்டு பணி செய்து கிடப்பதால்தான் உங்கள் மூலமாக இறைவன் உதவி செய்கிறார்.."

"தோடா.. கடவுள் கருப்புச் சட்டைக்காரன் உருவத்தில் வருகிறாரா..? குட் ஜோக்.."

"தெய்வத்திற்கு நாம் எல்லோரும் குழந்தைகள்தான்.. கருப்புச் சட்டைக்கார், வெள்ளைச் சட்டைக்காரர், சிவப்புச் சட்டைக்காரர் என்ற பேதமெல்லாம் கடவுள் பார்ப்பதில்லை.."

தன் போக்கில் மைதிலி பேசிக் கொண்டிருக்க நந்தகுமாரன் காதல் கடலில் நங்கூரம் இட நேரம் கிட்டி விட்டதை உணர்ந்தான்..

"அப்போ.. தெய்வத்தின் பார்வையில் நீயும், நானும் ஒன்று அப்படித்தானே.." நந்தகுமாரன் ஆழ்ந்த பார்வையுடன் கேட்டான்..

தன் வாதத்தில் கவனமாக இருந்த மைதிலி அவன் பார்வை மாறுதலையும் தன்னை ஒரு மையில் அழைத்த தையும் கவனியாமல்,

"அப்படித்தான்.." என்று கூறினாள்..

"அப்போ.. நாமிருவரும் ஒன்றாகி விட்டோமா மைதிலி.." என்று நந்தகுமாரன் குழைவாய் கேட்க அந்தக் குரலின் தன்மையை உணர்ந்த மைதிலி அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. அவன் பார்வை உணர்த்தியது என்ன..? 'அன்பே கடவுள்' என்று வாதம் செய்தாளே.. அந்த அன்பை.. காதலை அல்லவா அவன் பார்வை அள்ளித் தருகிறது.. அவள் தடுமாறினாள்..

'இறைவா இது என்ன சோதனை.. கண் நேரம் அவன் அருகிருக்க ஆசைப்பட்டுக் காதலை என் செவியில் கேட்டு விட்டேனே.. இதை எப்படி எதிர் கொள்வேன்..'

அவள் பேச்சிழந்து எழ முயல அவன் சினத்துடன் அவள் கரம் பிடித்து அமர்த்தினான்.. மைதிலி பதறினாள்..

"என்ன இது கையைப் பிடிக்கறீங்க.. யாராவது பார்த்து விட்டால்.."

"பார்த்தால் என்ன..? இது கோவில்.. உன் கடவுளிருக்கும் இடம் நான் தப்பான நோக்கத்தில் உன் கையைப் பிடித்து இழுக்கவில்லை.. எனக்கு ஒரு பதிலைச் சொல்லி விட்டுப் போ' என்று உன்னைத் தடுக்கத்தான் நிறுத்துகிறேன்.."

"என்ன பதிலைச் சொல்ல.. எதற்குப் பதிலைச் சொல்ல..?"

"ஏன் உனக்குத் தெரியாதா..? இல்லை எனக்குத்தான் உன் மனம் தெரியாதா..? எதற்கு இந்த நடிப்பு..?"

"நடிப்பா.. நானா.. என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள்.."

"என்னைச் சொல்ல வைக்கிறாய்.."

மைதிலி வேகமான மூச்சுக்களை விட்டு தன்னை அமைதிப்படுத்திக் கொண்டாள்.. அவன் முகத்தைப் பார்த்தாள்.. கோபத்தில் மீசை துடிக்க அமர்ந்திருந்தான்.. அவனது சினம் அவளுக்கு அச்சத்தைத் தந்தது.. மருண்ட பார்வையுடன்,

"இப்போ நான் என்ன பண்ணிட்டேன்னு கோபப்படறிங்க.." என்றாள்.. அவளது பணிதலில் இளகியவன் முகத்தில் வழக்கமான புன்னகை திரும்பியது.. மைதிலிக்கு 'அப்பாடா' என்றிருந்தது..

"அப்போ சொல்லு.." என்றான் அவன்..

"திடீர்ன்னு கேட்டால் எப்படி..?"

"ஏய்.. இந்தக் கதையை எல்லாம் என்கிட்ட சொல்லாதே.. நீ வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் முதல் இன்றைய நாள் வரை இந்த ஒரு வருடமாய் நாம் காதலித்துக் கொண்டிருக்கிறோம்.. இல்லைன்னு உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுடி.."

"என்னது 'டீ'யா..?" மைதிலிக்குத் தூக்கி வாரிப் போட்டது..

"ஆமாண்டி.. என் அப்பா அம்மாவை அப்படித்தான் கூப்பிடுவார்.."

மைதிலியின் அப்பாவும் அவளது அம்மாவை அப்படித்தான் கூப்பிடுவார்.. ஆனால் அவர்கள் கணவன், மனைவி ஆயிற்றே.. அவளது சிந்தனையைப் படித்தவனாய் அவன் கூறினான்..

"என்னைப் பொறுத்தவரை நீதாண்டி என் பெண்டாட்டி.."

மைதிலி மருகினாள்.. 'இது நடக்குமா..?'

"வேண்டாம்.. அவசரப் படாதீர்கள்.. இது நடக்குமா, நடக்காதா என்று தெரியாமல் ஆசையை வளர்க்க வேண்டாமே.."

"நடத்திக் காட்ட வேண்டும் மைதிலி.. மனதில் தைரியமும், எண்ணத்தில் உறுதியும் இருந்தால் நடக்காதது ஏது..?"

"இல்லை சார்.. அது வந்து.."

"என்னது சாரா..? ஏண்டி நான் உன்னை என் பெண்டாட்டின்னு சொல்கிறேன்.. நீ சார் போடுகிறாய்.. என் பெயரைச் சொல்லிக் கூப்பிடு.."

"அது எப்படி..?"

"இப்போ கூப்பிடப் போகிறாயா இல்லையா..?"

"ப்ளீஸ்.. இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே.."

"கூப்பிடுகிறாயா.. இல்லை நான் எழுந்து போகட்டுமா..?" அவன் எழ முயல அவசரமாய் அவள்,

"வேண்டாம் நந்து.." என்றாள்..

அவன் முகம் மலர அமர்ந்தான்.. அவள் முகம் பார்த்து,

"என் அம்மா என்னை நந்துன்னுதான் கூப்பிடுவாங்க.." என்றான்..

அவள் வெட்கத்துடன் கைவிரல்களால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.. அவளது கரம் பற்றி விரல் வருட அவள் பதட்டத்துடன் கையை உருவ முயல,

"ஏன்.." என்று உறுமினான்.. கையை அவன் பிடிக்குள்ளேயே விட்டவள்,

"நமக்குள் ஆயிரம் வேற்றுமைகள் அதை நினைக்காமல் பேசினால் எப்படி.." என்றாள்..

"என்ன வேற்றுமை..?"

"நம்பர் ஒன்.. நீங்க ஆபிசர் நான் கிளார்க்.."

"நான் உன் நந்து.. நீ என் பெண்டாட்டி.. நெக்ஸ்ட்.."

"நெக்ஸ்ட்.. நாம ரெண்டு பேரும் வேற வேற ஜாதி.."

"இல்லையே.. ஒரே ஜாதிதானே.."

"ஒரே ஜாதியா..? என்ன விளையாடுகிறீர்களா..?"

"மனித ஜாதிடி.."

"நீங்கள் பெரிய பணக்காரர்.. நான் மிடில் கிளாஸ்.."

"நீ என் பெண்டாட்டியானா.. என் சொத்தெல்லாம் உன்னதுதானே.."

"இது பேச்சுக்குத்தான் நன்றாயிருக்கும்.."

"ஏன் கேட்க நல்லாயில்லையா..?"

"நந்து ப்ளீஸ்.. சீரியஸா பேசுங்கள்.."

மைதிலியின் முகத்தில் கலக்கம் இருந்தது.. நந்தகுமாரன் அவளை ஆதரவாய் கைநீட்டி அழைக்க இரண்டு படி கீழே தள்ளி அவன் காலடியில் அமர்ந்தவள் அவன் மடியில் முகம் புதைத்தாள்.. இப்படியே இருந்து விட்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும் என்று தோன்றியது.. அவளது முடியை வருடிவிட்ட நந்தகுமாரன் கேட்டான்,

"மைதிலி.. உன்னை ஒன்று கேட்கிறேன்.. பதில் சொல்.. இந்த நொடி என்னிடம் சரண் அடைந்திருக் கிறாயே.. இதற்கு மேல் உன்னை யாராவது பெண் பார்க்க வந்தால் அவர்கள் முன்னால் உன்னால் நிற்க முடியுமா..?"

'எப்படி முடியும்..?' இதயம் குலுங்கியது மைதிலிக்கு.

"முடியாது.." என்றாள் திடமான குரலில்..

"இன்னொருவனை கணவனாய் நினைக்க முடியுமா..?"

"நந்து ப்ளீஸ்.. இப்படியெல்லாம் பேச்சுக்குக்கூட கேட்காதீர்கள்.."

"இன்னொருத்திக்கு நான் கணவனாக நேர்ந்தால் என்ன செய்வாய்..?"

"கொலை செய்து விடுவேன்.."

"யாரை அந்தப் பெண்ணையா..?"

"இல்லை உன்னை.. ராஸ்கல்..! என்னை மடி சாய்த்துக் கொண்டு என்ன பேச்சுப் பேசுகிறாய்.. நீ மைதிலியின் கணவன்.. அதை மறந்தால்.. மகனே.. குடலை உறுவி மாலை போட்டு விடுவேன்.."

நந்தகுமாரன் கடகடவென்று மீசை அதிரச் சிரித்தான்..

"இதுதான்.. இந்த தைரியத்தைத்தான் காதல் கொடுத்திருக்கிறது.. சொல்.. இனி நீயோ, நானோ பேசி முடிவு பண்ண எதுவும் இருக்கிறதா..?"

'இல்லை'யென்று தலை அசைத்தாள் மைதிலி.. அவளுக்குப் புரிந்தது.. அவள் காதல் என்னும் ஒரு வழிப் பாதையில் சென்று விட்டாள்.. இனித் திரும்ப முடியாது..

அன்று இல்லம் திரும்பியபோது கோவிலுக்கு விசாலாட்சி, வைத்தீஸ்வரனின் மகளாகச் சென்றவள் நந்தகுமாரனின் காதலியாக அவனின் மானசீக மனைவியாகத் திரும்பினாள்..

## 6

காதல் அரும்பி மலராகி மணம் வீசிய கதைகளை அசை போட்டபடி மைதிலி பஸ்ஸிலும், நந்தகுமாரன் தன் இரு சக்கர வாகனத்திலும் வந்து அலுவல வாசலில் சந்தித்துக் கொண்டார்கள்.. கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி பதறியபடி படியேற முயன்றவளின் மேல் மோதுவது போல் வேகமாய் வந்து உராய்ந்து நின்றது நந்தகுமாரனின் வண்டி.. திடுக்கிட்டுப் பின் வாங்கியவள் அவனைக் கண்டதும் மலர்ந்தாள்..

"யாரோன்னு பயந்திட்டேன்.."

"உன்னை இடிக்க யார் வருவார்கள்..? உன் இடி மன்னன் நான்தான் வரவேண்டும்.."

"போதுமே.. முதல் நாள் தெரியாமல் ஒரு வார்த்தை சொல்லி விட்டால் அதையே உடும்புப் பிடியாய் பிடிச்சிக்கிட்டு இருக்கணுமா..?"

"சரி.. விட்டு விட்டேன்.. ஏண்டி லேட்..?"

"எல்லாம் உங்களால்தான்.. உங்களை முதல் நாள் பார்த்ததிலிருந்து இன்று வரை நடந்ததை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால் நேரமாகாமல் என்ன செய்யுமாம்..?"

நந்தகுமாரன் சிலிர்த்தான்.. இவன் போல் அவள்..? காதலின் அதிசயங்களில் இதுவும் ஒன்று போலும்.. முகம் மென்மையுர,

"என்னையே இருபத்தி நாலு மணி நேரமும் நினைக்கணுமா..?" என்றான்.

"மறந்தால்தானே நினைப்பதற்கு.."

நந்தகுமாரன் கிறங்கிப் போய் அவளைப் பார்க்க அவள் பதறிப் போனாள்.

"நந்து.. இது ஆபிஸ் வாசல்.. ஏற்கெனவே நான் லேட்.. ஹெட்கிளார்க் என்ன பாட்டுப் பாடப் போகுதோன்னு பயந்துக்கிட்டு இருக்கேன்.. நீங்க வேற இப்படிப் பார்த்து பயமுறுத்தாதீர்கள்.."

"ஏண்டி.. காதலன் காதல் பார்வை பார்த்தா கொலை பண்ண வந்தது மாதிரி அலறுகிறாய்..? உன்னைப் போய் காதலிச்சுத் தொலைச்சேனே.."

"ஏன் வேறு ஆள் மாற்றும் ஐடியா இருக்கிறதா..?"

"ஏன் நீ என்னைக் கொலை பண்ணுவதற்கா..? கொஞ்சம் நில்.. வண்டியை பார்க் பண்ணிட்டு வந்து விடுகிறேன்.."

"எதுக்கு..? ஜோடியாப் போய் எல்லோரின் வாயிலும் விழுகவா..?"

"புரியாமல் பேசாதே.. நான் முன்னால் போகிறேன்.. நீ பின்னால் வா.. இல்லைன்னா ஹெட்கிளார்க் உன்னைத் தொலைத்து விடுவார்.."

"அதெல்லாம் அவர் தொலைத்து விடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.. நீங்க மெதுவா வந்தால் போதும் ஆபிசர் சார்.." என்ற கிண்டல் குரல் கேட்டு திடுக்கிட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்..

டேவிட் நின்றிருந்தான்.. மைதிலி முகம் சிவக்க நந்தகுமாரன் சிரித்தான்..

"டேவிட்.. இவள் ஏற்கனவே பயந்து கொண்டு இருக்கிறாள்.. நீ வேற போட்டு உடைத்து விடாதே.."

"உடையாமல் கண்ணாடிப் பாத்திரம் போல் உங்கள் காதலை பாதுகாக்கிறேன் போதுமா.. வாங்க சிஸ்டர்.. ஹெட்கிளார்க்கை நினைத்துப் பயந்து கொண்டு வாசலிலேயே நின்றிருந்தால் இன்றைக்கான வேலைகளை பார்க்க முடியாது.."

டேவிட் படியேற மைதிலி பின் தொடர்ந்தாள்.. கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு மைதிலியை முறைத்த ஹெட்கிளார்க் தன் கரத்தைத் திருப்பி மணி பார்த்தார்.. நேரமாகி விட்டதாம்.. மைதிலி தாமதமாய் வந்து விட்டாளாம்.. மைதிலியின் முகம் பார்த்த டேவிட்,

"குட்மார்னிங், ஹெட் கிளார்க் சார்.. என்ன வாட்சைப் பார்க்கறீங்க..? சரியா, ஓடுதா, இல்லையான்னு பார்க்கறீங்களா..?" என்றான் டேவிட்..

"ஹி..ஹி.. அதெல்லாமில்லைப்பா சும்மா.. மணி பார்த்தேன்.."

"சும்மாதானே மணி பார்ப்பீங்க.. வேலையிருந்தால் பார்க்கவா போறீங்க..? நேற்று உங்க பெண்ணோட காலேஜ் அட்மிசன்னு மதியம்தான் வந்தீங்க.. அப்பப்போய் மணிபார்த்தீங்களா..? அதற்கும் முதல் நாள் உங்க மிஸஸ் மயக்கம் போட்டு விழுந்துட்டாங்கன்னு சொல்லிக்கிட்டு சாயந்திரம் மூணு மணிக்கு வந்தீங்களே அப்ப மணி பார்த்தீங்களா..? அப்புறம் போனவாரம்.."

"யப்பா.. டேவிட்.. இந்தா என் வாட்சைக் கழற்றி டேபிள் டிராயரில் போட்டு மூடிவிட்டேன்.. போதுமா..? கொஞ்சம் மலையிறங்கு ராஜா.."

"சார்.. பர்மிசனெல்லாம் உங்களுக்குத்தான்.. எங்களுக்கு இல்லை.. வேர்த்து விறுவிறுத்து, அடிச்சுப் பிடிச்சு பஸ் பிடிச்சு வந்தால் ஒரு நிமிடம் கூட லேட்டாகக் கூடாதே.. உடனே வாட்ச்சின் மேல் ஒரு பார்வை எங்கள் மேல் ஓர் பார்வை.. ம்ம்.." என்ற டேவிட் அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டு விட்டு மைதிலியிடம் பேனாவை நீட்ட அவள் விட்டால் போதுமென்ற வேகத்துடன் கையெழுத்துப் போட்டு விட்டு அலுவலகத்தின் உள்ளே விரைய டேவிட் மட்டும் மகா அன்பாய் ஹெட்கிளார்க்கைப் பார்த்தபடி,

"பார்வை ஒன்றே போதுமே..

பல்லாயிரம் சொல் வேண்டுமா..?"

என்று பாடியபடி உள்ளே சென்றான்.. பக்கத்து சீட் ராமாமிர்தம்,

"ஹூம்.." என்று ஓர் பெருமூச்சை வெளியேற்றி விட்டு ஹெட்கிளார்க்கைப் பார்த்து,

"எல்லாம் கலிகாலம் சார்.. அவன் வயசென்ன.. நம்ம வயசென்ன.. எத்தனை வருசம் சீனியர் நாம.. ஒரு பயம், பணிவு இருக்கா.. பாட்டு வேற பாடிட்டுப் போறான்.. நேத்து வந்த பயல் அவன்.. ஹூம்.. இனி வரும் காலத்தில் எல்லாம் சர்வீஸுக்கு மதிப்பிருக்காது சார்.." என்றார்..

"ஏன் இப்ப மட்டும் என்ன வாழுதாம்..? சர்வீஸை மதிச்ச காலமெல்லாம் மலையேறிப் போச்சுய்யா.. இப்ப யூனியன் வேற ஸ்ட்ராங்கா இருக்கு.. பயல் யூனியன் லீடர்.. அசைக்க முடியலை.."

உள்ளே வேகமாகச் சென்ற மைதிலி அவள் இடத்தில் அமர்ந்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.. பக்கத்து சீட் பாத்திமா,

"என்னப்பா லேட்டாயிருச்சு போல..? ஹெட்கிளார்க்கு கிட்ட பாட்டு வாங்கினியா..?" என்று கேட்டாள்..

"களுக்.." கென்று சிரித்தாள் மைதிலி..

"என்னடி சிரிக்கிறே..?"

"அவர்கிட்ட நான் பாட்டு வாங்கலை.. டேவிட் கிட்டத்தான் அவர் பாட்டு வாங்கினார்.."

"டேவிட் திட்டினாரா..?"

"இல்லை பாடினார்.." மீண்டும் குலுங்கிச் சிரித்தாள் மைதிலி..

"என்னது பாடினாரா..?" புரியாமல் கேட்டாள் பாத்திமா..

"ஆமாம்.. ஹெட்கிறார்க் வாட்சைப் பார்த்துவிட்டு என்னையும் முறைத்துப் பார்த்தாரா.. டேவிட் அவரைப் பார்த்து.. 'பார்வை ஒன்றே போதுமே'ன்னு பாடினார்.." என்று அந்தப் பாடலைப் பாடிக் காட்டினாள் மைதிலி..

அதே நேரம் டேவிட் உள்ளே வர பாத்திமா வியப்பாய் அவனைப் பார்த்தாள்..

"என்ன பார்வை.. உந்தன் பார்வை.." என்று டேவிட் மீண்டும் பாட,

"அதுசரி.. இன்னைக்கு என்ன.. அன்னையர் தினம், நண்பர்கள் தினம் மாதிரி டேவிட் பாட்டுப் பாடுற தினமா..?" என்று பாத்திமா கேட்டாள்..

"ம்ம்.. ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது இல்லையா.. அதுதான் பாடலாம்ன்னு தோணிச்சு பாடறேன்.."

"அப்போ ஆடணும்னு தோணினால்..?"

"ஆடிட்டாப் போச்சு.. ஆடவா..?"

"எதற்கு..? இந்த இடத்தை விட்டு நான் ஓடவா..? நீங்கள் மட்டும் எழுந்து ஆடினீங்க.. இந்தக் கட்டிடம் என்ன ஆகும்ன்னு உங்களுக்கே தெரியும்.. சொல்லிட்டேன்.." என்றாள் பாத்திமா சிரித்தபடி..

"என்ன ஆகும் கட்டிடம் தூள் தூளாகும்.." என்று கூடச் சேர்ந்து சிரித்தான் பருமனான உடல்வாகு கொண்ட டேவிட்..

அப்போது நந்தகுமாரன் அவர்களைக் கடந்து செல்ல மைதிலி அவனைப் பார்வையால் தொடர்ந்தாள்.. அறைக் கதவைத் திறக்கும்போது திரும்பி மைதிலியின் பார்வையைச் சந்தித்த நந்தகுமாரன் ஒரு தலையசைவுடன் உள்ளே சென்று மறைந்தான் டேவிட் ஜாடை காட்ட பாத்திமா வேடிக்கை பார்த்தாள்.. நந்தகுமாரன் சென்றதும் தன்னுணர்வு பெற்ற மைதிலி அவர்களது பார்வையைக் கண்டு முகம் சிவந்தாள்..

"டேவிட்.. தப்பான ஆள்கிட்ட பார்வையைப் பத்திப் பாடிட்டிங்க.." என்று பாத்திமா கூற,

"ஆமாமாம்.. அந்தப் பாட்டை இங்கே.. இப்போ.. பாடியிருக்கணும்.." என்று டேவிட் ஒத்து ஊதினான்..

உதட்டை மடித்துக் கடித்த மைதிலி அவர்கள் பேச்சு காதில் விழாதது போல் வேலை பார்க்க ஆரம்பித்தாள்.. மாலையில் கிளம்பும்போது அவளது செல்போனின் மணியொலிக்க எடுத்துப் பார்த்தாள்.. நந்தகுமாரன் அழைத்தான்.. போனைக் காதில் வைத்து, "என்னங்க..?" என்றாள்..

"உன்கிட்டப் பேசணும்.." என்றான் அவன்..

"பேசுங்க.."

"விளையாடுகிறாயா.. உட்கார்ந்து பேசணும்.. உடனே உட்கார்ந்துக்கிட்டுப் பேசுங்கள்'ன்னு போனிலேயே பேசி முடிக்காதே.. நேரில் பேசணும்.."

"எப்போது..?"

"இப்போதே.."

"இப்போதேவா.." என்று அவள் தயங்க,

"இப்போதுதான்.." என்றான் அவன் அழுத்தமான குரலில்.

"சரி.. எங்கே பார்ப்பது.."

"வேறு எங்கே.. கோவிலில்தான்.. வேறு பார்க்.. அது, இதுன்னால் நீ வருவாயா..? மாட்டாயே.. வேறு வழியில்லை எனக்கு.. கோவிலுக்கு வந்து சேர்.."

மைதிலி ஒரு ஆட்டோவைப் பிடித்து கோவில் வாசலில் இறங்கினாள்.. வெளியே செருப்பை அவிழ்த்து விட்டு விட்டு

உள் பிரகாரம் சென்றவள் கோவில் கோபுரத்தைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.. அதிவேகமாய் உள்ளே சென்று கடவுளை வணங்கி கோவிலை வலம் வந்தவள்.. வெளிப்பிரகாரத்து மண்டபத்துப் படியில் அமர்ந்திருந்த நந்தகுமாரனைக் கண்டதும் மலர்ந்து அவன் அருகில் சென்றாள்.. அவள் வருவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்தவன், "பரவாயில்லை.. கூப்பிட்டதும் வந்து விட்டாய்.." என்றான் மெச்சுதலாய்,

"ஏன் வராமல் என்ன..? பத்து நாள் முன்னாடி கூட வரவில்லையா..?"

"ஓகோ.. அதற்கு முன்னால் எப்போது வந்தாய்..?"

"அது.." என்று அவள் நெற்றியில் விரலைத் தட்டி யோசிக்க ஆரம்பிக்க,

"ரொம்ப யோசிக்காதே.. இருக்கிற மூளையும் குழம்பிக்கப் போகுது.." என்றான்..

"இப்போது எதுக்கு என்னைத் திட்டுகிறீர்கள்..?"

"பின்னே என்னடி.. ஆடிக்கொருதரம்.. அமாவாசைக் கொரு தரம்.. ஒளிஞ்சு, ஒளிஞ்சு.. கோவிலில் பவ்யமாய் உட்கார்ந்து நலம் விசாரித்துப் போகிறதுதான் காதலா.. எனக்குன்னு வந்து வாய்த்தாயே.."

மைதிலி ரோசமாய் முறைத்தாள்..

"திட்டத்தான் என்னை வரச் சொன்னீர்களா..?"

"இல்லை கொஞ்சத்தான் வரச் சொன்னேனா என்ன செய்யப் போகிறாய்..? கிட்ட வந்து கொஞ்சப் போகிறாயா..?"

"ஸ்ஸ்.. கோவிலில் வந்து என்ன பேச்சு இது..? அது தான் தினமும் ஆபிசில் பார்த்துக்கிறோமே.. செல்போனில் வேறு மணிக்கணக்கில் பேசியாகிறது போதாதா..?"

"எனக்குப் போதாது.. சைட் அடிச்சு சலித்துப் போச்சு.."

"என்னது.. சலித்து விட்டதா..?" என்று மைதிலி முறைக்க,

"அடடா.. சைட் அடித்துக் கிட்டே சும்மா கையைக் கட்டிக்கிட்டு இருப்பது சலித்து விட்டதுன்னு சொன்னேன்டி.." என்று

நந்தகுமாரன் சிரித்தான்..

"அப்படின்னா.." என்று மைதிலி நகர்ந்து அமர்ந்து கொள்ள,

"எதுக்குடி அவ்வளவு தள்ளிப்போய் உட்காருகிறே..? அறிவு கெட்டவளே.. இது கோவில்டி.. நான் உன்னைக் கடித்துத் தின்று விடமாட்டேன்.." என்று நந்தகுமாரன் சிடுசிடுத்தான்..

பழையபடி மைதிலி அருகில் வர,

"ஏன் இப்ப வருகிறாய்.. எழுந்து போவதுதானே.." என்று எரிந்து விழுந்தான்..

"இப்ப என்னை என்னதான் செய்யச் சொல்கிறீர்கள்..?" என்று மைதிலி கேட்டாள்..

"என் கையைக் கட்டவிழ்த்து விடுன்னு சொல்றேன்.."

"என்னது..?" என்று அவள் விழிக்க,

"உனக்கு நல்லதே நினைவில் வராதா.. மர மண்டைகையைக் கட்டவிழ்த்து விட்டால் தானே அது உன்கைபிடிக்கும்..?" என்றான் அவன்..

மைதிலி மௌனமானாள்.. நந்தகுமாரன் அவள் முகவாயைத் தொட்டு நிமிர்த்தி அவன் முகம் பார்த்துக் கேட்டான்..

"உன் வீட்டில் என்னைப் பற்றிப் பேசக் கூடாதா..?"

"கொஞ்ச நாள் பொறுங்கள்.." என்றாள் அவள் கெஞ்சுதலாய்..

"சரி.. உனக்குப் பேசப் பயமாக இருந்தால் என்னிடம் பிரச்னையை விட்டுவிடு.. நான் என் வீட்டில் சொல்லி முறைப்படி உன்னைப் பெண் கேட்டு வருகிறேன்.." என்று அவன் கூற,

"ஐயையோ.. வேண்டாம்.. அப்படிச் செய்து விடாதீர்கள்.." என்று அவள் அலறினாள்..

அவன் முகம் கல்லைப்போல் கடினமானது.

"ச்சு.." என்று அலுப்புடன் கூறியவன் எழ முயன்றான்.. மைதிலி அவன் கரம் பிடித்து மன்றாடினாள்..

"கோபமாய் போகாதீர்கள்.. நான் செத்து விடுவேன்.."

"இதில் ஒன்னும் குறைச்சல் இல்லை.. இங்கே பார் மைதிலி.. நிலைமை கை மீறிப் போய் விடுவதற்கு முன்னால் ஏதாவது செய்ய வேண்டும்.. அப்புறம் நிலைமை மோசமான பின்னால் அழுது, புலம்பினால் பயனிருக்காது.. பார்த்துக்கொள்.."

"இப்போது என்ன ஆகிவிட்டது..? கொஞ்ச நாள் பொறுங்கள் என்றுதானே கெஞ்சுகிறேன்.. எனக்காகக் காத்திருக்கக் கூடாது..?"

"காத்திருப்பேண்டி.. இந்த ஜென்மம் பூராவும் காத்திருப்பேன்.. உனக்குத் தைரியம் என்று ஒன்று வருவதாக இருந்தால்.. ஆனால் உனக்கு அது வரவே வராதுடி.. அப்புறம் ஏன் என்னைக் காத்திருக்கச் சொல்கிறாய்..?"

"இல்லைங்க.. இன்னும் சிறிது நாள் கழித்து.."

"கழித்து.. என்ன செய்யப் போகிறாய்..? நீயும் நானும் சந்தித்து இரண்டு வருடமாகிறது.. உன்னிடம் என் காதலைச் சொல்லி ஒரு வருடமாகிறது.. இந்த ஒரு வருடமாய் நீ காத்திருக்கச் சொல்லிக் கொண்டே இருக்கிறாய்.."

"நந்து.. இது வழக்கமாய் நீங்கள் பேசும் பேச்சில்லை.."

"போதும் மைதிலி.. என் பொறுமைக்கும் எல்லை இருக்கிறது.. மனதில் இருப்பதை வெளியில் சொல்ல முடியாத கோழைகள் காதலிக்கக் கூடாது.."

மைதிலியின் கன்னத்தில் கண்ணீர் முத்துக்கள் விழுந்து தெறித்தன.. நந்தகுமாரன் நெகிழ்ந்தான்.. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் கைக்குட்டையை எடுத்து அவள் முகம் துடைத்து விட்டான்.

"ஆ, ஊன்னா அழுது சமாளிச்சுரு.." என்று அவன் கூற மைதிலி அவன் தோள் மேல் முகம் புதைத்தாள் இளகிப்போன் நந்தகுமாரன்..

"என்னைப் புரிஞ்சுக்க மைதிலி.. இத்தனை நாளா ஜமீன் வம்ச பொண்ணு, பெரிய தனக்காரர் பொண்ணுன்னு வெறும் வாயில்தான் என் அப்பா பேசிக்கிட்டு இருந்தார்..

இப்போது நிஜமாகவே ஒரு பெரிய இடத்துப் பெண்.. என்னை வலை வீசிப் பிடிப்பேன்னு சபதம் போட்டவள்.. என் வீட்டிற்கே வந்து எனக்கு வலை வீச முகாம் போடப் போகிறாள்.. அதற்கு என் அப்பா உதவி செய்யப் போகிறார்.." என்றான்..

"என்னது வலைவீச வருகிறாளா.. யார் அவள்..?"

"அவள்தான் மேனகா..!"

விசுவாமித்திரரை அன்று மயக்கிய மேனகை போல் இன்று நந்தகுமாரனை மயக்க எண்ணி வருகை புரிய இருந்த இந்த மேனகையைப் பற்றி நந்தகுமாரன் கதை கதையாய் கூறினான்.. விழி விரியச் செவி கொதிக்க கேட்ட மைதிலியின் மைவிழிகள் சிவந்தன.. அந்த நந்தகுமாரனைச் சுற்றிய கோபிகைகள் போல் இந்த நந்தகுமாரனைச் சுற்ற ஓர் மேனகை இருக்கிறாளா..? அவளது நந்தகுமாரன் அவளுக்கு மட்டும் சொந்தம் இல்லையா..?

அலை பாய்ந்தது மைதிலியின் அபலை நெஞ்சம்.

# 7

தந்த நிறம், வாரா வாரம் அழகு நிலையத்திற்குச் சென்று சீராக ஆனால், ஏற்ற இறக்கமாக வெட்டி விடப்பட்ட கூந்தல், செதுக்கி வைத்தது போன்ற உடல்வாகு, கூரான நாசி, கொவ்வை இதழ்கள், மீன் போல் நீண்ட விழிகள்..

இதுதான் மேனகா.. சுடிதார் கூட பழமையான உடை என்பவள்.. ஜீன்ஸை விரும்பும் தற்கால யுவதி.. திருச்சிக்கு அருகிலிருக்கும் தோப்பூர் கிராமத்து ஜமீன் வாரிசு.. மூன்று தலைமுறையாக சென்னையில் வாசம் செய்யும் குடும்பத்தின் ஒரே செல்வ மகள்.. நிலபுலன்களை குத்தகைக்கு விட்டுவிட்டு வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் இறங்கிய அவளது கொள்ளுத் தாத்தா ஆரம்பித்து வைத்ததை தாத்தா செழிக்க வைக்க இப்போது ஏழு தலைமுறைக்கு அரசன் போல வாழ வைக்கும் செல்வத்திற்கு அதிபதியான அவளது தந்தை,

மேனகா நிலவைப் பார்த்து ஆசைப்பட்டாலும் உடனே வாங்கித் தந்து விடத் துடிப்பவர்.. மேனகா வைத்ததுதான் அவள் குடும்பத்தில் சட்டம். அவள் சொல்வதுதான் வேதம்..

இத்தகைய மேனகா ஒரு கல்யாணத்தில் நந்தகுமாரனின் அதிரடி நடவடிக்கையைக் கண்டாள்.. கண்ட அந்தக் கணத்திலேயே அவன் மேல் காதல் கொண்டாள்..

நந்தகுமாரனின் சித்தப்பா மகளின் திருமணம்.. மாப்பிள்ளை வீடு சென்னையில் இருந்தது.. மாப்பிள்ளை ஊரில்தான் திருமணம் முடிப்பது அவர்களது குடும்பப் பழக்கம்.. எனவே பெண்ணழைத்துக் கொண்டு சென்னைக்கு முதல் நாளே உறவினர் வட்டாரம் சென்றபோது குடும்பத்துக்கு மூத்தவரான துரைசிங்கம் தன் டாடா சுமோவில் குடும்பத்துடன் உடன் சென்றார்.. மணப்பெண்ணுக்கு அண்ணனாக நந்தகுமாரன் திருமண மண்டபத்தில் ஓடி ஆடி வேலை செய்து கொண்டிருந்தான்..

திருமண மாப்பிள்ளை மேனகாவின் தந்தைக்கு ஒன்று விட்ட தம்பியின் மகன்.. மேனகாவிற்கு ஒன்றுவிட்ட அண்ணன்.. மேனகாவின் தந்தை ராஜலிங்கம் அளவிற்குச் செல்வந்தராக இல்லாவிட்டாலும் ஓரளவு வளமானவர்தான் மாப்பிள்ளையின் அப்பா.. எனவே சொந்தத்திற்காகவும் ஓரளவு வசதியானவர்கள் தான் என்பதாலும் தம்பியின் வீட்டுத் திருமணத்திற்கு குடும்பத்துடன் வருகை தந்திருந்தார் ராஜலிங்கம்.

திருமண மண்டபத்தில் முன் வரிசையில் தாய், தந்தையுடன் அமர்ந்திருந்த மேனகாவும், மற்றவர்களும் மண்டப வாசலில் சளசளப்பு கேட்டுத் திரும்பிப் பார்த்தனர்.. சர், சர்ரென சீறிக் கொண்டு நாலைந்து டாடா சுமோ வண்டிகள் வந்து நிற்க அதிலிருந்து திபுதிபுவென முரட்டு ஆள்கள் அரிவாள், கத்தி, கபடாவுடன் குதித்து இறங்கினார்கள்.. முன்னால் அந்தக் கூட்டத்திற்கு தலைமை போல் வந்த முரட்டு வாலிபன்,

"யோவ் மாமா.." என்று கத்தினான்.

பெண்ணின் தகப்பனார் பாலசிங்கம் பதறிப் போனார்.. வந்து நின்றது அவரது மைத்துனன்.. அவரது மனைவியின்

தம்பி..

"என்னடா பரமா.. ஏண்டா இப்படிக் கூட்டம் கூட்டிக் கிட்டு வந்து கத்துகிறே..?"

"ஏன் உனக்குத் தெரியாதா..? நான் ஊரிலில்லாத நேரமாப் பார்த்து என் அக்கா மகளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் பார்க்கறியா..? முறை மாமன் நான் இருக்கும்போது என் அக்கா மகள் கழுத்தில் இன்னொருத்தன் தாலி கட்டுறதா..? நீ எப்படி இந்தக் கல்யாணத்தை நடத்துறன்னு பார்க்கிறேன்.."

பாலசிங்கத்தின் மனைவி காமாட்சி ஓடி வந்து தம்பியைக் கெஞ்சினாள்.. உறவுக்காரர்கள் சமாதானப் படுத்திப் பார்த்தார்கள்.. அடங்காமல் பரமன் திமிறிக் கொண்டிருக்க அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விழுந்தது.. அறை பட்ட வேகத்தில் கையிலிருந்த அரிவாள் கீழே விழ பரமன் திரும்பிப் பார்த்தான்..

அங்கே திருமணத்திற்காக கட்டியிருந்த பட்டு வேட்டியை மடித்துக் கட்டியபடி முழுக்கை சட்டையை முழங்கைக்கு மேல் ஏற்றி விட்டவாறு ஜல்லிக்கட்டு காளை போல் நந்தகுமாரன் நின்று கொண்டிருந்தான்..

"என்னடா நினைச்சுக்கிட்டிருக்கே.. சித்திக்குக் கூடப் பிறந்தவன் ஆயிற்றே.. உறவுக்காரனாப் போயிட்டியேன்னு தயங்கி நின்னா நீ ஆண் பிள்ளை சிங்கமாயிடுவியா..? எங்கே.. என் தங்கை மேல் கை வை பார்ப்போம்... தொட்ட கையை வெட்டாமல் விட மாட்டான்டா இந்த நந்தகுமாரன்.." என்று சீறினான் அவன்.

அவனைக் கண்டதும் பரமனும் அவனுடன் வந்தவர்களும் பதுங்குவதை மேனகா வியப்புடன் பார்த்தாள்.. அவள் அறிந்த ஆண்களின் வட்டாரம் வேறு.. கோட்சூட்டுடன் டை கட்டி நாசுக்காய் கோப்பையில் பானம் அருந்தி விலகிச் செல்லும் தந்தையின் நண்பர்கள் வட்டாரம்.. அலட்டலாய் உடையணிந்து அட்டகாசமாய் நுனிநாக்கில் ஆங்கிலம் பேசிக் கொண்டு இவளது மனதைக் கவர முயலும் இளம் பணக்கார வாலிபர்களின் வட்டாரம்... அவர்களின் இந்த வலிமையை அவள் கண்டதில்லை.. யாரேனும் மிரட்ட

முயன்றால் அவர்களது அதிகாரத்தையும், பணபலத்தையும் கொண்டு தான் அவர்களை அடக்க முயல்வார்கள்.. தன் சுய வலிமையைக் காட்டி அல்ல.. நிமிர்ந்து நின்று எதிராளியை தன் கைவலிமையால் அடக்கும் ஆண் மகனை அன்றுதான் முதன் முதலாய் கண்டாள் மேனகா..

பரமனும், அவனுடன் வந்திருந்த கூட்டாளிகளும் ஆயுதம் வைத்திருந்தார்கள்.. அங்கிருந்த அனைவரும் போலீசைக் கூப்பிட செல்போனை அழுத்திக் கொண்டிருக்க நந்தகுமாரன் வந்து விட்டானே ஒரு அறை.. மேனகா சுவாரஸ்யமாய் அவனைப் பார்த்தாள்.. நந்தகுமாரன் அவனை அறைந்ததோடு விடவில்லை..

"எடுடா கீழே போட்ட அரிவாளை எடு.. மகனே நான் சொடக்குப் போடுற நிமிசத்துக்குள்ள நீயும் உன் கூட்டாளிகளும் இந்த இடத்தைக் காலி பண்ணலே.. ஒரு பயல் உயிரோடு ஊர் போய் சேர மாட்டிங்க.. ஓடுங்கடா.."

நந்தகுமாரன் விரல் சொடுக்க ஆரம்பிக்க அடுத்த நொடியில் அவர்கள் அனைவரும் ஓடிப் போனார்கள்.. நந்தகுமாரன், பாலசிங்கத்தைப் பார்த்து அதட்டினான்..

"சித்தப்பா.. இதையெல்லாம் ஊரிலேயே ஏன் என்கிட்ட சொல்லவில்லை..? இதை அங்கேயே பேசித் தீர்த்திருக்கலாமே.. ஊர் விட்டு, ஊர் வந்து அவங்க தகராறு பண்ற மாதிரி வைத்துக்கணுமா..?"

"இல்லடா நந்து.. என்ன இருந்தாலும் அவன் தாய் மாமன்.. முறை மாமன் வேற.. அவன் பக்கம் நியாயம் இருக்கிறப்போ அவன் ஊரில் இல்லாதப்போ கல்யாணத்தைப் பண்ணிப் புடலாம்ன்னு நினைச்சுத்தான்.."

"எந்தக் காலத்தில் இருக்கறீங்க சித்தப்பா.. இப்பப் போய் முறை மாமனாம்.. அவன் பக்கம் நியாயமிருக்காம்.. உங்களை.. நீங்கள்ளாம் திருந்தவே மாட்டீங்களா.."

"நீ நாத்திகம் பேசுறவன்.. பகுத்தறிவுவாதி.. நாங்க அந்தக் காலத்து ஆளுக.. எங்க நியாயம் வேறதான்ப்பா.."

"சரிசரி.. கல்யாண வேலைகளைப் பாருங்க.." என்றபடி நந்தகுமாரன் கம்பீரமாய் மடித்துக் கட்டிய வேட்டியை

தழைய விட்டு, மடக்கி விடப்பட்டிருந்த சட்டையை இழுத்து விட்டபடி அங்கிருந்து செல்ல மேனகாவின் பார்வையும் அவனைத் தொடர்ந்தது.

அன்று திருமணம் முடிந்ததும் பெற்றோர் கிளம்புகையில் மேனகா தாமதித்தாள்..

"என்ன மேனகா கிளம்பவில்லையா..? உன் பிரெண்ட் டோட பர்த்டே பார்ட்டிக்கு போகணும்னு சொன்னியே.." என்று ராஜலிங்கம் வினவ,

"நோ டாடி.. ஐ லைக் திஸ் அட்மாஸ்பியர்.. நான் இன்னும் கொஞ்ச நேரம் இங்கே இருந்து விட்டு வருகிறேன்.. நீங்க போய் காரை அனுப்புங்க.." என்று மேனகா கூறிவிட்டு அங்கேயே மதியம் வரை தங்கி விட்டாள்..

நந்தகுமாரன் நடப்பதை, பேசுவதை, திரும்புவதை தன் செல்போன் கேமிராவில் படம் பிடித்துக் கொண்டிருந்தவள் மதியம் அவனைப் பிரிய மனமில்லாமல் கிளம்பிச் சென்றாள்.. அன்று மாலையே அந்தத் திருமணத்தின் வரவேற்பில் கலந்து கொண்டவள் நந்தகுமாரனிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்..

"ஹலோ.. ஐ ஆம் மேனகா.." என்று கை குலுக்க கை நீட்டியவளிடம்,

"என் பெயர் நந்தகுமாரன்.." என்று கரம் குவித்தான் நந்தகுமாரன்.

"ஓ.." என்று புருவங்கள் வில்லாக மேலேற வியந்தவள் தன் கரத்தை மடக்கிக் கொண்டு,

"ஐ லைக் யு வெரிமச்.." என்றாள்..

"நீங்க என்ன சொல்றீங்கன்னு.. இல்லை.. சொல்ல வருகிறீர்கள்ன்னு எனக்குப் புரியவில்லையே.." என்றான் நந்தகுமாரன் தன் புருவத்தை வினவும் பாவனையில் உயர்த்தியவனாய்..

"வெல்.. நான் ஸ்ட்ரெயிட்டாவே சொல்கிறேன்.. நீங்கள் என்னை இம்ப்ரஸ் பண்ணி விட்டீர்கள்.. யுநோ.. நான் இதுவரை எந்த ஆணிடமும் இம்ப்ரஸ் ஆனதில்லை.."

"அப்படியா..?" என்றான் நந்தகுமாரன் கேலி தொனிக்கும் குரலில்..

"ஆமாம்.. இந்த மேனகாவை வலை வீசிப் பிடிக்க எத்தனை பேர் முயன்றார்கள் தெரியுமா..?" என்றாள் அவள் கர்வமான குரலில்..

"ஊஹூம்..?" என்றான் அவன் அதே கேலியுடன்..

"ஆனால்.. இந்த மேனகா வலை வீசிப் பிடிக்கப் பார்க்கும் ஒரே ஆண்.. நீங்கள்தான்.." என்றவள்,

"என்ன ஆச்சரியமாய் இருக்கிறதா..?" என்று அதே கர்வத்துடன் தொடர்ந்து கேட்டாள்..

"இதற்கு என்ன பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்..?" என்றான் நந்தகுமாரன் மிடுக்காக..

"மிஸ்டர் நந்தகுமாரன்.. என் பேக்ரவுண்ட் தெரியாமலே என் அழகைப் பார்த்து மயங்கி என் பின்னால் அலைந்தவர்கள் அதிகம்.. என் பேக்ரவுண்ட் தெரிந்தவுடன் என் கடைக்கண் பார்வைக்காக தவமே இருக்கிறார்கள்.."

"அதுசரி.. அதையெல்லாம் ஏன் என்னிடம் வந்து சொல்கிறீர்கள்..? தவம் செய்பவன் யாருக்காவது உங்கள் கடைக்கண் பார்வையைக் கொடுத்துக் கடைத் தேற்றலாமே..?"

"ஸ்டுப்பிட்.. என் மனம் தெரிந்தும் இப்படிப் பேசாதீர்கள்.."

"என் மனம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா..? அதில் நிச்சயம் நீங்கள் இல்லை.."

"இனி வருவேன்.."

"அது முடியாது.. உங்கள் வலையில் சிக்கும் மீன் நானல்ல.. நான் கழுவுகிற மீன்களில் நழுவுகிற மீன்.."

"நான் யாரென்று தெரியாமல் பேசுகிறீர்கள்.." என்று மேனகா கூறிக் கொண்டிருக்கும்போது அங்கே வந்த பலவேசம்..

"அடடே நம்ம தோப்பூர் ஜமீன் வீட்டுப் பொண்ணு.. ஏம்மா தோப்பூரை ஆண்டது போதாதுன்னு சென்னையை ஆள வந்திருச்சு உங்க பரம்பரை.. மகாராணி.. நீங்க போய்

நிற்கலாமா.. உட்கார்ந்து பேசுங்கம்மா.." என்றபடி சேரைத் தூக்கி வந்துபோட அதில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டவள் ராஜ தோரணையுடன் நந்தகுமாரனைப் பார்க்க அவன் அலட்சியமாய் தோளைக் குலுக்கிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்து சென்று விட்டான்.. அதிர்ந்து போன மேனகா பார்வையைத் திருப்ப பலவேசம் அருகில் வந்தார்..

"அப்பாவைக் கூப்பிடுங்க.."

ராஜலிங்கம் பறந்து கொண்டு வந்தார்.. அவள் பல வேசத்தை அழைத்து,

"அங்கிள், இப்போது என்னிடம் பேசிக் கொண்டிருந்தாரே.. நந்தகுமாரன் அவர் யாருன்னு தெரியுமா..?" என்று கேட்டாள்..

"நம்ம வேம்பூர் துரைசிங்கத்தோட மகன்.. உங்களுக்கு மாமன் மகன் முறைதானம்மா.. இன்கம்டாக்ஸ் ஆபிசரா இருக்கான்.." என்று அவர் கூற ராஜலிங்கத்தைப் பார்த்தவள்,

"டாடி.. எனக்கு அந்த நந்தகுமாரன் கணவனாக வரவேண்டும்.." என்றாள்..

"மேனகா.." என்று அவர் திகைக்க,

"டாடி.. மேரேஜ் பண்ணினால் அவரைத்தான் பண்ணிக்குவேன்.." என்று அவள் அழுத்தம் திருத்தமாய் கூறினாள்.. மகளின் முகத்திலிருந்த தீவிரத்தைக் கண்டவர்,

"ஓகேம்மா.. நான் பேசி முடிக்கிறேன்.." என்று உறுதி அளித்தார்..

பொறுப்பு பலவேசகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.. அப்போதே துரைசிங்கத்தையும், ராஜலிங்கத்தையும் சந்திக்க வைத்தார் பலவேசம்.. துரைசிங்கம் மலைத்துப் போனார்.. வேம்பூருக்கு அவர் பெரிய மனிதராக இருக்கலாம்.. தோப்பூர் ஜமீன் பரம்பரை அவர்களது வட்டாரத்திலேயே மிகப்பெரிய வீடு.. சென்னையில்

ராஜபோகமாய் வாழும் அவர்கள் வீட்டுப் பெண் அவரது மருமகளாக வந்தால்.. நினைத்தாலே நெஞ்சம் இனித்தது..

ஊர் வந்து சேர்ந்தவுடன் அவர் மகனை கரைக்கப் பார்க்க அவன் பிடி கொடுக்க மறுத்தான்.. தன் முயற்சியில் தோல்வி கண்ட துரைசிங்கம் சோர்வடைய அவரை நிமிர வைப்பது போல் ராஜலிங்கத்திடமிருந்து செய்தி வந்தது..

அவரது மகள் மேனகா திருச்சியைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறாள்.. அதற்காக தோப்பூர் வீட்டில் தங்காமல் வேம்பூரில் துரைசிங்கத்தின் வீட்டில் தங்கப் போகிறாள்,

மேனகையின் வரவுக்கு வேம்பூர் வீடு தயாரானது.

# 8

"ஏண்டி சோலையம்மா..! ஆலத்தித் தட்டு எங்கே.. கரைச்சுத் தயாரா வை.. அந்தப் பொண்ணு ஏர்போர்ட்டி லிருந்து கிளம்பியாச்சாம்.. இப்ப வந்திரும்.."

மலையப்பன் சூழ்நிலையை தூள் பரத்திக் கொண்டிருக்க நந்தகுமாரன் மாடி வரண்டாவின் கைப்பிடிச் சுவரில் கைவைத்துக் கீழே பார்த்தான்.. வாசலில் மாவிலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.. பெரிய கோலம் போட்டு செம்மண் கரையால் அழகுக்கு அழகு சேர்க்கப்பட்டிருந்தது.. பண்ணை வேலைக்கு இருக்கும் பெண்கள் வயல்வெளியில் வேலை செய்வதை விட்டு விட்டு வீட்டுக்குள்ளே உள்ளேயும் வெளியேயும் போய் வந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள்.. பின்னால் அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.. சோலையம்மாள் அவசரமாய் மேலே வந்து அவன் அறைக்குப் பக்கத்தில் பூட்டிக் கிடந்த அறையைத் திறந்து கொண்டு இருந்தாள்..

"அம்மா இங்கே வாங்க.."

"என்னப்பா.." என்றபடி அவள் அருகில் வந்தாள்..

"என்னம்மா.. இங்கே என்ன கூத்து நடக்குது..?"

"கூத்துத்தான்.. வேறு என்னன்னு சொல்ல.. உங்க அப்பாதான் வீட்டை ரெண்டு நாளா ரெண்டு பண்ணிக்கிட்டு

இருக்கார்.. அவர் போடுகிற சத்தத்தில் கையும் ஓடமாட்டேங்குது.. காலும் ஓட மாட்டேங்குது.." அவள் அலுத்துக் கொண்டாள்..

"எதுக்கு இந்த ஆர்ப்பாட்டமாம்..?"

"வேற என்ன.. அதுதான் போன வாரம் சொன்னாரே.. அந்த தோப்பூர் ஜமீன் வீட்டுப் பொண்ணு மேனகா இங்கே நம்ம வீட்டில் வந்து கொஞ்ச நாள் தங்கப் போகுதுன்னு.. அந்தப் பொண்ணு ஏரோப்பிளேன்ல கிளம்பி வந்து திருச்சியில் இறங்கிருச்சாம்.. கொஞ்ச நேரத்தில் இங்கே வந்திருமாம்.."

"வரட்டும்.. வந்தால் ஒரு விருந்தாளியை வரவேற்பது போல் வரவேற்பதை விட்டுவிட்டு.. இது என்ன கண்றாவிம்மா.. தோரணம் கட்டி, ஆலத்தி எடுத்துன்னு.. நாலு பேர் பார்த்தால் சிரிக்கப் போறாங்க.."

"சிரிக்க மாட்டாங்கடி.. துரைசிங்கத்துக்கு இப்பேர் பட்ட அதிர்ஷ்டமான்னு மூக்கில் விரலை வைப்பாங்க.. அவனவன் அந்தப் பொண்ணு காலடி தன் வீட்டில் படாதான்னு ஏங்கிக்கிட்டு இருக்கான்.. வாடி.. இந்த ரூமில் எல்லாம் சரியாயிருக்கான்னு ஒரு தடவை நான் பார்க்கணும்.." என்றார் அங்கே வந்த துரைசிங்கம்..

"இருங்க.. இருங்க.. அந்த ரூமில் என்ன பண்றீங்க..?"

"ஏன்..? இந்த ரூமில்தான் அந்தப் பெண் தங்கப் போகுது.. கட்டில் மெத்தை பீரோவெல்லாம் புதுசா வாங்கிப் போட்டாச்சு.. ரூமுக்குள்ளேயே பாத்ரூம் கட்டியாச்சு.. ஜன்னல், வாசல் கதவுகளுக்கு புது திரைச்சீலை வாங்கிப் போட்டாச்சு.."

"அட்டாச்சுடு பாத்ரூமே கட்டியாச்சா..? ஏம்மா ஒரு நாள் கூத்துக்கு தலையை மொட்டையடிச்ச கதையா.. ஒரு நாளோ, இரண்டு நாளோ தங்கிவிட்டுப் போறதுக்கு வீட்டையே மாற்றணுமா..? இந்த வேலையெல்லாம் எனக்குத் தெரியாமல் எப்போது நடந்தது..?"

"எல்லாம் நீ ஆபிஸ் போன பின்னால் தான்ப்பா.." என்றாள் சோலையம்மாள் ஆற்றாமையுடன்.. அவளுக்கு இந்த தடபுடல் பிடிக்கவில்லை.. கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்க்கைப்பட்ட பெரிய வீட்டின் எஜமானி அவள்.. தன் ஒரே

மகனுக்கு தழையத் தழைய சேலை கட்டி, நீண்ட பின்னல் போட்டு, பூச்சூடி, நெற்றியில் மங்கலகரமாய் பொட்டிட்டு வீட்டுக்கு விளக்கேற்ற வரும் மகாலட்சுமி போன்ற பெண்ணை மனைவியாக்க விருப்பப்பட்டாள்.. வீட்டிற்கு வரும் மருமகள் மாமியார் என்று பயம் கொள்ளாவிட்டாலும், கணவனைப் பெற்று வளர்த்த தாய் என்ற மரியாதையைக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தாள். மேனகா ஓர் அல்ட்ரா மாடர்ன் பெண்.. கூந்தலை வெட்டி விரித்துப் போட்டுக் கொண்டு, உதட்டிலும், முகத்திலும், கண் இமைகளிலும் சாயம் பூசிக் கொண்டு, ஒரு ஜீன்ஸ் பேன்ட்டும், பனியனுமாக வலம் வருகிறவள்.. அவளை தன் மருமகளாய் நினைத்துப் பார்க்கவே பயமாய் இருந்தது அவளுக்கு.. 'செல்வம்தான் போதிய அளவு இருக்கிறதே..' என்ற எண்ணம் அவளுக்கு.. பணத்திற்கு ஆசைப்பட்டு பொருந்தாத் திருமணம் பண்ணத் தன் கணவர் ஆசைப்படுவது அவளுக்குப் பிடிக்கவில்லை..

"மேனகா ஒன்னும் ஒருநாள், இரண்டு நாள் இருந்து விட்டுப் போக வரவில்லைன்னு சொல்லுடி.. நிதானமாய் ஆற அமர இரண்டு மூன்று மாதம் நம்ம வீட்டில் தங்கி நம்ம பக்கமெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டுத்தான் போகப் போகுதுன்னு சொல்லுடி.." என்றார் துரைசிங்கம் தன் முகத்தை மறைத்த மீசையை முறுக்கிக் கொண்டு..

"என்னது.. இரண்டு, மூன்று மாதமா..? ஏம்மா.. உங்களுக்கெல்லாம் அறிவுங்கிறது இருக்கா, இல்லையா..? வயதுப் பெண்ணை நம் வீட்டில் தங்க வைக்கிறதுதான் வைக்கிறீர்கள்.. கீழே உங்கள் ரூம் பக்கத்தில் தங்க வைக்காமல் மாடியில், என் ரூம் பக்கத்தில் தங்க வைத்துக்கிட்டு.. சே..! இதெல்லாம் நல்லா இல்லைம்மா.. கீழேதான் அட்டாச்டு பாத்ரூம் வசதியோடு இன்னொரு ரூம் இருக்குதே.. அதை விட்டுவிட்டு மாடி ரூமை இடிச்சு புதுசா பாத்ரூம் கட்டி.. என்ன திட்டம் நடக்குதும்மா.."

"எனக்கு என்னப்பா தெரியும்..? எல்லாம் என்னைக் கேட்டுக்கிட்டா நடக்குது..? நான் சொன்னால்தான் என் சொல் இந்த வீட்டில் எடுபடுமா..?"

"என்னடி.. மகன்கூட சேர்ந்துக்கிட்டு நாடகம் ஆடுகிறாயா..? புருசன்கிற பயம் பத்து இல்லாமல் என் எதிரேயே அவன்கூட சேர்ந்துக்கிட்டு ஜால்ராவா தட்டுறே..?" துரைசிங்கம் கண்களை உருட்டி விழிக்க,

"அம்மாவை விரட்டுகிற வேலையெல்லாம் வேண்டாம்.. என் கண் முன்னாலேயே இவ்வளவு பேசுகிறவர் இல்லாதபோது எப்படி அரட்டுவீங்க.." என்று தகப்பனாரிடம் நேரடியாய் மோதினான் நந்தகுமாரன்.

"டேய்.. உனக்கு அம்மாவாகிறதுக்கு முன்னாடியே அவள் என் பெண்டாட்டி ஆகிட்டா.. என் பெண்டாட்டியை நான் திட்டுவேன்.. அடிப்பேன்.. நீ என்னடா கேட்கிறது.."

"நான் கேட்காமல் வேறு யார் கேட்பார்கள்..? வழியில் போகிற வழிப்போக்கனா வந்து கேட்பான்..? உங்க பாணியிலேயே பதில் சொன்னால்தான் நீங்க அடங்குவீங்க.. நான் பிறக்கிற வரைக்கும் அவங்க உங்க மனைவி மட்டும்தான்.. நான் பிறந்த பின்னர் எனக்கு அம்மா.. அப்புறம்தான் உங்க மனைவி.. என் அம்மாவைத் திட்டுவது என் அப்பாவாக இருந்தாலும் நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்.." என்ற நந்தகுமாரன் 'உனக்கு மட்டும்தான் மீசையிருக்கா எனக்கு இல்லையா..?' என்பது போல் தன் பெரிய மீசையைத் தடவிக் கொண்டான்..

சோலையைம்மாளுக்கு பெருமை பிடிபடவில்லை.. ஒரு வகையில் இது பெண்களின் அடிமை மனோபாவமாக இருக்கலாம்.. ஒரு பெண் ஆணைச் சார்ந்திருக்க விதிக் கப்பட்டவள் என்று காலம் காலமாய் வரும் மரபு சார்ந்த எண்ணங்களின் அறிவியல் பாதிப்பாக இருக்கலாம்.. மனுநீதியில் சொன்ன,

'ஒரு பெண் இளமையில் தந்தை அல்லது சகோதரனைச் சார்ந்திருக்க வேண்டும்..

மணமான பின் கணவனைச் சார்ந்திருக்க வேண்டும்.

வயோதிக காலத்தில் மகனைச் சார்ந்திருக்க வேண்டும்..' என்ற வார்த்தைகள் மனு சாஸ்திரம் அறியாத இந்தியக் கிராமப் பெண்களிடம் எப்படிப் போய்ச் சேர்ந்தது..? உடலாலோ, மனதாலோ பெண்கள் பலவீனமானவர்கள்

அல்ல.. ஆயினும் மனுவின் கூற்றுப் படிதான் அவர்கள் இன்றளவும் வாழ்கிறார்கள் என்பதே உண்மை.. அது வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போகும் இல்லத்தரசியாக இருந்தாலும் பட்டம் படித்து வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தாலும் மனதில் இந்த நியதிக்கு கட்டுப்பட்டே இந்தியப் பெண்கள் இருக்கிறார்கள்..

அதனால்தான் தன் கணவனிடமிருந்து தன்னைக் காப்பாற்றுவது மகன் என்பதில் சோலையம்மாளுக்கும் பெருமை.. சட்டப்படி திருமண வயது வந்தும் சுயமாய் தன் காலில் நின்று அரசாங்க வேலை பார்த்து சம்பாதித்தும் தன் தாய், தந்தை, தனயன் பேச்சை மீறி வீட்டுப் படி தாண்டி தான் காதலித்தவனை கரம் பிடிக்க மைதிலியாலும் முடியவில்லை.. அவர்களை பிணைத்திருக்கும் தளைகளை உதறச் சொன்னால் சொன்னவர்களை எரித்து விடும் தன்மை கொண்டவர்கள் நம் பெண்கள்.. கட்டுப்பாட்டில் அடங்குவதுதான் அவர்களுக்கு சந்தோசம்.. காவல் மீறாததில்தான் அவர்களுக்கு மகிழ்ச்சி.. இது பெண்ணடிமைத் தனமா..? அடிமைத்தனம் என்று நினைத்தால் அது அப்படித்தான்.. பாதுகாப்பு என்று நினைத்தால் அது பாதுகாப்புத்தான்.. எதுவும் நம் நினைவில்தான்..

கீழே சப்தம் கேட்டதும் சிந்தனை கலைந்த நந்தகுமாரன் எட்டிப் பார்த்தான்.. பகட்டான வெளிநாட்டுக் கார் ஒன்று வந்து நின்றது.. வெள்ளைச் சீருடை அணிந்த டிரைவர் வந்து கதவைத் திறந்துவிட மேனகா இறங்கினாள்.. பிங்க் கலர் டாப்ஸும், பிரௌன் கலர் ஜீன்ஸும் அணிந்திருந்தாள்.. கழுத்தில், காதுகளில், கைகளில் வைரம் ஒளிர்ந்தது.. விரிந்த கூந்தல் காற்றில் அலைபாய்ந்தது.. அவளது ஒவ்வொரு அசைவிலும் அழகு தெறித்தது..

உள்ளே அவள் நுழையும் போது பண்ணை வேலை செய்யும் பெண் ஒருத்தி வந்து ஆரத்தி எடுத்தாள்.. அலட்சியமாய் அந்தத் தட்டில் ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றைப் போட்டு விட்டு அவள் உள்ளே நுழைய அதிர்ச்சியில் கண்விரிய அந்தப் பெண் மயக்கம் போடும் நிலைக்கே போய் விட்டாள்..

மற்ற பெண்கள் எல்லோரும் பொறாமையில் வெந்து போய் விட்டனர்..

"ராக்காயிக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தியாடி.. ஆயிரம் ரூபாய் நோட்டை கண்ணிலயாவது பார்த்திருப் பாளா..?"

"ஏன் நீ தினமும் அந்த நோட்டில்தான் புரள்கிறயா..? ஏண்டி என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கறே.."

"ஹூம்.. நான்தான் ஆலத்தி கரைச்சேன்.. அம்மா உள்ளே கூப்பிட்டாங்கன்னு ஒரு நிமிசம் உள்ளே போனேன் அவ முந்திக்கிட்டா.."

பேச்சுக் குரல்கள் கலவையாய் ஒலிக்க மேனகாவின் பெட்டிகளைத் தூக்க போட்டா போட்டி நடந்தது.. சோலையம்மாள் தலையில் அடித்துக் கொண்டு அவர்களை அதட்ட ஆளுக்கு ஒரு பெட்டியைத் தூக்கினார்கள்.. அரச குமாரியின் தோரணையுடன் உள்ளே வந்த மேனகாவைக் கண்டதும்,

"வாம்மா, பிரயாணம் செளகர்யமா இருந்துச்சா.." என்று பண்பாட்டின் நிமித்தம் சோலையம்மாள் வினவினாள்..

"ம்ம்.." என்று முகத்தைப் பார்க்காமல் கூறியவள் துரைசிங்கத்தைப் பார்த்து.. "அங்கிள்.. என் ரூம் எங்கே..?" என்று கேட்க சோலையம்மாளின் முகம் சுருங்கி விட்டது.. துரைசிங்கம் வாயெல்லாம் பல்லாக,

"மாடியில் நம்ம நந்துவின் ரூமிற்குப் பக்கத்து ரூம் தாம்மா.." என்று கூற மேனகாவின் முகம் மலர்ந்தது..

"வெல்டன் அங்கிள்.. என் மனம் புரிந்து ஏற்பாடு பண்ணியிருக்கிறீர்கள்.." என்று அவள் கூற,

"முதலில் எல்லாம் மரியாதையாகத்தான் இருந்தார்.. இப்போது கொஞ்ச நாளாகத்தான் இந்த ஏற்பாடு செய்யும் வேலையில் இறங்கியிருக்கிறார்.." என்ற பதில் கேட்க நிமிர்ந்து பார்த்தாள்.. நந்தகுமாரன் மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான்.. மேனகா சொக்கிப் போனாள்.. அவளது பார்வையைக் கவனிக்காதவன் போல் தாயின் பக்கம் திரும்பி,

"அம்மா ஆபிஸ் போய்விட்டு வருகிறேன்.." என்று கூறினான்..

"சாப்பிடாமலா..?" என்று சேலையம்மாள் பதற..

"வேண்டாம்.. பசியில்லை.." என்றவாறு அவன் வெளியே விரைந்தான்..

"ஐயா.. மதியச் சாப்பாட்டுக் கேரியரை எடுத்திட்டுப் போ ராசா.." என்ற அவளது குரல் காற்றில் கரைய அவன் தன் வண்டியை எடுத்துக் கொண்டு போய் விட்டான்..

மேனகாவின் முகத்தில் ஏமாற்றம் அப்பிக் கொண்டது.. அதைக் கவனித்த துரைசிங்கம் மனைவியிடம் கூறுவது போல்,

"ஏன்டி.. ஆபிசுக்குப் போனால் சாயந்திரம் வந்துவிட மாட்டானா..? ஒரு எட்டு மணி நேரம்.. குளிச்சு சாப்பிட்டு விட்டு ஒரு தூக்கம் போட்டு எழுந்தால் சாயந்திரக் காபிக்கு வந்து நிற்கப் போகிறான்.. இதுக்குப் போய் வருத்தப்படலாமா..?" என்றார்..

கணவனின் கணக்குப் புரிந்த சோலையம்மாள் முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டு உள்ளே போக மேனகா முகத்தில் வெளிச்சம் பரவ மாடியேறினாள்..

அலுவலகம் வந்த நந்தகுமாரன் கோபம் தணியாத வனாய் விறுவிறுவென நடந்து அறைக்குள் சென்று மறைய அவன் வரவுக்காக காத்திருந்து ஓர் பார்வைக்காக ஏங்கிக் கிடந்த மைதிலி உடைந்து போனாள்.. திரும்பி அவன் ஏன் அவளை ஒரு முறை கூடப் பார்க்கவில்லை.. மனம் துடித்தவளுக்கு அந்த நினைவு வந்தது.. போனில் கேட்டால் என்ன..? செல்போனில் அவன் எண்களை அழுத்தினாள்.. மறுமுனையில், "சொல்லு.." என்றான் நந்தகுமாரன்..

"என்ன ஆச்சு..? உங்கள் குரலே சரியில்லையே.."

"என்ன ஆகணும்..? அந்த மேனகா வீட்டிற்கு வந்து விட்டாள்.. என் ரூமிற்குப் பக்கத்து ரூமிலேயே இன்னும் நான்கு மாதங்கள் தங்கப் போகிறாள்.. போதுமா..? இதைக் கேட்டதும் உனக்கு நிம்மதியாய் இருக்குமே.."

"நந்து.. நான்.."

"பேசாதே.. நான் என்ன கேட்டேன்.. ரெஜிஸ்ட்ரர் ஆபிசில் ஒரு கையெழுத்து.. தனிக்குடித்தனம் போய் விடலாம்.. நிம்மதியாய் இருக்கலாம்ன்னு தானே கேட்டேன்.. செய்தாயா..? இப்போப் பார்... உன் பயந்தாங்குளித் தனத்தால் நான் ஒரு பெண்ணுக்கு பயந்து சாப்பிடாமல் ஓடி வர வேண்டியிருக்கு.."

"சாப்பிடவில்லையா..?"

"ஆமாம்.. ரொம்பக் கரிசனம் காட்டுவது போல் நடிக்காதே.."

அவன் போனை துண்டித்துவிட மைதிலி அப்படியே அசைவின்றி அமர்ந்து விட்டாள்.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த டேவிட்,

"என்ன மைதிலி.. உங்களுக்கும் நந்தகுமாரன் சாருக்கும் மனஸ்தாபமா..?" என்று கேட்டான்..

மைதிலியின் கண்கள் கலங்கின..

"என்னத்தைச் சொல்ல டேவிட் சார்.. என்னைப் போன்ற கோழையை அவர் காதலித்திருக்கக் கூடாது.. அவரைப் போன்ற ஆண் மகனை என் காதலால் நான் கட்டிப் போட்டிருக்கக் கூடாது.."

"காதலில் தடைகள் வருவது சகஜம் மைதிலி.. தடைகளைக் கடப்பதுதான் காதலுக்குப் பெருமை.. இப்ப என்ன ஆச்சு..? நீங்கள் உங்கள் வீட்டில் சொல்லி விட்டீர்களா..? அவர்கள் சம்மதிக்கவில்லையா..?"

"சொன்னால்தானே..? அவர்கள் மனம் தெரிந்தபின் எப்படிச் சொல்வது..? நிச்சயம் சம்மதிக்க மாட்டார்கள் என்று தெரிந்த பின்னால் பேசிப் பயனென்ன..?"

"சம்மதிக்க மாட்டார்கள் என்று தெரிந்த பின்னாலும் காதலிக்கலாமா..?"

மைதிலி டேவிட்டை நிமிர்ந்து பார்த்தாள்.. அவள் விழிகளில் நீர் துளிர்த்தது..

"ம்ம்.. நல்ல கேள்விதான்.. ஆனால் டேவிட் சார்.. காதல் திட்டமிட்டு உருவாகிறது அல்ல.. அப்படித் திட்டமிட்டு உருவாகினால் அது காதல் அல்ல.. ஒரு வகையில் அது ஆக்ஸிடெண்ட்.. எதிர்பாராத விபத்து.. அது நிகழ்வது

தானாகத்தான்.. திட்டமிட்டு நடந்தால் அது இன்ஸிடெண்ட்.. என் வீட்டில் காதலை விரும்ப மாட்டார்கள் என்பதை அறிந்தவள் நான்.. விலகித்தான் போனேன்.. ஆனால் காதல் என்னைத் தேடி வந்து விட்டது.. நான் என்ன செய்ய..?"

"இப்படிச் சொன்னால் எப்படி மைதிலி.. ஏதாவது செய்துதானே ஆக வேண்டும்.." இயல்பாய் கூறிய டேவிட் வேலையைப் பார்க்க மைதிலி ஓர் முடிவிற்கு வந்தாள்..

# 9

மொட்டை மாடியில் தனியே அமர்ந்திருந்தாள் மைதிலி.. கைகள் தன் போக்கில் தலையில் சூடியிருந்த முல்லைப் பூச்சரத்திலிருந்து ஒவ்வொரு பூவாக உருவிக் கொண்டிருக்க கண்கள் வான் வெளியில் லயித்திருந்தது.. மனம் பூராவும் டேவிட்டின் கேள்வியே எதிரொலித்தது..

'சம்மதிக்க மாட்டார்கள் என்று தெரிந்த பின்னாலும் காதலிக்கலாமா..?'

கூடாதுதான்.. அப்புறம் எந்தத் தைரியத்தில் காதலித்தாள்.. இப்போது பிரச்னையை எதிர்கொள்ள ஏன் பயப்படுகிறாள்..?

"மைதிலி.." என்று அழைக்கும் குரல் கேட்டது.. விசாலாட்சி படியேறி வந்தாள்..

"என்னடா.. இங்கே தனியா உட்கார்ந்துக்கிட்டு இருக்கே.."

"இல்லைம்மா.. சும்மா காற்றாட உட்காரலாமேன்னு தான்.."

மைதிலியின் குரல் வெறுமையாய் ஒலித்தது.. மீண்டும் வானை வெறித்தாள்.. விசாலாட்சி யோசனையாய் மகளைப் பார்த்தாள்.. சில நாள்களாகவே அவளது செயல்பாடுகள் சரியில்லாததாக இருக்கிறது.. நேற்று இரவு சாப்பிட்டு முடிக்கும்போது விசாலாட்சி மகளைப் பார்த்து,

"குழம்பு நல்லாயிருக்காடா..?" என்று கேட்டாள்..

"நீங்க வைக்கிற சாம்பார் என்னைக்குமா சோடை போயிருக்கு..?" என்றாள் மைதிலி.. விசாலாட்சி துணுக் குற்றாள்.. அவள் வைத்திருந்தது பூண்டுக் குழம்பு..! காலையில் முல்லைப் பூ வைத்து விட்டபோது,

"மல்லிகைப் பூவாம்மா..? வாசனை நல்லாயிருக்கு.." என்கிறாள்.. தட்டில் இட்லியைப் போட்டாள்..

"தோசை இன்னும் கொஞ்சம் மொறுமொறுப்பா இருக்கணும் அம்மா.." என்கிறாள்.. அடிக்கடி தனியாய் மொட்டை மாடியில் அமர்ந்து கொள்கிறாள்.. சில சமயம் நள்ளிரவில் பாத்ரூம் போக எழுந்தால்

மகள் ஜன்னலருகில் அமர்ந்து கொண்டு வானத்தை வெறித்துக் கொண்டிருப்பதை காண நேர்கிறது..

"மைதிலி என்னம்மா செய்கிறே..?" என்று குரல் கொடுத்தால்..

"ஒண்ணுமில்லைம்மா.." என்று கூறிவிட்டு சுருண்டு படுத்துக் கொள்கிறாள்..

"ஒன்னுமேயில்லையா..?" தாய் மனம் சந்தேகம் கொண்டது..

"மைதிலி.." என்று கண்டிப்புடன் அழைத்தாள்.. தாயின் குரலில் வித்தியாசத்தை உணர்ந்தவள்,

"என்னம்மா..?" என்று தாயின் முகம் பார்த்தாள்..

"அப்பா முசுட்டு சுபாவக்காரர்தான்.. அண்ணன் தன் குடும்பம்னு போய் விட்டவன்தான்.. இப்போதைக்கு அதிக வசதியில்லாததால் உன் சம்பளத்தை சேர்த்து வைத்து உனக்குக் கல்யாணம் பண்ண வேண்டும்தான்.. ஆனால் இது நம்ம குடும்பம்.. நமக்குன்னு ஓர் கௌரவம் இருக்கு.. உன் சம்பளத்திலிருந்து வீட்டுச் செலவுக்கு ஒரு பைசா கூட நான் எடுப்பதில்லை.. அப்படியே பேங்கில் உன் கணக்கில்தான் போட்டு விடுகிறேன்.."

"அம்மா.. ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்..?"

"பேச வேண்டியிருக்கிறது மைதிலி.. நீ, சாவித்திரி, கிருஷ்ணமூர்த்தி மூன்று பேருமே எங்கள் பிள்ளைகள் தான்.. ஒருவருக்கு அதிகமாக ஒருவருக்குக் குறைவாக

நாங்கள் செய்யவில்லை.. சாவித்திரிக்கு படிப்பைக் கொடுக்கவில்லை.. உனக்கு படிப்போடு வேலையையும் கொடுத்தோம்.. சாவித்திரிக்கு அதிக செலவு செய்து கல்யாணம் பண்ணி வைத்தோம்.. கிருஷ்ணமூர்த்தி அப்பாவின் சுமையை பகிர்ந்து கொண்டான்.. நல்லவன்.. அவனுக்கும் குடும்பன்னு ஆகி விட்டதால் கொஞ்சம் ஒதுங்கி இருக்கிறான்.."

"ஏம்மா.. என்னவோ போல் பேசுகிறீர்கள்..?"

"நீ கொஞ்ச நாளா என்னவோ போல் இருக்கிறாயே அதனால்தான்.. உன்மேல் நான் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறேன்.. ஏமாற்றி விடாதே.."

விசாலாட்சி எழுந்து கீழே இறங்கிச் சென்று விட்டாள்.. மைதிலி மௌனமாய் விசும்பினாள்.. முகத்தைப் பார்த்து சுகத்தை தெரிந்து கொள்ளும் தாயிடம் தன் காதல் பற்றி எப்படிச் சொல்ல..?

வேம்பூரில் நந்தகுமாரன் பாடு திண்டாட்ட மாயிருந்தது.. மாலை அவன் வீடு திரும்பும்போது வீடு அமைதியாக இருந்தது.. அவன் பூனை போல் வண்டியை நிறுத்தி விட்டு மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே போக 'படாரென்ற' சத்தத்துடன் மேலே பலூன் வெடித்தது.. அதிலிருந்து பூக்களும், ஜிகினாத் தூள்களும் அவன் மேல் பொழிய வீட்டின் அனைத்து விளக்குகளும் எரிந்தன.. வரவேற்பறை நடுவில் ஒரு டீப்பாயின் மேல் கேக் வைக்கப்பட்டிருந்தது.. வீட்டு வேலையாள்கள் கைதட்ட அவன் ஏதோ ஓர் இந்திப் படத்தின் காட்சி போல் அந்தச் சூழ்நிலையை உணர்ந்தான் அவன் வீடா இது..? தாயைப் பார்த்து,

"அம்மா என்னம்மா இது..?" என்றான் அழமாட்டாத குறையாய்..

"எல்லாம் நம் நேரம்டா.." என்றாள் சோலையம்மாள் அதே தொனியில்.. பட் பட்டென்று கைதட்டியபடி வந்த மேனகா,

"வெல்கம் மிஸ்டர் நந்தகுமாரன்.." என்றாள்..

"யார் வீட்டில் யார் வரவேற்பது..?"

"யார் வீடா இருந்தால் என்ன..? யார் வரவேற்றால் என்ன..?"

"இதெல்லாம் உங்க வேலையா..? ஏன் இப்படிச் சீன் கிரியேட் பண்றீங்க..?"

"உங்கள் வீட்டில் உங்களோடு என் முதல் நாள்.. கொண்டாடலாம்னுதான்.."

"கேட்கச் சகிக்கலை.. அம்மா.. நைட் டிபனை மாடிக்கு என் ரூமிற்கே கொண்டு வந்து விடுங்கள்.."

"ஏன் துரை கீழே வந்து சாப்பிட மாட்டாரா..?" என்று துரைசிங்கம் உறும..

"ஆமாம்.. பெரிய துரை படுத்துகிற பாட்டில் அவர் மூஞ்சியைப் பார்த்துக்கிட்டு சாப்பிடச் சின்ன துரையால் முடியாது.."

"அதெல்லாம் ரூமிற்கு சாப்பாடு வராது.."

"நானும் சாப்பிட வரமாட்டேன்.."

சோலையம்மாள் பதறிப் போனாள்.. காலையிலிருந்து வகை வகையாய் உணவு சமைத்து எல்லோருக்கும் போடுகிறாள்.. பெற்ற மகனுக்கு ஒரு வாய் உணவு போட முடியவில்லை என்றால் தாய் மனம் என்ன பாடு படும்..?

"நீ போடா ராஜா.. நான் சாப்பாடு எடுத்து வருகிறேன்.."

"நீங்கள் போங்கள் நந்தகுமாரன்.. நான் எடுத்து வருகிறேன்.." என்று மேனகா கூற அவன் தாயைப் பார்த்து,

"அம்மா கவனியுங்கள்.. நீங்கள் மட்டும்தான் என் ரூமிற்கு வரணும் புரியுதா.." என்று கூறிவிட்டு எரிச்சலுடன் சென்று விட்டான்..

அவன் சென்ற திக்கைப் பார்த்தபடி மேனகா அசையாமல் நிற்க,

"என்ன மருமகளே.. முதல் நாளே மலையைச் சுட்டால் எப்படி.. அடி மேலடி அடிச்சா அம்மிக்கல்லே நகரும், என் பிள்ளை எம்மாத்திரம்..?" என்றார் துரைசிங்கம்..

"வெல்செட் அங்கிள்.. நான் ஜெயிக்காமல் சென்னைக்குத் திரும்ப மாட்டேன்.."

அன்று இரவு பலகாரத்தை மகனுக்கு ஒரு தட்டில் எடுத்து வைத்து சுற்றிலும் சின்னக் கிண்ணங்களில் குருமா

மற்றைய பதார்த்தங்களை எடுத்து அடுக்கி இன்னொரு தட்டுக் கொண்டு மூடி சோலையம்மாள் மாடியேறிச் சென்றாள்.. நந்தகுமாரன் அறைக்குள் நுழையப் போகும்போது மேனகா அழைத்தாள்..

"ஆன்ட்டி.. நான் உதவி செய்யட்டுமா..?"

சோலையம்மாள் திரும்பிப் பார்த்தாள்.. அறை வாசலில் மெல்லிய நைட்டி அணிந்து மேனகா நின்றிருந்தாள்.. சோலையம்மாளின் முகம் சுருங்கியது..

"பாரும்மா.. இது பட்டணமில்லை.. கிராமம் இங்கே இப்படி கவுனை போட்டுக்கிட்டு ஆம்பளைங்க முன்னாடி நடமாடக்கூடாது.."

"ஓஹ்.. ஆன்ட்டி.. இது நைட் டிரஸ்.."

"இருக்கட்டும்மா.. இதைப் போட்டுக்கிட்டால் தூங்க வேண்டியதுதானே..? ஏன் அந்நிய ஆம்பளைக இருக்கிற ரூமுக்குள் வரணும்னு நினைக்கிற..?"

"ஆன்ட்டி.. இது என் நந்தகுமாரோட ரூம்.. நான் அவரை தேர்ட் பெர்ஸனா நினைக்கவே இல்லை.."

"ஆனா.. அவன் உன்னை மூணாம் மனுசியாத்தானே நினைக்கிறான்..." என்ற சோலையம்மாள் மகனின் அறைக்கதவைத் தட்ட அது லேசாகத் திறந்தது உள்ளே போய் மேனகாவைப் பார்த்துக் கொண்டே கதவைத் தாழிட்டாள்..

"என்னம்மா முகம் கோபமாக இருக்கு.." என்று கேட்ட மகனிடம்,

"காலம் கலிகாலமா போச்சுடா தம்பி.. ஆம்பளைக கிட்டயிருந்து பொண்ணுகளைத்தான் காப்பாத்த ரூமில் போட்டு அடைப்போம், உன் கதை தலைகீழாக இருக்கு.." என்றாள்..

வெளியே நின்றிருந்த மேனகாவின் காதுகளில் இந்த வார்த்தைகள் அட்சரம் பிசகாமல் அப்படியே விழுந்தன.. மேனகாவின் முகம் அவமானத்தில் சிறுத்தது.. பழைய மேனகாவாக இருந்தால் இப்படி ஓர் பட்டிக்காட்டு வீட்டில் காலடிகூட எடுத்து வைத்திருக்க மாட்டாள்.. இந்த மேனகா

நந்தகுமாரனை ஜெயிக்க சபதம் போட்டு வந்தவளாயிற்றே.. பல்லைக் கடித்துக் கொண்டு மாடி வராண்டாவில் நடை பயின்று கொண்டிருந்தாள்.. சாப்பிட்டு முடித்தவுடன் சோலையம்மாள் பாத்திரங்களுடன் வெளியேற, நந்தகுமாரன் மேனகா தூங்கியிருப்பாள் என்று நினைத்தவனாய் மாடி வராண்டா பக்கம் வந்தான்.. இரவு நேரக் காற்று ஜிலுஜிலுவென்று வீச கைப்பிடிச் சுவரில் சாய்ந்தவன்,

"கிளைமேட் நல்லாயிருக்கு இல்லையா மிஸ்டர் நந்தகுமாரன்.." என்ற குரல் கேட்டு தூக்கி வாரிப்போட திரும்பிப் பார்த்தான்.. மேனகா நின்றிருந்தாள்..

"யு ஸீ.. மிஸ்டர் நந்தகுமாரன்.. இது உங்கள் வீடு.. நான் கெஸ்ட்.. என்னிடம் பயந்து கொண்டு இவ்வளவு ஸில்லியாக பிஹேவ் பண்ண வேண்டுமா..?"

நந்தகுமாரன் யோசித்தான்.. இந்தப் பெண்ணின் கேள்வி உண்மையானது தானே..

"ஐ நோ மிஸ் மேனகா.. பட் வாட் கேன் ஐ டு..? எனக்கு உங்கள் மேல் ஈடுபாடு இல்லை என்று சொன்ன பின்னாலும்.. ஐ ஆம் ஸாரி டு ஸே திஸ்.. நீங்கள் என்னைத் துரத்திக் கொண்டு வருவது போல் இருக்கிறது.. எனக்கு இது பிடிக்கவில்லை.."

"ஏனென்றால் நம் தமிழ் கல்ச்சர் பிரகாரம் ஒரு ஆண் தான் பெண்ணை விரும்ப வேண்டும்.. அவள் மறுத்தால் துரத்தித் துரத்தி காதலிக்க வேண்டும்.. நம் தமிழ் சினிமாவில் எல்லாம் இப்படித்தானே காட்டுகிறார்கள்.. அதே ஒரு ஏழை கறுப்பு நிறமுடைய பெண் பணக்கார சிவந்த நிற ஆணை துரத்தித் துரத்தி காதலிப்பது போல் எந்த சினிமாவிலாவது எடுக்கிறார்களா..? இல்லையே.. நீங்கள் வித்தியாசமானவர் என்று நினைத்தேன்.. இல்லை போல் இருக்கிறது.."

நந்தகுமாரன் கையைக் கட்டிக் கொண்டு அவன் பேசுவதை ரசித்தான்..

"மேனகா.. உங்களிடம் ஒன்று சொல்லவா..?"

"சொல்லுங்கள்.."

"இந்தக் காதல், கல்யாணம் இதை நீங்கள் விட்டு விட்டால் எனக்கு ஒரு நல்ல தோழியாக இருப்பீர்களோ என்று தோன்றுகிறது."

மேனகா புன்னகைத்தாள்..

"அது என் பாடு.. நீங்கள் என்னைக் காதலியாக நினைக்கும் வரை தோழியாக நினைக்கலாமே.."

"தாராளமாய்.. ஆனால் நட்பு என்ற எல்லைக் கோட்டை நீங்கள் தாண்டக்கூடாது.."

"நீங்கள் தாண்டாதவரை நான் தாண்ட மாட்டேன்.."

"நிச்சயம் நான் தாண்ட மாட்டேன்.."

"அது எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறீர்கள்..? நட்பிற்கும் காதலுக்கும் இடையே ஒரு நூல் அளவுதான் கோடு உள்ளது."

நந்தகுமாரன் நிதானமாய் அவளைப் பார்த்தான்..

"அந்தக் கோட்டைத் தாண்டி ஏற்கெனவே என் மனதில் ஒரு பெண் உட்கார்ந்து விட்டாள்.." உண்மையை உடைத்தால் அவள் திரும்பிப் போய் விடுவாள் என்ற எண்ணத்தில் நந்தகுமாரன் இதைக் கூறினான்.

"நினைத்தேன்.. யார் அவள்..?"

"அதைக் காலம் வரும்போது சொல்கிறேன்.."

மேனகா யோசனையுடன் வரண்டாவில் நடந்தாள்.. பின் நின்றாள்..

"மிஸ்டர் நந்தகுமாரன்.. நீங்கள் காதலிப்பவர்.. உங்கள் காதல் எவ்வளவு உண்மையானதோ அது போல் உங்கள் மேல் நான் வைத்திருக்கும் காதலும் உண்மையானது.. நான் உங்களை வற்புறுத்த மாட்டேன்.. ஆனால் உங்கள் கல்யாணம் முடியும் வரை திரும்பிப் போக மாட்டேன்.. ஐ மீன்.. ஒன்று நீங்கள் உங்கள் காதலியை மணக்க வேண்டும்.. இல்லாவிட்டால் என்னை மணம் செய்ய வேண்டும்.."

"மேனகா.. எங்களுக்குச் சில பிரச்னைகள் இருக்கின்றன.. அவள் வீட்டில் இன்னும் சொல்லவில்லை.. அவள்

சொல்லாமல் நான் என் வீட்டில் சொல்ல முடியாது.."

"ஏன் அவள் வீட்டில் சொல்வதில் என்ன தடை..?"

"அவள் குடும்பத்தில் ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் பண்ணிக் கொடுக்க மாட்டார்கள்.."

"ஓ..! இதோ பாருங்கள் நந்தகுமாரன்.. ம்ம்.. உங்கள் பெயரை முழுவதும் நீட்டிச் சொல்வது ஒரு மாதிரி இருக்கிறது.. உங்கள் பெயரைச் சுருக்கி கூப்பிடவா..?"

இப்போது நந்தகுமாரன் புன்னகைத்தான்..

"என் அம்மா என்னை நந்து என்று கூப்பிடுவார்கள்.."

"அப்படியானால் நான் குமார் என்று கூப்பிடுகிறேன்.. உங்கள் அம்மாவை எனக்குப் பிடிக்கவில்லை.."

நந்தகுமாரன் புருவம் சுருங்கினான்.. தாயைப் பிடிக்க வில்லையென்று தன்னிடமே சொல்ல இவளுக்கு எவ்வளவு தைரியம் என்ற கோபம் கிளம்பும் அதே நேரத்தில் அவளது வெளிப்படையான சுபாவம் அவனைக்கவர்ந்தது..?

"ஏன்..?"

"ஏன்னா அவங்களுக்கு என்னைப் பிடிக்கலை.. தட்ஸ் ஆல்.."

நந்தகுமாரன் இன்னும் வியந்தான்..

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்..?"

"தெரியும்.. அது பெண்களுக்கான பிரத்யேக உள்ளுணர்வு.. இப்போ அது இல்லை விசயம்.. குமார்.. உங்கள் காதலில் பிரச்னைகள் இருந்தால் அது உங்கள் கவலை.. என் கவலையல்ல.. என் கவலை உங்களை மணப்பது எப்படி என்பது தான்.. ஸோ.. உங்கள் கல்யாணம் முடிய ஒரு மாதமோ, ஒரு வருடமோ, இல்லை இந்த ஜென்மம் முழுவதுமோ ஆனாலும் நான் அசர மாட்டேன்.. இந்த வீட்டை விட்டு நகர மாட்டேன்.. என்னைப் 'போ' என்று உங்கள் அப்பா ஒரு போதும் என்னைக் கிளம்பச் சொல்ல மாட்டார்.. ஒரு வகையில் நீங்கள் எனக்குத் தேங்க்ஸ் சொல்ல வேண்டும்.."

"எதற்கு..?"

"நான் உங்களது மெத்தனமான காதலுக்கு ஓர் உந்து சக்தியாக இருக்கப் போகிறேன் இல்லையா..? அதற்காக.."

"மேனகா காதல் ஒருவர் மேல் ஓர் முறை தான் வரும்.."

"ஆனால் முதல் முறை வருவதுதான் உண்மையான காதல் என்று எப்படிச் சொல்ல முடியும்.. மறுமுறை வருவதுகூட.. ஐ மீன் என் மேல் ஏற்படப் போவது கூட உண்மையான காதலாக இருக்கலாம் இல்லையா..?"

"உங்களிடம் வாய் கொடுக்காமல் இருப்பது நல்லது மேனகா.. குட்நைட்.."

"வெயிட்.. வெயிட்.. நாளைக்கு எனக்கு உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குப் போகனுமே.."

"போய் வாருங்களேன்.."

"பிரெண்ட்னு சொல்லி விட்டு நழுவினால் எப்படி..? நீங்கள் தானே எனக்கு ஊரைச் சுற்றிக் காட்ட வேண்டும்.."

"நானா..? அது சரிவராது மேனகா.."

"ஏன்.. பயமா..? என்மேல் காதல் வந்து விடும்ன்னு பயமா..?"

"நெவர்.. என் காதல் பலவீனமானது அல்ல.."

"அப்படியானால் என்னுடன் வாருங்கள்.."

"சரி வருகிறேன்.. ஆனால் ஆபிஸ் முடிந்துதான் வருவேன்.."

"நோ பிராப்ளம்.. நான் உங்கள் ஆபிஸில் வந்து ஜாயின் பண்ணிக் கொள்கிறேன்.."

"எப்படி வருவீர்கள்..?"

"காரில் வருவேன்.."

மேனகா அவள் அறைக்குள் மறைந்து விட நந்தகுமாரன் சிந்தித்தான்.. பின் ஒரு முடிவோடு தோளைக் குலுக்கிக் கொண்டான்.

மறுநாள் அலுவலகத்தில் மைதிலியின் பார்வையை எதிர்கொள்ளும் போது அவள் முகத்திலிருந்த சோர்வு உறுத்தியது.. அன்றைய வேலை முடிந்து மாலை மேனகா வருவதாகச் சொன்னாளே என்று அவன் நினைத்துக் கொண்ட அதே நேரத்தில் அவனது அலுவலக வாசலில் அவளது கார் வந்து நின்றது.

காரை விட்டு இறங்கியவள் டக்டக்கென்று தன் ஹை ஹீல்ஸ் சப்திக்க நடந்து வந்து டேவிட்டிடம் நின்று..

"மிஸ்டர் நந்தகுமாரனைப் பார்க்கணுமே.." என்றாள்.

அந்த அழகிய அல்ட்ரா மாடர்ன் யுவதியை மேலும் கீழும் பார்த்த டேவிட்டிற்கு மூச்சுத் திணறியது.. அவளுடன் பேச்சை வளர்க்க விரும்பி,

"அதற்கு நீங்கள் யார்ன்னு சொல்லணுமே.." என்றான்..

"ஐ ஆம் மேனகா.." என்று அவள் கூறியதும் டேவிட்டின் அருகிலிருந்த மைதிலி சடக்கென்று நிமிர்ந்து பார்த்ததை மேனகா பதிவு செய்து கொண்டாள்.. அதே நேரம் நந்தகுமாரன் அறைக் கதவைத் திறந்து கொண்டு வர,

"ஹாய் குமார்.. உச்சிப் பிள்ளையார் கோவிலுக்கு கூட்டிப் போகிறேன்னு சொல்லிட்டு இன்னும் கிளம்பாம இருக்கீங்களே.. கமான்.." என்றாள்.. அவள் மனம் ஓர் கணக்கிட்டது.. அவளது பெயரைக் கேட்டதும் நிமிர்ந்து பார்த்த அந்தப் பெண் நந்தகுமாரனது காதலியாக இருந்தால் நிச்சயம் கோவிலுக்குப் பின் தொடர்ந்து வருவாள்.. அவள் யாரென்று அறிந்து கொள்ள அது முதல் படி..

"இதோ வந்து விட்டேன்.." என்ற நந்தகுமாரனின் கையிலிருந்த அவனது டி.வி.எஸ் அப்பாச்சி வண்டியின் சாவியை சுவாதீனமாக பிடுங்கிக் கொண்டவள்,

"உங்கள் வண்டியை என் கார் டிரைவர் வீட்டுக்கு ஓட்டிப் போய் விடுவார்.. நாம் என் காரில் போகலாம்.." என்று கூறினாள்..

நந்தகுமாரன் 'உன் இஷ்டம்' என்பது போல் தோள் குலுக்கி கை விரித்தான்.. இருவரும் இணைந்து சென்று மறைந்தார்கள்.. அவர்கள் கண் பார்வையிலிருந்து மறையவும் டேவிட் பாத்திமாவைப் பார்த்து,

"இதுதான் காத்திருந்தவள் காதலனை நேற்று வந்தவள் தள்ளிக் கொண்டு போவது என்பது.." என்றான்.

பாத்திமா மைதிலியின் முகம் பார்க்க அவள் கிளம்பினாள்..

"இரு மைதிலி நானும் வருகிறேன்.." என்று பாத்திமா கூற,

"எங்கே உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குப் போகப் போகிறீர்களா...? என்ன பார்க்கிறீர்கள்..? மைதிலி வீட்டுக்குப் போகப் போவதில்லை.. நம்ம நந்தகுமாரன் எங்கே போயிருக்கிறாரோ அங்கே போகப் போகிறாங்க.. என்ன மைதிலி நான் சொல்வது சரிதானே.. நீங்க மசூதிக்குப் போய் தொழுகை பண்ணுங்க.. நானும் சர்ச்சுக்குப் போய் பிரேயர் பண்ணுகிறேன்.. அப்படியாவது மைதிலியின் காதல் இந்த மேனகா சுனாமியிலிருந்து தப்பிக்கிறதா என்று பார்க்கலாம்.." என்று கூறினான் டேவிட்.

மைதிலி பதில் சொல்லாமல் அங்கிருந்து விரைந்தாள்.. ஓர் ஆட்டோ பிடித்து உச்சிப் பிள்ளையார் கோவிலை அடைந்தவள் கோவில் சுற்றுப் பிரகாரத்தில் முன்னே சென்று கொண்டிருந்த நந்தகுமாரனையும், மேனகாவையும் பார்த்து விட்டு மெல்லப் பின் தொடர்ந்தாள்.. அதுவரை அவள் வருகையை எதிர்பார்த்திருந்த அந்த இருவரின் மனமும் தனித்தனியே துள்ளியது.. மேனகா மைதிலியை இனம் கண்டு கொண்டாள்.. நந்தகுமாரன் அவள் மனதின் பயத்தைக் கண்டு கொண்டான்.. மெல்ல அவனது கை விரல்கள் மேனகாவின் கைவிரல்களுடன் பின்னிப் பிணைந்தன.. பின் தொடர்ந்த மைதிலி வெப்பமானாள்.. மனம் கொதித்து உடைந்தாள்..

'அவளது நந்தகுமாரனா அவள் மனத்தை துடிக்க வைப்பது..?' என்று மைதிலியின் உள்ளம் அவளைக் கேள்வி கேட்டது.

# 10

மேனகா நந்தகுமாரன் தன் விரல் பற்றியதும் ஆச்சர்யப்படவில்லை.. எப்படி மைதிலியின் வருகையை அவள் எதிர்பார்த்தாளோ அதே போல் அவள் வந்ததும் தன்னைத் தொட்டுப் பேச அவன் முயல்வான் என்பதையும் எதிர்பார்த்தாள்.. எனவே மனதிற்குள் நகைத்துக்

கொண்டாள்.. ஒரு பெண்ணின் பொறாமையைத் தூண்டி விட இன்னொரு பெண்ணை பயன்படுத்திக் கொள்ளும் அவனது புத்திசாலித்தனத்தை எண்ணியபடி கிடைத்த சந்தர்ப்பத்தை விடாதவளாய் அவன் தோள் மேல் தலை சாய்த்து பின்னிப் பிணைந்து கொண்டாள்.. மைதிலியின் மேனி நடுங்கவே ஆரம்பித்து விட்டது.. பரபரப்பாய் தன் செல்போனை எடுத்து அவனின் நம்பர்களை அழுத்தினாள்..

"ஹலோ.." என்றான் முன்னே சென்று கொண்டிருந்த நந்தகுமாரன்,

"ஹலோவா.. ஏன் என் நம்பரைப் பார்க்க வில்லையா..? இல்லை இது யாருடைய நம்பர்ன்னு தெரியவில்லையா..?"

"நான் கொஞ்சம் பிஸியாக இருக்கிறேன்.."

"தெரியுமே.. நீங்கள் பிஸியாக இருக்கும் லட்சணத்தைப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன்.."

"எங்கே.. நீ இங்கே வந்திருக்கிறாயா..?" என்று ஒன்றும் தெரியாததுபோல் நந்தகுமாரன் வினவ,

"முதலில் அவளை விட்டுவிட்டு இங்கே வாங்க.. உங்களிடம் பேச வேண்டும்.."

"எங்கே வர..?"

"ம்ம்.. திரும்பிப் பாருங்கள் தெரியும்.."

நந்தகுமாரன் செல்போனை அணைத்துவிட்டுச் சிரித்துக் கொண்டான்..

"மேனகா.. நீங்கள் கொஞ்சம் இங்கேயே உட்கார்ந்து வெயிட் பண்ணுங்கள்.. எனக்கு ஒரு வேலையிருக்கிறது."

"எது உங்கள் காதலியைச் சமாதானப்படுத்தும் வேலையா..?"

"உங்களுக்குத்தான் உடம்பெல்லாம் மூளையாயிற்றே.. கண்டு பிடித்து விட்டீர்கள்.."

"ஓ.கே.. நான் காத்திருக்கிறேன்.. ஆனால் உடனே வந்து விட வேண்டும்.."

"முயற்சி பண்ணுகிறேன்.."

நந்தகுமாரன் திரும்பி மைதிலியிடம் செல்ல சுற்றுச் சுவரில் சாய்ந்தபடி மேனகா கவனித்துக் கொண்டிருந்தாள்.

"என்னடி..? இன்னைக்கு நான் கூப்பிடாமலே என்னைப் பார்க்க வந்திருக்கிற..? என்ன புதுக் கரிசனம்..?"

"எனக்குப் புதிதாய் எதுவும் வந்து விடவில்லை.. உங்களுக்குத்தான் புதிதாய் வந்திருக்கிறது.." மைதிலியின் விழிகளில் நீர் தளும்பியது..

"ஏன் வரப்போவதை சொன்னேனே.. நீ தடுத்து நிறுத்துவதுதானே.."

"நான் தடுக்காவிட்டால் என்னை விட்டுப் போய் விடுவீர்களா..?"

"வேறு என்ன செய்வது..?"

"என்னது.. என்ன சொன்னீர்கள்..?"

"ஏண்டி.. தமிழில்தானே சொன்னேன்.. சும்மா புலம்பிக்கிட்டு.."

"நந்து.. நந்து.." மைதிலி குரல் தழுதழுக்க அவன் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.. அவளைத் தொட்டதும் போட்டுக் கொண்டிருக்கும் வேடம் மறந்துவிட அவள் கையை இறுக்கிக் கொண்டான் அவன்..

"ஏண்டி என்னைப் படுத்துகிறாய்.. ஒரு வார்த்தை 'இம்'மென்று சொன்னால் ஊர் அறிய என் பெண்டாட்டியாக்கிக் கொள்வேனே.. ஏன் இப்படி மறுகுகிறாய்.. உன் புருசனாக நானிருந்தால் மேனகா உறவு கொண்டாட வருவாளா.."

"கொஞ்ச நாள்.. கொஞ்ச நாள் பொறுங்கள் நந்து.."

"சட்.." அவளது கையை விட்டு விட்டு நகர்ந்து செல்ல அவன் யத்தனிக்க அவன் தோள் மேல் சாய்ந்து விசும்ப ஆரம்பித்து விட்டாள் மைதிலி..

"எனக்கு தைரியமில்லை என்பதற்காக நீங்கள் எனக்கு இல்லையென்று ஆவதா..? நான் தாங்க மாட்டேன் நந்து.."

நந்தகுமாரனின் கரங்கள் அவளைச் சுற்றி ஆதரவாய் அணைத்துக் கொண்டன.. சுற்றிலும் இருந்தவர்களை

லட்சியம் செய்யாதவனாய்,

"இவ்வளவு காதலை மனசுக்குள் வைத்திருந்து என்னடி பிரயோசனம்.. அதை தக்க வைத்துக் கொள்ள மாட்டேன்கிறாயே.." என்றான்..

அவனது சட்டையில் முகம் துடைத்துக் கொண்ட மைதிலி..

"எனக்கு அந்த வித்தை தெரியவில்லை.." என்றாள்.

அவளது தலையில் "மண்டு" என்று குட்டிய நந்தகுமாரன்..

"குமார்" என்று மேனகா அழைக்கவும் திரும்பினான்.. அருகில் வந்து நின்று கொண்டு மைதிலியை அலட்சியமாகப் பார்த்தபடி,

"நேரமாகி விட்டது குமார்.. வாங்க போகலாம்.." என்றாள்..

"கொஞ்சம் பொறு மேனகா வருகிறேன்.."

"குமார்.. இங்கு என்னுடன் தான் வந்தீர்கள் என்பது நினைவிருக்கட்டும்..."

"அதனால் என்ன மேனகா.. இது மைதிலி.. மைதிலி.. இது மேனகா.."

அறிமுகப்படுத்தப்பட்ட இருவரும் ஒருவரிடம் ஒருவர் சம்பிரதாய "ஹலோ" கூடச் சொல்லிக் கொள்ள வில்லை..

"இப்போது இந்தப் பெண்ணும் நம்முடன் வருகிறதா குமார்.. இது உங்களுக்கும் எனக்குமான நேரம்.."

"நந்து.. நான் கிளம்புகிறேன்.."

"பொறு மைதிலி.. உன்னை வீட்டில் விட்டு விட்டுப் போகிறோம்.."

"என் காரிலா குமார்.. என்னிடம் கேட்க வேண்டாமா..? நான் உங்களிடம் தனியாகப் பேசிக் கொண்டே காரோட்ட நினைக்கிறேன்.."

"நந்து.. நான் உங்களுடன் வருவதாகக் கூறவில்லையே.."

"வெல்.. குமார்.. அந்தப் பெண்ணே சொல்லி விட்டது.. வாங்க போகலாம்.."

மேனகா நந்தகுமாரனை இழுத்துக் கொண்டு நடக்க மைதிலி பார்த்துக் கொண்டே நின்றாள்.. நந்தகுமாரன்

அவளிடம் சிரித்துப் பேசிக் கொண்டு சென்றான்.. ஊடே ஓர் முறை கூட அவன் திரும்பிப் பார்க்கவில்லை.. தனியே படிகளில் இறங்கிய மைதிலிக்கு மனம் வலித்தது..

பின்னால் மைதிலி பார்த்துக் கொண்டு நிற்பதால் சிரித்துப் பேசினான் நந்தகுமாரன்.. ஆனால் சிரித்துக் கொண்டே மேனகாவிடம் என்ன பேசினான் என்பதை அறிந்திருந்தால் மைதிலி மனம் உடைந்திருக்க மாட்டாள்.. உற்சாகத்தில் துள்ளிக் குதித்திருப்பாள்.. நந்தகுமாரன் சிரித்தபடியே..

"இங்கே பாருங்கள் மேனகா.. நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்.. நீங்கள் எனக்குத் தோழியாக இருக்கலாம்.. ஆனால் அதற்காக என் அம்மாவையோ, என் மைதிலியையோ உதாசீனமாய் பேச நான் அனுமதிக்க மாட்டேன்.." என்று கூறினான்..

"நான் உங்கள் அம்மாவைப் பற்றியோ, மைதிலியைப் பற்றியோ விமரிசனமே பண்ணவில்லையே.. அப்புறம் எப்படி உதாசீனம் செய்வேன்..?"

"நேற்று இரவு என் அம்மாவைப் பிடிக்கவில்லை யென்று என்னிடமே கூறவில்லையா..?"

"ஆமாம்.. அதுதானே உண்மை.. அதனால் சொன்னேன்.."

"இப்போது மைதிலியை.. 'அது இது' என்று அஃறிணையில் குறிப்பிட்டு இன்சல்ட் பண்ணவில்லையா..?"

"யு, நோ குமார்.. என் ஸ்டேட்ஸ் வேறு.. என் தகுதிக்கு மாதம் ஒரு கோடி சம்பாதிக்கிறவர்களே கிட்ட நின்று பேச முடியாது.. மைதிலி.. ஆப்டர் ஆல் அந்தப் பெண்.. உங்கள் காதலி என்பதற்காக என் காரில் எனக்குச் சமமாக உட்கார வைத்து நான் கூட்டிப் போவதா..?"

"நல்லது.. உன் குணம் இதுதான் மேனகா, உனக்கும், எனக்கும் எப்படி நட்பு இருக்க முடியும்..? மைதிலியைச் சொல்கிறாயே.. நான் மாதம் முப்பதாயிரம் மட்டும்தான் சம்பாதிப்பேன் என் அருகே வந்து ஏன் நின்று பேசுகிறாய்..?"

"தேங்க் யூ குமார்.. மை டியர்.." என்று மேனகா பரவசமாக இவள் ஏன் சம்பந்தம் இல்லாமல் உளறுகிறாள்..? என்று

அவன் திகைத்தான்..

"குமார் என்னை 'வா போ'ன்னு ஒருமையில் கூப்பிட்டு விட்டீர்கள்..? என்னிடம் நெருங்கி விட்டீர்கள்.." என்றாள் அவள் மகிழ்ச்சியாக..

"உன் தலை.." என்றான் அவன் எரிச்சலுடன்..

"நெருக்கமும் இல்லை ஒரு மண்ணும் இல்லை.. உனக்கெல்லாம் மரியாதை கொடுத்தால் அதை பண்பாடாக நினைக்க மாட்டாய்.. உன் பணத்துக்காக மரியாதை கொடுப்பதாக நினைப்பாய்.. அவ்வளவு பணத்திமிர் உனக்கு.." என்றான் நந்தகுமாரன் மைதிலி போய் விட்டாளா என்று திரும்பிப் பார்த்தபடி.. அவள் போய் விட்டடிருந்தாள்.. இனி இவளிடம் இழைய வேண்டிய அவசியமில்லை என்ற நிம்மதியுடன் அவன் நான்கு அடி விலகி நடந்தான்..

"என்ன குமார் விலகி நடக்கிறீர்கள்.. அந்தப் பெண் போய் விட்டதா..?"

நந்தகுமாரன் அவளை உஷ்ணமாய் முறைத்தான்..

"ஈஸி குமார்.. என் பொஸிஷனே வேற.. பணத்திமிர் என்று சொல்கிறீர்களே.. உங்கள் வீட்டு வேலையாள்கள் என் கண்ணசைவில் என் கட்டளைகளை நிறைவேற்று கிறார்களே எதற்காக..? என்னிடமிருக்கும் பணத்திற்காக நீங்கள் அவளைக் காதலிக்கிறீர்கள் என்பதற்காக, நான் உங்களைக் காதலிக்கிறேன் என்பதற்காக அந்த மைதிலி எனக்கு ஈடாக மாட்டாள், ஸோ என்னால் அவளுக்கெல்லாம் தேவையில்லாத இம்பார்ட்டன்ஸ் கொடுக்க முடியாது.."

"நானும் பணக்காரன்தான் மேனகா.."

"என்னளவு இல்லை குமார்.."

"அப்படியா..? நீ சொல்லும் அளவுக்கு அதிகமான பணத்திற்காக உன்னை மற்றவர்கள் உச்சியில் வைத்துப் பார்க்கலாம்.."

"மற்றவர்களிடம் ஏன் போகிறீர்கள் குமார்.. உங்கள் அப்பாவே என்னை உயர வைத்து அண்ணாந்து பார்த்துத் தான் பேசுகிறார்.."

"உன் பணத்திற்காக அல்ல.. உன் ஜமீன் பரம்பரை என்ற மோகத்திற்காக.. என் அப்பாவை பழம் பெருமை மோகப்பேய் பிடித்து ஆட்டுகிறது.. உனக்கு ஒரு சவால் விடுகிறேன் மேனகா.. உன் பணப் பெருமையையும் பரம்பரைப் பெருமையையும் என் அம்மாவை மதிக்க வைத்து விடு பார்ப்போம்.."

"அதனால்தான் அவர்களை எனக்குப் பிடிக்க வில்லை.."

"நானும்தான் உன் பணத்திமிரை வெறுக்கிறேன்.. என்னை நீ வெறுக்கக்கூடாதா..?" கலகலவென்று நகைத்தாள் மேனகா..

"என்னைப் போன்ற ஓர் பெண்ணிடம் நீ என்னை விரும்பக் கூடாதான்னு தான் கெஞ்சுவார்கள்.. நீங்கள் இதிலும் வித்தியாசமானவர்தான்.."

பேசிக் கொண்டே கீழே இறங்கி வந்து விட்டிருந்தார்கள்.. மேனகா அவனுக்காக கார் கதவைத் திறந்துவிட அதை மூடியவன்..

"நீ போ மேனகா.. நான் வந்து கொள்கிறேன்.." என்றான்..

"இதற்கு என்ன அர்த்தம் குமார்.. நீங்கள் என்னுடன் இந்த மாலை நேரத்தை செலவழிப்பதாக வாக்குக் கொடுத்திருந்தீர்கள்.."

"என் வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன்.. உனக்கு உச்சிப் பிள்ளையார் கோவிலைச் சுற்றிக் காண்பித்து விட்டேன்.. மாலை முடிந்து இரவும் வந்து விட்டது.."

"இரவு நேரத்தில் தனியாக என்னைப் போகச் சொல்கிறீர்களா..?"

"நீ ஆயிரம் பேருக்குச் சமம் மேனகா.. உனக்கு யாரும் சமம் இல்லை.. நீ தனியாக மாண்புமிகு சென்னை மாநகரிலேயே நள்ளிரவு வரை சுற்றுவாயாமே.. இது சாதாரண வேம்பூர் கிராமம் திருச்சியிலிருந்து அரை மணி நேரப் பயணம்தான்.. அத்தோடு.. நாங்கள் ஜமீன் பரம்பரை இல்லையே தவிர எங்களுக்கென்று வேம்பூரில் ஒரு மதிப்பு மரியாதை இருக்கிறது.. எங்கள் வீட்டு விருந்தாளிக்கு எந்தத் தொந்தரவும் வராது.."

"அந்தப் பெண்ணை என் காரில் ஏற்றிக் கொள்ளாததால் நீங்கள் என்னுடன் வர மறுக்கிறீர்கள்.. இது நியாயமில்லை குமார்.."

"நியாய அநியாயத்தைப் பற்றி நீ பேசக்கூடாது மேனகா.. நான் உன்னைக் காதலிக்கவில்லை என்று தெரிந்திருந்தும் மைதிலியைத்தான் காதலிக்கிறேன் என்று தெரிந்திருந்தும் என் வீட்டில் முற்றுகையிட்டது போல் முகாமிட்டு விட்டு நீ பேசுகிறாய்..? என் மைதிலியை என் முன்னாடியே டீஸ் பண்ண உனக்கு என்ன தைரியம்..?"

"... ஹா.. அவளை வெறுப்பேற்ற என்னோடு கொஞ்சிக் குழாவுவது போல் நடித்தது யார்..? நீங்கள் தானே..?"

"ஏய்.. காதலைப் பற்றி உனக்கு என்ன தெரியும்..? அவளைக் கடுப்பேற்ற நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்.. ஆனால் காதலிப்பது அவளை மட்டும் தான்.. நடிப்பு உண்மையாகி விடாது மேனகா.."

"நானும் உங்களைக் காதலிக்கிறேன் குமார்.."

"ஆனால் நான் உன்னைக் காதலிக்கவில்லை.. மனதளவில் மைதிலியை என் மனைவியாகவே நினைக்கிறேன்.. ஆகையால்.. நீ அவளை இன்சல்ட் பண்ணுவதை நான் அனுமதிக்க முடியாது.. இந்தக் காரில் அவளை ஏற்றிச் செல்ல நீ மறுத்ததற்காக நான் உன்னுடைன் வர மறுக்கவில்லை மேனகா, இதில் போகும் போது என்னுடன் தனியாகப் பேசிக் கொண்டே காரோட்டப் போவதாக நீ சொன்னபோது அவள் நெஞ்சம் எப்படித் துடித்திருக்கும் என்பதை நான் அறிவேன்.. அவள் இரவெல்லாம் அதை நினைத்து மறுகப் போகிறாள்.. என்னால் உன்னோடு தனியாக காரில் வர முடியாது."

நந்தகுமாரன் அங்கே நின்ற ஆட்டோ ஒன்றில் ஏறிச் சென்றுவிட மேனகா அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்..

'காலையில் ஒருத்தி.. மதியம் ஒருத்தி.. மாலையில் ஒருத்தி.. இரவில் ஒருத்தி.. என்று சட்டையை மாற்றுவது போல் காதலிகளை மாற்றும் ஆண்களைத் தான் நான் சென்னையில் பார்த்திருக்கிறேன்.. காதலில் கூட கற்போடு

இருக்க நினைக்கும் நீ தான் உண்மையான காதலன்.. நீ மட்டும் என்னைக் காதலித்தால்..?'

ஒரு பெருமூச்சுடன் காரைச் செலுத்த ஆரம்பித்தாள் அவள்..

பஸ் ஸ்டாப்பில் இறங்கிக் கொண்ட நந்தகுமாரன் தன் ஊருக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.. ஜன்னலோரம் அமர்ந்தான்.. இரவு நேரக் காற்று இதமாக உடலைத் தொட்டு விளையாடிச் சென்றது.. செல்போனை எடுத்து மைதிலியின் போன் நம்பர்களை அழுத்தினான்.. பின்னர் அணைத்து விட்டான்.. இரவு நேரத்தில் அவளுக்கு போன் பண்ணுவது தவறு.. அவள் குடும்பத்தினர் முன் அவளுக்கு சங்கடத்தை உண்டு பண்ணக்கூடாது என்று நினைத்தவனாய் கண்களை மூடிக் கொண்டான்.. ஊர் வர இறங்கி வீட்டிற்கு வந்தான்.

"ஏண்டா என் மானத்தை வாங்கணும்னு கங்கணம் கட்டிக்கிட்டு அலையறயா..?" என்று பாய்ந்தார் துரைசிங்கம்.. அன்னையை கேள்வியாய் நோக்கினான்.

"நீ காரில் வராமல் பஸ்ஸில் வருகிறாயாம்டா.. அதைத்தான் சொல்கிறார்.."

"பஸ்ஸில் வருகிறவர்களுக்கெல்லாம் மரியாதை நிறைய இருக்கிறது.." என்று கூறியவாறு அன்னையின் பக்கம் திரும்பி,

"என் சாப்பாட்டை நேற்றுப்போல் நீங்களே கொண்டு வாங்கம்மா.." என்று கூறிவிட்டு மாடியேறியவன் அங்கே நின்று கொண்டிருந்த மேனகாவைக் கவனிக்காதது போல் கதவை அடைத்துக் கொண்டான்.

அன்று இரவு மூன்று வேறுபட்ட குணங்களை உடைய நெஞ்சங்கள் உறக்கம் கொள்ளவில்லை..

## 11

மைதிலியின் கண்கள் சுவர் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.. இரவு முழுவதும் தூங்காமல் கண்ணீர்

விட்டுக் கொண்டிருந்தவள் காலை விடிந்தும் விடியாமல் இருக்கும்போதே படுக்கையை விட்டு எழுந்து விட்டாள்..

"என்னடி இவ்வளவு சீக்கிரம் ஆபிஸ் கிளம்பிட்டே..?"

"பெண்டிங் வொர்க் நிறைய இருக்கும்மா.."

"சரிசரி அதுக்காக கோழி கொறிப்பது போல் கொறிக்காம ஒழுங்கா ரெண்டு இட்லியை பிச்சு வாயில் போட்டுக் கொண்டு போ.."

"பசிக்கலை அம்மா.."

"மதிய டிபன் டப்பாவை எடுத்துக்கிட்டாவது போடி.."

"எடுத்துக்கிட்டேன் அம்மா... போய்விட்டு வருகிறேன்..." மைதிலி பரபரப்பாக வெளியேற வைத்தீஸ்வரன் முகத்தைத் துடைத்தபடி வந்தாள்..

"ஏண்டி உன் பொண்ணு இறக்கையில்லாமலே இறக்கை கட்டிக்கிட்டாற் போல் பறக்கிறாள்..?"

"இந்த வீட்டில் வந்து பிறந்திட்டாள் இல்லை.. அதனால்தான்.."

"ஏண்டி.. நல்லாத்தானே பேசிக்கிட்டு இருந்தே.. என்ன ஆச்சு..?"

"எதுவும் ஆகலை.. வழக்கமா நீங்கதானே வம்பிழுப்பீங்க.. மத்தவங்க குதர்க்கமா பேசினால் எப்படியிருக்கும்ன்னு நீங்க தெரிந்துக்க வேணாமா..?"

"தெரிய வைப்படி.. ஏன் தெரிய வைக்க மாட்டே.. ஐம்பது பவுன் நகை போடறேன்னு சொல்லிட்டு வெறும் ஐந்து பவுன் நகை போட்டு.. உங்க வீட்டில் என் தலையில் கட்டி வைச்சாங்களே.. அதைப் பற்றி வாய் திறக்காமல் குடித்தனம் பண்றேன் இல்லை.. ஏன் பேச மாட்டாய்..? வாய் கிழியப் பேசுவாய்.."

பாத்திரத்தை 'ணங்'கென்ற ஓசையுடன் சமையல் மேடையில் வைத்த விசாலாட்சி கோபத்துடன் திரும்பி வைத்தீஸ்வரனை முறைத்தாள்..

"அநியாயமாய் பேசுவதற்கும் ஓர் அளவிருக்க வேண்டும்.. உங்க தங்கை கல்யாணத்துக்கு வேணுமின்னு நாற்பத்தி

ஐந்து பவுனுக்கான பணத்தை முன்னாலேயே வாங்கி அதை வைத்து உங்க தங்கையை மேடேற்றிய குடும்பம் தானே உங்க குடும்பம்.. ஐம்பது பவுன் நகை போட வேண்டிய பெண் வெறும் ஐந்து பவுன் நகை போட்டுக்கிட்டு நிற்கிறாளேன்னு எங்க அம்மா மனசு கேட்காமல் அவங்க வளையலையும், நெக்லசையும் எனக்குப் போட்டுவிட்டு பதினைந்து பவுன் நகையோடு என்னை உங்ககூட இந்த வாழ்க்கையை வாழ அனுப்பி வைச்சது மறந்து போச்சா..?"

"'இந்த வாழ்க்கை'ன்னு பொடி வைத்துப் பேசுற.. ஏன் இந்த வாழ்க்கைக்கு என்ன குறைச்சல்..?"

"ஒரு குறைச்சலும் இல்லை.. பொழுது விடிஞ்சு பொழுது இருட்டி கண் மூடுகிற வரைக்கும் உங்களுக்கு பேச்சுத் துணையா 'உம்' கொட்டிக்கிட்டு இருக்கேனில்லை.. அப்புறம் எங்கேயிருந்து குறை வரும்.."

"ஏண்டி புருசன் பக்கத்திலேயே இருக்கணும்ன்னுதான் எல்லாம் பெண்களும் ஆசைப்படுவாங்க.. நான் ரிடையரான இந்த ஐந்து வருடமாய்த்தான் உன் கூட இருக்கிறேன்.. அதுக்கே இந்தப்பாடா..?"

"ஐந்து வருடத்திற்கே இந்தப் பாடுன்னா.. கல்யாணமான நாளிலிருந்து நீங்க வீட்டிலேயே இருந்திருந்தீங்க.. அவ்வளவுதான்.. இந்நேரம் நான் அடுப்படியில் பாத்திரங்களை சுரண்டிக் கொண்டு இருந்திருக்க மாட்டேன்.. பாயைச் சுறண்டிக்கிட்டு பைத்தியமாய் ஆகியிருப்பேன்.."

வைத்தீஸ்வரன் வாயை மூடிக் கொண்டு நகர்ந்தார்.. அவர் வாயையும் மூட வைத்து விட்ட பெருமையில் விசாலாட்சி சமையலில் இறங்கினாள்..

அலுவலகத்தில் எல்லோருக்கும் முன்னரே வந்து விட்ட மைதிலி இருப்புக் கொள்ளாமல் தவித்தாள்.. அவள் பொறுமையைச் சோதித்த மணித்துளிகள் நகர முதலில் பாத்திமா உள்ளே வந்தாள்..

"குட்மார்னிங் மைதிலி.. என்ன சீக்கிரம் வந்து விட்டாய்..?"

"வந்தவுடன் பஸ் கிடைத்தது.. வந்துவிட்டேன்.."

மற்றவர்கள் எல்லோரும் வந்துவிட மைதிலி படபடப்பாய் உணர்ந்தாள்.. அதோ.. நந்தகுமாரன் வந்து விட்டான்.. அவள் பார்வையில் ஒளி பிறந்தது.. டேவிட்டுடன் பேசிக் கொண்டே வந்த நந்தகுமாரன் அவன் அறைக்கு நேராகச் செல்லாமல் டேவிட்டின் அருகே ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான் டேவிட் கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தபடி,

"என்ன ஆபிசர் சார் இன்றைக்கு விச்ராந்தியாய் உட்கார்ந்து விட்டீர்கள்.." என்று கேட்டான்..

"சும்மாதான் டேவிட்.. உன் கூடப் பேசணும்னு ஆசைன்னு வைச்சுக்கோயேன்.."

"இப்ப வாசலில் நின்று ஐந்து நிமிஷம் பேசினோம்.. டீ டயத்தில் பேசப் போகிறோம்.. அப்புறம் என் மேல் என்ன திடீர் அன்பு..?"

மைதிலி கம்ப்யூட்டர் மவுசில் கையிருக்க கண்களால் நந்தகுமாரனை விழுங்கிக் கொண்டிருந்தாள்... நந்தகுமாரனின் வாய் டேவிட்டிடம் பேசிக் கொண்டிருக்க கண்களால் மைதிலியை அள்ளிப் பருகிக் கொண்டிருந்தான்..

மைதிலி அவனது கருநீலச் சட்டையை ரசிக்க அவனோ அவள் உடுத்தியிருந்த அரக்குச் சிவப்பில் பட்டுக் கரையிட்ட காட்டன் சேலையை ரசித்துக் கொண்டிருந்தான்..

அவனது வளுவான கரங்களில் விளையாடிய தங்க பிரேஸ்லெட்டை அவள் பார்க்க அவளது ஒற்றைக் கல் மூக்குத்தி ஒளிர்வதை அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது பெரிய மீசையின் கம்பீரத்தை அவள் வியக்க அவளது நீண்ட பின்னலை அவன் வியந்து கொண்டிருந்தான்..

அவனது முகத்தையே அவள் பார்க்க அவள் முகத்தையே அவன் பார்க்க இடையில் டேவிட்டின் குரல் புகுந்து அவர்களது மோன நிலையைக் கலைத்தது.

"என்ன ஆபிசர் சார்.. எந்த உலகத்தில் இருக்கறீங்க..?"

"ஏண்டா இந்த உலகத்தில் இருக்கிறோம்ன்னு நொந்துக்கிட்டு இந்த உலகத்தில் தான் இருக்கிறேன் டேவிட்.."

மைதிலி துணுக்குற்றாள்.. 'என்ன பேச்சு இது..?' என்று கண்களால் கடிந்து கொண்டாள்..

"என்ன நந்து சார் விளையாட்டாய் பேசினால் சீரியஸா பதில் சொல்றீங்க.. என்ன ஆச்சு..?"

"எதுவுமே ஆக மாட்டேங்குது டேவிட்.. அதுதான் பிரச்னை.." என்று சலித்துக் கொண்டான் நந்தகுமாரன்.

பேச்சை மாற்ற எண்ணிய டேவிட்..

"சரி விடுங்க நந்து சார்.. நேத்து சாயங்காலம் ஒரு அசத்தலான பொண்ணு அரேபிய குதிரை மாதிரி டாக் டாக்குன்னு நடந்து வந்து உங்களை காரில் கடத்திக் கொண்டு போனதே அது யாரு நந்து சார்.. உங்க சொந்தமா..?"

மைதிலியின் ஒளி படர்ந்த முகம் ஒளி குன்றியது.. நந்தகுமாரன் அவளைப் பார்த்த விழி மாறாமல் டேவிட்டிற்குப் பதில் சொன்னான்..

"சொந்தமாகணும்னு துடிக்கிறவங்க டேவிட்.."

"அட்ரா சக்கை அப்படிப் போகுதா கதை.. ஏன் ஆபிசர் சார் என்ன முடிவு எடுக்கப் போறீங்க..?"

"ஏன் அப்படிக் கேட்கிற..?"

"அதுவோ அல்ட்ரா மாடர்ன் பொண்ணு.. வெளிநாட்டுக் காரில் சர்ருன்னு வந்து நிற்குது.. இன்னைக் கெல்லாம் பார்த்துக்கிட்டே இருக்கலாம் போல் அப்படி ஓர் அழகு.."

மைதிலி டேவிட்டை முறைக்க நந்தகுமாரன் சிரித்தான்..

"அந்த அழகெல்லாம் சும்மா பார்த்துக்கிட்டு இருக்க மட்டும்தான் லாயக்கு.. குடும்பம் நடத்த இல்லை.. அப்புறம் டேவிட்.. அவளுடைய படகுக் காரில் அவள் மட்டும் தான் கோவிலில் இருந்து வீட்டிற்குத் தனியாகப் போனாள்.. நான் பஸ்ஸில்தான் போனேன்.."

"இதை எதற்கு என்னிடம் சொல்கிறீர்கள் என்று புரியவில்லையே.."

"புரிய வேண்டியவங்களுக்கு புரிந்தால் சரி.."

நந்தகுமாரன் எழுந்து சென்று அறைக்குள் மறைந்த அடுத்த கணம் அவனது செல்போன் ஒலித்தது.. யார் என்று அறிந்தவனாய் சிரிப்புடன்,

"என்னடி..?" என்றான்..

"நான் நைட்டெல்லாம் தூங்கவில்லை தெரியுமா..?"

"அதுதான் எனக்குத் தெரியுமே.. முட்டாள்.. என் முன்னாடியே ஒருத்தி உன்னை டீஸ் பண்ணுவாள்.. நான் அவளுடன் காரில் போவேனா.. இதோ பார்டி.. இப்பவும் சொல்கிறேன்.. நீ உன் வீட்டில் நம் காதலை ஓபன் பண்ணு.. நான் முறைப்படி பெண் கேட்டு வருகிறேன்.."

"சொல்லுகிறேன் நந்து.. இன்னும் கொஞ்ச நாளில் சொல்லி விடுகிறேன்.."

"ச்சு.. இதுதாண்டி உன்கூட பெரிய ரோதனை.. வாழவும் மாட்டாய்.. என்னையும் உயிரை எடுப்பாய்.. உனக்கெல்லாம் எதுக்குடி இந்தக் காதல்.."

அவன் போனை கோபத்துடன் துண்டித்து விட்டான்.. மைதிலி சோர்வாய் வேலையில் ஆழ்ந்தாள்..

வேம்பூரில் நந்தகுமாரனின் வீட்டில் மதிய உணவுக்காக சோலையம்மாள் சமைத்து வைத்திருந்தவைகளை சாப்பாட்டு மேஜையில் பரப்பி வைத்துக் கொண்டிருந்தாள்.. துரைசிங்கம் வயலில் இருந்து திரும்பி வந்தவர், கை கால் முகம் கழுவிக் கொண்டு வந்தபடி,

"மேனகாவைச் சாப்பிட வரச் சொல்லுடி.." என்றார்.

சோலையம்மாள் வேலைக்கு இருந்த பெண்களில் ஒரு பெண்ணிடம்,

"செங்கமலம் போய் அந்தப் பொண்ணைச் சாப்பிட வரச்சொல்லு.." என்றாள்..

"ஏன் மகாராணி போய் கூப்பிட்டு வந்தால் கிரிடம் இறங்கிடுமோ.. வேலையாள் கிட்ட வரச் சொல்லிவிடறே..

அதுவும் என்னன்னு சொல்லி விடறே..? அந்தப் பொண்ணை..! எந்தப் பொண்ணு..? அது ராஜ வம்சத்துப் பொண்ணுடி.. ஜமீன் பரம்பரை.. அதைத் தங்கத் தாம்பளத்தில் தாங்க வேண்டாமா..?"

"இதோ பாருங்க.. என் உடம்பு கல்லால் செய்து வைக்கப்படலை.. என் உடம்பில் ஆயிரம் நோய், நோக்காடுன்னு இருக்கு.. இந்த ஆட்டத்துக்கு எல்லாம் ஈடுகொடுக்க என்னால் முடியாதுன்னு நீட்டி, நிமிர்ந்து ஏதாவது ஆஸ்பத்திரியில் போய் படுத்துக்கிட்டேன்னு வைங்க.. என் பிள்ளை எனக்கு ராஜ வைத்தியம் பார்த்து குணமாக்கிடுவான்.. புருசன் ஆச்சே.. வீட்டுப் பொம்பளை நாம இழுத்துப் போர்த்திக்கிட்டு படுத்தால்.. அவர் என்ன பண்ணுவாருன்னு பார்த்தால் ஆட்டமா ஆடுறீங்க..? மாடி வீட்டு மகாராணி எப்பப் பார்த்தாலும் மாடியிலேயே அடைகாத்தால் நான் மேலே ஏறி அழைத்துக்கிட்டு வர முடியுமா..? எனக்கென்ன வயசா திரும்புது..?"

துரைசிங்கம் பயந்து போனார்.. மகன் ஒரு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு இருக்க மனைவியும் நோயில் விழுந்து விட்டால் என்ன செய்வது..?

"சரி..சரி.. வீட்டுக்கு விருந்தாளி வந்திட்டால் நாம் தானே உபசரிக்கணும்..?"

"எத்தனை நாளைக்கு..? இல்லை.. எத்தனை நாளைக்குன்னு கேட்டேன்.. விருந்தாளி வந்தால் ஒரு நாள்.. இரண்டு நாள்.. ஏன் ஒரு மாதம் கூட இருப்பார்கள்.. இப்படியா மாதக் கணக்கில் இங்கே டேரா போடுவார்கள்..?"

"நீ ஏன் அந்தப் பொண்ணை வேற்றாளா பார்க்கிற.. வீட்டு ஆளா பார்.."

"அப்படியா சாமி.. சரி.. உன் வீட்டாள் விருந்தாளியை வரச் சொல்லி.. எனக்கு வேறு எதுவும் செய்யச் சொல்ல வேணாம்.. சமைச்சு வைச்சிருக்கேனே இதையெல்லாம் தானாய் போட்டுச் சாப்பிட்டுக்கச் சொல்லுங்க பார்க்கலாம்.."

"ஏண்டி.. இப்படிச் சொன்னால் எப்படிடீ..?"

"வேறு எப்படிச் சொல்ல..? பார்த்துப் பார்த்துப் பரிமாறினாலும் ஆயிரம் நொட்டை சொல்லிக்கிட்டு சாப்பிடுகிற பொண்ணை இப்போதுதான் பார்க்கிறேன்.."

"ஹாய் அங்கிள்.." என்றபடி மேனகா சாப்பிட வந்தாள்..

முகமெல்லாம் மறைத்திருந்த மீசையின் இடையே வெண் பற்கள் பளிச்சிட,

"ஆய்ய் மேனகா.." என்றார் துரைசிங்கம்.. சோலையம்மாள் பல்லைக் கடித்தாள்..

"அந்தப் பொண்ணு சொன்னால் நீங்களும் அதே போல் சொல்லணுமா..? சரியாகச் சொல்லத் தெரிந்தால் சொல்லணும்.. இல்லை வாயை வைத்துக் கொண்டு பேசாமல் இருக்கணும்.. சாப்பிடுகிற இடத்தில் என்ன வார்த்தையைச் சொல்கிறீர்கள்.."

"ஹி.. ஹி.." என்று துரைசிங்கம் அசடு வழிய மேனகா இறுகிய முகத்துடன்,

"இன்னைக்கு என்ன ஸ்பெஷல் ஆன்ட்டி.." என்றாள்..

"இது என்ன ஹோட்டலாம்மா..? வீடு.. ஏதோ என்னால் முடிந்ததைச் செய்திருக்கிறேன் சாப்பிடு.."

மேனகாவின் முகம் சுருங்கியது.. தோரணையாய் கைகழுவி விட்டு வந்து அமர்ந்தவளின் முன் தட்டைப் போட்டுப் பரிமாறியபடி,

"ஏம்மா ஊர் சுற்றிப் பார்க்கணுமின்னு சொல்லிட்டு நீ வந்து பத்து நாளுக்கு மேலாகுது.. எங்கேயும் வெளியே போகக் காணோம்.. ரூமிலேயே அடைஞ்சு கிடக்கிறதுக்கா.. இங்கே வந்தே..?" என்று கேட்டாள் சோலையம்மாள்..

"இதை உங்கள் மகனிடம் கேட்க வேண்டியது தானே..?"

"அவனிடம் என்ன கேட்கிறது..?"

"காலையில் ஆபிஸ் போகிறேன்னு போகிறவர் நைட் பத்து மணிக்குத் தான் வீட்டுக்கு வருகிறார்.. நான் ஆபிஸ் போனால் ஒன்று நான் போகிறதுக்கு முன்னாலேயே போய் விடுகிறார்.. இல்லாவிட்டால் வேலையிருக்குன்னு என்னை ஆபீஸ் வராண்டாவில் உட்கார வைத்து பியூனிடம் அழுக்கு

தம்ளரில் டீ வாங்கித் தரச் சொல்லிவிட்டு போய் விடுகிறார்.. அப்புறம் நான் எப்படி ஊரைச் சுற்றுவது..?"

"அவனுக்கு வேலையிருக்கிறதுக்கும் நீ ஊரைச் சுற்றிப் பார்க்கிறதுக்கும் என்ன சம்பந்தம்..?"

"அவர்தானே எனக்கு ஊரைச் சுற்றிக் காட்டணும்..?"

"அவனுக்குத்தான் வேலையிருக்குன்னு சொல் லிட்டானே.. அவன் வராட்டி என்ன.. இவர் வயலுக்குப் போய் பார்க்கிறதை நான் பார்த்துக் கொள்கிறேன்.. இவரைக் கூட்டிக்கிட்டுப் போய் ஊரைச் சுற்று.."

"வாட்.." என்று மேனகா முறைத்தாள்... இந்தக் கிழவிக்கு என்ன தைரியம் இருந்தால் அவளை துரைசிங்கத்துடன் போகச் சொல்லுவாள்.. துரைசிங்கத்திற்கு இந்த சந்தர்ப்பத்தில் என்ன பேச என்று தெரியவில்லை.. மேனகா முடிவெடுத்தாள்.. இந்த சோலையம்மாளை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும்.. அவள் விரும்பும் நந்தகுமாரனின் தாய் அவள் என்பது அவளுக்கு மறந்து போனது.. நந்தகுமாரன் தாயின் மேல் உயிராய் இருப்பவன் என்பது அவளுக்கு மறந்து போனது.. பிறந்ததில் இருந்து உடலில் ஓடும் மேல் தட்டு ரத்தம் ஒன்றுதான் நினைவில் இருந்தது.. அவளது இயல்பான திமிருடன்..

"வெயிட்.. வெயிட்.. இதென்ன.. என் பிளேட்டில் என்ன போடறீங்க..? வாட் இஸ் திஸ் நான்சென்ஸ்.." என்றாள்..

"கீரைம்மா.. தினமும் ஒரு கீரை எங்கள் வீட்டு சமையலில் இருக்கும்.."

"உங்கள் வீட்டிலிருந்தா அதை அப்படியே என் தட்டில் போடணுமா..? எனக்குப் பிடிக்குதா, பிடிக்கலையான்னு கேட்க வேண்டாமா..? கன்ட்ரி புரூட்.. சுத்தப்பட்டிக்காடு.. கீரையாம் கீரை.. மாடுகள் கூடப் பழகிட்டு அதே புத்திதானே இருக்கும்.. அதுதான் மாட்டுக்குப் போடுவது மாதிரி மனிதருக்கும் போட்டுக்கிட்டு.. ஷிட்.." என்றவள் தன் தட்டை சோலையம்மாளின் பக்கம் தள்ளிவிட அது அவள் மீது மோதி கவிழ்ந்தது.. கட்டியிருந்த சேலையெல்லாம் கீரை சிறத சோலையம்மாள் ரௌத்ரமாய் நிமிர துரைசிங்கம் பதறி எழுந்தார்..

"சோலையம்மா.. உனக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னியே.. போ.. போய் ரூமில் படு.. ராக்காயி சாப்பாடு போடட்டும்.. அம்மா மேனகா நீ சாப்பிட உட்காரு தாயி.. ராக்காயி அம்மாவுக்கு எது பிடிக்கும்ன்னு கேட்டு பிடிச்சதை மட்டும் போடு.. என்ன புரியுதா.." என்றதும் அந்த ராக்காயி இன்றைக்கும் ஆயிரம் ரூபாய் அதிர்ஷ்டம் அடிக்கப் போகிற சந்தோசத்தில்,

"அதுக்கென்னங்க ஐயா.. அம்மா மனசு கோணாம சாப்பாடு போடுறேன்.." என்றாள் வாயெல்லாம் பல்லாக.

துரைசிங்கம் மனைவியைத் தரதரவென்று இழுத்துப் போகாத குறையாக தங்கள் அறைக்குத் தள்ளிக் கொண்டு போனார்.. உதடு துடிக்க நின்றவளிடம்,

"பாரு சோலையம்மா.. வெண்ணெய் திரண்டு வரும் போது பாத்திரத்தை உடைச்சிடாதே.. எனக்கும் அந்தப் பொண்ணு இப்படிச் செஞ்சது பிடிக்கலைதான்.. ஆனால் யோசிச்சுப் பாரு.. அவங்க அப்பா அந்தப் பொண்ணை நம்மை நம்பி அனுப்பி வைச்சிருக்கார்.. அதை நினைத்துப் பாரு.." என்று கெஞ்சினார்..

பதில் சொல்லாமல் கட்டிலில் அப்படியே சுருண்டு படுத்து விட்டாள் சோலையம்மாள்.. கணவன் எவ்வளவு கெஞ்சியும் உணவு உண்ணவில்லை.. கவலையுடன் துரைசிங்கம் தானும் சாப்பிடாமல் தோப்புப் பக்கம் சென்றுவிட மேனகா மட்டும் திருப்தியுடன் நன்றாகச் சாப்பிட்டுவிட்டப் பல்லைக் காட்டிய ராக்காயியை பணத்தால் அடித்துவிட்டுச் சென்று விட்டாள்..

இரவு நந்தகுமாரன் வந்ததும் தாயைத் தேடினான்..

"அம்மா, அம்மா.. செங்கமலம் அம்மா எங்கே..?"

"அம்மா ரூமில் படுத்திருக்காங்க சின்னய்யா.. மதியம் சாப்பிடலை.."

"ஏன் உடம்பு சரியில்லையா..?"

"இல்லைங்க ஐயா.. அது வந்து.." தயங்கிய செங்கமலம் என்ன நடந்தது என்பதைக் கூறிவிட்டாள்.. பணத்துக்காக இல்லாமல் உண்மையான விசுவாசத்தோடு வேலை

பார்ப்பவள் அவள்.. ஊருக்கே பெரிய வீட்டின் எஜமானிக்கு நேர்ந்த அவமானம் அவளால் சகிக்கக் கூடியதாக இல்லை..

நந்தகுமாரன் கோபத்தோடு தாயின் அறைக்குச் சென்றான்.. இருண்டு கிடந்த அறையில் ஸ்விட்ச்சைத் தட்டி விளக்கைப் போட்டான்.. கண்ணில் நீர் வழிய தாய் படுத்திருந்த கோலம் அவனைத் தாக்கியது.

பிறந்தது முதல் செல்வச் சீமாட்டியாய் வாழ்ந்த மேனகா முதல் முதலாய் அவளை ஒரு பொருட்டாய் நினைக்காத ஆண் மகனால் மிகக் கடுமையாகக் கண்டிக்கப்பட்டாள்..

# 12

அறைக்குள் வெளிச்சம் பரவியதும் சோலையம்மாள் கண்கள் கூசியவளாய் விழி விரித்துப் பார்த்தாள்.. மகனைக் கண்டதும் அவள் கண்கள் கலங்கி விட்டன.. நந்தகுமாரன்  தாயை தலை முதல் கால் வரை பார்த்தான்.. சேலை முழுவதும் கீரை தெறித்துக் காய்ந்து அப்பிப் போயிருந்தது.

"என்னம்மா கோலம் இது..?"

"எல்லாம் உன் அப்பா கொடுக்கிற இடம்பா.. ஜமீன் வம்சமாம் ஜமீன் வம்சம் - பொண்ணு பொண்ணா இருக்கணும்டா.. இவளை மாதிரி பிடாரியா இருக்கக் கூடாது.."

"நீங்க முதலில் எழுந்து சாப்பிடுங்க.. செங்கமலம்.." என்று கூவியவன் அவன் கூப்பிடும் முன்னரே சாப்பாட்டை எடுத்துக் கொண்டு அவள் வந்து நிற்பதைக் கண்டதும் மனம் கனிந்தவனாய்,

"வந்து விட்டாயா.. இங்கே கொடு.."  என்று வாங்கியவன், தாயை எழுப்பினான்.. "எழுந்திருங்கம்மா.."

"இல்லைப்பா.. என் மனசு ஆறலைடா தம்பி.."

"அதுக்காக பட்டினி கிடக்கிறதா..? அம்மா இது உங்கள் வீடு.. அவள் யாரு..? ஒண்ட வந்த பிடாரி.. அவளை வீட்டை விட்டு ஓட்டுவதை விட்டுவிட்டு.. எழுந்திருங்கம்மா.."

"நான் மாட்டோடு பழகுகிறவளாம்டா தம்பி.."

"மாடுன்னா மகாலட்சுமின்னு நீங்கதானே சொல்வீங்க.. நீங்க இந்த வீட்டு மகாலட்சுமி.. மகாலட்சுமி கூடத்தான் பழகுவீங்க.. அவளை மாதிரி மனுசப் பிறவியே இல்லாதவள்கிட்டயா பழகுவீங்க.."

தாயை சமாதானப்படுத்தி சாப்பிட வைத்தவன்,

"செங்கமலம் பாத்ரூமில் ஹீட்டரைப் போட்டுவிடு.. அம்மா இன்னும் பத்து நிமிசத்தில் நீங்க குளித்து வேறு சேலை கட்டிக்கிட்டு எனக்கு சாப்பாடு எடுத்துக்கிட்டு வரணும் புரியுதா.. செங்கமலம்.." என்று அழைக்க,

"நான் பார்த்துக்கறேன் சின்னய்யா.." என்றாள் செங்கமலம் உற்சாகமாய்..

மடமடவென்று மாடியேறியவன், மேனகாவின் அறைக்கதவைத் தட்டினான்.. திறந்தவள் மலர்ந்தாள்..

"ஓ..குமார்.. நீங்களா..? வாட் எ பிளசென்ட் சர்ப்ரைஸ்.. என் ரூம் கதவை நீங்க தட்டினீங்களா.. ஹய்யோ.. எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா.."

"உனக்குக் கொஞ்சமாவது மேனர்ஸ் இருக்கா.. சுத்தமாவே அது இல்லையா...? ஒரு வீட்டில் விருந்தாளியாய் வந்து வாரக்கணக்கில் வெட்கமில்லாமல் டேராவும் போட்டு விட்டு.. வீட்டைச் சேர்ந்தவர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ள உனக்கு வெட்கமாக இல்லை.. சே.. என்ன பொடித்தனமான ஆள் நீ.."

"குமார்.. மைண்ட் யுவர் வெர்ட்ஸ்.. நான் யார் தெரியுமா..?"

"தெரியுமே.. திமிர் பிடித்தவள்.. அகங்காரி... பெரிய வங்களுக்கு மரியாதை கொடுக்கத் தெரியாத பண்பாட்டில்லாத ஜென்மம்.. உன்னைச் சொல்லிக் குற்றமில்லை.. உன்னை இந்த லட்சணத்தில் வளர்த்து வைத்திருக்கிற உன் பெற்றவங்களைச் சொல்லணும்.."

"குமார்.. என் பேரண்ட்ஸைப் பற்றிப் பேச நீங்கள் யார்..? என்னைப் பற்றி பேசுங்கள்.. உங்கள் மேலுள்ள காதலால் கேட்க முயற்சி பண்ணுகிறேன்.. அவங்களைப் பற்றிப் பேசாதீங்க.. நான் கேட்டுக் கொண்டிருக்க மாட்டேன்..”

"இவ்வளவு மரியாதையாய் நான் பேசும்போதே உனக்கு ரோசம் பொத்துக் கொண்டு வருகிறதே.. என் வீட்டில் தங்கிக் கொண்டு.. என் அம்மா சமைத்துப் போடுவதை சாப்பிட்டுக் கொண்டு.. சாப்பாட்டுத் தட்டைத் தூக்கி என் அம்மா மேல் வீசியிருக்கிறாயே.. உன்னை.. பெண்ணாகப் போய் விட்டாய்.. இல்லாவிட்டால்.."

"இல்லாவிட்டால்..?"

"ஒரே அறையில் முப்பத்திரண்டு பல்லையும் உதிர்த்திருப்பேன்.. ராஸ்கல்.. யாருகிட்ட உன் திமிரைக் காட்டுற..?"

"திமிர்தான்.. பரம்பரைத் திமிர்.. பணக்காரத் திமிர்.. என்னிடம் பேசும்போது யோசித்துப் பேச வேண்டும்.. இதை உங்கள் அம்மாவிடம் சொல்லி வையுங்கள் இல்லாவிட்டால் இப்படித்தான் நடக்கும்.."

"உன் பரம்பரைப் புத்தியைத்தான் பார்த்தேனே.. சே.. உன் பணத்திமிரை வேற யார் கிட்டயாவது காட்டு.. இது என் அம்மாவின் வீடு.. உன்னிடமெல்லாம் யோசித்துப் பேசணும்னு அவங்களுக்கு அவசியமில்லை.. நீ இந்த வீட்டில் இருக்க வேண்டுமானால் அவங்களிடம் யோசித்துப் பேசு.. பணிவாய், அடக்க ஒடுக்கமாய் நடந்து கொள்.."

"ஓகே.. அப்படியெல்லாம் நடக்காவிட்டால்.."

"உன் பெட்டி படுக்கையைத் தூக்கி ரோட்டில் போட்டு விடுவேன்.. ஜாக்கிரதை.. யாருகிட்ட உன் வேலையைக் காட்டுறே..? பொம்பளையா நீ..?"

"உங்கள் பார்வையில் மைதிலி மட்டும்தான் பெண்ணா..?"

"ஏய்.. ஏய்.. மைதிலியைப் பற்றி நீ பேசாதே.. உனக்கு அதற்குத் தகுதியில்லை... எங்கள் ஆபீஸ் பியூன் வயதானவர்... அவரைப் பெயர் சொல்லி அழைக்க மாட்டாள்.. 'சார்..' என்றுதான் கூப்பிடுவாள்.. என்னை உயிருக்குயிராய் காதலிக்கிறாள்.. நான் இல்லையென்றால் செத்து விடுவாள்.. ஒரே ஓர் வார்த்தை.. 'நான் உன்னுடன் வந்து விடுகிறேன்..' என்று அவள் சொன்னால் போதும்.. நான் அவளைத் தூக்கிக் கொண்டு வந்து பதிவுத் திருமணம் செய்து குடித்தனம் பண்ண

ஆரம்பித்து விடுவேன்.. ஆனால் அவள் பெற்றோரை மீறி அந்த வார்த்தையை சொல்ல மாட்டாள்.. உன்னைப் போலப் பார்த்தவுடன் தகப்பனிடம் சொல்லி 'அந்த மாப்பிள்ளையைப் பிடித்துக் கொடு'ன்னு சொல்கிற ரகமில்லை அவள்.. மனதிற்குள் ஒரு வருடமாய் என்னைக் காதலித்தும் தானாய் வாய்திறந்து தன் காதலைச் சொல்லாதவள்.. ஊர் விட்டு ஊர் வந்து.. என் வீட்டில் தங்கிக் கொண்டு இருக்கிறாயே.. ஒரே ஆபிசில் தான் வேலை பார்க்கிறோம்.. என்னைப் பார்ப்பதற்குக் கூடத் தவித்துப் போய் விடுபவள் அவள்.. எங்கள் காதலைச் சொல்லிக் கொண்டே இந்த

ஒரு வருடத்தில் மாதம் ஒரு முறை.. அதுவும் கோவிலில் பார்த்து பேசிக் செல்லவே பயப்படுவாள்.. நீ அவளுக்கு இணையாகமாட்டாய்.."

"ஷட் அப் குமார்.. அந்தப் பெண் தான் எனக்கு இணையில்லை.. யாரோடு யாரை இணை சொல்வது..? என் கால் தூசி பெற மாட்டாள் அவள்.."

"அவள் கால் தூசி நீதான் பெற மாட்டாய்..!"

மேனகா பல்லைக் கடித்தாள்.. இவ்வளவு தீவிரமான அன்பா அந்த மைதிலி மேல்..?

"அப்படியென்ன குமார் என்னைவிட அவள் உசத்தி..? நானும் தான் உங்களை உயிருக்குயிராய் காதலிக்கிறேன்.. குமார் உங்களிடம் நியாயமில்லை.. இரண்டு பெண்கள் உங்களைக் காதலிக்கும்போது

ஒரு பெண் மட்டும் ஏன் உங்களுக்கு உசத்தியாகத் தெரியணும்.. ஏனென்றால் நீங்கள் அந்தப் பெண்ணை விரும்புகிறீர்கள்.. ஒரு வேளை அந்தப் பெண் உங்களை விரும்பாமலிருந்தால்.. நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்..? என்னைப் போல் துரத்தித் துரத்தி காதலித்திருப்பீர்கள்.. வற்புறுத்தியிருப்பீர்கள்.."

"உன் புத்தி எப்படிப் போகும்..? இப்படித்தான் போகும்.. இங்கே பார் மேனகா.. மைதிலி என்னைக் காதலிக்கிறாள்.. அவள் மனதில் நானிருக்கிறேன் என்பதை தெளிவாகத் தெரிந்து கொண்ட பின்னால்தான் நான் அவளிடம் என்

காதலைச் சொன்னேன்.. ஒருவேளை அவள் என்னை விரும்பாமலிருந்தால்.. அவள் மேல் ஒரு நட்போடு விலகி என் வழியில் சென்றிருப்பேன்.."

"மைதிலி.. மைதிலி.. அவள் ஒரு சாதாரண கிளார்க் குமார்.. நான் கோடீஸ்வரி.. என்னைத் திருமணம் செய்து கொண்டால் என் சொத்தெல்லாம் உங்களுக்குத்தான்.."

"மைதிலி என்னுடைய தேவதை மேனகா.. அவளுக்காக என் பரம்பரைச் சொத்தைக் கூட தூக்கி எறிந்து விடத் தயாராயிருக்கிறேன்.. உன் சொத்து எனக்கெதுக்கு..?"

மேனகாவின் கோபம் உச்சநிலையை அடைந்த நேரத்தில் துரைசிங்கம் அங்கே வந்து விட்டார்.. மகன் கோபமாய் மேனகாவிடம் பேசிவிடப் போகிறானென்ற பதட்டத்தில்,

"அது ஒண்ணுமில்லைடா நந்து.. மேனகாவிற்கு உடம்பு சரியில்லையாம்.. அதனால் கை தவறி.."

"அம்மாவின் சேலை மேல் கீரை கொட்டி விட்டது அப்படித்தானே.. அப்பா உங்களைப் பெரிய மனிதர்ன்னு நினைச்சேன்.. ஏம்ப்பா அவங்க என் அம்மா மட்டும் தானா..? உங்கள் பெண்டாட்டி இல்லையா..? உங்கள் கண் முன்னாலேயே ஒருத்தி சாப்பாட்டைத் தூக்கி உங்க பெண்டாட்டி மேல் வீசுகிறாள்.. நீங்கள் ஏன் என்று ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை.. அதை விட்டு விட்டு இந்த அகங்காரிக்கு ஆதரவாய் சப்பைக் கட்டு கட்டுகிறீர்கள்.. இதை நான் உங்களிடம் எதிர்பார்க்க வில்லை அப்பா.."

துரைசிங்கம் வாயடைத்துப் போனார்.. அவர் மீசை தளர்ந்து போனது..

"இங்கே பாருங்கள் அப்பா.." என்று மகன் அழைக்க ஏறிட்டுப் பார்த்தார்..

"இனிமேல் இந்த வீட்டில் இந்தப் பணத்திமிர் பிடிச்சவள் ஊருக்குப் போகிறவரை என் அம்மா சமைக்க மாட்டார்கள்.. பரிமாறுவது முதற்கொண்டு இங்கே கொண்டு வந்து குமித்து வைத்திருக்கிறீர்களே இந்த மகாராணிக்கு சேடிப் பெண்கள் போல்.. அந்த ராக்காயி, மூக்காயியை வைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.. புரிகிறதா..?"

நந்தகுமாரன் கோபமாய் அறைக்கதவைச் சாத்திய வேகத்தில் மேனகாவின் உடல் ஒருமுறை குலுங்கி அதிர்ந்தது..

"அங்கிள் இப்ப என்ன நடந்து விட்டதுன்னு இவ்வளவு கோபப்படுகிறார்..? ஒரு சின்ன விஷயம்.. அதைப்போய் இவ்வளவு பெரிதாகப் பேசுவானேன்.."

துரைசிங்கம் மேனகாவை வெறித்துப் பார்த்தார்..

"சின்ன விசயமா..? எது சின்ன விசயம்..? இன்று இந்த வீட்டில் நடந்ததா..?" தாலி கட்டிய நாளில் இருந்து குரலைத்தான் மனைவியிடம் உயர்த்திப் பேசி இருக்கிறார்.. அதுவும் கணவன் என்ற ஆளுமையை நிலை நாட்ட.. அவளை அவமரியாதை செய்ய அல்ல.. ஊரில் மதிக்கப்படும் முதல் மரியாதை பெறும் மூத்த பெண்மணி.. அவளை மதிக்கும் பண்பாடு தெரியாவிட்டாலும் பரவாயில்லை.. அவமானப்படுத்துவதா..? மனிதரை மனிதர் அவமரியாதை செய்வதா..? துரைசிங்கம் தன் பண்ணை ஆள்களை கண்டிப்பார்.. அவமதிக்க மாட்டார்.. முதன் முதலாய் தன் தேர்வு பற்றிய சந்தேகம் எழுந்தது..

'தவறு செய்கிறேனே..?' தன்னைத்தானே கேட்டுக் கொண்டார் துரைசிங்கம்.. மேனகாவைப் பார்த்து..

"இது சின்ன விசயம் இல்லை அம்மா.. நந்து தன் அம்மாவின் மேல் உயிரை வைத்திருப்பவன்.. என் பெண்டாட்டி மேல் நானும் உயிராய் இருப்பவன்தான்.. இன்று நடந்ததே கடைசியாய் இருக்கட்டும்.. இனி ஒருமுறை இப்படி நடக்கக்கூடாது.."

"ஆனால் அங்கிள்.. என் மேல் தவறில்லையே.."

"உன் மேல்தான்ம்மா தப்பு.. இதை மதியமே சொல்லியிருந்தால் இன்னும் பிரச்னை பெரிதாகியிருக்கும்.. அதனால்தான் சொல்லவில்லை.."

"அங்கிள் நீங்கள்கூட என்னைப் புரிந்து கொள்ள வில்லையா..?"

"அதிகம் புரிந்து கொள்ளக்கூடாதுன்னுதான் நினைக்கிறேன்.. போம்மா போய் கீழே ராக்காயி சாப்பாடு

போடுவாள் சாப்பிடு.."

துரைசிங்கம் பேச்சை துடிண்டித்துக் கொண்டு கீழிறங்க மாடிப் படியின் கீழ் நின்று கொண்டு அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த சோலையம்மாளின் கண்கலங்கியது... கீழே இறங்கிய துரைசிங்கம் மனைவியைப் பார்த்ததும் தடுமாறிப் போனார்... புதுமனைவியிடம் பேசும் கணவன் போல் முகம் பார்க்கக் கூச்சப்பட்டுக் கொண்டு,

"எங்கே போறவ..?" என்றார்..

சோலையம்மாள் முறுக்கிக் கொண்டாள்..

"ஏன் பார்த்தால் தெரியலையாக்கும்.. என் மகனுக்கு பலகாரம் கொண்டு போறேன்.."

"மகனுக்கு மட்டும்தான் சாப்பாடு போடுவியா.. புருசனுக்கு போடமாட்டியா..?"

"புருசனுக்குத்தான் புத்தி கெட்டுப் போச்சே.."

"அதுக்காக என்னை வெறுத்துருவியாடி.. காலையிலிருந்து பல்லில் பச்சைத் தண்ணி படாமல் பட்டினிகிடக்கிறேன்.. இப்படி நடக்குமின்னு கனவா கண்டேன்..? ஜமீன் வம்சம்ன்னு ஆளாப் பறந்துட்டேன்.. அதுக்காக நம்ம மரியாதையை விட்டு விடுவேனாடி.."

"ஆத்தாடி.. நீங்க இன்னும் சாப்பிடலையா.. பெருமாளே.. எனக்குத் தெரியாமல் போயிருச்சே.. வாங்க முதலில் உங்களுக்கு பலகாரம் போடறேன்.."

"ஏய்ய்.. போடி.. முதலில் நம்ம பிள்ளை வயிறை நிரப்பு.. அப்புறம் என்னைக் கவனிக்கலாம்.."

"அடேங்கப்பா.. பிள்ளை மேல் கரிசனம் பொங்குது.. இன்னைக்கு என்ன புதுசா ஞானம் வந்திருச்சோ.." சோலையம்மாள் கிண்டலடிக்க,

"அவன் அப்பனுக்கே பாடம் சொல்கிற சுப்பையன்டி.. அவன் அருமை எனக்குத் தெரியாதா என்ன..?" என்றார் துரைசிங்கம் பெருமையாய்..

"சரிசரி போய் குளிச்சிட்டு சாப்பாட்டு மேஜைக்கு வாங்க.. நான் அதுக்குள்ளே மகனை சாப்பிட வைத்து விட்டு

வந்திடறேன்.."

சோலையம்மாள் மாடியேறிச் சென்றபோது கணவன், மனைவி உரையாடலை கேட்டுக் கொண்டு நின்றிருந்த மேனகாவைப் பார்த்தாள்.. அவள் விழிகளில் அரு வெறுப்பு படர்ந்தது..

'தூ.. என்ன ஜென்மம் இது.. புருசன், பெண்டாட்டி பேசுவதை ஒட்டுக் கேட்டுக்கொண்டு..' வெறுப்பை உமிழ்ந்த பார்வை பார்த்தபடி மகனின் அறைக் கதவைத் திறந்து கொண்டு அவள் உள்ளே போய்விட மேனகா அடிபட்ட புலியாய் நின்றாள்..

மேனகா அழகி.. சாதாரண அழகியல்ல.. அப்சரஸ் போன்ற அழகு.. ராஜ வம்சத்தால் அரசி போன்ற கம்பீரம் பெற்றவள்.. வெளிநாட்டுப் படிப்பு தந்த மினுமினுப்பு.. கோடிக்கணக்கில் பணம்... அவளது கடைக்கண் பார்வைக்காக சென்னையின் மேல்தட்டு வாலிபர்கள் துடித்துக் கொண்டிருக்க அவள் இந்தப் பட்டிக்காட்டு பாமரப் பெண்மணியிடம் தோற்றுப் போவதா..?

நந்தகுமாரன் மேல் கொண்ட காதல் தன்னை எந்த நிலைக்கு தாழ்த்துகிறது என்று தன்னையே கேள்வி கேட்டுக் கொண்டவள் யோசித்தாள்.. நிச்சயம் நந்தகுமாரன் அவளுக்குக் கிடைக்க மாட்டான்.. கிடைத்தாலும் இந்த அழுக்குப் பிடித்த கிராமத்தைவிட்டு இந்த பழைய கால புராதன வீட்டை விட்டு முக்கியமாய் சூனியக்காரி.. (!) போலிருக்கும் அவனது தாயை விட்டு மேனகாவின் பின்னால் வரமாட்டான்.. வெளிநாட்டில் செட்டில் ஆகும் முடிவிலிருந்த மேனகாவால் இந்தக் கிராமத்தில் அடைபட முடியுமா..? முடியாது என்று முடிவெடுத்தாள் அவள்..

'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்..' என்று நரியின் மன நிலைதான் மேனகாவுக்கு.. ஆனால் தோல்வியை ஒப்புக்கொள்ள அவளுக்கு மனமில்லை.. தன் மனம் போல் அடக்கி ஆள முடியாத நந்தகுமாரனைப் பழிவாங்க வேண்டுமென்ற வெறி கிளர்ந்தது..

தன் காதலை மதிக்காத நந்தகுமாரனுக்கு அவன் காதலி கிடைக்கக் கூடாது.. தனக்குக் கிடைக்காத.. இந்த

கோடீஸ்வரிக்கு கிடைக்காத நந்தகுமாரன் சாதாரண அரசு குமாஸ்தாவான மைதிலிக்குக் கிடைக்கக் கூடாது..

அன்று இரவு முழுவதும் மேனகா யோசித்தாள்.. அவள் கனவுகளில் எல்லாம் மைதிலியும், நந்தகுமாரனும் இணைந்து வர தூக்கம் தொலைத்து யோசித்தாள்.. விடியலில் ஒரு முடிவை எடுத்தாள்..

# 13

வினய்..!

கோதுமை மாவைப் பிசைந்தது போல் நிறம்.. ஆறடி உயரம்.. அளவான உடல்வாகு.. நிமிர்ந்த நடை.. மாடலிங் ஆணைப் போன்ற கவர்ச்சிகரமான தோற்றம்.. சென்னையில் வெற்றிகரமாக இயங்கும் பெரிய ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனத்தின் இளம் முதலாளி.. வெளிநாட்டுப் படிப்பு, தாய், தந்தைக்கு ஒரே மகன்.. பெற்றவர்கள் மகனுக்கு மேல் தட்டில் பெண் தேட அவனது எதிர்பார்ப்போ இந்திய.. தமிழ்நாட்டுப் பெண்ணின் வாய்ப்படமாய் ஒரு அழகியை மணக்கும் கனவில் மிதந்தது..

முக்கியமான தகவல் எதுவென்றால் இந்த வினய், மேனகாவுடன் லண்டனில் சேர்ந்து படித்தவன்.. அதைவிட முக்கியம் அவன், மைதிலியின் இனத்தைச் சேர்ந்தவன்..

மேனகா புத்திசாலி.. வெறும் புத்திசாலியல்ல.. மிக மிக புத்திசாலி.. மைதிலியைப் பற்றி நந்தகுமாரன் கூறிய அடுத்த கணம் திருச்சியில் உள்ள மிகப்பெரிய டிடெக்டிவ் ஏஜன்ஸியை தொடர்பு கொண்டு மைதிலியைப் பற்றிய விவரங்கள் வேண்டுமென்றாள்.. அடுத்த நாளே மைதிலியின் ஜாதகம் முதல் குடும்பத்தினர் அனைவரின் குணாதிசயம் வரை ஒரு பைல் வடிவெடுத்து அவள் கைக்கு வந்துவிட்டது..

அந்தப் பைலை அலசி ஆராய்ந்ததில் மேனகா நிறையவே அறிந்தாள்.. பணப் பிரச்னையால் மைதிலியின் திருமணம்

தேங்கி நிற்பது முதல் வைத்தீஸ்வரனின் ஜாதிப்பற்று வரை அந்தக் குடும்பத்தின் ஆணிவேரை நாடி பிடித்து விட்டாள்..

மைதிலி தன் காதலைப் பற்றிக் குடும்பத்தில் வாய் திறக்காததற்குக் காரணம் தன் குடும்பத்தினர் ஜாதி விட்டு ஜாதி கலப்பு மணம் புரிவதை விரும்ப மாட்டார்கள் என்பதால்தான்.. பணம் மட்டும் இருந்திருந்தால் மைதிலிக்கு அவள் குடும்பத்தில் எப்போதோ மணம் முடித்து அனுப்பியிருப்பார்கள் என்பதை உணர்ந்ததும் மேனகாவின் மனம் சிறகடித்தது..

வினய் லண்டனில் படித்திருந்தாலும் சுத்த தமிழ் நாட்டுப் பெண்ணை மணக்க விரும்பியதற்கு அவன் வெளிநாட்டில் தங்கிப் படித்ததே முக்கிய காரணமாக ஆனது.. தன் மனம் போன போக்கில் வாழும் பெண்களைக் கண்டவனுக்கு தன் தாய்நாட்டு பெண்கள் மீது அளவற்ற மரியாதை ஏற்பட்டுவிட்டது.. இந்தியா திரும்பியதும் அவன் திருமணத்திற்காக பெற்றோர் காட்டிய பெண்கள் எல்லோருமே அமெரிக்கப் பெண்களைத் தூக்கிச் சாப்பிடுவார்களாய் இருக்க.. அவன் திருமணமே இப்போது வேண்டாம் என்று வீட்டில் சொல்லி விட்டான்.. அவன் பெற்றோர் நொந்து போய் அவனை எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் மணந்து கொள்.. நாங்கள் தலையிட மாட்டோம்.. காலா காலத்தில் ஓர் மருமகளை மட்டும் கண்ணில் காட்டிவிடு, என்று விண்ணப்பித்ததோடு ஒதுங்கிக் கொண்டார்கள்.. அந்த வினய்யின் நினைவு மேனகாவின் நெஞ்சில் உதித்தது.. மனதிற்குள் சில கூட்டல் கழித்தல்களைப் போட்டாள்.. விடை மிகத் தெளிவாக வந்தது.. விளைவு அன்று காலை விடிந்தபோது மேனகாவின் முகத்தில் வெளிச்சம் பரவியிருந்தது.

காலை காபியை உறிஞ்சியவாறு மாடி வராண்டாவில் மாட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் ஆடியவாறு பேப்பர் படித்துக் கொண்டிருந்தான் நந்தகுமாரன்.. எதிரே மகனுக்கு காபி கொண்டு வந்திருந்த சோலையம்மாள் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.. துரைசிங்கம் மனைவியுடன் சமாதானம் ஆனது போல் மகனுடன் சமாதானம் ஏற்படாதா என்ற நப்பாசையுடன் வராண்டாவில் நின்று கொண்டு கீழே

மிளகாயைக் காய வைப்பதை மேலே நின்று கொண்டு மேற்பார்வை இடுவது போல் பாவ்லா காட்டிக் கொண்டிருந்தார்.. மேனகா வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன் அங்கே வந்தாள்..

"குட்மார்னிங் அங்கிள்.."

"வாம்மா.. நல்லாத் தூங்கினியா..?" என்று விசாரித்த துரைசிங்கம் மனைவி அனல் பார்வை பார்ப்பதையும் மகன் பேப்பரின் மேலாக விழியுயர்த்தி முறைப்பதையும் கவனித்து மேலே பேச முடியாமல் தவித்தார்.

"ஒரு குட் நியூஸ் அங்கிள்.." என்றாள் மேனகா..

"யாருக்கு..?" என்றான் நந்தகுமாரன் இடக்காக..

"ஏன்..? உங்களுக்குத்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.."

"அப்படியா.. நீ ஊரை விட்டு போகப்போகிறாயா என்ன..?"

"அட எப்படி குமார் கரெக்டா கண்டுபிடிச்சீங்க.. அதுதான் மேட்டர்.. அங்கிள்.. நான் சென்னைக்குத் திரும்பிப் போகப் போகிறேன்.."

துரைசிங்கம் பதறிப் போனார்.. அவள் கிளம்புவதால் ஜமீன் வீட்டு சம்பந்தம் கை நழுவிப் போகிறது என்பதால் அல்ல.. மனைவியை மதிக்காதவள் சக்ரவர்த்தியின் மகளாய் இருந்தாலும் வேண்டாமென்ற முடிவுக்கு முதல் நாளே வந்து விட்டார்.. ஆனால் ஊர் சுற்றிப் பார்க்கவென்று வந்த பெண் மனம் நொந்து திரும்பிப் போகக் கூடாதென்று அவர் நினைத்தார்.. அத்தோடு இப்போது மேனகா இருக்கும் மனநிலை மாறி சிரித்த முகமாய் திரும்பிப் போவதைத் தான் அவர் விரும்பினார்.. ஆயிரம்தான் இருந்தாலும் அடுத்தவர் வீட்டுக்கு பெண்ணை அனுப்ப சாதாரண மக்களே யோசிப்பார்கள்.. பரம்பரை கோடீஸ்வரர் தன் மகளை துரைசிங்கத்தை நம்பி அவர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.. துரைசிங்கமும் கண்ணுக்குள் வைத்துத்தான் அந்தப் பெண்ணை கவனித்துக் கொண்டார்.. ஆனாலும் வெள்ளை வேட்டியில் ஒரு கறுப்புக் கரை பட்டு விட்டதைப் போல் முதல் நாளைய சம்பவம் நடந்து விட்டதே.. விருந்தாளியாக வந்த பெண்ணை சரியாக உபசரிக்காமல்

திருப்பி அனுப்பிய குற்றத்திற்கு ஆளாகி விட்டோமே என்றுதான் தவித்துப் போனார்.. அப்போது ஊர் கோவிலில் மணி அடித்தது.. துரைசிங்கம் வழியைக் கண்டு பிடித்து விட்டார்.

"அடடா.. இன்னும் பத்து நாள்களுக்கு நீ ஊருக்குக் கிளம்ப முடியாதேம்மா.."

"ஏன் அங்கிள்.." என்று மேனகா வினவ..

"ஏன்ப்பா.. அவளே ஒரு வழியாய் கிளம்பும் முடிவுக்கு வந்து விட்டாள்ன்னு நான் மகிழ்ந்து போயிருக்கிறேன்.. அம்மா முகத்தைப் பாருங்க.. ஜொலிக்குது.. விட்டால் அவங்க கும்பிடுகிற அம்மனுக்கு பாலாபிஷேகம் பண்ணிருவாங்க போல இருக்கு.. இப்பப் போய் இன்னும் பத்து நாள்களுக்கு துன்பத்தை விலை கொடுத்து வாங்கப் போகிறீர்களே.. இது உங்களுக்கே நல்லாயிருக்கா.."

"சும்மாயிருடா.. உனக்கு எதில்தான் விளையாடணும்னு தெரியாமல் போயிருச்சு.. உங்க அம்மா கும்பிடுகிற அம்மன் தான் இன்னும் பத்து நாளைக்கு அந்தப் பெண்ணை நம்ம கூட்டில் இருக்கச் சொல்லுதுடா.."

"இது என்ன புதுக்கதை..?" நந்தகுமாரன் கேலியாய் வினவ,

"ஏண்டி.. பையன்தான் சாமியில்லைன்னு சொல்லி சாமியாடிக்கிட்டு இருக்கிறவன்.. உனக்குமா மறந்து போச்சு.. இன்னைக்குக் காலையில் அம்மன் கோவில் திருவிழாவுக்கு சாமி சாட்டி காப்பு கட்டியாச்சுங்கறதை மறந்துட்டியா..?" என்றார் துரைசிங்கம்.

"அட ஆமாம்.." சோலையம்மாள் கன்னத்தில் போட்டுக் கொண்டாள்..

"கேட்டியாம்மா.. நீ திருவிழா முடிந்துதான் ஊருக்குப் போக முடியும்.." என்றார் துரைசிங்கம் மேனகாவைப் பார்த்து..

"வாட் அங்கிள்.. எனக்கு ஒண்ணும் புரியலை.." என்று மேனகா ஆச்சர்யத்துடன் வினவ, நந்தகுமாரன் பதில் அளித்தான்..

"உனக்கு மட்டுமா புரியலை.. எனக்கும்தான் புரியவில்லை.. கோவிலில் வருசா வருசம் திருவிழா கொண்டாடுவார்கள்..

அதற்கு முடிவு பண்ணி நாள் குறித்து விட்டுக் காப்புக் கட்டுவார்கள்.. அப்படிக் கட்டி விட்டால் ஊருக்குள் இருந்து யாரும் வெளியூருக்குப் போகக் கூடாது.."

"அப்போ நீங்க வேலைக்குப் போக முடியாதா..?"

"அதெல்லாம் வேலைக்குப் போகலாம்.. ஆனால் வெளியே தங்கக் கூடாது.. இரவு தூங்க வீட்டுக்கு வந்துவிட வேண்டும்.. ம்.. இப்படியொரு மூட நம்பிக்கை.."

"வெளியூரில் இருந்தும் யாரும் வரக்கூடாதா..?" என்று மேனகா யோசனையாய் வினவ,

"அப்புறம் விருந்தாளிகள் எப்படி வருவார்களாம்.. வீட்டுக்கு வீடு திருவிழாவிற்கு விருந்தாளிகள் கூட்டம் வந்து குவிந்து விடும்மா.. வெளியூரில் இருந்து யார் வேண்டுமானாலும் வரலாம்.. உள்ளூரில் இருந்துதான் யாரும் போகக் கூடாது.." என்றார் துரைசிங்கம்..

பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்தது போல் மகிழ்ந்து போனாள் மேனகா.. தான் எண்ணியது தடையில்லாமல் நடக்கப் போவதை எண்ணி எண்ணி குதூகலித்தவள் தன்னை அறியாமல்,

"எனக்கு அதுதானே வேண்டும்.." என்று கூறிவிட்டாள்..

"என்னது..?" துரைசிங்கம் விழிக்க, நந்தகுமாரனும், சோலையம்மாளும் சந்தேகத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

மேனகா சுதாரித்துக் கொண்டாள்..

"இல்லை அங்கிள்.. என் ரிலேடிவ் ஒருத்தர் கிராமத்து திருவிழாவைப் பார்க்கணும் என்று மிகவும் ஆசைப்பட்டார்.. உங்களுக்கு சிரமமில்லையென்றால் அவரை வரச் சொல்லவா..? நானும் துணையில்லாமல் இந்தப் பக்கத்தை சுற்றிப் பார்க்கவில்லை.. அவர் வந்தால் அவற்றையும் பார்த்துவிட்டு திருவிழா முடிந்ததும் அவர் கூடவே சென்னைக்குப் போய் விடுவேன்.."

துரைசிங்கம் நிம்மதியானார்..

"அதுக்கென்னம்மா.. நம்ம வீட்டுக்கு திருவிழா பார்க்கணும்ன்னு பட்டணத்துக்கார தம்பி வந்தால் எனக்குப்

பெருıதானே.. தாராளமா வரட்டும்.. நம்ம வீட்டில் தங்கட்டும்.. என்ன சோலையம்மா.. நான் சொல்றது சரிதானே.."

துரைசிங்கம் மனைவியைப் பார்த்துக் கேட்க வயதுக்கு வந்த பெண்ணை வீட்டில் தங்க வைத்திருக் கிறார்கள் என்ற கெட்ட பெயர் வந்து விட்டதே என்று வருந்திக் கொண்டிருந்தவள் துணையாக ஒரு ஆண் பிள்ளை வருகிறான் என்றதில் சந்தோசம் கொண்டவளாய்.

"நீங்க எப்பத் தப்பாச் சொல்லியிருக்கிறீங்க.." என்றாள் மெச்சுதலாக..

மனைவியின் பாராட்டில் மகிழ்ந்து போன துரைசிங்கம் மகனைப் பார்க்க, 'இது எப்போதிருந்து..?' என்பது போல் அவன் மேலும் கீழுமாய் இருவரையும் பார்த்தான்.. பின்னர் 'எக்கேடோ கெட்டுப் போங்கள்..' என்பது போல் பேப்பரை போட்டு விட்டுக் குளிக்கக் கிளம்பினான்..

மகன் அலுவலகம் கிளம்புவதற்குள் பலகாரம் ரெடி பண்ண வேண்டும் என்ற பொறுப்புடன் சோலையம்மாள் கீழே சென்று விட துரைசிங்கமும் வயல்வெளிப் பக்கம் கிளம்பிப் போய் விட்டார்..

நந்தகுமாரன் கிளம்பி அறையை விட்டு வெளியே வரும்போது தன் அறை வாசலில் நின்று கொண்டிருந்த மேனகா..

"என்ன குமார்.. நான் திருவிழா முடிந்ததும் ஊருக்குப் போகப் போகிறேன்.. ரொம்ப சந்தோசமாக இருக்குமே.." என்றாள் பல்லைக் கடித்துக் கொண்டு..

"இல்லை கவலையாக இருக்கிறது.."

"வாட்..?"

"நீ அபாயகரமான பெண் மேனகா.. அவ்வளவு சீக்கிரம் என் பாதையை விட்டு விலகிப் போய் விடுவாய் என்று நம்ப நான் தயாரில்லை.. அதுதான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"எதைப் பற்றி..?"

"புலி பதுங்குவது எதற்காக என்பதைப் பற்றி.."

நந்தகுமாரன் படி இறங்கிப் போய்விட்டான்... மேனகா தனக்குத்தானே கலகலவென்று நகைத்துக் கொண்டாள்..

'யு ஆர் வெரி இன்டலிஜென்ட் மேன் குமார்.. என் எதிரியாக உன்னை நினைத்த பின்னும் உன் புத்திசாலித் தனத்தை என்னால் மெச்சாமல் இருக்க முடியவில்லை.. புலி பதுங்குவது எதற்கு என்பது நான் பாயும்போது உனக்குத் தெரியும். அப்போது அந்தப் பாய்ச்சல் உனக்கு உண்டாக்கும் மரண வலியில் இருந்து மீள மாட்டாய்.. நீ படும் பாட்டைப் பார்த்து உன்னைப் பெற்ற அந்த சூனியக்காரியும் கதறப் போகிறாள்.. அன்று உனக்கும் அந்தக் கிழவிக்கும் இந்த மேனகா யார் என்று தெரியும்..!'

சென்னையில் வினய் ஒரு முக்கியமான மீட்டிங்கில் இருந்தான்.. அவன் செல்போன் ஒலித்தது.. 'மேனகா' என்ற எழுத்துக்கள் செல்போனில் திரையில் மின்னியது.. போனை துண்டித்தவன்,

'பிஸினெஸ் மீட்டிங் முடிந்தவுடன் பேசுகிறேன்..' என்று எஸ்.எம்.எஸ். மூலம் செய்தி அனுப்பினான்.. மீட்டிங் முடிந்தவுடன் தன் அறைக்கு வந்தவன் இன்டர்காம் மூலம் பி.ஏ.வை அழைத்தான்..

"சார்..?"

"ஒரு ஸ்ட்ராங் காபி.."

ஒரே நிமிடத்தில் ஆவி பறக்கும் காபி அவன் டேபிளுக்கு வந்தது.. எடுத்துப் பருகியவாறு செல்போனை எடுத்து மேனகாவின் எண்களை அழைத்தான்..

"ஹாய் வினய்..! ஹவ் ஆர் யு..?"

"ஃபைன்.. என்ன ஆச்சு மேனகா.. சென்னையில் கொஞ்ச நாள்களாய் நீ என் கண்ணில் படவேயில்லையே.. வாட் ஹேப்பன்ட் டு யு..?"

"நத்திங்.. எனக்கும் உன்னைப் போல் பித்துப் பிடித்து விட்டது.."

"என்ன சொல்கிறாய்..?"

"ம்ம்.. நீதான் அடிக்கடி பிதற்றுவாயே.. இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்று.. அதுதான் அது

உண்மையா என்று பார்க்க திருச்சிக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு கிராமத்தில் ரிலேடிவ் வீட்டில் ஸ்டே பண்ணியிருக்கிறேன்.."

"ஆன்மா இருக்கிறதைக் கண்டு பிடித்து விட்டாயா..?"

"எஸ்.. வினய்.. உன் ஆன்மா இங்குதான் இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து விட்டேன்.."

"புரியவில்லையே.."

"நீ கனவு கண்ட தேவதையை நான் கண்டு விட்டேன் வினய்.."

மேனகா உச்சரித்த வார்த்தைகளில் புயல் மையம் கொண்டது.. அந்தப் புயல் கிளம்பி திருச்சிக்கு வந்தடைந்தது.. அது கிளப்பிய சூறாவளியில் நந்தகுமாரனின் காதல் மலர் சிக்கி அலைக்கழிந்தது..

மேனகா தான் பெண் புலி என்பதை நிரூபித்தாள்..

## 14

மைதிலி அழகானவள் என்பதைவிட வினய் விரும்பும் இந்திய, தமிழ்நாட்டுப் பெண்ணின் பிரதி பிம்பமாய் திகழ்பவள் என்பதைக் கவனத்தில் கொண்ட மேனகா அதை வினய்யின் கவனத்திற்குக் கொண்டு போனாள்..

"முதலில் உனக்கு ஈமெயிலில் ஒரு போட்டோ அனுப்பியிருக்கிறேனே அதைப் பார்த்தாயா வினய்..?"

"எங்கே.. காலையிலிருந்து மெயில் பாக்சைத் திறந்தே பார்க்கவில்லை.. எக்கச்சக்க வேலை மேனகா.. இங்கே கம்பெனியில் என்ன நடந்தது தெரியுமா.."

"வினய் உன் கதையை எல்லாம் அப்புறம் கேட்கிறேன்.. முதலில் மெயிலை ஓப்பன் பண்ணு.."

வினய் திகைத்தான்.. எதற்காக இவ்வளவு ஆத்திரமும், அவசரமும் காட்டுகிறாள் மேனகா என்பதைப் புரியாதவனாய் கம்ப்யூட்டரில் மெயிலை ஆராய்ந்தபோது

மேனகா அனுப்பியிருந்த பெண்ணின் போட்டோவைப் பார்த்ததும் பிரமித்துப் போய் விட்டான்..

அது மைதிலிக்குத் தெரியாமல் அவள் அலுவலகம் செல்ல நடைபாதையில் நடந்து கொண்டிருந்தபோது மேனகா எடுத்த போட்டோ..

இளம் பச்சையில் உடலும் அரக்குச் சிவப்பில் பார்டரும் கொண்ட காஞ்சிக் காட்டன் புடவையை உடுத்தியிருந்தாள் மைதிலி.. போட்டோவில் அந்தப் புடவையின் மடிப்புக்கள் லேசாக அசைய நிமிர்ந்த நடையுடன் நேர் கொண்ட பார்வையுடன் நீண்ட பின்னலுடன் முழு உயரத்தில் பதிவாகி இருந்தாள் மைதிலி.. தலையின் இரு பக்கமும் முல்லைப் பூச்சரம் சரிந்திருந்தது.. நெற்றியில் திலகமிட்டு அதன் மேல் சிறிய விபூதிக் கீற்று இட்டிருந்தாள்.. கழுத்தில் மெல்லிய செயின்.. காதுகளில் ஜிமிக்கி.. யாருடனோ சிரித்துப் பேசிக் கொண்டு வந்திருப்பாள் போல.. முத்துப் பல் வரிசை தெரிய புன்னகை புரிந்து கொண்டிருந்தாள்.. புடவையின் மடிப்புக்களை வளையலிட்ட வலது கரத்தால் தூக்கிக் கொண்டிருந்தாள்.. இடது தோளில் தொங்கிக் கொண்டிருந்த தோள் பையின் வாரைப் பற்றியிருந்த கரத்தில் கைக்கடிகாரம் கட்டியிருந்தாள்..

அந்தப் போட்டோவை வைத்த கண் வாங்காமல் பார்த்த வினய் ஆனந்தத்தில் மூழ்கினான்... அந்தப் போட்டோவில் தெரிந்த பெண்ணின் தோற்றத்தில் மிளிர்ந்த பெண்மை அவனை வசீகரித்தது.. அவளது முகத்தில் தெரிந்த மென்மை அவனை ஈர்த்தத.. மனம் 'இவள் தான் நீ தேடிய சீதை' என்று கூவியது..

அவன் கையிலிருந்த செல்போன், "ஹலோ.. ஹலோ.. வினய்.." என்று அழைக்க இயந்திரம் போல் அதைக் காதில் வைத்தான்.

"ஹலோ வினய்.. நீ லைனில் இருக்கிறாயா..?" என்று கத்தினாள் மேனகா..

"யார் இந்தப் பெண் மேனகா..? உனக்கு இவளை எப்படித் தெரியும்..? இவள் எங்கே இருக்கிறாள்..? நான் அவளை உடனே பார்க்க முடியுமா..?" என்று பரபரத்தான் வினய்..

"பொறுமை.. வினய்.. பொறுமை.. ஒரே நேரத்தில் இத்தனை கேள்விகளை அடுக்கினால் நான் பதில் சொல்வது எப்படி..?"

"விளையாடாதே மேனகா.. எனக்கு இந்தப் பெண்ணைப் பற்றித் தெரிய வேண்டும்.."

"அவ்வளவுதானே.. உன் பிரண்ட்ன்னு சொல்லிக்கிட்டு நான் ஒருத்தி எதற்காக இருக்கிறேன்.. சொல்கிறேன் கேள்.."

"சொல்லு.. சீக்கிரம் சொல்லு.."

"வினய்.. இவள் பெயர் மைதிலி.. ஊர் திருச்சி.."

"இவ்வளவு போதும் மேனகா.. நான் அடுத்த பிளைட் பிடித்து திருச்சிக்கு வந்து விடுகிறேன்.. உனக்கு அட்ரஸ் தெரியும் தானே..? தெரியா விட்டாலும் பரவாயில்லை.. நான் கண்டுபிடித்து விடுவேன்.."

"உனக்கு அந்தச் சிரமமே வேண்டாம் வினய்.. இந்தப் பெண் எனக்குத் தெரிந்த பெண் தான்.."

"நிஜமாகத்தான் சொல்கிறாயா..? மேனகா.. ப்ளீஸ்.. அந்தப் பெண்ணை எனக்கு அறிமுகம் செய்து வை.."

"அந்தப் பெண்ணை அறிமுகம் செய்து கொள்ள என் தயவே உனக்குத் தேவையில்லை வினய்.. நீ ஒரு வேலை செய்தால் ரைட் ராயலாய் அவளை நீயே நேரில் பார்த்து அறிமுகம் செய்து கொள்ளலாம்.. எப்படித் தெரியுமா..?"

"எப்படி..?"

"உன் வருங்காலக் கணவனென்று.."

"சஸ்பென்ஸ் வைக்காமல் மேட்டருக்கு வா மேனகா.. நான் என்ன செய்ய வேண்டும்..?"

"கிருஷ்ணமூர்த்தி.. கிருஷ்ணமூர்த்தின்னு.. ஒருத்தன்.. சென்னையில்தான் இருக்கிறான்.. கஸ்டம்ஸில் வேலை பார்க்கிறான்.. அவனைப் போய்ப் பார்.."

"அவன் யார்..? அவனை எதுக்கு நான் பார்க்கணும்..?"

"அவன் தான் மைதிலியின் அண்ணன்.. அவனிடம் போய் உன்னைப் பற்றிய விவரங்களைக் கூறி அறிமுகப்படுத்திக்

கொண்டு மைதிலியைப் பெண் கேள்.."

"உன் பிளான் என்ன மேனகா.. தெளிவாய் கூறு.."

"வினய்.. இந்த மைதிலி உன் ஜாதியைச் சேர்ந்தவள்.."

"ரப்பிஷ்.. அவள் எந்த ஜாதியாயிருந்தால் என்ன..? நான் தான் ஜாதி மதம் பார்ப்பதில்லையே.. உனக்குத் தெரியாதா..?"

"நீ ஜாதி மதம் பார்க்க மாட்டாய் வினய்.. மைதிலியின் வீட்டில் அதைத்தான் முக்கியமாய் பார்ப்பார்கள்.. நீ இந்தியாவிலேயே.. ஏன் இந்த உலகத்திலேயே பெரிய பணக்காரனாய், அழகனாய், படித்தவனாய் இருந்தாலும்.. நீ அவர்களது ஜாதியாக இருந்தால்தான் அவர்கள் வீட்டில் பெண் கேட்க முடியும்.."

"மைதிலியும் அப்படிப்பட்ட பெண்தானா..?"

"அவள் பெற்றோருக்குக் கட்டுப்பட்டவள்.. நீ விரும்பிய தமிழ்நாட்டுத் திருமகள் இப்படித்தானே இருப்பாள் வினய்..? ஆனால் நீ எதற்கு இதைப் பற்றிக் கவலைப்படுகிறாய்..? உன் முக்கிய தகுதியே நீ அவளது ஜாதி என்பதுதானே.."

வினய் உடன்பாடில்லாமல் "உம்.." கொட்டினான்.. மேனகா தொடர்ந்தாள்..

"வினய்.. நீ இதைப் பற்றி தர்க்கம் பண்ணுவது வேஸ்ட்.. உனக்கு என்ன வேண்டும்.. உன் மனதிற்குப் பிடித்த பெண்ணை மணக்க வேண்டும்.. அதற்கான தடையாக ஜாதியில்லை என்பதில் சந்தோசப்படு.. புரிகிறதா..?"

"அதில்லை மேனகா.. நான் விரும்பும் பெண்.. நான் காதலிக்கும் பெண்.. என்னையும் விரும்பிக் காதலிக்க வேண்டாமா..?"

"அவள் வீட்டை மீறி எதுவும் செய்யமாட்டாள் வினய்.. நீ முதலில் அவளுக்கு தாலிகட்டி உன் மனைவியாக்கிக் கொள்... அதன் பின்னால் அவளே உன்னை விரும்பிக் காதலிக்க ஆரம்பித்து விடுவாள்.."

"வாவ்.. எப்படி மேனகா உனக்கு இப்படி ஒரு பற்று நம் தமிழ் கல்ச்சர் மீது வந்து..?"

"பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுமாமே.. நீ அடிக்கடி சொல்லும் தமிழ் பொன் மொழிதான்.. உன்னோடு சேர்ந்து நானும் தமிழ் கல்ச்சருக்கு அடிமையாகி விட்டேன்.."

"சொல்லு மேனகா.. அந்த கிருஷ்ணமூர்த்தியிடம் எப்போது போய் பேச வேண்டும்..?"

"விரைவிலேயே.."

"நாம் அப்புறம் பேசலாம் மேனகா.. எனக்கு முக்கிய மான வேலையிருக்கிறது.."

"அப்படி என்ன முக்கிய வேலை வினய்..?"

"கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து மைதிலியைப் பெண் கேட்கப் போகிறேன்.."

கடகடவென்று சிரித்தபடி வினய் செல்போனைத் துண்டித்தான்.. மேனகா புன்னகையுடன் இன்னும் ஒளிர்ந்து கொண்டிருந்த செல்போனைப் பார்த்தாள்.. திருப்தியுடன் படுக்கையில் சரிந்தாள்.. நேற்று இரவு தூங்காத விழிகள் அயர்வாய் மூடிக்கொள்ள அவள் மதியத் தூக்கத்தில் புகுந்தாள்.. இரவினில் மூடாத இமைகள் பகலில் இணைவாய் விழிகளை மூடின..

கிருஷ்ணமூர்த்தி அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது அவனது அலுவலக தொலைபேசி ஒலித்தது.. எடுத்துப் பேசிய ஒருவர்,

"கிருஷ்ணமூர்த்தி.. உங்களுக்கு போன் வந்திருக்கிறது.." என்று கூறினார்..

தன் முன்னாலிருந்த ஃபைலில் இருந்து தலை நிமிர்ந்தவன்,

"யாராம்..?" என்று விசாரித்தான்..

"சொல்லவில்லை.." என்று கூறிவிட்டு அவர் சென்று விட கிருஷ்ணமூர்த்தி எழுந்து சென்று தொலைபேசியை எடுத்தான்..

"ஹலோ கிருஷ்ணமூர்த்தி ஹியர்.."

"ஐ ஆம் வினய்.. டால்பின் இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர்.."

"ஒகோ.. நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்..?" என்றான் கிருஷ்ணமூர்த்தி, ஆங்கிலத்தில்.

"என்னைச் சந்திக்க வேண்டும்.. நான் உங்கள் ஆபிஸிற்கு வருவதை விட நீங்கள் என் கம்பெனிக்கு வந்தால் என்னைப் பற்றி நீங்களே நேரில் நன்கு அறிந்து கொள்ள முடியும்.." என்றான் வினய் தமிழில்..

"மிஸ்டர் வினய்.. நான் நேர்மையான கஸ்டம்ஸ் ஊழியன்.."

"ம்ம்.. உங்கள் நேர்மையை யார் குறை சொன்னது..?"

"பின்.. என்னை நீங்கள் ஏன் சந்திக்க விரும்ப வேண்டும்..?"

"நீங்கள் கஸ்டம்ஸ் ஊழியராக மட்டுமில்லாமல், உங்கள் தங்கை மைதிலிக்கு அண்ணனாகவும் இருப்பதால்.."

"புரியவில்லையே.."

"மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. நான் உங்கள் இனத்தைச் சேர்ந்தவன்.. எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.. உங்கள் தங்கை மைதிலியைப் பற்றி என் ரிலேடிவ் ஒருத்தங்க சொன்னாங்க.. ஸோ.. கல்யாணம் பேச கூப்பிட்டேன்.."

கிருஷ்ணமூர்த்தி திகைத்துப் போனான்.. ரிட்டயர்டு வைத்தீஸ்வரன் மகளான, இன்கம்டாக்ஸ் கிளார்க்கான மைதிலிக்கு ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியின் முதலாளி மாப்பிள்ளையாகக் கிடைக்கிறானா..?

"மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. எனக்கு இன்னும் நீங்கள் பதில் சொல்லவில்லை.. நான் உங்களைப் பார்க்க வரவா..?"

"வேண்டாம்.. வேண்டாம்.. நானே வருகிறேன்.. அதற்கு முன்.. என் பேமிலி நிலைமை பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும்.."

"தேவையில்லை.. உங்கள் தங்கையின் போட்டோ பார்த்தேன்.. எனக்குப் பிடித்து விட்டது.."

"சார்.. நாங்கள் மிடில் கிளாஸ் பேமிலி.."

"அதனாலென்ன.. நான் மணக்கப் போவது மைதிலியை மட்டும்தானே.."

"சார்.. எதற்கும் நீங்கள் உங்கள் குடும்பத்தாரை கலந்து கொண்டு பேசுவது நல்லது.."

"என் பெற்றோருக்கு நான் ஒரே மகன்.. என் திருமணவிசயத்தில் என் மனதுக்குப் பிடித்த பெண்ணை நான் மணந்து கொள்ள அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.. பை தி வே மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. நீங்கள் என்னை 'வினய்'ன்னு பெயர் சொல்லியே கூப்பிடலாம்.."

கிருஷ்ணமூர்த்தி ஆனந்த அதிர்ச்சியில் மூழ்கினான்.

"மிஸ்டர் வினய்.. நான் இப்போதே உங்கள் கம்பெனிக்கு வருகிறேன்.."

கடலோரம் ஈ.ஸி.ஆர். சாலையில் அமைந்திருந்த அந்த மிகப் பெரிய கம்பெனியின் வாசல் காம்பவுண்டு சுவரில்,

'டால்பின் இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட்' என்ற எழுத்துக்கள் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டு தங்க நிறத்தில் மின்னின.. கிருஷ்ணமூர்த்தியின் ஹீரோ ஹோண்டா பைக்கைக் கண்டதும் வாசலில் நின்ற காவலாளி மறித்தான்..

"உங்க முதலாளி வினய் வரச் சொல்லியிருக் காருப்பா.." என்றதும் வாசல் கேட்டில் இருந்த கூண்டிற்குள் நுழைந்து தொலைபேசியில் பேசி விட்டு அனுமதித்தான்.. பிரம்மாண்டமாய் இருந்த வாயில் கதவுகள் விரியத் திறக்க உள்ளே தன் வண்டியைச் செலுத்தியவனுக்கு வானில் பறப்பதைப் போல் இருந்தது.. தன் தங்கைக்கு இப்படி ஒரு ராஜ யோகமா..?

நீண்டு சென்ற சாலையின் இரு பக்கமும் மரங்களும், பூச்செடிகளும் அணிவகுத்து நின்றன.. உள்ளே சென்று அலுவலக கட்டிடத்தின் வாசலில் வண்டியை நிறுத்தி விட்டுப் படியேறி உள்ளே சென்றான்.. வரவேற்பில் இருந்த பெண் அவனை சோபாவில் அமரச் சொல்லிவிட்டு தன் முதலாளியிடம் அனுமதி கேட்டு விட்டு அவனை உள்ளே போகச் சொன்னாள்..

அலுவலகத்தின் தரை சலவைக்கல்லால் பளபளக்க சுவரெல்லாம் மரத்தினால் மெருகேற்றப்பட்டு இருந்தது..

ஏறக்குறைய நூறு நபர்களுக்கு மேல் அங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்..

வினய்யின் அறைக் கதவை நெருங்கியதும் அவன் விரல்களால் மெல்லத் தட்ட..

"யெஸ் கமின்.." என்ற கம்பீரமான ஆனால் மிருதுவான குரல் கேட்டது.. கிருஷ்ணமூர்த்தி உள்ளே சென்றான்.. வினய் தன் இருக்கையை விட்டு எழுந்து.. "வெல்கம் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. நான்தான் வினய்.." என்று கைகுலுக்கி விட்டு, "ப்ளீஸ் டேக் யுவர் சீட்" என்று அமர வைத்து விட்டு இன்டர்காமை எடுத்து பியூனை அழைத்து குளிர்பானம் கொண்டு வரச் சொன்னா..

"ஸீ.. மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. இதுதான் என் கம்பெனி.. இதுபோக மூணாறில் தேயிலைத் தோட்டம்.. ஐ மீன்.. எஸ்டேட் இருக்கிறது.. அப்புறம் ஒரு சூப்பர் மார்க்கெட்.. அப்பா பார்த்துக்கிறார்.."

"நீங்கள் இவ்வளவு வசதியாக இருக்கும்போது.. என் தங்கையை எப்படி.."

"லுக் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. நான் லண்டனில் படித்தபோதே டிசைட் பண்ணிட்டேன்.. மணந்தால் ஒரு தமிழ் கல்ச்சர் தெரிந்த பெண்ணைத்தான் மணப்பது என்று."

"என்னது.. நீங்கள் வெளிநாட்டில் படித்தவரா.."

"ஏன் வெளிநாடென்றால் உசத்தியா..? நம் நாட்டில் இல்லாதது அங்கே என்ன இருக்கிறது..? எதுவுமே இல்லை.. அமைதி இல்லை.. நிம்மதியான குடும்ப வாழ்வு இல்லை.. இந்தியாவின் அருமை ஏன் உங்களுக்குப் புரியவில்லை..?"

"ஐ ஆம் ஸாரி.. நான் எதற்கும் உங்கள் பெற்றோரைப் பார்த்துப் பேசி விடுகிறேனே.. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று எனக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும்.."

"வித் பிளெசர்.." என்றவன் தன் வீட்டிற்குச் செல்போனில் பேசினான்..

"யெஸ் டாட்.. நான் சொன்னேனே.. மைதிலின்னு.. அந்தப் பெண்ணின் அண்ணன் என் கம்பெனிக்கு வந்திருக்கிறார்..

என்ன.. எனக்குப் பிடித்தால் போதுமா.. அவருக்குப் போதாதாம்.. உங்களையும் பார்த்துப் பேச வேண்டுமாம்.. ஓ எஸ்.. இப்போதே கூட்டி வருகிறேன்.."

போனைத் துண்டித்து விட்டு நிமிர்ந்த வினய்..

"போகலாமா.." என்று எழுந்ததும் புரியாதவனாய் கிருஷ்ணமூர்த்தி உடன் எழுந்து சென்றான்..

"ஜேம்ஸ்.." என்று வினய் அழைக்க வெள்ளைச் சீருடை அணிந்த காரோட்டி ஓடி வந்தான்..

"உங்க பைக் சாவியை இவனிடம் கொடுத்து விடுங்கள் கிருஷ்ணமூர்த்தி.. ஜேம்ஸ் வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விடு.. கமான் கிருஷ்ணன்.. நாம் நம் காரில் போகலாம்.. நான் உங்களை கிருஷ்ணன் என்றே கூப்பிட்டுக் கொள்கிறேனே.."

இலகுவாகப் பேசியபடி அவனது அழகிய தந்த நிற வெளிநாட்டுக் காரின் கதவைத் திறந்து விட்டான் வினய்.

'நம் காரா' என்று திறந்த வாயை மூடாமல் அந்தக் காரில் ஏறிக் கொண்டான் கிருஷ்ணமூர்த்தி..

கிழக்குக் கடற்கரைச் சாலையில் வழுக்கிக் கொண்டு சென்ற கார் அந்த பிரம்மாண்டமான மாளிகையின் உள்ளே நுழைந்தது.. பிரிட்டிஷ் ராஜகுமாரன் போன்ற வனப்புடைய வினய்யின் தாய் தந்தையரும் அதே வனப்புடையவர்களாக திகழ்ந்தனர்.. கிருஷ்ணமூர்த்தியை வரவேற்றனர்.. கனவிலும் கண்டிராத மாளிகையின் உள்ளே தேவர்கள் போன்ற அழகுடைய மனிதர்களிடம் மறு பேச்சுப் பேசாமல் தன் தங்கை மைதிலியை தாரை வார்த்துக் கொடுக்க சம்மதம் தெரிவித்தான் கிருஷ்ணமூர்த்தி..

## 15

"டாட் இவர்தான் கிருஷ்ணன்.. கிருஷ்ணமூர்த்தி.." என்று அறிமுகப்படுத்தினான் வினய்.. அவனது தந்தை ரங்கநாதன் ஆறடி உயரத்தில் வினய்யின் உயரம் தன்னிடமிருந்து வந்தது என்பதை உணர்த்துகிறவராய்

இந்தி சினிமாக்களில் வரும் பணக்கார அப்பாவைப் போல் இருந்தார்..

"வாங்க மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. நீங்கள் எங்களைப் பார்க்கணும்ன்னு சொன்னதால் நான் சூப்பர் மார்க்கெட்டிலிருந்து உடனே கிளம்பி வந்து விட்டேன்.. இது என் மனைவி ஜானகி.. உங்களுக்காக லேடிஸ் கிளப் மீட்டிங்கை கேன்சல் பண்ணிவிட்டு வந்திருக்கிறாள்.. வினய்யோட அம்மாவாச்சே.. மகன் கல்யாணத்தை சீக்கிரம் பார்த்துவிட வேண்டுமென்று என்னைவிட இவளுக்குத்தான் தவிப்பு அதிகம்.."

ஜானகி அழகாய் கவர்ச்சியாய் வினய்யின் அழகும், கவர்ச்சியும் கலந்த வனப்பு தன்னிடமிருந்து வந்தது என்பதை தன் தோற்றத்திலிருந்து உணர்த்தினாள்.. புன்சிரிப்புடன் கை குவித்து வணக்கம் சொன்னாள்.. பதிலுக்கு வணக்கம் சொன்ன கிருஷ்ணமூர்த்தி,

"என் அப்பா ரிட்டயர்டு.." என்று ஆரம்பித்தான்..

"வெயிட் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி.. நீங்கள் சொல்லும் ஸோ அன்ட் ஸோ விவரங்கள் அனைத்தும் எங்களுக்குத் தெரியும்.. எங்கள் மகனுக்கு தன் மனம் விரும்பிய பெண்ணை மணக்க சம்மதம் தெரிவித்திருந்தோம்.." என்று ரங்கநாதன் கூற ஜானகி தொடர்ந்தாள்..

"இருந்தாலும் மனதுக்குள் ஒரு சிறு பயம் இருந்தது.. வினய்யின் மனைவியாக வரப் போகிறவள் இந்தக் குடும்பத்திற்கு ஏற்றவளாக அதே சமயம் வினய்யை அவன் பணத்துக்காக விரும்புகிறவளாக இருக்கக் கூடாதுன்னு நினைத்துப் பயந்தோம்.."

இப்போது ரங்கநாதன் பேசினார்..

"வினய் உங்களைத் தொடர்பு கொண்டு பெண் கேட்டதும் நீங்கள் சொன்ன முதல் தகவல் உங்களது குடும்ப நிலைமை.. அடுத்து வினய் அதைப் பற்றி அக்கறை காட்டாமலிருந்தாலும்.. குடும்பப் பெரியவர் களிடம்.. பெற்றவர்களிடம் சம்மதம் கேட்கச் சொன்னீர் களாமே.. அப்போதே எங்களுக்கு உங்கள் குடும்பத்தை மிகவும் பிடித்து விட்டது.. வினய் சொன்னதிலும் திருப்தியில்லாமல்

எங்களை நேரில் பார்த்து சம்மதம் கேட்டபின்தான் முடிவு சொல்வேன் என்று கிளம்பி வந்து இருக்கிறீர்களே.. பெற்றவர்களுக்கு இதைவிட மன அமைதி தரும் செயல் வேறு எதுவாக இருக்க முடியும்..?"

"உங்கள் தங்கையும் உங்களைப் போல்தானே பெரியவர்களை மதிக்கும் குணமுடையவளாக இருப்பாள்.. ஸோ.. எங்களுக்கு இந்தத் திருமணத்தில் பரிபூரண சம்மதம் தம்பி.. அத்தோடு கூடுதல் சந்தோசமாக நீங்கள் எங்கள் இனம் என்று வேறு ஆகி விட்டீர்கள்.." என்றாள் ஜானகி பெருமையுடன்..

"வினய் ஜாதி மதம் பார்ப்பதில்லை.. ஆனால் நானும், ஜானகியும் கொஞ்சம் பார்ப்போம்.. ஜானகி என் பெற்றோர் பார்த்து திருமணம் செய்து வைத்த நம் இனப் பெண்தான்.. வினய்யின் மனதுக்குப் பிடித்தவள் நம் இனப்பெண் என்பதில் எங்களுக்க கொள்ளை மகிழ்ச்சி.." என்றார் ரங்கநாதன்..

வேலையாள் காபி, சிற்றுண்டி வகைகளைக் கொண்டுவர கிருஷ்ணமூர்த்தியை வாய் நிறைய உபசரித்தனர்.. அந்தப் பணக்கார தம்பதியினர்.. வினய் ஈமெயிலில் வந்த மைதிலியின் போட்டோவை இரண்டு, மூன்று பிரதி எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.. ரங்கநாதனும், ஜானகியும் அதை வாங்கிப் பார்த்தனர்..

"பெண் குடும்பப் பாங்காய், குல விளக்குப் போல் இருக்கிறாள்.." என்றாள் ஜானகி..

"புத்திசாலிப் பெண்ணாய், அழகாய் தெரிகிறாள்.." என்றார் ரங்கநாதன்..

பின்னர் அவர்கள் மைதிலியின் படிப்பு, வேலை, வைத்தீஸ்வரனின் குடும்பம் பற்றிப் பேசினர்.. பேச்சின் போக்கில் ஏதோ ஒரு சுற்றில் அவர்கள் சொந்தம் என்று தெரிய வர வினய்யின் பெற்றோர் மகிழ்ந்தே போயினர்..

"எல்லாம் கூடி வரும்போது தானே நடக்கும்ன்னு சும்மாவா சொன்னாங்க..? வினய்யின் கல்யாணம் தள்ளிப் போனது நன்மைக்குத்தான் போலிருக்கே.." என்றார் ரங்கநாதன், ஜானகியைப் பார்த்து..

அவள் ஆமோதிப்பாய் தலை அசைத்தாள்..

"அப்போ நான் கிளம்புகிறேன் சார்.. அப்பாவிடம் இன்றைக்கே பேசி விடுகிறேன்.. நீங்கள் ஒரு நல்ல நாள் பார்த்துப் பெண் பார்க்க வந்து விடுங்கள்.."

"நாளைக்கு நல்ல நாள் தான் தம்பி.. நாளையே கிளம்பி விடலாமே.." என்றாள் ஜானகி..

"நீங்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்.. நான் அப்பாவிடம் தகவல் சொல்லிவிட்டு இன்று இரவே ஊர் போய் விடுகிறேன்.."

"எதற்காக நீங்கள் தனியாக நாங்கள் தனியாகப் போக வேண்டும் கிருஷ்ணமூர்த்தி.. வீட்டில் ஒன்றிற்கு நான்கு கார்கள் சும்மாதானே நிற்கிது.. ஒரு காரை அனுப்புகிறோம்.. உங்கள் குடும்பத்தோடு கிளம்பி எங்களோடே வந்து விடுங்கள்.. அப்பாவிடம் போனில் பேசிக் கொள்ளலாம்.." என்றார் ரங்கநாதன்..

"வெல் செட் டாடி.. கிருஷ்.. நீங்களும் எங்களுடனே வந்து விடுங்கள்.. சேர்ந்து போகலாம்.. ஐ லைக் யு வெரிமச்.." என்றான் வினய், கிருஷ்ணனையும் சுருக்கி 'கிருஷ்' என்று விளித்தவனாய்..

கிருஷ்ணமூர்த்தியோ தான் காண்பது கனவா இல்லை நனவா என்ற சந்தேகத்தில் இன்னும் இருந்தான்.. பூம்பூம் மாடு மாதிரி அவர்கள் சொன்னதற்கெல்லாம் தலை ஆட்டினான்... அதே மயக்கத்தோடு வீடு திரும்பியவன் உடனே தந்தைக்குப் போன் செய்தான்..

"ஹலோ.. யாரு பேசறது.." என்றார் போனை எடுத்த வைத்தீஸ்வரன்..

"அப்பா.. நான் கிருஷ்ணமூர்த்தி பேசுகிறேன்.."

"எந்த கிருஷ்ணமூர்த்திப்பா.. வட்டிக்கடை செட்டி மகனா.. பெண் பிள்ளைகளைப் பெற்றவன் வட்டி கட்டித்தானே ஆகணும்.. கொஞ்சம் தவணை கொடுப்பா.. இரண்டு நாளில் கட்டிடறேன்.."

கிருஷ்ணமூர்த்தி எரிச்சல் பட்டான்..

"அப்பா.. இந்த நடிக்கிற வேலையை விட்டு விட்டு நான் சொல்கிறதை கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்க.. பெரிய வட்டி கட்டுகிறாராம்.. யாருகிட்ட விளையாட்டு காட்டறீங்க.. பெண்ணைப் பெற்றால் தான் கடன் கட்டணுமா.. கூடப் பிறந்தாலும் கடன் கட்டணும்.. நானும் கடன் கட்டிக்கிட்டுத்தான் இருக்கிறேன்.."

"என்னத்தடா கட்டறே.. அதையே இன்னும் எத்தனை காலம் சொல்லுவ..? இன்னும் ஒரு தங்கை.. இருக்கா.. அவளையும் கரையேத்தனும்.. அந்தப் பொறுப்பை தட்டிக் கழிச்சிட்டு பொண்டாட்டி, பிள்ளை முக்கியம்ன்னு தனிக்குடித்தனம் போனவன்தானேடா நீ..? பெரிசா பேச வந்திட்டான்.."

"பெண்டாட்டி பிள்ளையோட திருச்சியிலயா தனிக்குடித்தனம் போய்டேன்..? சென்னைக்கு டிரான்ஸ்பர் பண்ணினால் நான் என்ன பண்ணுவேன்..?"

"இதோ பார்.. உன்கிட்ட நான் விளக்கம் கேட்டேனா..? இப்ப எதுக்கு போன் பண்ணின.. அதைச் சொல்லு முதலில்.."

"எங்கே.. என்னைச் சொல்ல நீங்கள் விட்டால் தானே.."

"விடாமல் உன்னை இறுக்கிப் பிடித்தா வைத்திருக்கிறேன்.. அதுதான் எப்படியோ போன்னு தனிக்குடித்தனத்திற்கு விட்டு விட்டேனே.."

"அடடா.." என்று தலையில் அடித்துக் கொண்டாள்.. மகன் பேசுகிறான் என்றதும் ஆவலாய் கணவனின் அருகே வந்து நின்ற விசாலாட்சி..

"உங்க புத்தி உங்களை விட்டு எங்கே போகும்..? அவனே போனில் பேசிக்கிட்டு இருக்கான்.. என்னவோ நேரில் பேசுகிற மாதிரி வம்புக்கு இழுக்கறீங்களே.. போன்பில் ஏறாதா..? ஒருத்தர் வாய் கொடுத்திரக் கூடாதே உங்ககிட்ட.. போனை இங்க கொடுங்க.." என்று போனைப் பிடுங்கியவள்..

"நீ சொல்லுடா.." என்றாள் மகனிடம்..

"ஏம்மா அப்பா இப்படி இருக்கிறார்..?"

"அதை இப்ப வந்து கேளு.. என்னமோ புதிதாய் இன்னைக்கு மட்டும் இப்படி இருக்கிறாப்புல.. நீ

பிறந்ததிலிருந்து இப்படித்தானேடா இருக்கிறார்..?"

"மாறவே மாட்டாரா..?"

"இப்ப அதுவாடா பிரச்னை..? ஏண்டா நீயும் அப்பாவுக்குத் தப்பாத பிள்ளையாய் இருக்கிறாய்..? விசயத்துக்கு வாடான்னால் 'அ'வுக்கு அடுத்து 'ஆ' ஏன் வருகிறதுன்னு கேட்கிறான்.. அது அப்படித்தாண்டா இருக்கும்.. மாறவே மாறாது.."

"சரி விடுங்கம்மா.. நம்ம மைதிலிக்கு நல்ல இடத்திலிருந்து வரன் வந்திருக்கு.. மாப்பிள்ளை வீட்டாரை நாளைக்குப் பெண் பார்க்க அழைச்சிட்டு வரேன்.."

விசாலாட்சிக்கு மகிழ்ச்சி பொங்கியது..

"என்னப்பா சொல்றே.. திடீர்னு நல்ல செய்தி வந்திருக்கே பெருமாளே..! நீ கண் திறந்திட்டயா.." என்று அவள் நாத்தழுதழுக்க கூற,

"கடவுள் கண் திறந்திட்டாரா.. என்னடி சொல்ற.. இங்கே போனைக் கொடு.." என்று வாங்கிய வைத்தீஸ்வரன்..

"ஏண்டா பெருமாள் கண் திறந்த செய்தியை நான் கேட்கக் கூடாதா..?" என்றார்..

"நீங்கதானே முக்கியமாய் கேட்கணும்.. அப்பா.. மைதிலியை பெரிய இடத்திலிருந்து பெண் கேட்கிறாங்க.."

"ம்ம்.. மாப்பிள்ளை என்ன வேலை பார்க்கிறார்..?"

"ஐநூறு பேருக்கு அவர் வேலை கொடுத்திருக்கிறார்."

"என்னடா சொல்கிற.."

"அப்பா.. அவங்களுக்குத் தேயிலை எஸ்டேட், சூப்பர் மார்க்கெட்டுன்னு குடும்ப சொத்து நிறைய இருக்கு.. மாப்பிள்ளை வெளிநாட்டில் படிச்சவர்.. சென்னையில் பெரிய எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு சொந்தக்காரர்.."

"என்னடா.. என்னவோ சினிமாக் கதை மாதிரி இருக்கு.. அவங்க எப்படிடா நம்ம வீட்டில் பெண் எடுப்பாங்க..?"

"எனக்கும் அதே சந்தேகம்தான்ப்பா.. மாப்பிள்ளை மைதிலியின் போட்டோவைப் பார்த்ததும் ஆசைப்பட்டு பெண் கேட்டார்.. நான் அவங்க அப்பாம்மா கிட்ட

பேசிட்டுத்தான் முடிவு சொல்வேன்னு அவங்களையும் போய் பார்த்து விட்டேன்.. அவங்களுக்கு இந்தக் கல்யாணத்தில் ரொம்ப ஆர்வம்ப்பா.."

"அவங்க என்ன ஜாதின்னு விசாரிச்சயா.. ஏன் சொல்றேன்னா அவங்க எவ்வளவு பெரிய பணக்காரங்களா இருந்தாலும் நம்ம ஜாதியா இருக்கணும்.. இல்லாவிட்டால் முடியாதுன்னு சொல்லிவிடு.."

"ஏன்ப்பா.. நான் உங்கள் மகன்.. அதை விசாரிக்காம இருப்பேனா..? மாப்பிள்ளையோட அப்பாவுக்கும், அம்மாவுக்கும் நாம் அவங்க இனம்கிறதில் ரொம்ப சந்தோசம்.. அப்புறம் சொல்ல மறந்து விட்டேனே.. அவங்க நம்மளுக்கு சுத்தி வளைச்சு சொந்தமா வர்றாங்கப்பா.."

"ஏண்டா வாரதும் வர்றாங்க.. நேரே வர வேண்டியது தானே.. ஏன் சுத்தி வளைச்சுச் சொந்தமா வர்றாங்க.."

"அதுதானே பார்த்தேன்.. என்னடா என்னைப் பெற்ற தகப்பனா இவ்வளவு அருமையாய், பொறுமையாய், பொறுப்பாய் பேசுகிறார்ன்னு ஆச்சரியமாக இருந்தது.. ஆரம்பிச்சுட்டீங்களா.."

"ஏண்டா மனுசன் ஒரு சந்தேகத்தைக் கேட்டால் பதில் சொல்ல முடிஞ்சா சொல்லு.. அதை விட்டு விட்டுக் குறை ஏன் சொல்றே.. அவங்க எந்த வழிச் சொந்தம்ன்னு சொன்னே..?"

"எங்கே சொல்ல விட்டீங்க..?"

"நான் என்ன உன் வாயையா பொத்தினேன்..? விசயத்தை சொல்லுடா.."

"உங்க சித்தப்பா மகன் யாரோ டெல்லியில் இருக்கிறார்ன்னு சொல்வீங்கள்ல.."

"ஆமாம்.."

"அவரோட ஒண்ணுவிட்ட அக்காவோட பேத்தியை மாப்பிள்ளையோட பாட்டியின் பெரியப்பாவோட பேத்தியின் பேரனுக்கு கல்யாணம் முடிச்ச வகையில் அவங்க நம்ம சொந்தமாம்.."

வைத்தீஸ்வரன் திகைத்தார்.. அருகில் நின்று கொண்டு ஒட்டுக் கேட்டுக் கொண்டு இருந்த விசாலாட்சியைப் பார்க்க, அவள் முகமெல்லாம் மலர,

"ஆமாங்க.. மாப்பிள்ளையோட அப்பா எனக்கு அண்ணன் முறையாகிறார்.." என்றாள் மகா சந்தோசமாய்..

வைத்தீஸ்வரன் குழப்பமாக,

"எப்படிடீ இப்படி ஒரு முடிவுக்கு வந்தே.." என்றார்..

"உங்களுக்குத்தான் ஒரு மண்ணும் புரியலை.. எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் சரியாத்தான் வருது.. நீ சொல்லுடா கிருஷ்ணா.. நாளைக்கு எப்போது வர்றீங்க.."

அடுத்து தாயும் மகனும் மறுநாளைய ஏற்பாட்டைப் பற்றி உற்சாகமாய் பேசி முடித்தனர்.. சந்தோசமாய் போனை வைத்தவள்,

"நாளைக்குக் காலையில் கிளம்பி சாயந்திரம் வர்றாங்களாம்.. நம்ம கிருஷ்ணாவுக்கு மட்டும் தனிக் கார் கொடுத்து கூட்டிக்கிட்டு வர்றாங்களாம்.." என்று கணவனிடம் கூறினாள்..

மனைவி சொல்வதை கவனிக்காமல் வைத்தீஸ்வரன் விரலால் காற்றில் கணக்குப் போடுவதும் நெற்றிப் பொட்டில் தட்டிக் கொள்வதுமாக இருந்தார்.. விசாலாட்சி கணவனை விசித்திரமாகப் பார்த்தாள்..

'இந்த மனிதனுக்கு என்ன ஆச்சு..?' என்று வெகுண்டவளாய் அவர் முதுகில் ஒன்று போட்டாள்..

"ஏங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க..?"

"அது எப்படிடீ அவ்வளவு கரெக்டா அந்த மனிதர் உன் அண்ணன் முறையாகணும்னு சொல்கிறாய்..? நான் யோசிச்சு யோசிச்சுப் பார்க்கிறேன் எனக்கு ஒண்ணும் புரியவே மாட்டேங்குது.."

"அது அப்படித்தான்.. முதலில் எழுந்து சாப்பிட வாங்க.. உங்க பொண்ணு அவங்க ஆபிசர் வீட்டுத் திருவிழாவுக்கு ஆபிஸே வேன் பிடிச்சுப் போறாங்க, நானும் போயிட்டு வரேன்னு போனாள்.. இன்னும் காணவில்லை.. நாளைக்கு

அவளை ஆபீசிலிருந்து சீக்கிரம் வீட்டுக்கு வரச் சொல்லணும்.."

"வீட்டு வாசலில் வந்து கூப்பிட்டுப் போனாங்க.. திரும்பவும் வீட்டில் வந்து விட்டு விட்டுத்தான் போவாங்க.. சொல்லித்தானே கூப்பிட்டுப் போனாங்க.. நீ வா.. வந்து சாப்பாட்டைப் போடு.."

கணவனும், மனைவியும் தங்கள் வாழ்நாளில் முதன் முறையாக இணக்கமாகப் பேசிக் கொண்டே சாப்பிட அதே நேரத்தில் மைதிலி தன் வருங்கால புகுந்த வீடு என்ற நினைவுடன் வேம்பூரில் நந்தகுமாரனின் வீட்டில் சோலையம்மாளின் அருகே அமர்ந்து அவளுடன் பேசிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்..

## 16

நந்தகுமாரன் வருடா வருடம் தன் ஊர் கோவில் திருவிழாவுக்கு தன் நண்பர்களை வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுப்பான்.. நாத்திகம் பேசும் அவன் திருவிழாவின் பத்து நாள்களும் வீட்டில் விருந்தாளிகள் குவிந்திருப்பர்.. விருந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.. பத்து நாள்களிலும் வீட்டில் அசைவ உணவு வகைகள் அணி வகுக்கும். அப்போது தன் அலுவலகத்தினரை ஓர் விடுமுறை தினத்தில் தன் இல்லத்திற்கு விருந்துக்கு அழைப்பான்.. அவனே வேன் ஏற்பாடு பண்ணி ஒவ்வொருவரையும் வீட்டில் சென்று அழைத்துக் கொண்டு மீண்டும் வீட்டு வாசலில் இறக்கி விட்டு விடுவதால் பெண்களும் அவன் அழைப்பை ஏற்றுக் கொள்வார்கள்..

மைதிலி போன வருடம் இந்த விருந்தில் கலந்து கொள்ளவில்லை.. வீட்டில் விட மாட்டார்கள் என்று தயங்கினாள்.. இந்த வருடம் அவளே போராடி அனுமதி வாங்கி விட்டாள்.. காரணம் காதலின்றி வேறு ஏது..?

காதல் ஒரு வகையான உணர்வு.. அது காதலனை மட்டுமின்றி அவன் சார்ந்த அனைத்தையும் காதலிக்க

வைக்கும்.. காதலினின் ஊர் என்பதாலேயே 'பொட்டைக் காடு' கூட பூங்காவனமாய் காட்சி தரும்.. அவன் பெயர் சொல்லும் வழிப் போக்கரைக் கூட இழுத்து வைத்துப் பேச வைக்கும்.. மைதிலியும் அது போல்தான் நந்தகுமாரனின் ஊரைப் பார்க்க விழைந்தாள்..

நந்தகுமாரனின் திட்டம் வேறு.. அவன் அம்மாவின் செல்லப் பிள்ளை.. தன் கலப்புத் திருமணத்தை தந்தை விரும்ப மாட்டார் என்பது அவனுக்குத் தெரியும்.. ஆனால் தாய், தான் எதைச் செய்தாலும் ஆதரிப்பாள் என்பதை அவன் நன்கு அறிவான்.. எனவே தாயின் அனுமதி வாங்க வெள்ளோட்டமாய் மைதிலியை அவளுக்கு அறிமுகப் படுத்த அந்த விருந்து நாளைப் பயன்படுத்திக் கொள்வதாக இருந்தான்..

காலையிலிருந்தே வீட்டில் வழக்கத்தை விட அதிக பரபரப்பு நிலவுவதைக் கவனித்த மேனகா காரணம் அறிய விரும்பி ராக்காயியை அழைத்தாள்..

சோலையம்மாளின் சேலைமேல் அவள் கீரை வீசிய சம்பவத்திற்குப் பிறகு அவள் பேச்சை வேலையாள்கள் எவரும் கேட்பதில்லை ராக்காயி ஒருத்தியைத் தவிர, அந்தக் கிராமத்து மண்ணின் விசுவாசமிக்க மைந்தர்களை அறியாத மேனகா வெகுண்டாள்.. ஆனால் அவளின் ஜம்பம் அவர்களிடம் சாயவில்லை.. ராக்காயியை மட்டுமே பணத்தால் விலைக்கு வாங்க முடிந்தது.. அவள் கூட சோலையம்மாளின் முன்னால் மேனகாவுடன் பேசப் பயந்தாள்.. எனவே காலைக் காபி கொண்டு வந்து தந்த ராக்காயிடம் மாடி வராண்டாவில் நின்று கொண்டு கீழே பார்த்துக் கொண்டிருந்த மேனகா வினவினாள்..

"இன்றைக்கு என்ன வீட்டில் பரபரப்பு அதிகமாய் தெரிகிறதே..? என்ன விசயம் ராக்காயி..?"

"அதுவாம்மா.. நம்ம சின்னய்யா டவுனில் ஆபிசரா இருக்காங்க இல்ல.. அந்த ஆபிசிலிருந்து வருசா வருசம் திருவிழாவுக்கு ஒரு நாள் விருந்து சாப்பிட வருவாங்க.. இன்னைக்கு அவங்க வர்றாங்களாம்மா.. கீழே கோழி பிரியாணி, வருவல்ன்னு தூள் பறக்குதில்ல.. முட்டை ஒரு

பக்கம் அண்டாவில் வேகுது.. இன்னைக்கு விருந்து சாப்பிட நேத்து ராத்திரியில இருந்து நான் வெறும் வயிறாயில்ல இருக்கேன்.."

"அப்படியா.." என்ற மேனகாவுக்கு புத்தியில் மின்னலடித்தது.. ஆக, இன்று கட்டாயம் மைதிலி அவன் வீட்டுக்கு வருவாள்.. தன் காதலனின் வீடு, தன் எதிர்காலப் புகுந்த வீடு என்ற நினைவில் மனப்பால் குடித்துக் கொண்டு கனவில் மிதப்பாள்..

'இருக்கட்டும், இருக்கட்டும்.. இன்று ஓர் நாள் தானே உல்லாசம் கொண்டாடப் போகிறார்கள்.. கொண்டாடட்டும்.. அடி மைதிலி.. நாளைக்கு மாலையிலிருந்து உனக்குப் போராட்டம் ஆரம்பமாகிறதடி.. அதற்கு முன் சிரித்து விடு..'

தனக்குள் கறுவிக் கொண்டவள் நந்தகுமாரன் செய்தித் தாளோடு வந்து ஊஞ்சலில் அமரவும் அவனை வம்புக்கு இழுத்தாள்..

"என்ன குமார்.. விருந்தெல்லாம் தடபுடலா ரெடியாகுதாமே.. யாருக்கு.."

"நிச்சயமாய் உனக்கில்லை.."

"என்ன குமார் இப்படிச் சொல்றீங்க..? நான் உங்கள் வீட்டு விருந்தாளி இல்லையா..?"

"விருந்தும் மருந்தும் மூன்று நாள்தான்.. உன்னைப் போல் மாதக் கணக்கில் டேரா போடுகிறவர்களுக்குப் பெயர் விருந்தாளியா..?"

"ஐய்யய்யோ.. குமார்.. நானே ஊருக்குப் போகிறதாக இருக்கிறேன்.. கிளம்பும் போது என்னைப் பரவசத்தில் மூழ்கடிக்கிறீர்களே.. தேங்க்ஸ் குமார்.."

"இப்போது என்ன சொல்லப் போகிறாய்..?" என்ற வினாவுடன் அவன் பார்க்க,

"நான் விருந்தாளி இல்லை வீட்டு ஆள் என்று சொல்லி விட்டீர்களே.."

"ஆரம்பித்து விட்டாயா..?"

"நாளைக்கு மாலை தானே ஆரம்பமாகப் போகுது.."

"என்ன சொல்கிறாய்..?"

"ம்ம்.. நான் ஏதோ நினைவில் சொல்லி விட்டேன்.."

"இல்லை.. நீ வேறு நினைவில் பேசும் ஆளல்ல.."

"அப்படி நீங்களாய் நினைத்தால் நான் என்ன சொல்ல..?"

"நீ ஒன்றுமே சொல்ல வேண்டாம்.. கத்தரிக்காய் முற்றினால் கடை வீதிக்கு வந்துதான் ஆக வேண்டும்.. நடக்கும்போது எனக்குத் தெரியாமலா இருக்கப் போகிறது..?"

"அதுதானே.. நீங்கள் யார்.. ஆண் பிள்ளைச் சிங்கமாயிற்றே.."

"நீ சொன்னாலும் சொல்லா விட்டாலும் நான் ஆண்பிள்ளைச் சிங்கம்தான்.." என்றவாறே அவன் எழுந்து சென்று விட்டான்.. அவன் முதுகைப் பார்த்தபடி தனக்குள் கூறிக் கொண்டாள் மேனகா..

'போ.. நீ ஆண் பிள்ளைச் சிங்கமா..? நான் யார் என்று நீயே உன் வாயால் சொன்னது மறந்து விட்டதா..? நான் பெண் புலி.. பார்ப்போம்.. நடைபெறும் யுத்தத்தில் ஜெயிக்கப் போவது நீயா இல்லை நானா என்று..'

அந்த ஞாயிறு விடுமுறை மிக உற்சாகமான விடுமுறை நாளாக மைதிலிக்கு அமைந்தது.. காலையில் கண்விழிக்கும்போதே மனம் இறக்கைக் கட்டிப் பறந்தது.. அதிகாலை நான்கு மணிக்கே கண் விழித்து விட்டாள்.. மகள் எழுந்து இங்கும் அங்கும் நடமாடுவதைக் கண்ட விசாலாட்சி கண்ணில் தூக்கம் சுழற்ற,

"என்னம்மா இந்நேரத்துக்கே எழுந்து விட்டே..?" என்று கேட்டாள்..

"இன்றைக்கு எங்க ஆபிசர் வீட்டு விருந்துக்குப் போகணும்மா.."

"காலை எட்டு மணிக்குத்தானே போகணுமின்னு சொன்னே.."

"இப்போதிருந்து கிளம்ப வேண்டாமா..?"

"நல்லாக் கிளம்பின போ.. பட்டிக்காட்டுத் திருவிழாவுக்குப் போக இவ்வளவு ஆசையா..? ஏழு மணிக்கு எழுந்தால் கூட ஒரு மணி நேரத்தில் கிளம்பி விடலாமே.." தூக்கம் கண்களில் வழிய விசாலாட்சி கேட்டாள்..

"நீங்க தூங்குங்கம்மா.. நான் காலை டிபனுக்கே அங்கே போய் விடுவேன்.. நீங்க மெதுவா எழுந்தால் போதும்.."

"அப்போ சரி" என்றபடி விசாலாட்சி தூங்கி விட்டாள்.

அவளது தூக்கத்தைக் கலைக்காமல் பூனை போல் அடிமேலடி எடுத்து வைத்து பீரோவைத் திறந்தாள் மைதிலி.

'அங்கே நந்துவின் அம்மா, அப்பா இருப்பார்கள்.. பாந்தமாக ஆனால் அழகாக உடுத்திக் கொள்ள வேண்டம.. எந்தச் சேலை கட்டலாம்..?' என்ற யோசனையோடு ஆராய்ந்தவளின் கண்களில் தாழம்பூ நிற உடலும், அரக்குச் சிவப்பு ஜரிகை பார்டரும் கொண்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவை பட்டது.. ஆசையாய் அதை எடுத்துக் கொண்டாள்.. நகைப் பெட்டியைத் திறந்து அரக்கு சிவப்பு கல் ஜிமிக்கியும், அதே சிவப்புக்கல் அட்டிகையையும் எடுத்து வெளியே வைத்தாள்.. சாதாரண தங்க வளையல்களுக்கு ஜோடியாக இரு ஓரங்களிலும் பார்டர் கட்டுவது போல் சிவப்புக் கல் பதித்த வளையல்களை எடுத்துக் கொண்டாள்.. அதே நிற கல் மோதிரம்.. இரண்டு ஆண்டு சம்பளத்தில் சேர்த்து மைதிலிருக்காக விசாலாட்சி செய்த புதிய நகைகள் அவை.

குளித்து உடை மாற்றி தலையைத் தளர்வாய் பின்னலிட்டவள் குளிர் சாதனப் பெட்டியைத் திறந்து முதல் நாள் கட்டி பாலிதீன் கவரில் சுற்றி உள்ளே வைத்திருந்த முல்லைப் பூச்சரத்தை எடுத்தாள்.. தோளின் இரு பக்கமும் சரிய தலை நிறைய பூவைச் சூடிக் கொண்டாள்.. காதுகளில் போட்டிருந்த பழைய தோடுகளை கழட்டி வைத்து விட்டுப் புதுக் கல் ஜிமிக்கியைப் போட்டுக் கொண்டாள்.. கழுத்திலிருந்த செயினுடன் உள்ளங் கழுத்தில் சிவப்புக்கல் அட்டிகையை பூட்டிக் கொண்டாள்.. வளையல்களையும் மோதிரத்தையும் அணிந்தவள்

நெற்றியில் அரக்கு சிவப்பில் திலகமிட்டுக் கொண்டாள்.. பூஜை அறையில் கண்மூடி,

'உன்னை நம்பித்தான் போகிறேன்.. காப்பாற்று பெருமாளே..' என்று கண் மூடி வேண்டிக் கொண்டாள்..

வாசலில் வேன் சத்தம் கேட்க தாயை எழுப்பினாள்.. "அம்மா நான் போய் விட்டு வரவா..?"

தூக்கி வாரிப் போட்டு எழுந்த விசாலாட்சி மகளின் அழகைக் கண்டதும் மலைத்து விட்டாள்.. 'எவ்வளவு அழகாக இருக்கிறாள் என் மகள்..' என்று பெருமைப் பட்டவள், "பத்திரமா போய்விட்டு வாம்மா" என்றவாறு வேன் வரை கூட வந்து உள்ளே நோட்டமிட்டாள்.. மைதிலியின் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள் ஆறு பேர்.. உள்ளே அமர்ந்திருந்ததைக் கண்டதும் நிம்மதியுடன் மகளுக்கு கை ஆட்டி விடை கொடுத்தாள்..

வேனின் உள்ளே அமர்ந்திருந்த பாத்திமா,

"மைதிலி இங்கே வந்துவிடு.." என்று குரல் கொடுக்க, அவள் அருகே சென்று அமர்ந்தாள்.. அடுத்த சீட்டில் அமர்ந்திருந்த டேவிட்..

"பாத்திமா.. இன்றைக்கு யாரோ கல்யாணப் பெண் போலவே இருக்காங்க.. கவனிச்சிங்களா.." என்று கிண்டலடித்தான்..

தோழியைப் பார்த்து முறுவலித்த பாத்திமா,

"ஏன் டேவிட்.. இருக்கக் கூடாதா..?" என்றாள்..

"இருக்கட்டும்.. இருக்கட்டும்.." என்ற டேவிட் மற்ற தோழர்களுடன் அரட்டையில் இறங்கினான்.. ஊடே டிரைவரைப் பார்த்து,

"ஏன்ப்பா இது உன் சொந்த வேனா..?" என்று விசாரித்தான்..

"ஆமாம் சார்.. நம்ம பெரியம்மாதான் வாங்கிக் கொடுத்தாங்க.." என்றான் டிரைவர்..

"இது என்னப்பா.. உனக்கும், எனக்கும் பொதுவான பெரியம்மா யாரிருக்காங்க..?" என்று கிண்டலடித்தான் டேவிட்,

"நம்ம சின்னய்யாவோட அம்மாதாங்க.." என்றான் அவன்,

"நம்ம சின்னய்யான்னா.. ஓ..! நீ நந்தகுமாரன் சாரைச் சொல்கிறாயா..?"

"ஆமாங்க.. எங்க அம்மாவும், அப்பாவும் அவங்க பண்ணையில்தான் வேலை செய்கிறாங்க.. நான் பத்தாவது வரை படித்தேன்.. மேலே டிரைவிங் கத்துக்கிட்டேன்.. ஐயா வீட்டில் டிரைவரா இருந்தேன்.. சொந்தமா வேன் வாங்கி ஓட்டணும்னு ஒருநாள் எங்க அம்மாகிட்ட பேச்சுவாக்கில் சொன்னேன்.. அது பெரியம்மா காதுக்குப் போனதும் உடனே எனக்கு இந்த வேனை வாங்கிக் கொடுத்திட்டாங்க.."

"அப்படியா.. அவங்க மனசு தாராளமானவங்க போல.."

"மகராசிங்க.. அள்ளிக்கொடுப்பாங்க.. அப்படி ஒரு குணவதி.."

மைதிலியின் மனம் சிலிர்த்தது.. அவளின் நந்துவின் அம்மா.. தர்ம சீலி.. கேட்க இனித்தது..

"அவரோட அப்பா எப்படிப்பா..? மீசையும் கீசையுமா ஆள் பார்க்க பயில்வான் மாதிரி பயமுறுத்துவாரே.."

"அதெல்லாம் சும்மாங்க.. மனசு பச்சைப் பிள்ளை போல்.. கண்டிப்பாய் இருப்பார்.. தப்பு செஞ்சா சத்தம் போடுவார்.. அடுத்த நிமிசமே கூப்பிட்டு ஆறுதலாய் பேசுவார்.."

"ம்ம்.. அடிக்கிற கைதான் அணைக்கும்கிற.."

"ஆமாங்கய்யா.."

மைதிலியின் செவி கூர்மையாக இதைக் கிரகித்துக் கொண்டது.. அவளது நந்தகுமாரனின் அப்பா பெரிய மனிதத் தன்மை கொண்டவராமே..

இப்போது வண்டி வயலும், தோப்பும் சூழ்ந்த பாதைக்கு மாறியது.. மைதிலியின் மனம் உல்லாசம் கொண்டது.. எவ்வளவு அழகான பசுமையான ஊர்.. "இந்தப் பக்கம் கண்ணுக்கு எட்டின தூரம் வரை ஐயாவோட தோட்டம், வயல், தோப்புத்தாங்க.." என்று டிரைவர் கூற மைதிலி வெளியே பார்த்தாள்..

அந்தப் பச்சை பசும் வெளியில் பறக்கத் துடித்தாள்.

"யார் கண்ணுக்கெட்டின தூரம் வரைப்பா.. ஏன் கேட்கிறேன்னா இங்கே ஒன்றைக் கண், மாலைக்கண், கிட்டப்பார்வை, தூரப் பார்வை நிறைய கேஸ் உட்கார்ந்திருக்கிறோம்.. நீ விளக்கமாகச் சொன்னால் தேவலை.." என்று டேவிட், பாண்டியனைப் பார்க்க ஒன்றரைக் கண்ணான அவன் பல்லைக் கடித்தான்..

"ஐயா வீடு வந்திருச்சுங்கய்யா.."

அந்த பிரம்மாண்டமான பழைய கால வீட்டிற்குள் வேன் நுழைந்தது.. மைதிலியின் மனம் படபடத்தது.. பக்கத்திலிருந்த பாத்திமாவின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. தோழியின் நிலை புரிந்த பாத்திமா அவள் கையை லேசாக அழுத்தி தைரியம் கொடுத்தாள்..

வேன் நின்றது.. வாசலிலேயே நின்றிருந்த நந்தகுமாரன் வேனின் அருகே விரைந்து வந்தான்.

"வா பாண்டி, வா டேவிட்.." என்று எல்லோரையும் வாய் வரவேற்றாலும் கண் மைதிலியைத் தேடி உள்ளே பாய்ந்தது..

"வாங்க பாத்திமா.." என்றவன் தோழியின் பின்னே இறங்கிய மைதிலியைக் கண்டதும் மயங்கி விட்டான்..

மைதிலி தினமும் நேர்த்தியாக உடுத்திக் கொண்டு அலுவலகம் வருகிறவள்தான்.. ஆனால் இன்று அவள் உடுத்தியிருந்த புதுப் பட்டுப் புடவையும் அணிந்திருந்த புதிய நகைகளும் அவளுக்கு பொழிவூட்ட எழிலோவியமாய் அவள் இறங்கினாள்.. பேச்சிழந்தவனாய் கிறங்கிய கண்களுடன் அவன் தலையசைத்து வரவேற்க அவனது பார்வை கண்டு அவள் வெட்கினாள்.. அதை மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மேனகா கொதித்தாள்..

"வாங்க எல்லோரும் உள்ளே வாங்க.."

நந்தகுமாரன் அனைவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே செல்வது போல் பாவ்லா காட்டிக் கொண்டே தாமதித்து மைதிலி அருகில் வரவும் அவளுடன் இணைந்து உள்ளே நடந்தான்.. அதே நேரம் மகனின் அலுவலகத்தாரை வரவேற்க வீட்டின் உள்ளேயிருந்து வந்த சோலையம்மாளை மகனின் அருகே நடந்து வந்து

கொண்டிருந்த மைதிலி கவர்ந்து விட்டாள்.. தழையத் தழையப் புடவை கட்டி தலை நிறையப் பூச்சூடி தன் மருமகளாக வரும் பெண் எப்படி இருக்க வேண்டும் என்று கனவு கண்டாளோ அப்படி இருந்த அந்தப் பெண்ணைக் கண்டதும் சோலையம்மாளுக்கு மிகவும் பிடித்து விட்டது.

'யாரிந்த அழகான பொண்ணு.. மகாலட்சுமி மாதிரி இருக்காளே..' என்று எண்ணியபடி அனைவரையும் வரவேற்றவள் மைதிலியைக் கண்டதும் பிரியமாகப் புன்னகைத்தாள்.. மைதிலி ஆனந்தப்பட்டுப் போனாள்.. நந்தகுமாரன் மகிழ்ந்தவனாய்..

"அம்மா இதுதான் மைதிலி.." என்றான் என்னவோ அவளை சோலையம்மாள் பார்க்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த மாதிரி..

"வணக்கம்" என்று முத்துப்பல் தெரிய முறுவலித்து கைகுவித்தாள் மைதிலி.. சோலையம்மாளுக்கு நிறைவாய் இருந்தது.. இந்தக் காலத்தில் இவ்வளவு அடக்கமான சுபாவம் கொண்ட பெண்ணா..? என்று ஆச்சரியப்பட்டுப் போனவள்,

"வாம்மா.. நான்தான் நந்துவோட அம்மா.." என்றாள் அன்பாக..

கிராமத்துப் பாணியில் மிக விலை உயர்ந்த பட்டுச் சேலை கட்டி கை, கழுத்து, காது, மூக்கு அனைத்திலும் வைரங்கள் மின்ன தலைமுடியைக் கொண்டையிட்டு அதைச் சுற்றி வளைவாய் மல்லிகைப் பூச்சரம் வைத்து நெற்றியில் அகலமான பொட்டுடன் மங்கலகரமாய் காட்சி தந்தவளைப் பார்க்கும்போது கோவில் அம்மன் சிலை கருணையுடன் பார்ப்பது போலிருந்தது.. அவர்கள் குடும்பத்துக்கே உரிய கறுமை நிறத்துடன் இருந்தாலும் அதிலும் தனிக்களையுடன் ஜொலித்தாள் சோலையம்மாள்.. மைதிலி மாமியாராகப் போகிறவள் என்ற  மரியாதையுடன் அவளைப் பார்க்க.. 'இப்படியொரு பெண் நமக்கு மருமகளாக வரமாட்டாளா..' என்ற வாஞ்சையுடன் சோலையம்மாள் மைதிலியைப் பார்க்க அங்கே ஒரு இனிமையான கண்ணாமூச்சி நடந்தது..

டேவிட் தொண்டையைக் கனைத்தான் விளையாட்டாய்.. அதன் பொருள் புரிந்த பாத்திமா சிரித்தாள்.. புரியாத மற்றவர்கள் விழித்தனர்.. மீசையை முறுக்கியபடி அங்கே பிரசன்னமான துரைசிங்கம்,

"வாங்கய்யா.. இப்பத்தான் வர்றீங்களா.. ஏண்டி சோலையம்மா பிள்ளைகள் வந்திட்டாங்க.. இன்னும் இலை போடாம என்ன செய்கிறே.." என்று மனைவியை அதட்டி விட்டு அவர்களைப் பார்த்து,

"காலைப் பலகாரம் இட்லியும் கோழி வறுவலும் தான்.. மதியம் கோழி பிரியாணி, வறுவல், முட்டைன்னு ரெடியாகுது.. நீங்க காலைப் பலகாரம் சாப்பிட்டு விட்டு கோவில் கடைகளைப் பார்த்து விட்டு வர்றதுக்குள்ள மதியம் பிரியாணி ரெடியாயிரும்.. சோலையம்மா.. இன்னும் அங்கே என்ன செய்கிறே.." என்று கூற டேவிட் அவரைப் பார்த்து..

"அப்பா.. நாங்க இன்னைக்கு நேத்தா இங்கே வர்றோம் எட்டு வருசமா தவறாம திருவிழா விருந்துக்கு வர்றோம்.. மூணு வேளையும் மூக்கு முட்ட சாப்பிட்டு விட்டுத்தான் போகப் போகிறோம்.. எங்க தலையைக் கண்டதும் அம்மா பந்தி ரெடி பண்ண உள்ளே போயிட்டாங்க.. நீங்க இந்தச் சத்தம் போட்டிங்கன்னா பயத்தில் வறுவல் சட்டியை கீழே போட்டுக் கொட்டி விட்டுறப் போறாங்க.. அப்புறம் எங்க சாப்பாடு அம்பேல்தான்.. நான் வேற இன்னைக்கு விருந்துக்காக ஒருவாரமா ஜொள்ளு விட்டுக்கிட்டு இருக்கேன்.. அதனால் இன்றைக்கு ஒருநாள் மட்டும் அடக்கி வாசிங்கப்பா.. உங்களுக்குப் புண்ணியமாப் போகும்.." என்றான்..

"ஹாஹா.. டேவிட்டு.. நீ வந்து வாயைத் திறந்தாலே சோக்குதாம்பா.." என்றார் துரைசிங்கம்..

"ஜோக்கா.. எங்க வயிற்றோடு விளையாடிரா தீங்கப்பான்னு பயந்து போய் கெஞ்சிக் கேட்கிறேன்ப்பா.."

"ஹாஹா.." என்று துரைசிங்கம் மீண்டும் சிரிக்க ஆரம்பிக்க,

"என்ன சத்தம் இங்கே.. ஏங்க இன்னைக்கு ஒரு நாள் அடங்கி இருங்க.. விருந்துக்கு வந்த புள்ளைகள் பயந்திரப் போகுதுங்க.. புரியுதா.." என்று அதட்டல் போட்டாள் அங்கு வந்த சோலையம்மாள்..

துரைசிங்கம் உடனே அடங்கிவிட,

"பாருங்க சார்.. உங்கப்பாவும் 'வீட்டில் எலி, வெளியில் புலி' தானா.." என்று டேவிட் நந்தகுமாரன் காதோரம் கிசுகிசுக்க நந்தகுமார் சிரித்தான்..

உள்ளே சாப்பாட்டு மேஜையில் வரிசையாய் இலை போடப்பட்டு இருக்க எல்லோரும் அமர்ந்து கொள்ள மைதிலி மட்டும் தனித்து நின்றாள்..

"என்னம்மா..?" என்று சோலையம்மாள் வினவ..

"அம்மா.. அவங்க சுத்த சைவம்.. அசைவம் சாப்பிட மாட்டாங்க.." என்று டேவிட் கூறினான்..

"அப்படியாம்மா.. அதனால் என்ன.. இட்லிக்கு தொட்டுக் கொள்ள சட்டினியும் சாம்பாரும் வேற தனியா செஞ்சிருக்கோம்.. நீ சும்மா உட்கார்ந்து சாப்பிடு.. நான் பரிமாறுகிறேன்.." என்றாள் சோலையம்மாள்..

"இல்லைங்க.. நீங்க பரிமாறி நான் சாப்பிட எனக்கு கஷ்டமா இருக்கும்.. நானும் பரிமாற உங்களுக்கு உதவி பண்ணுகிறேனே.. அப்புறம் உங்களுடன் சாப்பிட்டுக் கொள்கிறேன்.." என்றாள் மைதிலி தயங்கியவாறு..

சோலையம்மாள் நெகிழ்ந்து போனாள்.. அந்தக் குடும்பத்தின் மூத்த மருமகள் அவள்.. பெண் குழந்தையைப் பெறாதவள்.. ஆண் குழந்தையைப் பெற்றவள்.. நாத்தனார், கொழுந்தன் இவர்களின் திருமணம் முதற்கொண்டு குடும்பத்தின் அத்தனை சுபநிகழ்ச்சிகளையும் முன்னே நின்று நடத்தியவள், ஊருக்குப் பெரிய வீடு.. பண்ணை வீடு.. ஊரின் திருவிழாக் காலங்களில் அவர்கள் வீட்டில் தான் அதிகம்

பேர் விருந்துண்ணுவார்கள்.. விருந்து தயார் பண்ணுவதை மேற்பார்வையிட்டாலும் பரிமாறுவதற்கு வீட்டுப் பெண்மணிதான் செய்ய வேண்டும்.. வேலை செய்து

களைத்துப் போய் விடும்போது அவள் சாப்பிடாமலே கண் அயர்ந்த நாள்கள்தான் அதிகம்.. அது ஏனோ நந்தகுமாரன் தாயின் மேல் பாசம் கொண்டவனாக இருந்தாலும் துரைசிங்கம் மனைவி மீது காதல் கொண்டவராக இருந்தாலும் இருவருக்குமே இதுவரை அவளது நிலைமை புரிந்ததில்லை.. அவர்கள் ஆண்கள் என்பதால் தெரியாமலிருக்கலாம் என்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டாலும் சோலையம்மாளுக்கும் ஒரு ஏக்கம் இருக்கத்தான் செய்தது.. இன்று ஆதுரமாய் கை கொடுக்கும் அந்த அழகிய பெண்ணை அவள் பாசத்துடன் நோக்கினாள்..

# 17

"ஏம்மா நீ சைவமாச்சே அசைவம் எப்படிப் பரிமாறுவ..?"

"இட்லி வைக்கிறேன், தண்ணீர் ஊற்றுகிறேன்.. சரிதானே.."

சேலையை தூக்கிச் செருகி முந்தானையை இழுத்துச் செருகி நீண்ட பின்னல் சுழன்றாட அவள் பரிமாற சோலையம்மாள் வறுவலை மட்டும் வைத்துக் கொண்டு வந்தாள்.. நந்தகுமாரன் இலையருகில் மைதிலி வந்த போது அவன் விழியும் அவள் விழியும் கலக்க அவளது கன்னங்களில் செம்மையேறியது.. அதை ஜாடையாய் சோலையம்மாளும் கவனித்தாள்.. அவளது உள்ளத்தில் ஐயம் எழுந்தது.. அதன் விளைவாய் மைதிலியின் மேல் அவளுக்கு ஈர்ப்பு கூடியது..

பந்தி முடிந்து அவர்கள் அனைவரும் முன்புறம் சென்றுவிட சோலையம்மாள் மைதிலியுடன் சாப்பிட அமர்ந்தாள்.. மைதிலி சோலையம்மாளுக்குப் பரிமாற முனைய,

"உட்காரும்மா.. எல்லாப் பாத்திரமும் கைக்கு எட்டுவது மாதிரி தானே இருக்கு.. நாம போட்டுச் சாப்பிட்டுக்கலாம்.." என்ற சோலையம்மாள் தன் இலையில் இட்லிகளை வைத்துச் சட்னி, சாம்பாரை ஊற்றிக் கொண்டாள்..

"நீங்க அசைவம் போட்டுக்கலையா.."

"ஏம்மா.. நீ சாப்பிடாதபோது நான் மட்டும் சாப்பிடலாமா..?"

"அடடா.. நான் தனியாகச் சாப்பிட்டுக் கொள்கிறேன்.. நீங்க உங்களுக்குப் பிடிச்சதைச் சாப்பிட முடியாமல் பண்ணி விட்டேனே.."

மைதிலி எழ முயல சோலையம்மாள் அவள் கை பிடித்து உட்கார வைத்தாள்..

"நான் சாப்பிடாத அசைவ சாப்பாடா..? அது எனக்குப் பிடிச்சது இல்லம்மா.. நான் தனியா உட்கார்ந்து சாப்பிடுவேன்னு என் கூட உட்கார்நது நீ சாப்பிடுற பாரு.. இதுதான் கண்ணு எனக்குப் பிடிச்ச சாப்பாடு.. இது வரைக்கும் இவ்வளவு ருசியான சாப்பாட்டை நான் சாப்பிட்டதில்லைம்மா.."

மைதிலி பேச்சிழந்து போனாள்.. சோலையம்மாளின் முகம் பார்த்துக் கொண்டே இட்லியைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டாள்..

சாப்பிட்டு முடித்தவுடன் அவர்கள் வீட்டின் முன்கட்டுக்குச் செல்ல "இதோ மைதிலி வந்தாகி விட்டது.. கிளம்பலாமா.." என்றாள் சுமதி..

"எங்கே.." என்றாள் மைதிலி..

"கோவிலுக்குத்தான்.." என்று அவள் கூற மைதிலி பாத்திமாவையும் டேவிட்டையும் பார்த்தாள்..

"நாங்க நந்தகுமாரனோடு கோவில் கடைகளைச் சுற்றிப் பார்ப்போம்.. வாங்க வாங்க போகலாம்.." என்றான் டேவிட்..

"நீங்களும் வாங்க.." என்றாள் மைதிலி சோலையம்மாளிடம்,

"நானா.. இங்கே சமையலை யார் பார்த்துக் கொள்வது.." என்று அவள் கேட்க,

"எல்லாம் செங்கமலம் பார்த்துக் கொள்வாள்.. வாங்கம்மா.." என்றான் நந்தகுமாரன்..

சோலையம்மாள் வாய் நிறைய சிரிப்போடு அவர்களோடு கிளம்பினாள்.. வழியில் அனைவரும் செட்டு, செட்டாகப்

பிரிந்து பேசிக் கொண்டு செல்ல மைதிலி ஒட்டுப்புல்லாய் சோலையம்மாளுடன் ஒட்டிக் கொண்டாள்.. தாயுடன் பேசியவாறு வருவது போல் நந்தகுமாரன் அவர்களுடன் இணைந்து நடந்தான்.. நடுவில் மைதிலியை விட்டு அவனது வலது புறம் சோலையம்மாள் வர இடது புறம் இயல்பாய் நந்தகுமாரன் ஜோடி சேர்ந்து கொண்டான். வழியில் வெளியூரிலிருந்து வந்திருந்த உறவினர் பெண்மணி ஒருத்தி..

"என்ன அண்ணி சௌக்கியமா..?" என்று விசாரித்தாள்.

"ஆமாம் வடிவு.. நீ எப்போ வந்தே.." என்று சோலையம்மாள் நின்று விசாரிக்க மைதிலியும் நந்தகுமாரனும் தேங்கி நின்றனர்..

"நான் வந்து ஒரு மணி நேரம்தான் ஆகுது.. சிங்கப்பூருக்கு பிழைக்கப் போனால் உறவு முறை இல்லைன்னு ஆகிவிடுமா..? மகனுக்கு அழகு போல் பொண்ணைக் கல்யாணம் பண்ணியிருக்கீங்க.. எனக்கு ஒரு பத்திரிக்கை அனுப்பலையே.." என்று வடிவு குறைபட மைதிலி வெட்கிப் போனாள்.. நந்தகுமாரன் தாயை மறந்து அவளை ரசனையாய் நோக்க,

"நீங்க ரெண்டு பேரும் நடங்கப்பா.. நான் இந்தாவரேன்.." என்று அவர்களை முன்னே நடக்கவிட்டு பின்னால் அவர்கள் ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்து பூரித்துப் போனவள் அவர்கள் செவியில் விழாதவாறு..

"இன்னும் நடக்கலை வடிவு.. முதல் பத்திரிக்கை உனக்குத்தான்.." என்றாள்..

"அடி ஆத்தாடி.. அப்படிப் போகுதா கதை.." என்று வடிவு கன்னத்தில் கை வைக்க சோலையம்மாள் மகிழ்வுடன் நடந்த அதே நேரம் முன்னால் சென்று கொண்டிருந்த நந்தகுமாரன்.

"என்னடி.. மாமியாரை வந்தவுடனே கைக்குள் போட்டுக்கிட்ட.." என்றான்..

"ஸ்ஸ்.. என்ன பேச்சு இது.. உங்க அம்மாவை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு தெரியுமா.."

"அப்பா.. ஒரு கவலை விட்டது.." என்று அவன் சிரித்தான்.. அதற்குள் சோலையம்மாள் வந்துவிட அவர்கள் கோவிலுக்குள் சென்றனர்..

நந்தகுமாரன், டேவிட், பாத்திமாவுடன் இணைந்து கோவில் வாசலில் நின்று விட சோலையம்மாள், மைதிலியுடன் கோவிலினுள் சென்றாள்.. அர்ச்சனை முடிந்து கோவில் பிரகாரத்தில் அமர்ந்தவள்,

"ஏம்மா சாமி கும்பிடும்போது சுலோகம் சொன்னியே கடவுள் பக்தி அதிகமா..?" என்று கேட்டாள்..

"மூச்சுக் காற்றை அதிகமா இழுக்கறியா.. குறைவா இழுக்கறியான்னு கேட்டால் எப்படிப் பதில் சொல்வது..?" என்றாள் மைதிலி..

"என் பையன் கடவுளே இல்லைம்பான்.."

"நான் கடவுளில்லாமல் எதுவுமே இல்லைம்பேன்.."

"அவன் நாத்திகம் பேசறவன்ம்மா.."

"நான் ஆன்மிகமே உலகம்ன்னு வாழ்கிறவள்.."

"அப்புறம் எப்படி ரெண்டு பேரும் பிரியப்பட்டீங்க.."

"அத்தை.." என்று திகைத்துப் போனாள் மைதிலி..

"அத்தைதானம்மா.. அப்படியே வாய் நிறையக் கூப்பிடு.. நான் பெரிய வீட்டுக்காரி.. நாலு நியாயம் சொல்ல வேண்டியவ.. கண் பார்த்து விசயத்தைச் சொல்லிப் புடுவேன்.. வரும்போது வடிவு கேட்டாளே.. இதுதான் உன் மருமகளான்னு நீ ஆத்திரப்படாமல் வெட்கப்பட்டாயே.. அப்போது தெரியாதாம்மா எனக்கு..?"

"அத்தை.. பெரியவங்களை மீறி நான் எதுவும் செய்ய மாட்டேன்.."

"பெரியவங்களா நானும், நந்துவோட அப்பாவும் உன்னையும், நந்தவையும் சேர்த்துத்தான் வைப்போம்.. பிரிக்க மாட்டோம்.."

"மாமா.. ரொம்பக் கோபக்காரர்.. என்று.." என்று மைதிலி திணறினாள்..

"கோபக்காரர்தான்.. ஜாதி பார்க்கிறவர்தான்... ஆனா பெண்டாட்டி, பிள்ளை மேல உயிரானவர்.. நான் பார்த்துக்கிறேன்.. நீ பயப்படாதே.. உன் வீட்டில் சொல்லி விட்டாயாம்மா.."

"இல்லை அத்தை.. அவங்கதான் ரொம்ப ஜாதி பார்ப்பாங்க.."

"பார்த்தால் பார்க்கட்டும்.. அம்மாடி.. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.. நான் வந்து பொண்ணு கேட்கிறேன்.. நீ கவலைப்படாதே.."

அவர்கள் நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.. மற்றவர்கள் வந்துவிட எழுந்து வீட்டுக்கு வந்தனர்.. மதிய உணவு முடிந்து அவர்கள் இளைப்பாற மாடிக்குப் போக, பின்புறத் தோட்டத்திற்குப் போனாள் மைதிலி.. மாமரத்தில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து கொள்ள திடீரென்று ஊஞ்சல் ஆடவும் பயந்து போய் 'வீல்' என்று அலறப் போனாள்..

"ஷ்ஷ்.. கத்தாதே நான்தான்.." என்றான் நந்தகுமாரன்..

"இது என்ன விளையாட்டு நான் பயந்தே போனேன்.."

"அம்மாவுக்கு வேப்பிலை அடிச்சிட்ட போல.. 'இருடா.. உன் முதுகில் நாலு போடறேன் படவா.. இத்தனை நாளா என்கிட்ட மறைத்து வைத்தாயான்னு மிரட்டுகிறாங்க..'"

"ம்ம்.." என்றாள் மைதிலி கட்டை விரலால் நிலத்தை கீறிக் கொண்டு..

"பார்த்துடி.. நகம் பேர்ந்து விடப் போகுது.. இப்ப எதுக்கு பூமியைத் தூர் வாருறே.."

"ச்சீ போங்க.." என்று சிணுங்கினாள் மைதிலி..

"அடிப்பாவி.. நீ எங்கே நிற்கிற.. நான் எங்கே நிற்கிறேன்.. நாலு அடி இடைவெளி இருக்கேடி.. நீ சிணுங்குகிறதை யாராவது கேட்டால் என்னைத் தானே தப்பா நினைப்பாங்க.." என்றபடி அவன் நெருங்க,

"இப்போ எதுக்குக் கிட்ட வருகிறீர்களாம்.." என்றாள் அவள்..

"நீ சிணுங்குவதை உண்மையாக்க.."

அவள் உதடு கடித்து முஷ்டி மடக்கி அவன் நெஞ்சில் குத்த அந்தக் கரங்களை பிடித்து அவன் அருகே இழுத்த வேகத்தில் பூமாலையாய் அவன் மேல் விழுந்தாள்.. அவன் மார்பில் அப்படியே அவள் முகம் புதைத்துக் கொண்டாள்.. அவளைச் சுற்றி வளைத்தன அவனது கரங்கள்.. அவள் கழுத்தில் இதழ் பதித்தவன் அப்படியே முகம் புதைத்துக் கொண்டான்..

மாடியிலிருந்து தன் வீடியோ கேமரா லென்ஸின் வழி அதைப் பார்த்துக் கொண்டிருந்த மேனகாவின் கண்கள் சிவந்தன..

'அனுபவித்துக் கொள் நந்தகுமாரா.. இன்றுதான் உன் ஆட்டம்.. நாளை என் ஆட்டம் தொடங்குகிறது..' என்று தலையை சிலுப்பிக் கொண்டாள்..

மாலை சிற்றுண்டி முடிந்து அனைவரும் விடை பெற்றுக் கொள்ள, சோலையம்மாள் மைதிலியை அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டு அனுப்பி வைத்தாள்.. பசுவைப் பிரிந்த கன்றாய் மைதிலி திருச்சிக்குத் திரும்பினாள்..

வேம்பூரின் இனிய நினைவுகள் நெஞ்சமெல்லாம் இனிப்பாய் நிறைந்து நிற்க தாய், தந்தை எதையோ கூற வந்ததைக் கவனித்தவளாய்,

"டயர்டா இருக்கும்மா.. காலையில் கேட்டுக்கறேன்.." என்றபடி தூங்கி விட்டாள்..

மறுநாள் மிகத் தாமதமாக விசாலாட்சி உலுக்கி எழுப்பியதால் எழுந்தவள், அவசரமாய் அலுவலகம் செல்லக் கிளம்பினாள்.. விசாலாட்சி எதையோ சொல்ல வர,

"நேரமாச்சும்மா.. சாயந்திரம் வந்து கேட்டுக்கிறேன்.." என்றபடி அவள் வாசலுக்கு வந்து செருப்பை மாட்ட பின்னாலேயே ஓடி வந்த விசாலாட்சி,

"ஏண்டி இன்னைக்குன்னு காலில் சக்கரம் கட்டிக் கிட்டுப் பறக்கிற.. சரிசரி.. சாயந்திரம் சீக்கிரம் வந்து விடு.." என்றாள்..

விட்டால் போதுமென்று, "சரி"யென்று தலையாட்டி விட்டு மைதிலி அலுவலகத்துக்கு ஓடினாள்.. நந்தகுமாரன் அவள் இருக்கையை கடந்து போகும்போது வழக்கமாய் சந்தித்துக் கொள்ளும் இரு ஜோடிக் கண்களிலும் ரகசியப் புன்னகை இருந்தது..

நேற்றைய நாளின் நினைவோடு உலவிக் கொண்டிருந்தவள் மாலை வீடு திரும்பினாள்..

வீட்டு வாசலில் பளபளவென்று புதிய வெளிநாட்டுக் கார்கள் இரண்டு நின்று கொண்டிருந்தன.. அவள் வருவதைப் பார்த்த பக்கத்து வீட்டுப் பெண்மணி,

"ம்ம்.. உனக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாரு.." என்று பெருமூச்சு விட்டாள்.. அவளை வினோதமாய் பார்த்தபடி வீட்டின் உள்ளே சென்ற மைதிலி திகைத்தாள்.. வரவேற்பறையில் அமர்ந்திருந்த மூவரும் திரும்பி அவளை ஏற இறங்க திருப்தியுடன் பார்த்தனர்.. மூவரில் இருவர் பெற்றவர்கள் போல் தோற்றமளிக்க அந்த இளம் வாலிபன்..

"ஹாய் மைதிலி.. வி ஆர் வெயிட்டிங் ஃபார் யு.. ஏன் லேட்.." என்றான்.. அவன் தாய்,

"ஷ்.. மிரட்டாதேடா.. என் மருமகள் பயந்து விடப் போகிறாள்.." என்றாள்.. அவனது தந்தையோ,

"வேலையில் டெடிகேசன் இருப்பது பாராட்டுக் குரியதுதான்.." என்றார்..

மைதிலி அவசரமாய் உள்ளே சென்று விசாலாட்சியிடம்,

"யாரும்மா.. அவங்க.." என்றாள்..

"உன் வருங்காலக் கணவரும், மாமனார், மாமியாரும்.." என்றாள் தாய்..

## 18

விசாலாட்சியின் வார்த்தைப் பிரயோகத்தைக் கேட்டு மைதிலியின் மனம் நடுக்கமுற்றது. 'அம்மா என்ன

சொன்னாள்..?'

'உன் வருங்காலக் கணவரும், மாமனாரும் மாமியாரும்' என்று சொன்னாள்... சொல்லலாமா..? அப்படிச் சொல்லலாமா..? மைதிலியை அவர்களுக்குப் பிடித்திருந்தால் போதுமா..? அவளுக்கு அவர்களைப் பிடிக்க வேண்டாமா..?

இப்போதுதான் என்றில்லை.. எப்போதுமே மைதிலியைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வரும்போது அவர்களுக்கு மைதிலியைப் பிடிக்க வேண்டுமே என்று தான் விசாலாட்சி கவலைப்படுவாள்.. ஓர் முறை கூட அவளுக்கு மாப்பிள்ளையைப் பிடிக்க வேண்டுமே என்று கவலைப்பட்டதில்லை..

"என்ன சொல்றீங்க அம்மா..?"

"உனக்கு விடிவு காலம் வந்து விட்டது மைதிலி.. அதிர்ஷ்டம் உன் கதவைத் தட்டுகிறது.. ராஜா போல் மாப்பிள்ளை.. பெரிய பணக்காரர்.. வீட்டுக்கு ஒரே பிள்ளை.. கட்டினால் உன்னைத் தான் கட்டுவேன்னு உன் போட்டாவைப் பார்த்து விட்டு முடிவு பண்ணிட்டாராம்.."

"என் போட்டோ அவருக்கு எப்படிக் கிடைத்தது..?"

"அப்பா கல்யாண புரோக்கர் கிட்ட கொடுத்திருந்தது எதுவாவது கிடைத்திருக்கும்.. இப்ப அதுவா முக்கியம்..? சீக்கிரம் முகம் கழுவி டிரெஸ் பண்ணிக்கிட்டு, உன் புது நகைகளை எடுத்துப் போட்டுக் கொள்.. முல்லைப்பூ.. உனக்கு பிடிக்கும்ன்னு உன் அண்ணன் சொன்னானாம்.. ஒரு பந்துப் பூ வாங்கி வந்திருக்கிறார்கள்.."

பேசிக்கொண்டே விசாலாட்சி பரபரப்பாய் காரியங்களை கவனித்துக் கொண்டு இருந்தாள்..

"தனம்.. அங்கே என்ன பண்றே.."

"ஹரிஷ்.. அழுதான் அத்தை சமாதானம் பண்ணிக் கிட்டு இருக்கேன்.. ஹரிஷ் இங்கே வந்து பார்.. உன் அத்தை வந்து விட்டாள்.."

"உன் புருசனும், மாமனாரும் எங்கே.."

'பின் பக்கம் வாழையிலை நறுக்கப் போனார்கள்.. நான் இலை போட்டு பரிமாற ஆரம்பிக்கவா..?'

"வேண்டாம் அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.. இந்தப் பெண்ணைக் கொஞ்சம் அலங்காரம் பண்ணிவை.."

தனலட்சுமி மைதிலியை பார்த்த பார்வையில் பொறாமை இருந்ததோ..?

"ம்ஹூம்.. இருந்த பெண்ணுக்கு இசைந்த மாப்பிள்ளை என்பார்கள்.. உனக்கென்னம்மா.. வெளிநாட்டு படிப்பு படித்த மாப்பிள்ளை.. செல்வம் கொழிக்கிற புகுந்த வீடு.. காரும் பங்களாவுமாய் வாழப் போகிறாய்.. கல்யாணம் ஆன பின்னால் எங்களையெல்லாம் மறந்து விடாதே மைதிலி.."

மைதிலி எரிச்சல் பட்டாள்..

"அம்மா.. நான் என்ன சொன்னேன்..?"

"என்ன சொன்னாய்..?"

"இந்தப் பெண் பார்க்கும் சடங்கெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லைன்னு சொன்னேனா இல்லையா..?"

"ஏண்டி உனக்குப் புத்தி, கித்தி பிசகி விட்டதா..? கல்யாணத்துக்குப் பணம் சேர்த்த பின்னால் பெண் பார்க்க வரச் சொல்லுங்க.. அதுவரை வேண்டாம்ன்னுதானே சொன்னே.. இப்ப உன்னை வைரத்தால் இழைச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போக செல்வச் சீமானே வந்திருக்கிறார்.. இப்பப் போய் பினாத்திக்கிட்டு.. போ.. போய் ரெடியாகு.."

"அம்மா.." என்று மைதிலி ஏதோ சொல்ல முயல,

"மைதிலி.." என்று அழுத்தத்துடன் ஒலித்தது விசாலாட்சியின் குரல்..

"ஏன் பிடிவாதம் பிடிக்கறேன்னு நான் கேட்க மாட்டேன்.. நேற்று ஊர் பேர் தெரியாத ஒருத்தர் வீட்டு விருந்துக்குப் போக அவ்வளவு ஆர்வமாய் அலங்கரிச்சுக் கிட்டவ.. இன்றைக்கு வீடு தேடி வந்த பெரிய மனிதர் வீட்டு மாப்பிள்ளையின் முன் நிற்க அடம் பிடிக்கிறாய்ன்னா.. அதுக்கு என்ன காரணம்ன்னும் நான் கேட்க மாட்டேன்.. இது

உன் அம்மாவின் உத்திரவு.. போ.. போய் இன்னும் ஐந்து நிமிசத்தில் ரெடியாகு.."

"அம்மா நான் சொல்வதைக் கொஞ்சம்.."

"கேட்க முடியாது.. இது நீ நினைத்த மாதிரி ஆடும் விஷயமல்ல.. கல்யாண விஷயம்.. உன் அப்பாவுக்கும், அண்ணனுக்கும் உன் அடம் தெரிந்தது.. கொன்று விடுவார்கள்.. உன்னையல்ல, என்னை.. பெண்ணை வளர்க்கத் தெரியாமல் வளர்த்திருக்கேன்னு.."

தனலட்சுமி குற்றவாளி போல் பார்க்க மைதிலி செயலற்றுப் போனாள்.. தன் மனம் கோணாமல் தன் தாயின் மனம் கோணாமல் அலங்கரித்துக் கொண்டு அவர்கள் முன் வந்து நின்றாள்.. அதற்குள் கிருஷ்ணமூர்த்தியும், வைத்தீஸ்வரனும் அங்கு வந்து அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தார்கள்... மைதிலியின் அழகை ஆவலுடன் விழுங்குவதைப் போல் பார்த்தன வினய்யின் விழிகள்.. எதிர்சோபாவைக் காட்டி,

"உட்காருங்கள்.. ஏன் நிற்கிறீர்கள்.." என்றான் அவன்.

"பரவாயில்லை.. எனக்குக் கஷ்டமில்லை.."

"எனக்கில்லையா கஷ்டமாக இருக்கிறது.. நீங்கள் நின்றால் என் கால் வலிக்கிறதே.."

ரங்கநாதனும் ஜானகியும் சிரித்தனர்..

"இங்கே வந்து இப்படி உட்காரும்மா.." என்று ஜானகி தன் அருகே அழைத்தாள்.. அதற்கு மேலும் மறுப்புச் சொல்ல முடியாமல் மைதிலி அவள் அருகே சென்று அமர்ந்தாள்..

"சென்னையில் மேக்-அப் முகங்களையே பார்த்த கண்களுக்கு உன் இயல்பான அழகான முகம் இதத்தைத் தருகிறது.." என்றாள் ஜானகி புன்முறுவலுடன்.

என்ன பேசுவது என்று தெரியாமல் மைதிலி தவிக்கும் போது,

"கிருஷ் நான் உங்கள் தங்கையுடன் தனியாகப் பேச வேண்டுமே.." என்றான் வினய்.. மைதிலிக்கு உயிர் வந்தது.. அவனிடம் தனியாகச் சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்கும் போல இருக்கிறதே.. ஆனால்..

"இது என்ன புதுப் பழக்கம்.. நம்ம குடும்பத்தில் இதெல்லாம் வழக்கமில்லையே.." என்று தடுத்தார் வைத்தீஸ்வரன்.

"அவங்க ஒருத்தரை ஒருத்தர் தெரிந்துக்க வேண்டாமா.. பேசட்டும்.." என்றார் ரங்கநாதன்.

"நான் என் பெண்டாட்டி கூட பழகிட்டா கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..? இல்லை என் மகன் தான் என் மருமகளைப் பற்றி தெரிந்துக்கிட்டு கல்யாணம் பண்ணிக் கிட்டானா..?" என்று வைத்தீஸ்வரன் வாதாட,

"அதைச் சொல்லு.. முதலிலேயே தெரிந்திருந்தால் உன் மாமனாருக்கு நான் கழுத்தை நீட்டியிருப்பேனா.." என்று மருமகளிடம் சலித்துக் கொண்ட விசாலாட்சி உள்ளிருந்தபடியே, "கிருஷ்ணா" என்று குரல் கொடுத்தாள்.

அந்த அழைப்பின் பொருள் புரிந்த மகன்,

"அப்பா.. கொஞ்சம் அடங்குறீங்களா.." என்று தகப்பனின் காதோரம் எச்சரித்தான்.. பின்னர் வினய்யைப் பார்த்து,

"தப்பா எடுத்துக்காதீங்க.. எங்க அப்பா அந்தக் காலமனிதர்.." என்றான்..

"அதனால்தான் அவரை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது.." என்று வினய் கூற,

"என்னது.." என்று ஆச்சரியப்பட்டுப் போனான் கிருஷ்ணமூர்த்தி.. உள்ளே திரும்பி தாயைப் பார்க்க அவள் விழிகளிலும் வியப்பு தெறித்ததை உணர்ந்தான்.

"இந்த மனுசன் பேசின பேச்சில் மூத்த மாப்பிள்ளை மறு வீடே வேணாம்ன்னு ஓடிப் போனார்.. இந்த மாப்பிள்ளை எப்ப ஓடுவாரோன்னு நான் பயந்துகிட்டு இருக்கேன்.. இவரானா.. மாமனாரை பிடிச்சிருக்குங்கிறார்.. தனம், இதுக்காகவே உன் நாத்தனார் மாப்பிள்ளையின் காலைத் தொட்டுக் கும்பிடணும், இவர் மனிதப் பிறவியே இல்லை.."

"ஐயோ.. என்ன அத்தை.. இப்பத்தான் ஆஹா, ஓஹோன்னு புகழ்ந்தீங்க.. இப்பப் போய் இப்படிச் சொல்றீங்க.."

"அவர் தெய்வப் பிறவிம்மா.."

"அதுதானே பார்த்தேன்.."

கிருஷ்ணமூர்த்தி மைதிலியைப் பார்த்து,

"மைதிலி மாப்பிள்ளையை மொட்டை மாடிக்குக் கூட்டிக்கிட்டுப் போம்மா.." என்றான்..

"காபி, பலகாரம் இன்னும் சாப்பிடவில்லையே.." என்று உள்ளேயிருந்து விசாலாட்சி குரல் கொடுக்க,

"வந்து சாப்பிட்டுக் கொள்கிறோம்.. கமான் மைதிலி.." என்றபடி வினய் எழுந்து மாடிப்படிகளில் ஏறினான்.. மைதிலி பின் தொடர்ந்தாள்..

இதமான முன்னிரவு நேரம்.. திருச்சி மாநகரம் விளக்குப் புள்ளிகளால் ஜொலித்து.. தூரத்தில் உச்சிப் பிள்ளையார் கோவில் விளக்குத் தெரிந்தது.. சிலுசிலுவென்று காவேரி ஆற்றுக் காற்றாடித்து உடலைத் தழுவிச் சென்றது.. வினய் சிலிர்த்தான்.

"ஹௌ நைஸ்.. எனக்கு உங்கள் ஊரை ரொம்பப் பிடிச்சிருக்கு மைதிலி.." என்றவன் தொடர்ந்து.. "உங் களையும் தான்.." என்றபடி அவளை ஆழ்ந்து பார்த்தான்..

மைதிலியின் மனம் படபடத்தது.. அவனது பார்வை தன்னை துளைப்பதை உணர்ந்தாள்.. நா உலர்ந்து போனது.. தொண்டை வறண்டது.. மெதுவாய் திணறிய படி,

"நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்.." என்றாள்..

"ஒன்றென்ன.. கோடி சொல்.. கேட்கிறேன்.. அதற்கு முன் நான் ஒன்று சொல்லவா..?"

அவள் ஏறிட்டுப் பார்க்க,

"உன் விழிகள் அழகாக இருக்கின்றன மைதிலி.. உனக்கு மை விழி என்று பெயர் வைத்து இருக்கலாம்.. உன் விழிகள் மேல் இமைகள் படபடக்க நீ பார்க்கும் போது.. என் மனதைக் கொள்ளை அடிக்கிறாய்.. உன் போட்டோவைப் பார்த்ததுமே உன் விழிகள் தான் என்னைக் கவர்ந்தன தெரியுமா.." என்று அவன் கூறிக் கொண்டிருக்கையில் மைதிலி இடைமறித்தாள்..

"என் போட்டோ உங்களுக்கு எப்படிக் கிடைத்தது..?"

"மேனகா அனுப்பினாள்.. உன்னைத் தெரியுமென்று சொன்னாளே.."

"அவள் உங்களுக்குத் தெரிந்தவளா.." மைதிலி கலங்கிப் போனாள்.. கடைசியில் மேனகா செய்த வேலையா இது..?

"எஸ்.. வி ஆர்.. கிளாஸ்மேட்ஸ் ஃபாரினில் ஒன்றாகப் படித்தோம்.. என் பிரண்ட்.."

"வினய் சார்.. உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.. நீங்கள் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.." என்று மைதிலி அவசரமாய் கூறிக் கொண்டிருந்தபோது,

"ஹாய் வினய்.." என்ற குரல் கேட்டது.. இருவரும் திரும்பிப் பார்த்தனர்.. கையில் செல்போனுடன் மேனகா நின்றிருந்தாள்.. அவர்கள் இருவரின் அருகேயும் வந்தவள்,

"என்ன வினய்.. உங்கள் வருங்கால மனைவி மைதிலிகிட்டப் பேசினால் நேரம் போவதே தெரியாதா.. கீழே நீங்கள் சாப்பிட வரவில்லைன்னு உங்கள் மாமியார் தவிக்கிறாங்க.. இதோ உங்கள் மைத்துனனே தேடி வந்து விட்டாரே.." என்று கூற.. கிருஷ்ணமூர்த்தி மாடிக்கு வந்தான்..

"வாங்க மாப்பிள்ளை.. சாப்பிட்டு விடலாம்.." என அவன் அழைக்க..

"கிருஷ்ணன் சார்.. ஒரு நிமிசம்.." என்று அவனிடம் ஏதோ பேச ஆரம்பித்த மேனகா தன் கையிலிருந்த செல்போனை மைதிலியிடம் கொடுத்து..

"நம்ம பிரண்டுதான்.. நந்தாவாம்.. பேசு.." என்றவாறு கிருஷ்ணமூர்த்தியிடம் திரும்பி, "வினய்.. உங்கள் வீட்டு மாப்பிள்ளையாக வருவதற்கு நான்தான் முக்கிய காரணம் தெரியுமா.." என்று கூறிக் கொண்டிருந்தாள்..

நடுங்கும் கைகளால் செல்போனை வாங்கிய மைதிலி அது தொடர்பில் இருந்ததைக் கவனித்தாள்.. காதில் வைத்தாள்.. "ஹலோ" என்றாள்..

"கேட்டேன்டி.. எல்லாம் கேட்டேன்.. போனை ஆன் பண்ணுகிறேன்.. உன் மைதிலியை மணக்கப் போகிறவனின் குரலைக் கேள் என்று பத்து நிமிடத்திற்கு முன்னாலேயே 'ஆன்' பண்ணி வைத்து விட்டாள் மேனகா.. நீ மொட்டை மாடியில் அவன் கூடத் தனியாக நின்று பேசிக்

கொண்டிருக்கிறாயா.. நேற்று என்னுடன் மாமரத்தின் கீழ் காதல் சல்லாபம்.. இன்று மற்றொருவன் முன்னால் மணப்பெண் கோலம்.. மேனகா சொன்னபோது சவால் விட்டேனடி.. என் மைதிலி மற்றவன் முன் பெண் பார்க்க என்று நிற்க மாட்டாள் என்று.. நீ மொட்டை மாடிக்கே அவனுடன் கொஞ்சப் போய் விட்டாயேடி.."

சீறிப் பாய்ந்தன நந்தகுமாரனின் சொற்கள்.. மைதிலிக்கு கண் இருண்டது..

## 19

மேனகா கலகலவென்று நகைத்துக் கொண்டே மைதிலியைப் பார்த்து, "என்ன பேசிவிட்டாயா..?" என்றபடி போனை வாங்கித் திரும்பவும் கால் பண்ணி 'ஆன்' நிலையிலேயே வைத்தாள்.. அவளையே கவனித்துக் கொண்டு இருந்த மைதிலி செய்வது அறியாது தவித்தாள்..

"கீழே போவோமா.." என்று வினய் வினவ மைதிலி தயங்கினாள்..

"வினய்.. அதற்குள் என்ன சொக்குப்பொடி போட்டாய்.. இன்னும் உன்னுடன் தனியாகப் பேச மைதிலிக்கு விருப்பமாமே.. கீழே வரமாட்டாளாமா.." என்று மேனகா சிரிக்க வினய் கனிந்து போனான்..

மைதிலியைப் பார்த்து,

"இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருக்கலாமா.." என்று மென்மையான குரலில் வினவினான்.

மைதிலிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.. 'சரி' என்று கூறினால் அவனுடன் பேச தனிமை கிடைக்கும்.. தனிமை கிடைத்தால் உண்மையைச் சொல்லி விடலாம்.. வினய் நல்லவன்.. அவள் வாழ்க்கையில் குறுக்கிடாமல் விலகிப் போய் விடுவான்.. ஆனால்.. மேனகாவின் போனில் வழி நந்தகுமாரன் இதைக் கேட்டால் அவளை வெறுத்து விடுவான்..

இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை என்றால் இதுதானா..?

மைதிலி வெறுமையாய் வினய்யை நோக்கி 'இல்லை' என்பதாய் தலை அசைத்தாள்.. விர்ரென்று படிகளில் இறங்கி மறைந்தாள்.. வினய்யின் பார்வை அவளைத் தொடர மேனகா, "வினய்.." என்று சிரித்தாள்..

"அவளுக்கு எவ்வளவு வெட்கம் பார்த்தாயா.. ஆமாம் உன் காதலை அவளிடம் சொல்லிவிட்டாயா..?"

"ம்ம்.. சொல்லிவிட்டேன்.."

"அவ என்ன சொன்னாள் வினய்.. கிருஷ்ணன், தவறாய் எடுத்துக் கொள்ளாதீர்கள்.. வினய் என் குளோஸ் பிரெண்ட்.."

"நான் தவறாய் எடுத்துக் கொள்ளவில்லை.. நீங்க பேசிவிட்டுக் கீழே வாங்க.. நான் முன்னால் போகிறேன்.."

நாசுக்காய் அவன் கீழே சென்றுவிட மேனகா தூண்டினாள்..

"சொல்லு வினய்.. நீ என்ன சொன்னாய்.. அவள் என்ன சொன்னாள்.."

வினய்யின் பதிலுக்காக செல்போனின் வழி கேட்டுக் கொண்டிருந்த நந்தகுமாரன் துடித்துக் கொண்டிருந்தான்.

"அவளைப் போட்டோவில் பார்த்த மறுகணமே எனக்குப் பிடித்து விட்டதுன்னு சொன்னேன்.. அவள் உங்களிடம் நானும் இதே போல் நிறையச் சொல்ல வேண்டும் என்றாள்.. அதற்குள் நீ வந்து விட்டாயே.."

மைதிலி எதற்காக தன்னிடம் பேச விரும்பினால் என்று அறியாத வினய் வெகுளியாய் கூற அதை வினயமாய் நந்தகுமாரன் எடுத்துக் கொண்டான்.. இன்னும் என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய செல்போனுடன் காதை ஒட்ட வைத்துக் கொண்டான்.. மேனகா செல்போனை அணைக்கவில்லை..

"வா வினய்.. கீழே போகலாம்.."

கீழே இறங்கி வந்தனர்.. சாப்பாட்டு மேஜையில் அனைவரும் அமர,

"இந்தப் பொண்ணு யாருன்னு சொல்ல வில்லையே.." என்றார் வைத்தீஸ்வரன்..

"மேனகா.. எங்க சிநேகிதர் வீட்டுப் பொண்ணு.. வினய்யோடு ஒன்றா படிச்ச பொண்ணு.. உங்க பொண்ணு.. மைதிலியைப் பற்றி மேனகாதான் எங்களுக்குச் சொன்னது.." என்று ஜானகி கூறினாள்..

"அப்படியாம்மா.. எங்க மைதிலியைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும்..?" என்று வைத்தீஸ்வரன் கேட்க,

"இப்போ அதுவா முக்கியம்.. பிரண்டா இருக்கும்.." என்றான் கிருஷ்ணமூர்த்தி..

"அப்புறம் மிஸ்டர் வைத்தீஸ்வரன்.. எப்போ கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம்.." என்று ரங்கநாதன் கேட்டார்.

"அது.. முதலில் சாப்பிட்டு விட்டுப் பேசலாமே அண்ணா.." என்றாள் விசாலாட்சி..

"அதுவும் சரிதான்.." என்றாள் ஜானகி..

"சாப்பிட்டாச்சு.. இப்ப பேசலாமா..?" என்றான் வினய்.

"வினய்க்கு அவசரம்.." என்று சிரித்தாள் மேனகா..

"சொல்லுங்க வைத்தீஸ்வரன்.. இந்த மாதக் கடைசியில் நல்ல முகூர்த்த நாள் இருக்குது.. அதையே குறித்து விடுவோமா..?" என்று ரங்கநாதன் கேட்க,

"அவ்வளவு கிட்டத்திலா.. இன்னும் பத்து நாள்கள் கூட இல்லையே.." என்று விசாலாட்சி கைபிசைந்தாள்..

"டோன்ட் ஒர்ரி.. ஆன்ட்டி.. நாளைக்கே கல்யாணம் என்றாலும் நாங்கள் ஜமாய்த்து விடுவோம்.." என்றான் வினய்..

"பொண்ணுக்கு சீர் நகைன்னு.."

"பெண்ணை நீங்க கொடுங்க.. சீர், நகையை நாங்க கொடுக்கிறோம்.."

"நீங்க பெரிய இடம்.. நாங்க சாதாரண மனுசர்கள்.."

"அதனால் என்ன..?"

"இருந்தாலும் கல்யாணத்துக்கு எங்க பக்கத்திலிருந்து.."

"எதுவுமே செய்ய வேண்டாம்.. பெண்ணைக்கூட்டி வர கார் அனுப்புகிறோம்.. வந்து விடுங்கள்.. அப்புறம் உங்கள் பக்கத்துக்கு ஆயிரம் இன்விடேசன் போதுமா..?"

"ஐநூறே அதிகம்.."

"நாளைக்கே தபாலில் அனுப்பி விடுகிறோம்.."

அவர்கள் விடைபெற்றுக் கிளம்பும்போது மைதிலியை அழைத்தார்கள்..

"மைதிலி போய் வருகிறோம்மா.." என்று ரங்கநாதனும் ஜானகியும் விடைபெற,

"மைதிலி உன் போன் நம்பர் ப்ளீஸ்.." என்றான் வினய்.

மைதிலி உயிர் பெற்றாள்.. அவசரமாய் தன் போன் நம்பரைச் சொன்னாள்..

அதை உணர்ந்த வினய் மகிழ்ந்து போனான்.. தன் கூட பேச அவ்வளவு ஆசையா என்று கண்களால் அவளை வினவ மைதிலி 'இது என்னடா புது துன்பம்..?' என்று துயருற்றாள்.. வினய்யின் கார் கிளம்பிப் போக மேனகாவும்,

"ஓகே.. பை.." என்று விடைபெற்று தன் காரில் கிளம்பினாள்.. சிறிது தூரம் சென்றதும் காரை நிறுத்தியவள் தன் செல்போனை காதில் வைத்து,

"குமார்.. கேட்டீர்களா.. உங்கள் மைதிலி வினய்க்கு போன் நம்பரைக் கொடுத்த வேகத்தைக் கேட்டீர்களா.." என்றாள்..

"மேனகா.. நீ எதையோ செய்கிறாய் என்று நினைத்தேன்.. இந்தக் கல்யாண புரோக்கர் வேலையைச் செய்வாய் என்று நினைக்கவில்லை.."

"நினைத்திருக்க வேண்டும் குமார்.. நான் எதையும் செய்வேன்.."

"அதுதான் தெரிகிறதே.. பாதகி.. நீயும் ஒரு பெண்தானே.."

"அதனால்தான் இன்னொரு பெண்ணுக்கு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்திருக்கிறேன்.. மைதிலி கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள்.. இப்படி ஒரு மேல் தட்டு வாழ்க்கை அவளுக்குக் கிடைக்குமென்று.."

"என் மைதிலி பணத்தைப் பார்த்து மயங்க மாட்டாள்.."

"அப்படியா.. வினய் எவ்வளவு பணக்காரன் தெரியுமா குமார்.. உங்களைப் போல் நூறு மடங்கு வசதியானவன்.."

"அவர்கள் வீட்டை இதில் இழுத்து விட்டாயே.. உன்னை.."

"குமார்.. அவர்கள் வீட்டில் இனம் பார்ப்பார்கள்.. மைதிலியின் பெற்றார் பணத்துக்காக இந்தத் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை.. வினய்யும் அவர்களும் ஒரே இனம்.. இப்போது புரிந்ததா.."

"நான் மைதிலியை விட்டுக் கொடுக்க மாட்டேன்.."

"அவர்கள் குடும்பத்திலும் அவளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.. உங்களுக்கு உங்கள் காதலில் உறுதி இருந்தால் ஏன் கவலைப்பட வேண்டும்.. மைதிலி உண்மையிலேயே உங்களைக் காதலித்தால் வீட்டை எதிர்த்துப் போராடட்டுமே.. நான் என்ன அவளைத் தடுக்கவா போகிறேன்.."

நந்தகுமாரன் செல்லை அணைத்து விட்டான்.. மேனகா உற்சாகமாய் வேம்பூரை நோக்கிக் காரைச் செலுத்தினாள்..

அவள் வீட்டுக்குள் சென்றபோது துரைசிங்கம் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்.. சோலையம்மாள் பரிமாறிக் கொண்டிருந்தாள்..

"வாம்மா.. மேனகா.. சாப்பிடலாம் வா.." என்றார் துரைசிங்கம் அன்பாக..

"நான் சாப்பிட்டு விட்டேன் அங்கிள்.. உங்களிடம் இங்கு என் நண்பன் ஒருவன் வந்து தங்கலாமான்னு கேட்டேன் இல்லையா.. அவனும் அவன் பேரண்ட்ஸும் அவனுக்குப் பெண் பார்க்க திருச்சிக்கு வந்திருந்தனர்.. பெண் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டேன்.. அப்புறம் அங்கிள்.. அந்தப் பெண் கூட உங்களுக்குத் தெரிந்த பெண்தான்.." என்றாள் மேனகா சோலையம்மாளைப் பார்த்தபடி.

"யாரும்மா அது..?" என்று துரைசிங்கம் ஆச்சர்யமாய் வினவ,

"மைதிலி அங்கிள்.. நேற்று இங்கு வந்திருந்ததே.. அந்தப் பெண்தான்.."

மேனகாவின் பதில் கேட்ட சோலையம்மாள் கையிலிருந்த பாத்திரத்தை நழுவ விட்டாள்..

திருச்சியில் மைதிலியின் வீட்டில் குடும்பத்தினர் கூட இருந்தனர்.. மைதிலி குற்றவாளியாய் நின்று கொண்டிருந்தாள்.. மேனகா கிருஷ்ணமூர்த்தியை தனியாக அழைத்து மைதிலியின் காதல் விவகாரத்தைப் போட்டு உடைத்து விட்டுச் சென்றிருந்தாள்... கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் அழைத்து விசயத்தைக் கூற வைத்தீஸ்வரன் கொதித்துப் போனார்.. சும்மாவே ஆடுபவர் பேச விஷயம் கிடைத்தால் விட்டு விடுவாரா..?

"எல்லாம் இவ கொடுக்கிற செல்லம்.. என்ன நினைச்சுக்கிட்டு இருக்காடி உன் பொண்ணு.. இந்த வைத்தீஸ்வரன் பரம்பரையைப் பற்றித் தெரியுமா அவளுக்கு.."

வேறு நேரமாயிருந்தால் 'எனக்குத் தெரியாதா உங்கள் பரம்பரையைப் பற்றி என்று கேட்டிருப்பாள் விசாலாட்சி..' ஆனால் இது அவள் பேசும் நேரமல்ல..

"வைத்தீஸ்வரன் பெத்த பொண்ணு ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் பண்ணினால் என் மரியாதை என்ன ஆகிறது..? நாளை பின்னே இந்தத் தெருவில் நான் நெஞ்சை நிமிர்த்தி நடக்க முடியுமா..?"

"இப்ப நீங்க நெஞ்சை நிமிர்த்தி நடக்கிறதுதான் பிரச்னையா..? என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டிருக்காள்.. அதை என்னன்னு கேட்டீங்களா.. சொந்தக்காரன், பந்தக்காரன்னு.." விசாலாட்சி சீறினாள்..

"என்னத்தைடி அவகிட்ட பேசறது.. அவகாலை ஒடித்து வீட்டுக்குள் போடுகிறேன்.. கல்யாணம் முடிகிற வரைக்கும் வாசல் பக்கம் கூட எட்டிப் பார்க்கக் கூடாது.. அதை விட்டு விட்டு.. அவகூட பேச்சு வார்த்தை நடத்தணுமா..?"

"இருப்பாங்கப்பா.. மைதிலி இங்கே வா.. நீ படிச்ச பொண்ணு.. புத்திசாலிப் பொண்ணுன்னு நினைத்தேன்.. இப்படிக் காதல் கத்தரிக்காய்ன்னு செய்துகிட்டயே.."

"அண்ணா அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டால் என் வாழ்க்கை நல்லாயிருக்கும்ன்னு தோணுது அண்ணா.."

"தோணினதையெல்லாம் செய்துவிட முடியாதும்மா.. இது குடும்பம்.. உன் வாழ்க்கை உன்னோடு முடிவதில்லை.. மற்றவரையும் பாதிக்கும்.. நான் காதல் கல்யாணம் செய்திருந்தால் சாவித்திரியை பெண் கேட்டு யாரும் வந்திருக்க மாட்டார்கள்.. நாளை சாவித்திரி அவள் வீட்டில் மதிப்பாய் வாழணும்னா நம்ம பக்கம் கௌரவமும் மரியாதையும் குறையாமலிருக்க வேண்டும்.."

மைதிலி தவித்துப் போனாள்.. கோபமாய் பேசினால் எதிர்த்துப் பேசலாம்.. தன்மையாய் பேசுபவனிடம் தண்ணீராய் தானே போக முடியும்..?

"மைதிலி.. இப்போ வந்திருக்கிறது நீ கனவிலும் எதிர்பார்க்காத வாழ்க்கை.. அவர்கள் பணக்காரர்கள் என்பதால் நாம் மனம் பேசவில்லை.. அவர்கள் நம் இனம் என்பதால் தான் ஒத்துக் கொண்டோம்.. கலப்பு மனம் நம் குடும்பத்தில் நடக்காது.."

"அண்ணா.. இப்போ காலம் மாறி விட்டது.."

"ஆனால் இந்த வீடு மாறாது நாங்க மாற மாட்டோம்.. ஒன்று நீ எங்கள் பேச்சைக் கேட்டு இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கணும்.. இல்லைன்னா.. நாங்க எல்லோரும் இல்லைன்னு நீ தலை முழுகிடணும்.."

மைதிலி வாய் பொத்தி அழுதாள்.. வைத்தீஸ்வரன் கோபமாய் எழுந்து சென்றுவிட மற்றவர்களும் சென்று விட்டனர்..

தனிமை அவளைச் சூழ்ந்தது.

## 20

சோலையம்மாள் மகனுக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு போகும்போது மேனகா அவள் அறைவாசலில் நின்றிருந்தாள்.. ஒரு வினாடி தாமதித்தவள் அவளைப் பார்த்து,

"அடியேய்.. தோப்புர்காரி.. நான் துரைசிங்கம் பொண்டாட்டிடீ.. என்கிட்டயே உன் கைவரிசையை காட்டிட்ட

இல்ல.. இந்த சோலையம்மாள் யாருன்னு இனி உனக்குக் காட்டறேன்.." என்றாள்..

"அதுக்கு முன்னாலேயே இந்த மேனகா யாருன்னு காட்டிவிட்டேன்.. சும்மா சத்தம் போடாதே.. போ.. போய் உன் மகனோடு சேர்ந்து ஒப்பாரி வை.."

"ஏய்.. துன்பம் வந்தால் எதிர்த்து நிற்கிற பரம்பரைடி எங்க பரம்பரை.. மூலையில் உட்கார்ந்து முக்காடு போட்டு ஒப்பாரிவைக்கிற பரம்பரையில் நான் பிறக்கவுமில்லை.. வாக்கப்படவும் இல்லை.. தெரிஞ்சுக்க.."

"ஓகோ.. தெரிந்துக்கிட்டேன்.. போதுமா.." மேனகா எள்ளலாய் கேட்டாள்..

"இது கிராமத்து மண்ணுடி.. சொந்த மண்ணையும், பொண்ணையும் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம்டி.. என் மகன் அவன் மனசுக்கு பிடிச்சவளோடு வாழத்தான் போகிறான்.. அதை நீ பார்த்து வயிறு எரியத்தான் போற.."

"பார்க்கத்தான் போகிறேன்.. வினய், மைதிலி கூட வாழ்வதை.."

"பார்ப்போமா.. நீயா நானான்னு.." சோலையம்மாள் சொடுக்குப் போட்டாள்..

மேனகா ஆச்சரியப்பட்டுப் போனாள்.. நந்தகுமாரனின் தாய் கூட வீராங்கனையா..? அவள் இதழ்களில் ரசிக்கும் முறுவல் வந்தது..

"வெல்.. நான் சவாலை ஏற்கிறேன்.." என்ற மேனகா உள்ளே சென்று கதவை அடைத்துக் கொண்டாள்..

நந்தகுமாரனனின் அறைக்கதவைத் திறந்து உள்ளே சென்ற சோலையம்மாள் கதவை அடைத்து விட்டு மகனருகே வந்தாள்.. சிவந்திருந்த அவன் விழிகளைப் பார்த்தபடி..

"ஏண்டா மலைக்கிறே.. மலையே எதுத்து வந்தாலும் என் மகன் பேர்த்து எடுத்துடுவான்னு நான் பீற்றிக்கிட்டு இருக்கிறேன்.. நீயானால் காதலிச்ச பொண்ணை வேறொருத்தன் பொண்ணு பார்க்க வந்ததுக்கே இடிஞ்சு போய் உட்கார்ந்திட்ட.."

"அம்மா உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"நம்ம வீட்டுக்கு வந்திருக்கும் பிடாரி சொல்லுச்சு.."

"அம்மா.. அவன் பெண் பார்க்க வந்தால் இவள் போஸ் கொடுக்கணுமா..?"

"யாருடா இவன்.. ஏண்டா அந்தப் பொண்ணு மட்டும் தனியாவா குடும்பம் நடத்துது..? பெற்றவங்க.. கூடப் பிறந்தவன் அதட்டினால் அந்தப் பிள்ளை என்ன செய்யும்.. பாவம்.."

"நீங்க என்னம்மா சொல்றீங்க..?"

"போடா பைத்தியக்காரா.. அந்தப் பொண்ணு ஏண்டா குட்டிபோட்ட பூனை மாதிரி என்னைச் சுத்தி வந்தது..? ஏன்னா நான் உன்னோட அம்மாங்கிறதால.. அவ்வளவு ஆசையை உன்மேல் வெச்சிருக்கிற பொண்ணு மன சோடவா போய் நின்னுருக்கும்..? வீட்டில் இருக்கிறவங்க கட்டாயப்படுத்தி இருப்பாங்க.."

"அம்மா அவன் கூட மொட்டை மாடியில் தனியா நின்று பேசியிருக்கா.."

"அவங்க வீட்டு மொட்டை மாடியில்தானே.. வெளியே போகலையே.."

"அவன்கிட்ட பேசணும்ன்னு அவ சொன்னதை நான் என் காதால் கேட்டேன்.."

"எப்படிக் கேட்ட.. இந்த மேனகா மேனாமினுக்கி ஏதாவது நாடகம் போட்டாளா.. அதை விடு அவள் என்ன பேசத் துடித்தாள்ன்னு உனக்கு எப்படித் தெரியும்..? ஒருவேளை உன்னைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லைன்னு சொல்ல நினைச்சிருக்கலாம்.."

"அம்மா.. அவள் போன் நம்பரை அவனுக்கு கொடுத்தாள்ம்மா.."

"இன்றைக்கு பேச முடியாமல் போயிருக்கும்.. போனில் அவன் பேசினால் சொல்லி கல்யாணத்தை நிறுத்த நினைத்திருக்கலாமில்ல.."

"அம்மா.. நீங்கள் யோசிப்பது போல் ஏன் நான் யோசிக்கலை..?"

"ஏன்னா.. நீ ஆம்பளை.. நான் பொம்பளை.. நான் வாழ்ந்து முடிச்சவடா.. ஒருத்தர் முகத்தைப் பார்த்தாலே தெரிஞ்சிடும்.. மைதிலியின் முகத்தில் உன்மேல் அவள் வைச்சிருக்கிற காதல்தாண்டா எனக்குத் தெரியுது.. துரோகம் தெரியலை.."

"அம்மா.. பெற்றவங்க கட்டாயப்படுத்தி இன்றைக்கு அவளை அடுத்தவன் முன்னால் பெண் பார்க்க நிறுத்தி வைத்தாங்களே.. நாளைக்கே கட்டாயப்படுத்தி அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைச்சிட்டா.."

"வைச்சிட்டா.. என்னடா ராகம் போடறே நீ கையை கட்டிக்கிட்டு உட்கார்ந்திருந்தால் அதைத்தான் செய்வாங்க.."

"அம்மா.. நான் என்னம்மா செய்ய..? இரண்டு வருடமா சொல்லிப் பார்க்கிறேன்.. வீட்டை எதிர்க்க மாட்டேன் என்கிறாளே.."

"அவள் வளர்ந்த விதம் அப்படி.. எதிர்க்கத்தான் மாட்டாள்.."

"அப்போ.. இதுக்கு என்னதாம்மா வழி..?"

"ஏண்டா.. நீ ஆம்பிள்ளைதானே.. துரைசிங்கம் பெற்ற சிங்கக்குட்டி பேசுகிற பேச்சாடா இது..? அவளைத் தூக்கிக் கொண்டு வந்து தாலி கட்டுவானா.. அதை விட்டுவிட்டு.. என்கிட்ட வழி கேட்கிறான்.."

"தூக்கிக் கொண்டு வருவதா.. அதுவும் தாலிகட்டுவதா.. நானா..?"

"பின்னே வேறு யாரோவா உனக்காகத் தாலிகட்டு வார்கள்.. நீதாண்டா..?"

"சும்மா இருங்கம்மா.. பெண்ணைத் தூக்கி வருவது குற்றம்.. அதுவும் தாலிகட்டுவது என் கொள்கைக்கு உடன்பாடில்லாதது.."

"அட மடையா.. தாலி கட்டாவிட்டால் அவள் வீட்டில் சும்மா விடுவார்களா..? தாலி கட்டுவது மூட நம்பிக்கைன்னால்.. தாலி கட்டமாட்டேன்கிற கொள்கைளைக் கட்டிக்கிட்ட உட்கார்ந்திருப்பதும் மூட நம்பிக்கைதானே.. மகனே.. தாலிங்கிறது அவளைச் சுற்றி நீ போடும் வேலி.. அப்புறம் எந்த பட்டணத்துக்காரனும் வேலியில்லாப் பயிர்ன்னு அவளைப் பெண்பார்க்க வரமாட்டானில்ல.."

"அம்மா.. பகுத்தறிவு பேசும் நானே தாலிகட்டுவதா..?"

"பகுத்தறிவுன்னா என்னடா மகனே..! பகுத்து அறிவதுதானே.. அதைச் செய் முதலில்.. மற்றவர்கள் மாதிரி இல்லாமல் நீ யோசி.. கணவன் மனைவி வாழ்க்கை ஒப்பந்தம் தானே..? அதற்கு கையெழுத்து போடுவது போல் தாலியையும் கட்டுகிறாய்.. உன்னைப் பொறுத்தவரை அது கயிறு.. உன் மனைவியைப் பொறுத்தவரை அது அவளது உயிர்.. உன்னை மரபுகளை கடைபிடிக்கச் சொல்லி நான் வற்புறுத்தவில்லை.. அவளது மரபுகளை அவமதிக்காதே.. அவமரியாதை செய்யாதே என்றுதான் சொல்கிறேன்.. நந்து.. உன் கொள்கைப்படி தாலி என்பது பெண்களை அடிமைப்படுத்தும் அடிமைக்கயிறு.. நான் ஒன்று கேட்கிறேன்.. நீ அவளை அடிமைன்னு நினைப்பயா.."

"என்னம்மா இது ஆணும் பெண்ணும் சமம்மா.."

"அவளுக்கு சம உரிமை கொடுக்கணும்னு நினைத்தால் உன் கொள்கையை அவள்மேல் திணிக்காதே.. உன்னைக் கோவிலுக்குள் வரச் சொல்லி அவள் கட்டாயப்படுத்தியிருக்கிறாளா..?"

"இல்லைம்மா.. ஆனால் அவள் கோவிலுக்குப் போவதை நானும் தடை செய்யவில்லையே.."

"அதுபோல்தான் இதுவும்.. தாலி இல்லாத கல்யாணத்தை மைதிலி ஏற்றுக் கொள்ள மாட்டாள்.. அதனாலே.. உன் கொள்கையை உன்னோடு வைத்துக் கொண்டு அவள் மனதைப் புண்படுத்தாமல் ஒரு தாலியைக் கட்டு.. அப்புறம் அவள் தெய்வம் அவளுக்கு.. உன் கொள்கை உனக்கு.."

நந்தகுமாரன் யோசித்தான்.. கட்டுக்குள் அடங்கக் கூடாது என்பதுதானே அவன் கடைபிடிக்கும் மார்க்கம்.. அப்படியிருக்கும்போது 'தாலிகட்டமாட்டேன்' என்ற பிடிவாதமும் ஒரு கட்டுத்தானே..? மரபுகளை உடைப்பது தானே அவன் கொள்கை.. எனில் கருப்புச் சட்டைக் காரன் தாலிகட்டுவதை புறக்கணிக்க வேண்டும் என்ற மரபையும் உடைத்து விட வேண்டி வந்தால் ஏன் தயங்க வேண்டும்..? எதையுமே மனம் ஏற்க வேண்டும்.. தாலி கட்டினால்தான் மைதிலி பெண்டாட்டி என்று அவன் என்றும் நினைத்த

தில்லை.. ஆனால் தாலி கட்டாத நந்தகுமாரனை காதலனாகத்தான் மைதிலியின் மனம் ஏற்கும்.. கணவனாக ஏற்காது.. மனம் விரும்பாத ஒரு வாழ்வை மைதிலியின் மேல் அவன் திணிக்கக் கூடாது.. அவன் அவளை நேசிப்பது உண்மையென்றால் அவள் உணர்வுகளை காயப்படுத்தக் கூடாது..

நந்தகுமாரன் முடிவெடுத்துவிட்டான்.. அவன் முகத்தில் அலைபாய்ந்த உணர்ச்சிகள் சமனப்பட்டு முகம் தெளிவடைந்தது.. மகன் துன்பத்திலிருந்து மீண்டு விட்டதை அறிந்து கொண்ட சோலையம்மாள் அவனைச் சாப்பிடச் செய்தாள்.. அதன் பின்தாயும் மகனும் தாழ்ந்த குரலில் சில திட்டங்களைப் போட்டார்கள்.. அதன் சாதக, பாதகங்களை ஒருவருக்கொருவர் வினவி தெளிவுபடுத்திக் கொண்டனர்.. திருப்தியுடன் எழுந்த சோலையம்மாள்,

"சரிடா தம்பி.. எல்லாம் உன் மனதுப்படி நடக்கும் இப்போத் தூங்கு" என்று கூறிவிட்டு மகனின் அறைக் கதவை திறந்து கொண்டு வெளியே வந்தாள்.. மகன் அறைக்கதவை மூடும்வரை காத்திருந்து அதன் பின்னர் அவள் கீழே செல்ல யத்தனிக்கும்போது,

"சோலையம்மா.. இங்கே வாடி.." என்ற குரல் கேட்டது.. திரும்பிப் பார்த்தாள்.. மாடி வராண்டாவின் இருளில் இருந்து துரைசிங்கம் வெளியே வந்தார்..

21

துரைசிங்கம் கோபக்காரர்.. கண்டிப்பானவர்.. இனப் பற்று மிகுந்தவர்.. பரம்பரை மேல் பக்திகொண்டவர்.. ஆயிரம் பேர் எதிர்த்து வந்தாலும் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு மீசையை முறுக்கிக் கொண்டு அவர்களை ஓட ஓட விரட்டும் சிங்கம்.. சிலம்பாட்ட வீரர்.. இவை அனைத்திலும் மேலாக மனைவியை நேசிப்பவர்.. அவள் தவமிருந்து பெற்ற தன் மகனின் மேல் உயிராய் இருப்பவர்.. தாய், மகனின் பாசப்பிணைப்பு அதிகம் போல் தோன்றும் அந்த வீட்டை ஊன்றிப் பார்ப்பவர்களுக்குத் தான் தெரியும்..

தந்தை தன் ராஜாங்கத்தை தன் மகனுக்கு விட்டுக்கொடுத்துவிட்டு தன்னை சாமானியன் ஆக்கிக் கொண்டிருப்பதை.. ஊரே துரைசிங்கத்தின் பார்வைக்கு அடங்கும்.. ஆனால் அவர் தன் மகனின் பார்வையில் அடங்கிவிடுவார். தன் மகனுக்கு அவன் விரும்பிய படிப்பைக் கொடுத்தார்.. நிலபுலன்களை அவர் தனியாளாய் கவனித்துக் கொண்டு அவன் விரும்பிய வேலையை அவன் பார்க்க விட்டார்.. கோவிலின் முதல் மரியாதையை பெறுபவர் கோவிலுக்குள் வர மறுக்கும் சுதந்திரத்தை அவனுக்கு அளித்தார்.. இத்தனைக்கும் மேலாக அவர் விரும்பிய மருமகளை மகனும் மனைவியும் விரும்பவில்லையென்றதும் அந்த எண்ணத்தையே கைவிட்டார்.. அப்படிப்பட்டவர் முன் மேனகா சொன்ன ஒரு வார்த்தைக்கு அவர் மனைவி ஏன் பதறிப் போனாள்..? உண்மை அறிய மனைவி இரவு சாப்பாட்டை மகனுக்கு எடுத்துச் செல்லும்போது அவளறியாமல் பின்தொடர்ந்தார்.. மேனகா ஒருமையில் தன் மனைவியை, "போ, போ" என்று ஏசியதும் அவர் மீசை துடித்தது.. இவ்வளவிற்கும் காரணம் அவரல்லவா..? மேனகா அறைக்கதவை அடைத்துக் கொண்டதும் மகனின் அறைக்கு வெளியே நின்று தாய் மகனின் உரையாடலை செவிமடுத்தார்.. அதன்பின் சோலையம்மாள் மகனின் அறையிலிருந்து வெளி வரும் போது மனைவியை அழைத்தவாறு வந்தார்..

கணவனைப் பார்த்ததும் சோலையம்மாள் பதறிப் போனாலும் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, "கீழே வாங்க பேசிக்கலாம்.." என்று கூறியபடி படியிறங்கினாள்.. துரைசிங்கம் முகம் இறுகப் பின் தொடர்ந்தார்.. தங்கள் அறைக்குள் போனதும்,

"இப்பச் சொல்லுங்க.. உங்களுக்கு என்ன தெரியணும்," என்றாள்..

"எனக்கு எல்லாம் தெரியும்டி.. நீங்க பேசினதை கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்.."

"கேட்டிங்கள்ல.. இப்ப மனசு குளுகுளுன்னு இருக்குமே.. சீமையில் படிச்சவ செஞ்சு வைச்சிருக்கிற கெடுதலைக் கேட்டிங்கள்ல.. இங்கே பாருங்க.. எனக்கு ஒன்னு

தெரியணும்.. நம்ம நந்த வேற ஜாதிப் பொண்ணை கட்டிக்கிட்டா நீங்க என்ன செய்வீங்க.."

"ஆசிர்வாதம் செய்வேன்டி.. வேற என்ன செய்வேன்னு நினைச்சே.. அடி சோலையம்மாள்.. ஜாதி முக்கியம்தான்.. மனசு அதை விட முக்கியம்.. என் மகன் அவன் மனசுக்கு பிடிச்சவளோட வாழட்டும்டி.. நான் தடுக்க மாட்டேன்.."

சோலையம்மாள் முந்தானையால் கண்களை துடைத்துக் கொள்ள துரைசிங்கம் கூறினார்..

"அவன் வரட்டும்டி.. ஜெயிச்சு வரட்டும்.. பெத்தவங்க நாம துணை நிப்போம்.. அப்புறம் நடப்பது நாராயணன் செயல்டி.. நல்லதே நடக்கும் கண்கலங்காதே.."

அன்று இரவு அவர்கள் வெகுநேரம் மகனின் எதிர்காலம் குறித்துப் பேசினார்கள்..

மறுநாள் பொழுது விடிந்ததும் நந்தகுமாரன் பேப்பரோடு ஊஞ்சலில் ஆடிக்கொண்டே மேனகாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் கணிப்புப்படி மேனகா அவனை புண்படுத்த விரும்பி அவன் அருகில் வந்தாள்.

"ஹாய் குமார்.. குட்மார்னிங்.."

"பேட்மார்னிங் டு யு மேனகா.."

"எனக்கா..? உங்களுக்குத்தான் பேட் மார்னிங் குமார்.. உங்கள் முன்னாள் காதலி.. இன்றைய வினய்யின் நிச்சயதார்த்த பெண்.. நாளைய வினய்யின் மனைவி.. மறந்து விட்டதா..?"

"எதுவும் நடக்கும் வரை நிச்சயமில்லை மேனகா.. வினய் ஜென்டில்மேன்.. என்னைக் காதலித்த பெண்ணை அவன் எப்படி மணந்து கொள்வான்.."

"அதை நான் பொய் என்று சொல்வேனே.. மைதிலி வீட்டை மீறிப் பேசமாட்டாளே.."

"நான் ஆதாரத்தோடு நிரூபிப்பேனே.."

மேனகாவின் புருவங்கள் சுருங்கின.. கண்கள் இடுங்கின..

"என்ன ஆதாரம்..?"

"நீ என்ன முட்டாளா மேனகா..? இரண்டு வருடமாய் காதலிக்கிறோம்.. எத்தனை போட்டோக்கள் சேர்ந்து எடுத்திருப்போம்..? அதில் ஒன்றை வினயிடம் கொடுத்தால் போதுமே.."

"அவன் அட்ரஸ் உங்களுக்குத் தெரியாதே.."

"நீ வெளிநாட்டில் படித்தவள்தானா என்பதே எனக்கு சந்தேகமாக இருக்கிறது.. டால்பின் இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் கம்பெனி எது என்று சென்னையில் என்னால் கண்டு பிடிக்க முடியாதா..?"

"இப்போத என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்..?"

மேனகா இறங்கி வந்தாள்.. உண்மையில் அப்படி எதுவும் போட்டோக்கள் மைதிலியும் நந்தகுமாரனும் எடுத்துக் கொள்ளவில்லை.. நந்தகுமாரன் சூழ்ச்சியை சூழ்ச்சியால் வெல்ல தூண்டிலை வீசினான்.. மேனகா வகையாகச் சிக்கினாள்..

"இதோ பார் மேனகா.. எப்போது என்னை விட அதிகப் பணக்காரன் என்றதும் பல்லைக் காட்டிக் கொண்டு அந்த மைதிலி அவனுடன் மொட்டை மாடிக்கே போய் தனியாக பேச ஆரம்பித்துவிட்டாளே.. இனி என் மனதில் அவளுக்கு இடமில்லை.."

மேனகாவின் மனம் துள்ளியது, "அப்படியென்றால்..?"

"ஆமாம் மேனகா.. எனக்கு அவள் மேல் வெறுப்பாக இருக்கிறது.. அவளுக்கு மட்டும்தான் வீடு.. அதன் மனிதர்கள் முக்கியமா..? எனக்கு முக்கியமில்லையா..? என் அப்பா உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி எவ்வளவு கெஞ்சினார்.. நான் ஒரு மடையன்.. காதில் போட்டுக் கொள்ளவில்லை.. அவள் என்னை வஞ்சித்து விட்டாள் மேனகா.."

"விட்டுத் தள்ளுங்கள் குமார்.. ஏழைதானே.. பணம் பார்த்தவுடன் மயங்கிவிட்டாள்.. உங்களைக் கூட நீங்கள் ஆபிசர் என்பதாலும் அதிகப்பணக்காரர் என்பதாலும் காதலித்திருக்கக் கூடும்.."

"கூடும்.. என்ன மேனகா.. அதுதான் உண்மை.. பாதகி என்னை ஏமாற்றிவிட்டாள்.. நான் அவளைச் சும்மா விடப் போவதில்லை.."

"அதற்காக.. பழிவாங்க வேண்டுமென்று அவள் கல்யாணத்தை நிறுத்தப் போகிறீர்களா..?"

மேனகா ஜாக்கிரதையாய் கேட்டாள்.. நந்தகுமாரன் சிலுப்பிக் கொண்டான்.

"எனக்கென்ன தலையெழுத்தா.. இனி அவள் எனக்கு வேண்டாம்.. ஆனால் அவளைக் கடைசியாய் ஒரு தடவை பார்க்க வேண்டும்.. பார்த்து.."

"பார்த்து..?" மேனகா யோசனையாய் வினவினாள்..

"நான்கு வார்த்தை நாக்கைப் பிடுங்கிக் கொள்கிறார் போல் கேட்க வேண்டும்.. முகத்தில் உமிழாத குறையாக அவமானப்படுத்தி அனுப்ப வேண்டும்.. அப்போதுதான் என் மனம் ஆறும்.. மேனகா எனக்காக இதை நீ செய்வாயா..?"

"கட்டாயம் செய்கிறேன் குமார்.." என்றாள் மேனகா குதூகலமாக.. இதற்காகத்தானே அவள் இத்தனை பாடு பட்டாள்.. எப்படியாவது நந்தகுமாரனின் மனைவியாகி அந்த சோலையம்மாளின் கொட்டத்தை அடக்க வேண்டும்.. முடியாவிட்டால் குறைந்தது நந்தகுமாரன், மைதிலியை வெறுத்துப் பேசுவதை மைதிலி எப்படிக் கேட்டுக் கொள்கிறாள் என்று அப்போது அவள் முகம் போகும் போக்கைப் பார்த்து ரசிக்க வேண்டும்.. மேனகாவின் கால் தூசி பெறமாட்டாள் அவள்.. மேனகாவை மணக்க மறுத்து நந்தகுமாரன் அவளுக்கு மாலை சூட்டு வதை தடுத்து விட்டாலே மேனகா பாதி ஜெயித்ததுபோல.. நந்தகுமாரனுக்கு உதவி செய்யாவிட்டால் அவன் மைதிலியை பழிவாங்கும் வெறியில் வினய்க்கு அந்த போட்டோக்களை அனுப்பிவிட்டால் காரியமே கெட்டு விடுமே.. அந்த மைதிலி நந்தகுமாரனிடம் நாலு திட்டு வாங்கினால் அவளுக்கு வந்தது.. வாங்கட்டுமே..

மேனகா கிருஷ்ணமூர்த்தியை பார்க்குக்கு வரச் சொன்னாள்..

"மிஸ்டர் கிருஷ்ணன்.. நந்தகுமாரன் மிரட்டுகிறார்.. அவரும் மைதிலியும் சேர்ந்து எடுத்த போட்டாக்களை வினய்க்கு அனுப்பப் போகிறாராம்.."

"ஐயையோ.. இப்போது என்ன செய்கிறது.. நீங்கள் சொன்ன மாதிரி மைதிலியின் கையெழுத்தை போட்டு மெடிக்கல் லீவு அனுப்பிவிட்டேன்.. அவளுடைய செல்போனில் சிம் கார்டை கழட்டிப் போட்டுவிட்டேன்.. வினய் பேசும்போது கூட என் செல்போனில் இருந்து பேச வசதி செய்து பக்கத்திலேயே நான் நின்று அவள் உளறிக் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.. மைதிலிக்கு கட்டுக் காவல் அதிகம்.. இப்போது நந்தகுமாரனை எப்படிச் சமாளிப்பது..?"

"சிம்பிள்.. மைதிலியை நேரே பார்த்து நாலு வார்த்தை திட்ட வேண்டுமாம்.. திட்டி விட்டுப் போகட்டுமே.. அதுவும் நம் நன்மைக்குத்தான்."

"விளையாடுகிறீர்களா.. என் தங்கையை எவனோ ஒருவன் திட்டுவதா..?"

"எவனோ ஒருவன் இல்லை மிஸ்டர் கிருஷ்ணன்.. உங்கள் தங்கையின் காதலன்.."

"இப்போது என்ன சொல்ல வருகிறீர்கள்..?"

"மைதிலியை நந்தகுமாரன் வெறுக்கிறார்.. அதனால் திட்டப்போகிறார்... மைதிலி இன்னும் நந்தகுமாரனை வெறுக்கவில்லை... நம்மை புரிந்து கொள்ளாமல் நம்மை அவமதிக்கிறானேன்னு அவள் நந்தகுமாரனை வெறுப்பாளா, மாட்டாளா..?"

"ஆமாம்.. அப்போது நாம் கட்டாயப்படுத்தாமலே முழுமனதாய் வினய்யை மணந்து கொள்வாள்.. வெல்டன் மேனகா.. நாம் மைதிலியை எங்கே கூட்டிப்போவது..?"

"கல்லனைக்கு.. நாளைக் காலையில் நந்தகுமாரன் அவருடைய டாடாசுமோவில் வருகிறாராம்.. நாம் என்காரில் போகலாம்.."

அவர்கள் பிரிந்தார்கள்.. மறுநாள் மைதிலியை 'எங்கே போகிறோம்' என்று சொல்லாமலே அழைத்துக் கொண்டு

போனார்கள்.. கல்லனையை நெருங்கும் போது டாடா சுமோவில் சாய்ந்து கொண்டு நந்தகுமாரன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.. பேன்ட் பாக்கெட்டில் இருக்கைகளையும் நுழைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.. மைதிலி பொங்கினாள்.. அவள் கண்களிலிருந்து கண்ணீரும் பொங்கியது.. இறங்கியவள் நேரே நந்தகுமாரன் முன் போய் மூச்சு வாங்க நின்றாள்.. அவள் இதழ்கள் துடித்தன.. கண்கள் அருவியாய் பொழிந்தன.. மேனகாவும், கிருஷ்ணமூர்த்தியும் அவசரமாய் அவளது இருபக்கமும் மெய்காப்பாளர்கள் போல் நின்று கொண்டனர்.. நந்தகுமாரன் மைதிலியை இத்தனை நாள் பார்க்காத பார்வையாய் புழுப்போல் பார்த்தான்.. மைதிலி திகைத்தாள்..

"என்னடி பார்க்கிற.. பெரிய நடிகைடி நீ.. என்னமா கண்ணீர் விடறே.. நம்ம போட்டோவை உன் வினய் பார்த்திட்டான்னா.. உன் கல்யாணம் நின்று போய் விடும்ன்னு பயந்துதானே ஓடி வந்திருக்கே.. நீயெல்லாம் ஒரு பெண்ணாடி.."

"போட்டோவா.." மைதிலி திணறினாள்.. ஆனால் அதைச் சட்டை செய்யாதவனாய் நந்தகுமாரன் தொடர்ந்தான்..

"உன்மேல் எனக்கு வெறுப்பாய் இருக்குடி.. உன்னைப் போயா நான் காதலித்தேன்.. சே.. என்னை ஏமாற்றி விட்டாயேடி.." என்று பேசிக்கொண்டே கண் இமைக்கும் நேரத்தில் அவள் கையைப் பிடித்து இழுத்து அவள் நெற்றியில் துப்பாக்கியை பதித்தவன்.

"கிருஷ்ணமூர்த்தி தள்ளிப்போ.. கிட்ட நெருங்கினால் இவள் பிணமாகி விடுவாள்.. என்னை ஏமாற்றிவிட்டு இன்னொருவனுடன் இவள் வாழ நான் விடமாட்டேன்.. சுட்டுத்தள்ளப்போகிறேன்.." என்றான்..

மேனகா ஸ்தம்பித்து விட்டாள்.. நந்தகுமாரன் மைதிலியைக் கொல்லும் திட்டத்தோடுதான் அவளை அழைத்து வரச் சொல்லியிருக்கிறான்.. துப்பாக்கியை கையில் பிடித்ததால்தான் பான்ட் பாக்கெட்டில் கையை விட்டு மறைத்துக் கொண்டு நின்றிருக்கிறான்.. இப்போது என்ன

செய்வது.. மைதிலி செத்தால் அவளுக்கென்ன பிழைத்தால் அவளுக்கென்ன..

"கிருஷ்ணமூர்த்தி சார் வந்துவிடுங்கள்.. கிட்டப் போனால் மைதிலிக்குத் தான் ஆபத்து.." அவள் பின் வாங்கினாள்.. கிருண்ஷமூர்த்தி கைகளைப் பிசைய, தன் கைக்குட்டையை எடுத்து நந்தகுமாரன் மைதிலியின் மூக்கில் வைக்க, அதில் நனைக்கப்பட்டிருந்த மயக்க மருந்தில் அவள் மயங்கி விழ, நந்தகுமாரன் அவளை ஒரு கையால் தூக்கி காரில் போட்டு மறுகையில் துப்பாக்கியை காட்டி அவர்களை மிரட்டிக் கொண்டே டாடா சுமோவைக் கிளப்ப அது சீறிப்பாய்ந்தது..

# 22

வேம்பூர் கோவிலின் பத்தாம்நாள் திருவிழா.. ஊரே கோவிலில் கூடி இருந்தது.. அன்றுடன் திருவிழா முடிவதால் அனைவரும் கோவிலில் திரண்டு இருந்தனர்.. துரைசிங்கத்தின் வீட்டு வாசலில் பந்தல் போட்டு வாழை மரம் கட்டப்பட்டிருந்தது.. வீட்டின் பின்புறம் பெரிய அண்டாக்களில் கல்யாண விருந்து தயாராகிக் கொண்டிருந்தது.. துரைசிங்கமும், சோலையம்மாளும் கோவிலின் உள்ளே திருமண மேடை கட்டும் ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்... பாலசிங்கம் அங்கே வேகமாக வந்தார்..

"என்னங்கண்ணா.. ஊருக்குள் என்ன என்னவோ பேசிக்கிறாங்க.."

"என்னடா பேசிக்கிறாங்க.. சொல்லு கேட்கலாம்.."

"நந்தகுமாரனுக்கு கல்யாணமாமே.. உண்மையா..?"

"ஆமாம்.. உண்மைதான்.. அதுக்கு என்ன இப்ப..?"

அங்கு நின்றிருந்த துரைசிங்கத்தின் தங்கை சுந்தராம்பாள் உள்ளூரிலேயே திருமணம் செய்து கொடுக்கப் பட்டவள் சண்டைக்கு வந்தாள்..

"ஏண்ணே.. இப்படிச் சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வருது..? ஒத்த தங்கச்சியை உள்ளூரில் கொடுத் திருக்கிறோமே.. நல்லது, கெட்டதுக்கு கலந்து பேசி முடிவெடுப்போம்ன்னு இல்லாம மூணாம் மனுசங்க சொல்லி உன் பிள்ளை கல்யாணச் செய்தியை நான் தெரிந்துக்கணுமா..? என்னைக் கட்டின மனுசன் எப்படி என்னை மதிப்பார்..? ஏண்ணே.. நான் தெரியாமல் தான் கேட்கிறேன்.. சுத்துப்பட்டி கிராமத்துக்கெல்லாம் பெரிய மனுசன் நீங்க.. உங்க பிள்ளை கல்யாணத்தை ஒளிஞ்சு மறைஞ்சு செய்யணுமா..?"

"பாலா, சுந்தரம் ரெண்டு பேரும் கொஞ்சம் பொறுமையா இருங்க.. இது நம்ம பிள்ளை வாழ்க்கைப் பிரச்சனை, நாம் விட்டுக் கொடுத்துப் போகணும்.. சோலையம்மா.. உன் கொழுந்தனுக்கும், நாத்தனாருக்கும் எடுத்துச் சொல்லு.."

அடுத்து நகர்ந்த நிமிடங்களில் அங்கே பலகுரலோசை கேட்டது.. கடைசியில் பாலசிங்கம் வழிக்கு வந்தார்..

"சரிங்கண்ணே நான் என்ன செய்யட்டும்.."

"அப்படிக் கேளு.. உன் காரை எடுத்துக்கிட்டு போய் ரெஜிஸ்டாரை கூட்டிக் கொண்டு வந்துவிடு.."

"சரி அண்ணி.. நான் என்ன பண்ணட்டும்.. எனக்கும் வேலை கொடு.."

"வீட்டுக்குப் போய் விருந்து ஆக்கறதை பார்த்துக்க.." பாலசிங்கமும், சுந்தராம்பாளும் சமாதானமாகி இணைந்து கொள்ள அடுத்த ஒரு மணி நேரத்தில் திருமண மேடை ரெடியாகிவிட்டது.. ரெஜிஸ்ட்டார் வந்து விட்டார்.. துரைசிங்கம் வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு கோவில் வாசலில் வந்து நின்றார்..

டாடா சுமோ வண்டி விரைந்து வந்து நின்றது.. ஊர் ஆள்கள் வண்டியைச் சூழ்ந்து கொள்ள லேசான மயக்க மருந்தை சுவாசித்திருந்த காரணத்தால் மைதிலி மயக்கம் தெளிந்து கொண்டிருந்தாள்.. நந்தகுமாரன் இறங்கி அவளைக் கைத்தாங்கலாய் பிடித்துக் கொள்ள ஊர் மக்களில் ஒருவர்,

"ஏம்பா.. அந்தப் பெண் ஏன் தள்ளாடி நடக்குது..?" என்று கேட்டார்..

"உடம்பு சரியில்லை பாட்டா.." என்ற நந்தகுமாரன்..

"அம்மா.." என்று அழைக்க சோலையம்மாளும், சுந்தராம்பாளும் வந்து மைதிலியை அணைவாய் நடத்திச் சென்றனர்.

அவளை முகம் கழுவச் செய்து சூடாய் காபி கொடுத்தார்கள்.. தந்நிலைக்கு கொஞ்சம் வந்த மைதிலி சுற்றும் முற்றும் பார்த்து விட்டுப் புரியாமல் சோலையம்மாளைப் பார்த்து,

"அத்தை.." என்றாள்.. சோலையம்மாள் புன்னகைத்தாள்..

"உன் அத்தைதான்ம்மா.. எழுந்து இந்தப் பட்டுப்புடவையை மாற்றிக் கொள்.."

"எதற்கு அத்தை.."

"இங்கே ஓர் விசேசம்மா.. அத்தை சொன்னால் கேட்கணும்.." மைதிலியை அலங்கரித்து திருமண மேடைக்கு அழைத்து வந்தார்கள்.. நந்தகுமாரன் பட்டுவேட்டி சட்டையோடு உட்கார்ந்திருந்தான்.. அருகில் மைதிலியை அமர வைக்க அரை மயக்கநிலையில் அவளிருக்கும் போதே அவள் கழுத்தில் நந்தகுமாரன் கட்டிய தாலி ஏறிவிட்டது.

புரிந்தும் புரியாமலேயே மைதிலி அக்கினியை வலம் வந்தாள்.. பெரியவர்களை நமஸ்கரித்தாள்.. ரெஜிஸ்டராரின் முன்னிலையில் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டாள்.. நந்தகுமாரனின் கை அணைப்பில் புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாள்..

நந்தகுமாரனின் டாடாசுமோ சீறிப்பாய்ந்து சென்ற பின்னர் ஓர் அரைமணி நேரம் மேனகாவும், கிருஷ்ண மூர்த்தியும்,

'உன்னாலே நான் கெட்டேன்.. என்னாலே நீ கெட்டாய்..' என்று சண்டைபோட்டு முடித்தார்கள்.. அதன்பின் சமாதானமாகி மேனகாவின் காரில் கிளம்பி துரைசிங்கத்திடம் நியாயம் கேட்க வந்தார்கள்.. அவர்கள் வண்டியிலிருந்து இறங்கிய நேரம் நந்தகுமாரனும், மைதிலியும் மாலையும் கழுத்துமாய் மணமக்களாய் ஆரத்தி சுற்றுவதற்கு நின்று கொண்டிருந்தார்கள். மைதிலியின் கழுத்தில் புது மஞ்சள் கயிறு மின்னியது..

"நாம் மோசம் போய்விட்டோம் கிருஷ்ணன்.."

"நாம் என்று ஏன் கூட்டுச் சேர்கிறீர்கள் மேனகா.. நான்தான் மோசம் போய்விட்டேன்.. இனி எப்படி என் அப்பாவின் முகத்தில் விழிப்பேன்.."

"நானும் வருகிறேன் கிருஷ்ணன்.. நடந்ததைக் கூறி இனி என்ன செய்வது என்ன கேட்கலாம்.." என்றாள் மேனகா..

மணமக்கள் உணவு உண்ட பின்னர் மாடியறைக்குச் சென்றனர்.. அப்படியே கட்டிலில் சரிந்த மைதிலி மயக்க மருந்தின் வேகம் சிறிது இருந்ததால் அயர்ந்து உறங்கி விட்டாள்.. இரவு கண் விழித்தாள்.. நடந்தவை கனவுபோல் தோன்ற பதறி எழுந்தாள்.. அருகில் நாற்காலியில் அமர்ந்திருந்த நந்தகுமாரன் அவசரமாய் எழுந்து அருகில் வந்தான்.. மேஜையிலிருந்த பிளாஸ்கில் இருந்து சூடான காபியை கோப்பையில் ஊற்றிக் கொடுத்து, "குடி" என்றான்.. அவள் மறுத்தாள்.. பிடிவாதமாய் அவளைத் தோளில் சாய்த்துக் கொண்டு குடிக்க வைத்தான்.. கோப்பையை வைத்து விட்டு திரும்பி வந்து அவளருகில் கட்டிலில் அமர அவள் விலகி அமர்ந்தாள்.. அவன் புருவம் சுருக்கினான்..

"ஏண்டி.. என்னைப் பிடிக்கலையா.. என் முகத்தைப் பார்த்துச் சொல்லு.."

"நீங்க செய்ததுதான் பிடிக்கலை.. இது உங்களுக்கே நியாயமா இருக்கா..?"

"எனக்கு நான் செய்தது தாண்டி நியாயம்.."

"எது.. ஒரு பெண்ணைத் துப்பாக்கி முனையில் கடத்தி மயக்க மருந்து கொடுத்து தாலிகட்டுவதா..? உங்களிடம் நான் இதை எதிர்பார்க்கவில்லை.."

"ம்ம்.. ஏன் சொல்லமாட்டாய்.. நீ இதுவும் சொல்வாய்.. இதற்கு மேலும் சொல்வாய்.. ஏண்டி நான் என்ன ரோட்டில் போகிற பெண்ணையா துப்பாக்கி முனையில் கடத்தினேன்..? என்னை விரும்பாத பெண்ணுக்கா மயக்க மருந்து கொடுத்து தாலிகட்டினேன்..?"

"ஆனாலும்.. நீங்கள் செய்தது சரியாகாது.."

"வேறு எது செய்திருந்தால் சரி.. நீ வீட்டிற்கு அடங்கிய பெண்ணாய் அந்த வினய்யை கல்யாணம் பண்ணிக்கொள்ள நான், 'எங்கிருந்தாலும் வாழ்க'ன்னு வாழ்த்தணுமா..? பொம்பளை நீ.. நான் வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணினால் கொன்னுடுவேன்னு மிரட்டலாம்.. அதையே நான் செய்தால் தப்பா.. எனக்கு வேற வழி தெரியலைடி.. நீ உன் வீட்டை எதிர்த்து வெளியே வரமாட்டே.. நான் என்ன செய்ய முடியும்.. தூக்கி வந்து தாலிகட்டத்தான் முடியும்.."

மைதிலி தணிந்தாள்.. கழுத்தில் தொங்கிய மாங்கல்யத்தை தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.. வினய்யின் கையில் அவளால் தாலி வாங்கியிருக்க முடியுமா..? தற்கொலை செய்து கொள்ளத்தானே முடிவு செய்திருந்தாள்.. அவளது நந்தகுமாரன் வில்லன் வேலை செய்து அவளை அவனுடன் வாழ வைத்து விட்டானே.. இப்போது அவள் நந்தகுமாரனின் மனைவி.. துரைசிங்கம், சோலையம்மாளின் மருமகள்.. மனம் இனிக்க தன் காதலனை தன் கணவனை நிமிர்ந்து பார்த்தாள்..

"என்னடி அப்படிப் பார்க்கிற.. இது பார்க்கிற நேரமில்லை.."

அவனது சூடான இதழ்கள் அவள் இதழ் தேடிக்குனிய அவள் கண்களை மூடித் தொய்ந்தாள்.. கரை உடைந்த வெள்ளம் சீறிப் பாய்ந்தது.. வாடிக் கிடந்த பயிர் செழித்து நிமிர்ந்தது.. மைதிலி தான் உணராத, அறியாத புது உலகத்தில் பிரவேசித்தாள்.. நந்தகுமாரன் அவளை அடைந்தான்.. ஆண்டான்.. அந்த யுத்தகளத்தில் ஆன்மிகமாக, நாத்திகமா என்ற விவாதம் இன்றி இரு உயிர்களும் ஒரு உயிராய் ஒன்றின..

## 23

காலையில் கண்விழித்ததும் தன்மேல் கிடந்த நந்தகுமாரனின் கரத்தைக் கண்டு நேற்றைய நினைவில் கன்னம் சிவந்தாள் மைதிலி.. மெதுவாய் அவன் கரம் விலக்கி எழுந்தவள் குளித்து விட எண்ணும்போது கதவு

தட்டப்பட திறந்தாள்.. சோலையம்மாள் ஒரு தட்டில் காபி தம்ளர்களுடன் நின்றிருந்தாள்.. மருமகளைப் பார்த்து அவள் புன்னகை செய்ய மைதிலிக்கோ வெட்கம் பிடுங்கித் தின்றது.. சோலையம்மாள் அதைக் கவனியாதது போல்..

"காபி குடிச்சிட்டு, குளிச்சிட்டு நந்துவும் நீயும் கீழே வாங்கம்மா.. ராத்திரியும் சாப்பிடலை.. நான் கூப்பிட வந்து பார்த்தேன்.. தூங்கிக்கிட்டு இருந்தாப்புல இருந்தது.. சரி தூங்கட்டும்ன்னு போயிட்டேன்.. பசிக்குமில்ல," என்றாள் படு இங்கிதமாக..

மைதிலி தயக்கத்துடன், "அத்தை.. எனக்கு மாற்றுச் சேலை.." என்று இழுக்க.. "அடடா.. அதை அந்த மடையன் சொல்லவில்லையா..? பீரோவில் இரண்டு அடுக்கு நிறைய உனக்கு புடவை வாங்கி அடுக்கி வைத்து விட்டோம்மா.. நாங்களே ஏதோ அளவு சொல்லி ஜாக்கெட்டும் தைத்துவிட்டோம்.. முன்னே பின்னே இருந்தால் டெய்லர்கிட்டே சொல்லி சரி பண்ணிக்கலாம்.. மத்த துணிகளும் இருக்கு.. வேற வேணுமின்னா நந்தகூட டவுனுக்கு போய் வாங்கிக்க என்ன.." என்று அர்த்தத்துடன் சிரித்த சோலையம்மாள் சென்றுவிட்டாள்..

முரட்டுக் குழந்தை போல் தூங்கும் கணவனைப் பார்த்து, "போடா படவா," என்று செல்லமாகத் திட்டிக் கொண்ட மைதிலி அவனை எழுப்பினாள்.. விழித்தவன் அவளை விழியால் அருகே அழைக்க,

"உதைவிழும்.. ராஸ்கல்.. காபி குடியுங்கள்.. நான் குளிக்கப் போக வேண்டும்.." என்றவாறு அவன் கையில் காபிப் கோப்பையை திணித்தாள்.. அவன் அவளைப் பிடிக்க முயல அவன் கைக்கு அகப்படாமல் தப்பித்து குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.. குளித்து முடித்து தலையை காய வைத்துப் பின்னலிட்டுக் கொண்டு இருந்தபோது நந்தகுமாரன் பின்னால் வந்து அவளை இறுக அணைத்து கூந்தலை முகர்ந்தான்..

"என்ன வாசனை பிடிக்கிறீர்கள்..?"

"இல்லை உன் கூந்தல் வாசம் இயற்கையானதா இல்லை செயற்கை ஆனதா என்று ஆராய்ச்சி செய்யத் தான்

வாசனை பிடிக்கிறேன்.."

"அதெல்லாம் பழைய டயலாக் வில்லன் சார்.."

"வில்லனா.. உன் ஹீரோடி நான்.."

"எந்த ஹீரோ துப்பாக்கி முனையில் பெண்ணைக் கடத்தித் தாலி கட்டுகிறான்..?"

"இந்த ஹீரோ எதுவும் செய்வான்.. அவனது மைதிலிக்காக.."

"போதுமே.. விடுங்கள்.. அத்தை வேறு வந்து நேற்று ராத்திரி சாப்பிடக் கூப்பிட வந்தேன்.. நீங்க தூங்கிட்டதால் கூப்பிடமா போயிட்டேங்கிறாங்க.. எனக்கு வெட்கமா போயிருச்சு.. நேத்து நாம் தூங்கினோமாக்கும்..?"

"அது அவங்களுக்கும் தெரியும்.. இப்ப நீ வா.."

அவன் கரங்கள் எல்லை மீற அவள் விலகினாள்..

"ஏண்டி.. இரண்டு வருடம் காதலித்து.. நேற்றுத்தான் தாலி கட்டியிருக்கிறேன்.. என்னவோ அறுபது வருடம் ஆனதுபோல் அலுத்துக் கொள்கிறாயே.."

"அதானல்தான் நேற்று இரவு எனக்கு எல்லாமும் மறந்துவிட்டது.."

"இப்போது எது நினைவு வந்திருக்கிறது..? உன் வீடா..? இல்லை அந்த வினய்யா..?" அவன் கோபமாகத்தான் கேட்டான்.. ஆனால் அவள் "ஆமாம்" என்று ஒத்துக்கொண்டாள்.. அவன் சினத்தின் உச்சியில் மலையேறினான்..

"உன் வீட்டை நினைத்தேன்னு சொல்லு கேட்டுக் கிறேன்.. அந்த வினய்யை நினைத்தேன்னு சொன்னால் என்னடி அர்த்தம்..?"

"என் மனசாட்சி என்னை உறுத்துகிறது நந்து.." அவள் விழிகளில் நீர் மல்கியது.. அவன் புரியாமல் காரணம் கேட்டான்..

"என்னைப் பெற்றவர்களையும் கூடப்பிறந்த அண்ணனையும் நான் ஏமாற்றி விட்டேன்.. எனக்கு அவர்கள் ஆசிர்வாதம் கூட வேண்டாம்.. மன்னிப்பு

வேண்டும்.. அப்புறம் அந்த வினய்.. மேனகா ஆடிய ஆட்டத்தில் அவர் கௌரவம் பலியாகலாமா அதற்குப் பிராயச்சித்தம் இல்லையா..?"

நந்தகுமாரன் யோசித்தான்.. அவளது துயரம் புரிந்தது.. ஆதரவாய் அவளை அணைத்துக் கொண்டு முதுகில் தட்டிக் கொடுத்தான்..

"உன் வீட்டாரிடம் மன்னிப்புக் கேட்பதில் எனக்குத் தயக்கமில்லை மைதிலி.. அது நான் செய்ய வேண்டிய செயல் கூட.. ஆனால் வினய்க்கு எப்படிப் பரிகாரம் செய்வது..?"

"அதற்கு என்னிடம் ஒரு வழியிருக்கு.." மைதிலி கூறினாள்.. நந்தகுமாரன் வியப்புடன் மனைவியைப் பார்த்தான்..

"ஐ அப்ரிசியேட் யு.. சரியான யோசனை சொல்லியிருக்கிறாய்.. நான் நம் கல்யாணத்திற்காக ஒரு மாதம் லீவு போட்டிருக்கிறேன்.. நீயும் லீவில்தான் இருக்கிறாய்.. நம் விடுமுறையை பயன்படுத்திக் கொள்ளலாம்.."

இருவரும் கீழே சென்றனர்.. சோலையம்மாள் பூஜை அறைக்கு அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று மைதிலியை விளக்கேற்றச் சொன்னாள்.. அதன்பின் இருவருக்கும் திருநீறு, குங்குமம் பூசிவிட்டு சாப்பிட அழைத்து வந்தாள்.. துரைசிங்கம் மீசையை முறுக்கிக் கொண்டு அமர்ந்திருந்தார்.. மைதிலி சாப்பிட உட்காராமல் பரிமாற ஆரம்பித்தாள்.. சோலையம்மாள் பூரித்துப் போனாள்..

"என்ன மருமகளே.. இப்படி வேலை செஞ்சுதான் என் பொண்டாட்டியை வசியம் பண்ணினாயா..?" என்று துரைசிங்கம் கேலி செய்ய,

"அதற்கு முன்னாலேயே உங்க மகன் என் மருமகளை வசியம் செய்து விட்டானே.. அதற்கு என்ன சொல்லு கிறீர்கள்," என்று சோலையம்மாள் பதில் கொடுத்தாள்..

"அப்புறம் நாம ஏண்டா தனி ஆவர்த்தனம் வாசிக்கணும்.. நாமளும் கூட்டணி போட்டுவிடலாம்.." என்று அவர் கடகடவென்று சிரித்தார்..

"சந்தடி சாக்கில் தாய்க்கும், மகனுக்கும் நடுவில் புகுந்து கொள்கிறார் பாரு.."

"சரிசரி.. நீயும் புருசன், பெண்டாட்டிக்குள் புகுந்து கொள்ளாமல் அவர்களை தனியாய் விடு.. நீயும், நானும் கூட்டணி, மகனும் மருமகளும் கூட்டணி.. சரியா..?" எல்லோரும் சிரிக்க நந்தகுமாரன் திடீரென்று நினைவு வந்தவனாய்,

"மேனகா எங்கேப்பா.. கண்ணலேயே படவில்லை.." என்றான்..

"அவ நேற்று ராத்திரியே புறப்பட்டுப் போயிட்டாள்ல புயல் மாதிரி வந்தாள்.. அவள் சாமானையெல்லாம் தூக்கி காரில் போட்டா.. அவளோட டிரைவரைக் கூப்பிட்டா.. போயிட்டு வரேன்னு சொல்லிக்கக் கூட இல்லை.. போய் விட்டாள்டா.."

"அதுக்கு நீங்க ஏம்மா வருத்தப்படுறீங்க.. நல்லவர்க்கு அழகு சொல்லாமல் போவது.. விடுங்க.."

காலையில் சாப்பாடு முடிந்ததும் திருச்சி வரை போய் வருவதாகக் கூறிவிட்டு நந்தகுமாரனின் காரில் இருவரும் திருச்சி சென்றனர்.. மைதிலியின் வீட்டின் முன் காரை நிறுத்தி அவர்கள் இறங்க தெருவில் பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் கூடி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர். மைதிலி நந்தகுமாரனின் கையை பயத்துடன் பிடித்துக் கொண்டாள்.. அவள் விரல்களை ஆதரவாய் அழுத்திப் பிடித்தவன்,

"பயப்படாமல் வா.. நான் இருக்கிறேன்.." என்று தைரியம் கூறினான்..

உள்ளே சென்றவர்களை யாரும் வரவேற்கவில்லை.. விசாலாட்சி மட்டும் நந்தகுமாரனை 'இவர்தான் என் மாப்பிள்ளையா' என்பது போல் பார்த்துக் கொண்டாள்..

"வணக்கம் மாமா.. நான்தான் உங்க மாப்பிள்ளை.."

"நல்லா இருக்கு.. ரொம்ப நல்லா இருக்கு.. பொண்ணைக் கடத்திட்டுப் போய் தாலிகட்டி குடும்பம் நடத்திட்டு வந்து நான்தான் உன் மாப்பிள்ளைன்னு நிற்கிறதுக்கு உனக்கு ரொம்ப தைரியம்தான்.. என் வீட்டிலயும் தப்பு இருக்கு..

அதனால்தான் பொறுமையா பேசறேன்.. இல்லை.. வைத்தீஸ்வரன் என்ன செஞ்சிருப்பான்னு எனக்கே தெரியாது.."

"மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி எங்களை மன்னித்து விடுங்கள்.."

"நான் இனி மன்னித்து உங்களுக்கு ஆகப்போவ தென்ன.. என் வீட்டில் பலவீனம் இருந்தது.. நீங்கள் ஜெயித்து விட்டீர்கள்.. இனிப் பேச்சு வேண்டியதில்லை.."

"அம்மா.. என்னை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா..?"

"இப்போது அழுது என்ன பிரயோசனம் மைதிலி.. எனக்கு நீ மட்டும் பெண்ணில்லை.. சாவித்திரி இருக்கிறாள்.. அவள் புகுந்த வீட்டில் எங்களுக்கு மரியாதை வேண்டும்.. படித்துப் படித்துச் சொன்னேன்..நீ கேட்க வில்லை.. இனி உனக்கு உன் கணவர்தான் தாய், தகப்பன் எல்லாமும்.." அவள் சூசகமாய் கூறிவிட்டாள்..

மதியம் வேம்பூருக்கு வந்து அழுதபோது சோலையம்மாள் கூறினாள்..

"காதலில் வெற்றி பெற்றால் காதலர்களுக்கு சந்தோசம்.. பெற்றவர்களுக்கு வருத்தம்.. பெத்தவங்க சம்மதத்தோடு நிறைவேறும் காதல் கல்யாணம் நம்ம நாட்டில் ரொம்பக் கம்மி.. பொறுமையா இருங்க.. காலம் போகப் போக எல்லாம் சரியாகும்.."

மறுநாள் காலையில் இருவரும் சென்னைக்கு கிளம்பினார்கள்..

## 24

நந்தகுமாரனுக்கு புதிதாக இன்னோவா கார் வாங்கிக் கொடுத்திருந்தார் துரைசிங்கம்.. டாடாசுமோ முரட்டு வண்டியாம்.. அவருக்குப் போதுமாம்.. அவர் மகனுக்கு புதுக்காரை அவரது கல்யாணப் பரிசாகக் கொடுக்கிறாராம்.

தம்பதிகள் புதுக்காரில் ஹனிமூனுக்கு கிளம்பினார்கள்.. ஊட்டிக்கு போவதாக வீட்டில் சொல்லி விட்டு காரை சென்னை நோக்கிச் செலுத்தினான் நந்தகுமாரன்.. மைதிலி மெதுவாக,

"அத்தை, மாமாகிட்ட பொய் சொல்லி விட்டோமோ..?" என்றாள்..

"இல்லையே.. உண்மையைத்தானே சொன்னோம்.."

"ஊட்டிக்கா இப்போது போகிறோம்..?"

"சென்னைக்கு போய்விட்டு.. அங்கிருந்து ஊட்டிக் குத்தானே போகிறோம்.."

"திருச்சிக்கு வந்துதானே போக வேண்டும்.."

"உங்களைப் பேச்சிலும் ஜெயிக்க முடியாது.."

"பேச்சிலும்ன்னு 'க்'கன்னா போடறியே வேற எதிலயும் என்னை ஜெயிக்க முடியாதுன்னு சொல்றாப்புல இருக்கே.."

"அப்படியெல்லாம் காலரைத் தூக்கி விட்டுக்க வேணாம்.."

சென்னையில் நட்சத்திர ஓட்டலில் ரூம் போட்டார்கள்.. குளித்து முடித்து மைதிலியின் சித்தப்பா வீடு குரோம் பேட்டையில் இருந்ததிற்கு போய் வந்தார்கள்.. அங்கே சித்தப்பாவும் சித்தியும் முதலில் மைதிலியைத் திட்டினாலும் நந்தகுமாரனை வீட்டு மாப்பிள்ளையாய் ஏற்றுக் கொண்டு நன்கு உபசரித்தனர்.. சித்தப்பா, சித்தியிடம் சிறிது நேரம் பேசிவிட்டு வினய்யை பார்க்கச் சென்றனர்..

பிரம்மாண்டமான ஈ.ஸி.ஆர் ரோட்டில் அமைந்த வினய்யின் பங்களாவில் ரங்கநாதன், ஜானகி, வினய் மூவரிடமும் அவர்கள் இருவரும் முதலில் மன்னிப்புக் கேட்டனர்.. ஜூஸ், சிற்றுண்டி கொடுத்து உபசரித்த ஜானகி,

"இதில் மன்னிப்பு கேட்க என்னம்மா இருக்கு..? நீ என்ன குற்றம் செய்தாய்..? எங்களுக்கு உன் காதல் விவகாரம் தெரியாது.. தெரிந்திருந்தால் பெண் கேட்டு வந்திருக்க மாட்டோம்.." என்றாள்..

"அம்மா.. நான் மைதிலியை முதலில் அவள் வீட்டிலிருந்து வெளியேற்றி மணம் செய்துகொள்ள வேண்டியிருந்தது,

அதனால்தான் உங்களிடம் பேச எனக்கு அவகாசமில்லாமல் போய்விட்டது.." என்றான் நந்தகுமாரன்..

"டோன்ட் வொர்ரி மிஸ்டர் நந்தகுமாரன்.. என் வருத்தம் என்னவென்றால் மைதிலியின் வீட்டாருக்கு மைதிலியின் காதல் தெரிந்த உடனே கல்யாணத்தை நிறுத்தியிருக்க வேண்டாமா..? உண்மையை மறைத்து என் வாழ்க்கையிலும், மைதிலியின் வாழ்க்கையிலும் விளையாடப் பார்த்தார்களே.." என்றான் வினய்..

"வினய்.. எதனால் உங்களுக்கு மைதிலியைப் பிடித்தது.." என்று கேட்டான் நந்தகுமார்..

"அவளது குடும்பப்பாங்கான அழகால்.." என்றான் வினய்..

நந்தகுமாரன் ரங்கநாதனைப் பார்த்து,

"சார்.. எங்கள் காதல் கல்யாணத்தால் சம்பந்தமே யில்லாத நீங்கள் மனம் வருத்தப்பட வேண்டி ஆகிவிட்டது.. அது எங்கள் மனதை மிகவும் பாதித்து விட்டது.." என்று வருத்தப்படும் குரலில் கூறினான்..

"எங்களுக்கு உங்கள் மேல் எந்த வருத்தமும் இல்லைப்பா," என்றார் அவர்..

"அப்படி நீங்கள் மூவரும் நினைத்தால் எங்களுடன் ஒரு கப் காப்பி சாப்பிட வெளியே வர வேண்டும்.. இது எங்கள் கோரிக்கை," என்றான் நந்தகுமாரன்.

"ஏன் அந்தக் காபியை இங்கே சாப்பிடக் கூடாதா..?" என்று வினய் கேட்டாலும் மைதிலியின் மை விழிகளில் இருந்த கெஞ்சும் தொனியைக் கண்டதும்,

"டாட், மாம்.. ஒரு டிரைவ் போய் விட்டு வரலாமே.." என்று எழுந்து கொண்டான்..

முன்னால் சென்ற நந்தகுமாரனின் காரை வினய்யின் கார் பின் தொடர்ந்தது.. எந்த ஹோட்டலுக்கோ, ரெஸ்ட்டாரண்ட்டுக்கோ போகாமல் குரோம்போட்டையில் ஒரு வீட்டினுள் நந்தகுமாரனது கார் நுழைய வேறு வழியின்றி வினய்யின் காரும் உள்ளே சென்று நின்றது.. காரை விட்டு இறங்கிய நந்தகுமாரனும், மைதிலியும்

அவசரமாய் வினய்யின் கார் அருகே வந்து அவர்களை இறங்கச் சொன்னார்கள்..

'இது யார் வீடு' என்ற குழப்பத்துடன் அவர்கள் இறங்க மைதிலியின் சித்தப்பா லோகேஸ்வரன் "வாங்க வாங்க.." என்று வரவேற்றார்.. உள்ளே சென்று அவர்கள் அமர மைதிலி,

"இது என் சித்தப்பாவின் வீடு.. இவர் என் சித்தப்பா.. அவங்க என் சித்தி.." என்று அறிமுகம் செய்து வைக்க சித்தி ராஜேஸ்வரி கரம் குவித்து வணக்கம் சொன்னாள்.. பின்னர் உள்ளே சென்ற மைதிலி ஓர் அழகிய இளம் பெண்ணுடன் திரும்பி வந்தாள்.. எங்கோ பார்த்துக் கொண்டிருந்த வினய்யின் அருகே வந்து,

"வினய் சார்.. இதுதான் என் தங்கை வைதேஹி.." என்றாள்... வினய் அந்தப் பெண்ணை ஏறிட்டுப் பார்த்தான்.. அவன் கண்களில் மின்னல் அடித்தது.. மைதிலியின் ஜாடையில் அழகாக அவன்

எதிர்பார்த்த தமிழ்நாட்டு குத்துவிளக்காக அவள் இருந்தாள்.. அவள் கண்களில் வினய்யைக் கண்டதும் ஒரு சுடர் தோன்றியது. அவள் கன்னங்களில் வெட்கத்தின் செம்மை படர்ந்தது.. இவையாவும் மைதிலியிடம் வினய்யைக் கண்டதும் தோன்றாதவை.. அச்சம், மடம், நாணம் இதைத்தானே வினய் எதிர்பார்த்தான்.. தன்னை ஒரு பெண் விரும்புகிறாள், ரசிக்கிறாள் என்பது ஆண்மைக்கு கௌரவமல்லவா..? வினய், வைதேஹியின் பார்வையில் தடுக்கி விழுந்தான்.

லோகேஸ்வரன் சென்னையில் பணக்காரப் புள்ளிகளில் ஒருவராக இருந்தார்.. அவருக்கு வைதேஹி ஒரே பெண்.. ரங்கநாதன், ஜானகி தம்பதியினருக்கு தங்கள் இனத்திலேயே தங்கள் அந்தஸ்திற்கும் பொருத்தமானதாக சம்பந்தம் அடைந்து விட்டதில் பரம திருப்தி.. வினய்க்கோ தான் விரும்பிய குணங்களுடன் உள்ள பெண்ணையே மணந்து கொள்ளப் போவதில் கொள்ளை மகிழ்ச்சி..

குறிப்பிட்ட அதே முகூர்த்தத்தில் வினய் - வைதேஹி கல்யாணம் நடக்கப் போவதாக நாள் நிச்சயிக்கப்பட்டது..

தங்கள் மனமார்ந்த நன்றிகளை வினய் குடும்பத்தார் கூற, தங்கள் வாழ்த்துக்களை நந்தகுமாரனும் மைதிலியும் கூறிவிட்டு லேசான மனத்துடன் விடை பெற்றனர்.

ஏரியின் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு படகு சென்று கொண்டிருந்தது.. கால் தன்னிச்சையாய் பெடல் போட்டுக் கொண்டிருக்க கைகள் மைதிலியின் தோளை வளைக்க நந்தகுமாரன் அமர்ந்திருக்க மைதிலி அவன் கைகளில் கிள்ளினாள், "ஸ்.. பப்ளிக் பிளேஸ்.."

"எது.. இதுவா.. மக்கு.. இது காதலர் ஏரி.. பக்கத்து படகுகளில் பார்.." பார்த்தாள். உடனே விழிகளைத் திருப்பிக் கொண்டாள்.. கன்னம் சிவந்தது.. மயங்கிப் போனவனாய் நந்தகுமாரன்.

"அங்கே மாலை மயக்கம் யாருக்காக..

இங்கே மயங்கும் இரண்டு பேருக்காக.."

என்று பாடினான்..

"ஆமாம்.. மாலையில் மட்டும்தான் மயங்குகிறீர்கள்.. காலையில் விட்டு வைக்கிறீர்கள்.. என்ன பொய் பாரப்பா.."

"யாரைப் பார்க்கச் சொல்கிறாய்.. அந்திச் சூரியனையா.."

"வாயே திறக்கவில்லை சாமி.. ஆளை விடுகிறீர்களா..?"

"விடுவதா.. உன்னையா.. துப்பாக்கி முனையில் தூக்கி வந்து விடமாட்டேன்.."

"மயக்க மருந்தை விட்டு விட்டீர்களே.."

"அது எதுக்குடி.. சும்மா ஓர் பார்வை பார்த்தால் போதுமே.. மயங்கி விடுகிறாயே.. அப்படித்தானே நேற்று நைட்.."

"ஐயோ போதுமே.. நான் தண்ணிக்குள் குதிச்சிருவேன்.."

"ஹா.. ஹா.." வென்று சிரித்தபடி நந்தகுமாரன் படகை கரைக்குத் திருப்பினான்.

கரையில் ஏறியவர்கள் பூக்கள் அடர்ந்திருந்த பூங்காவினுள் கை கோர்த்தபடி இணைந்து நடந்தார்கள்.. இருபக்கமும் பூச்செடிகள் ஆட நடுவில் அவர்களைப் போல் நிறைய ஜோடிகள் நடக்க நந்தகுமாரன்,

"இது காதலின் சாலை போல் இருக்கிறது.." என்று கூறினான்..

மைதிலி உடனே அவனை ஓர் மயக்கும் பார்வை பார்க்க,

"இப்ப உன் முறையா.. எதுக்கு இப்படிப் பார்க்கிறாய்.. கிட்ட வந்தால் அடிக்க வருகிறாய்.. அநியாயம்டி நீ செய்கிறது.." என்றான் நந்தகுமாரன்.

"ஐயோ.. வழிகிறது.. நான் என் மனதிற்குள் இந்த சூழ்நிலையைப் பார்த்து ஓர் பாடலை 'ஹம்' பண்ணிக் கொண்டிருந்தேன்.. அதையே நீங்களும் சொன்னீர்களா.. அதனால் பார்த்தேன்.. நீங்கள் உடனே.." என்று சிணுங்க ஆரம்பித்தாள் மைதிலி..

"நான் அசைவம் சாப்பிடுகிறவன்டி.. உன்னை மாதிரி சுத்தச் சைவமில்லை.. அதுசரி.. அது என்ன பாட்டு.." என்று வினவினான் அவன்.. மைதிலி மெல்லிய குரலில் அந்தப் பாடலைப் பாடினாள்..

"காதலின் பொன் வீதியில்

காதலன் பண் பாடினான்.."

"அழகான பாடல்.. மைதிலி நம் காதலின் வீதியில் எவ்வளவு இடர்கள்.."

"துப்பாக்கி தூக்க உங்களுக்கு தைரியம் இருந்ததோ நம் காதல் பிழைத்ததோ.."

"இல்லாதவர்களின் காதல் என்ன ஆகும்..?"

"அது எதற்கு நமக்கு..? நாம்தான் ஜெயித்து விட்டோமே.."

மைதிலி நந்தகுமாரனின் இடுப்பைச் சுற்றிக் கரங்களை வளைத்து போட்டு அவன் தோளில் தலைசாய்த்துக் கொள்ள அவன் அவள் தோளைச் சுற்றி அணைத்துக் கொள்ள அவர்கள் அந்தக் காதலின் பொன் வீதியில் வெற்றி பெற்றவர்களாய் நடந்தார்கள்.

- முற்றும் -